

தமிழ் மணக்கும் மலேசியா









குறளன்பன் ஆ.வே.இரா.

தமிழ் மணக்கும் மலேசியா

1051

அன்புடன்,
ஆ.வே.இராமசாமி
19-3-03

திருக்குறள் மூதறிஞர்

ஆ.வே.இராமசாமி

திருவள்ளுவர் பதிப்பகம்,
திருவள்ளுவர் நகர்,
வைரிசெட்டிப்பாளையம்,
திருச்சிராப்பள்ளி மாவட்டம் 621 012.
தொ.பே.52103

நூல் குறிப்பு

நூலின் பெயர்	:	தமிழ் மணக்கும் மலேசியா
ஆசிரியர்	:	ஆ.வே.இராமசாமி
முதற்பதிப்பு	:	நவம்பர், 2000
உரிமை	:	வல்வில் ஓரி (ஆசிரியர் பெயரன்)
பக்கம்	:	168 + 10 = 178
தாள்	:	சேசசாயி 10.5
எழுத்து	:	10 புள்ளி
மொழி	:	தமிழ்
பொருள்	:	வரலாறு
விலை	:	ரூ.50.00 (மலேசிய விலை 10 வெள்ளி)
அச்சிட்டோர்	:	வாஞ்சி மறுதோன்றி அச்சகம், 12ஐ, கூட்டுறவு நகர், துறையூர். © 43638 தமிழ்நாடு.

நூல் கிடைக்கும் இடங்கள் :

1. திருவள்ளுவர் பதிப்பகம்,
   வைரிசெட்டிப்பாளையம், 621 012.
2. சைவசித்ததாந்த நூற்பதிப்புக் கழகம்,
   சென்னை - 18.
3. பழனியப்பா புத்தக நிலையம்,
   திருச்சி - 2.
4. தமிழ்ப் பண்பகம்
   198B, இரண்டாம்தளம்,
   துன்சம்பந்தன் சாலை. பிரிக்பீல்ட்ஸ்,
   50470, கோலாலம்பூர், மலேசியா.

சிறப்புரை

புலவர் திருமாவளவன்
மலேசியத் தமிழ்நெறிக் கழகம்

மலேசியத் தமிழர்கள் ஒரு நூற்றாண்டுக்கு முன்பதாக மலேசிய நாட்டைத் திருத்தி அமைத்து மேம்பாடடையச் செய்யும் முகத்தானும் கரும்புத் தோட்டங்களில் மிகவும் மலிவான ஊதியத்திற்குப் பணி செய்வதற்காகவும் கொண்டு வரப்பட்டார்கள் என்று அண்மைக்கால வரலாற்றுச் செய்திகள் குறிப்பிட்டாலும், பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்பதாகவே தென்கிழக்காசியா முழுவதையும் ஆட்சி செய்தவர்கள் என்பதே நாம் தெளிவிக்க வேண்டிய செய்தியாகும்.

திருக்குறள் மூதறிஞர் பெரியவர் ஆ.வே.இரா. அவர்கள் தமது முதலாவது அயலகச் செலவாக பண்டைய தமிழர்கள் ஆண்ட, ஒரு நூற்றாண்டு அளவில் கூலித் தமிழர்களால் செப்பஞ் செய்யப்பெற்ற அழகு மிகுந்த மலேசிய நாட்டிற்கு வருகையளித்து தாம் கண்டு கேட்டுற்ற அனைத்து நிகழ்வுகளையும் தொகுத்து நூலாக வெளியிட்டிருப்பது போற்றத்தக்கதாகும். மலேசிய வருகையைப் பற்றிச் சிறந்த முறையில் விரிவாக எழுதியிருக்கிறார்.

மலேசியத் தமிழர்கள் தமிழின் மீது ஆழமான பற்றுடையவர்கள். எந்தச் சூழ்நிலையிலும் மொழி உரிமையை விட்டுக் கொடுக்காதவர்கள்.

தம் தாய்மொழியாம் தமிழைத் தொடர்ந்து கட்டிக் காத்து வருபவர்கள். இங்கு பெரியாரியலும், தனித்தமிழியக்கமும் வேரூன்றி நிலைத்திருக்கின்றன. அதேசமயம் மதவாதமும் பல்கியிருக்கின்றது.

இத்தகு சூழ்நிலையில் இயங்குகின்ற மலேசியத் தமிழர்களை மூதறிஞர் சந்தித்துள்ளார். இந்நூல் பல்வேறு செய்தித் தொகுப்பு ஆவணமாகவும் அமையும். மலேசியத் தமிழ்ப் பண்பாட்டியக்கம், மலேசியத் தமிழ்நெறிக் கழகம்,

முதலான அமைப்புகள் பற்றியும் அவற்றைத் தோற்றுவித்த பெரியோர்கள் பற்றியும் அவர்கள் எழுதிய நூல்கள் பற்றியும் செயற்பாடுகள் பற்றியும் விரிவாக எழுதியிருக்கின்றார்.

மூதறிஞர் ஆ.வே.இரா. அவர்கள் வெள்ளை உள்ளம் கொண்டவர். எவரிடமும் அன்பொழுகப் பேசி கருத்துரைக்கும் தன்மையர். முதிர்ந்த அகவையிலும் தமிழ் நலம் நோக்கும் வினையாக்கம் கொண்ட நெஞ்சர். அவர் எழுதிய இந்நூல் உலகளாவிய நிலையில் மலேசியத் தமிழ்த் தேசிய இயக்கங்களின் செயற்பாடுகளைத் தெளிவிக்கும் ஆவணமாகவும் கொள்ளப்படும். அப்பெருமகனின் முயற்சிக்கு எம் இயக்கத்தின் நற்றுணை என்றும் இருக்கும்.

''தெரிந்த இனத்தொடு தேர்ந்தெண்ணிச் செய்வார்க்கு
அரும்பொருள் யாதொன்றும் இல்.''

வெல்க தனித்தமிழியம்.

இக்கண்

இரா. திருமாவளவன்,
தேசியத் தலைவர்,
மலேசியத் தமிழ்நெறிக் கழகம்.

1330

நன்றியுரை

மலேசியத் தலைநகர் கோலாலம்பூரில் மலேசியத் தமிழ்ப் பண்பாட்டியக்கத்தார் 1999 டிசம்பரில் நடத்திய செந்தமிழ்ச் சிலப்பதிகார மாநாட்டிற்கு என்னை அழைத்திருந்தனர்.

அம் மாநாட்டுச் செய்திகள் நோக்கங்கள். மலேசியாவில் நான் சுற்றிப்பார்த்த இடங்கள், ஆற்றிய சொற்பொழிவுகள். மலேசியத் தமிழ்ர்களின் தமிழ்ப்பற்று. பண்பாடு. திருக்குறள் பற்று. மலேசியத் தமிழறிஞர்களின் தமிழ்ப்பணிகள். உலகத் தமிழ்ப் பண்பாட்டியக்கப் பணிகள். பேராசிரியர் இராந.வீரப்பர் வரலாற்றுக் குறிப்பு. மலேசியத் தமிழ் நெறிக்கழகப் பணிகள்.தமிழ் நெறிஞாயிறு அ.பு.திருமாலனார் வரலாற்றுக் குறிப்பு. ம.த.ப. இயக்கப்பணிகள். மற்றும் பல்வேறு அரிய செய்திகளை இயன்ற வரை இந்நூலில் தொகுத்துக் கொடுத்துள்ளேன்.

ம.த.ப. இயக்கத் துணைத்தலைவர் தமிழ்ப்புனல். தமிழ்நெறித் தென்றல் மு.மணி வெள்ளையர் இந்நூல் உருவாவதற்கு முழு முதல் காரணமாக இருந்ததோடு. பல்வேறு குறிப்புகளையும் கொடுத்துதவி, பாராட்டுரையும் வழங்கிச் சிறப்பித்துள்ளார்.

ம.த.நெ.கழகத் தேசியத் தலைவர் தமிழாய்வுச் செம்மல் புலவர் இரா.திருமாவளவர் சிறப்புரை வழங்கிப் பாராட்டியுள்ளார்.

இப்பெருமக்களுக்கு என்னுளங்கனிந்த நன்றி மலரைப் படைக்கின்றேன்.

இந்நூலுக்குரிய செய்தித் தொகுப்பிற்குப் பல்வேறு வகைகளில் உதவிய திருவாளர்கள் க.இராம மாணிக்கம்,

கன்னல்மணியம், வள்ளல் மாரியப்பர், புலவர் சின்னருணா பழனியாண்டி, ம.த.நெறிக்கழகத்தின் பாரிட்புந்தார் கிளையார், பெங்கலான் உலுக்கிளையார், ஈப்போ நகர பாவேந்தர் பேரவையார் ஆகியோருக்கும் நன்றி உரித்தாகுக.

சிறப்பாக கணினியில் பதிவு செய்து அச்சுப்படி உருவாக்கிய என் மூத்தமகன் இராம.திருவள்ளுவன், மருமகள் அருள்மொழி திருவள்ளுவன், இளைய மகன் இராம.தொல்காப்பியன், குறுகிய காலத்தில் சிறப்பாக அச்சிட்டுதவிய வாஞ்சி மறுதோன்றி அச்சகத்தார் ஆகியோருக்கு நன்றியும் வாழ்த்தும் நவில்கின்றேன்.

''நன்றி மறப்பது நன்றன்று''

அன்புடன்,

ஆ.வே.இராமசாமி.

செயலர்,
திருக்குறள் பேரவை,
வைரிசெட்டிப்பாளையம்,
2031 கன்னி - 7 (23.9.2000)

பொருளடக்கம்

பொருளடக்கம்

வரவேற்கின்றோம், பாராட்டுகின்றோம்

தமிழ்ப்புனல் மு.மணிவெள்ளையன்

''ஒல்லும்வா யெல்லாம் வினைநன்றே ஒல்லாக்கால்
செல்லும்வாய் நோக்கிச் செயல்''

தமிழ் மணக்கும் மலேசியா என்ற இந்நூலை வரவேற்கின்றோம். பாராட்டுகின்றோம். செந்தமிழ்ச் சிலப்பதிகார மாநாடு உலகளாவிய மாநாடாக, மலேசியத் தலைநகர் கோலாலும்பூரில், கடந்த 12.12.1999 இல் நடைபெற்றது. தமிழ்ப் பண்பகத்தின் அழைப்பையேற்று இவ்விழாவில் பங்கேற்கத் தமிழகத்தின் திருச்சி மாவட்டத்தின் வைரிசெட்டிப்பாளையத்திலிருந்து வருகை புரிந்திருந்தார். திருக்குறள் செம்மல் ஆ.வே.இராமசாமி அவர்கள். இவரின் தோற்றம் எளிமையுடையதாக இருந்தாலும் இவர் திருக்குறள் நெறிப்பரப்புதலுக்கென ஆற்றிய தொண்டுகள் அளப்பறியவை. இவர் எழுதியுள்ள 'திருவள்ளுவர் தந்த வாழ்வு' என்னப்படும் நாடக நூல் என்னைக் கவர்ந்த நூலாகும். இந்நூலை மலேசியத் தமிழ் இலக்கியக் கழகமும் சென்னை மாணவர் மன்றமும் இணைந்து நடத்தும் 'தமிழ்மணிப் புலவர் பட்டத்தேர்வு'க்குப் பாடநூலாகவும் முன்மொழிந்துள்ளேன். உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கத்தின் தலைமையகம் நடத்தவுள்ள 'திறந்தவெளிப் பல்கலைக்கழகக் கல்வித் திட்டத்துக்கும்' இந்நூல் பாடநூலாகவும் அமையவிருப்பதோடு இன்னொரு நூலான 'குறுந்தொகை காட்டும் வாழ்வும்' இடம் பெறவுள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் அறிவித்துக் கொள்கிறேன்.

உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கம் ஆற்றிவரும் பெருந்தொண்டுகளுள் ஒன்றுதான் இலக்கிய மாநாடுகளைக் கூட்டுவதாகும். தமிழ்மொழியில், காணக்கிடக்கின்ற எண்ணற்ற இலக்கியங்களை அதுவும் தமிழ்நெறி மற்றும் தமிழ்ப் பண்பாடு தொடர்பான இலக்கியங்களைத் தமிழ்கூறும்

நல்லுலகத்துக்கு அறிமுகப்படுத்தும் நன்னோக்கத்துடனும் வளரும் இளந்தலைமுறையினருக்குத் தமிழுணர்வினை ஊட்டும் குறிக்கோளுடனும் பல பணிகளைச் செய்து வருகின்றோம். அதே அடிப்படையில் இலக்கியம் பேணலின்வழி நிலையான அமைதி வாழ்வு என்ற கருப்பொருளில்தான் செந்தமிழ்ச் சிலப்பதிகார மாநாடும் நடத்தப்பட்டது.

இம்மாநாட்டில் கலந்து கொண்ட உயர்திரு. ஆ.வே.இரா. அவர்கள் தமது 'தமிழ் மணக்கும் மலேசியா'வில் சிலப்பதிகார மாநாட்டின் செயற்பாடுகளை மட்டுமல்லாது, தாம் கலந்து கொண்ட பிற நிகழ்ச்சிகளில் அவர் கண்டு, கேட்டு உணர்ந்த செய்திகளையெல்லாம் பதிவு செய்துள்ளார். இஃது ஒரு காலக்கட்டத்தின் வரலாற்றையே படம் பிடித்துக் காட்டுகிறது என்பதில் மிகையில்லை.

இந்நூல் பின்னாளில் வருகின்ற ஆய்வாளர்களுக்கும், மாணவர்களுக்கும் பெரிதும் பயன்படுமெனக் கருதுகிறேன்.

இவர் ஒரு தனிமனித இயக்கமாகவே திகழ்கின்றார். உலக அரங்கில் இவரின் தமிழ்ப்பணிகள் குறிப்பாகத் திருக்குறள் தொண்டுகள், அவை தொடர்பான நூல்கள், பதிப்புகள் யாவும் உலகத் தமிழ் மக்களுக்கு நன்மை விளைவிக்கும் என்பதில் ஐயமே இல்லை.

தமிழ்நெறியாம் குறள்நெறி உலகமெலாம் தழைத்தோங்குக.

இங்ஙனம்,

மு.மணிவெள்ளையன்,

துணைத்தலைவர்,

மலேசியத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கம்,

கல்வி - தமிழ்ப்பண்பாட்டுப் பிரிவுப் பொறுப்பாளர்,

உ.த.ப. இயக்கம்.

1.9.2000.

எனது முதல் வான்வழிப்பயணம்

எண்ணிய எண்ணியாங்கு எய்துப எண்ணியார்
திண்ணிய ராகப் பெறின் – குறள் 666

அரியவற்றை எண்ணியவர், அவ்வெண்ணத்தில் உறுதியாக இருந்து செயல்பட்டால், அவர் எண்ணியவற்றையெல்லாம் எண்ணியபடியே அடைவது உறுதி.

நோக்கம் :

"உலகம் முழுவதும் தமிழர்கள் இருக்கிறார்கள். ஆனால், மலேசியாவில்தான் தமிழர்கள் வாழ்கின்றார்கள்" என்று பேரறிஞர் அண்ணா கூறினார். மலேசியாவில் தமிழர்கள் தாம் வாழ்வதோடு, தம்தாய் மொழியாம் தமிழையும் தமிழ்ப்பண்பாட்டையும் வாழவைத்துக் கொண்டும் இருக்கிறார்கள் என்பதை, நான் அண்மையில் மேற்கொண்ட மலேசியப் பயணத்தின்போது நேரிலேயே கண்டும் கேட்டும் உணர்ந்தும் உவந்தேன். அதை விளக்குவதே இந்நூலின் நோக்கம்.

தொடர் வண்டியில் திருக்குறள் தொண்டு :

1992 அக்டோபரில் திருச்சி நாமகிரிச் சுற்றுலாக் குழுமம் ஏற்பாடு செய்திருந்த வடஇந்தியச் சுற்றுலாவில் பங்குகொண்டேன். பதிவு செய்யப்பெற்ற தொடர்வண்டிப்பயணம். அறுபதுபேர் உட்காரவும் படுக்கவும் வசதியுள்ள ஒருநீண்ட வண்டி. தக்க வாய்ப்பு நேரும்போதெல்லாம் வண்டியின் மையப்பகுதியில் நின்றுகொண்டு அனைவர்க்கும் கேட்கும்படியாகத் திருக்குறள் விளக்கம் செய்தேன். பெரும்பாலோர் கேட்டு மகிழ்ந்தனர். என்னைத் திருவள்ளுவர் என்றும் சிலர் அழைத்தனர்.

கப்பலில் தமிழ்த்தொண்டு :

1994 மார்ச்சுத் திங்களில் வி. ஜி. பி. உலகத்தமிழ்ச் சங்கத்தின் இரண்டாம் மாநாடு, அந்தமான் தீவில் நடத்த திட்டமிட்டனர். முத்தமிழ்க்காவலர் கி. ஆ. பெ. விசுவநாதம் தலைமையில் முந்நூறுக்கும் மேற்பட்ட தமிழறிஞர்களும்

எழுத்தாளர்களும், 'நான்கௌரி' என்னும் அழகிய - பெரிய - வசதிமிக்க கப்பலில் 25-3-94இல் பயணம் மேற்கொண்டோம். கப்பலில் இருந்த பெரிய மாநாட்டுக்கூடத்தில் அறிஞர்கள் குழுமி, போகும்போதும் வரும்போதும், அந்தமான் தீவின் தமிழ்ச்சங்க மண்டபத்திலும், கருத்தரங்கம், கவியரங்கம், ஆய்வரங்கம், பட்டிமன்றம், கலைநிகழ்ச்சி முதலியன நிகழ்த்தினோம். வங்கக்கடலில் சங்கத்தமிழ் பொங்கிப்பரவியது!

மும்பாயில் முத்தமிழ் முழக்கம் :

அ. இ. தமிழ் எழுத்தாளர் சங்கம் 1995 ஏப்ரலில் மும்பாயில் (அன்றைய பம்பாய்) தமிழ்மாநாடும் திருக்குறள் மாநாடும் நடத்த திட்டமிட்டது. முந்நூறுக்கும் மேற்பட்ட முத்தமிழறிஞர்களும் எழுத்தாளர்களும் தொடர்வண்டிப் பயணம் செய்து பம்பாய் நகரில் ஐந்து நாட்கள் தங்கித் தமிழ்மாநாடும் திருக்குறள் மாநாடும் நடத்தினோம். இன்றிவர்களிருந்தால் என்னும் கருத்தரங்கில் நான் திருவள்ளுவராக மாறிப் பேசியப் பேச்சு அனைவரையும் கவர்ந்தது.

வானூர்திப் பயணம் செய்யவும் தமிழ் மணக்கும் மலேசியாவில் தமிழ்ப்பணியாற்றவும் வேண்டும் என்னும் பேரவா நீண்டநாட்களாக என் மனத்தில் நிலைகொண்டிருந்தது. 1994ஆம் ஆண்டில் மலேசியா செல்லும் நோக்கத்துடன் கடவுச்சீட்டு (PASSPORT) வாங்கினேன். நூற்பணியும் பொருளாதாரமும் இடங்கொடுக்காததால் செல்ல இயலவில்லை. ஆண்டுக்கொரு நூல் எழுதிப்பதிப்பிக்கும் திட்டம், வீட்டுப் பராமரிப்புப்பணி, இளையமகன் தொல்காப்பியன் திருமணம், திருக்குறள் பேரவையின் பணிகள் என அடுத்தடுத்து ஏற்பட்ட பொருட்செலவால் கடந்த சில ஆண்டுகளாக அவ்வெண்ணம் நிறைவேறவில்லை.

எண்ணத்தின் திண்ணம் :

ஆயினும் மலேசியா செல்ல வேண்டும் என்னும் திண்ணிய எண்ணத்துடன் சிறிதுசிறிதாகப் பொருள்சேமிப்பும் செய்துவந்தேன். தொல்காப்பியனின் இடைவிடா அச்சகத்தொழில் முயற்சியால், 1998ஆம் ஆண்டு வீட்டுப் பராமரிப்புப்பணியும், 1999ஆம்ஆண்டு இலக்கியச்செம்மல் செந்தமிழந்தணர் இளங்குமரனார் தலைமையில்

தொல்காப்பியன்–பூரணி திருமணமும் நிறைவேறின.

செந்தமிழ்ச் சிலப்பதிகார மாநாட்டுத்திட்டம் :

இராவணகாவிய மாநாடு, உலகத் திருக்குறள் மாநாடு முலியவற்றை வெற்றிகரமாக நடத்திய மலேசியத் தமிழ்ப்பண்பாட்டியக்கம், செந்தமிழ்ச் சிலப்பதிகார உலகளாவிய மாநாட்டை நடத்தவும் திட்டமிட்டது. ம.த.ப. இயக்கப் பொதுச் செயலாளர் செந்தமிழ்ச்செம்மல் மு. மணிவெள்ளையர் இரண்டுநாள் மாநாடாக நடத்த ஓராண்டுக்காலம் பெருமுயற்சியெடுத்துக் கொண்டார். 99 டிசம்பரில் மாநாடு நடத்தும் முயற்சியாக 98 டிசம்பரில் தமிழகம் வரத்திட்டமிட்டு, இயலாமல் பலமுறை முயன்று 99 சூலையில் தமிழகம் வந்து, புலவர் புலமைதாசர் உதவியுடன் அறிஞர்களைச் சந்தித்துத் தக்க ஏற்பாடு செய்து மலேசியா திரும்பினார்.

என் நூல் வழியாகவும் குறளியம் இதழ்வழியாகவும் அறிமுகமாகிச் சில் ஆண்டுகளாக மடல்வழி மட்டும் என்னுடன் தொடர்புகொண்டிருந்த அவர், 1996 சனவரி 20, 21 தேதிகளில் கோலாலம்பூரில் நடத்திய உலகத்தமிழ்மறை திருக்குறள் வாழ்வியல் மாநாட்டு அழைப்பிதழ் அனுப்பியிருந்தார். மாநாட்டில் எனக்கும் பங்குதர முடியுமா? என்று எழுதிக் கேட்டதற்குக் கடந்த ஓராண்டாகவே திட்டமிட்டு முடிந்துவிட்டதாகவும், அடுத்து நடத்த இருக்கும் சிலப்பதிகார மாநாட்டிற்கு அழைப்பதாகவும் எழுதியிருந்தார்.

மாநாட்டுப்பணியாகத் தமிழகம் வந்தபோதும் சிற்றூரில் வாழும் என்னைச் சந்திக்கநேரமில்லாமல் திரும்பிவிட்டார். ஏற்கனவே அவர் அறிவித்திருந்தபடி "சிலப்பதிகாரத்தில் திருக்குறளின் தாக்கம்" என்னும் தலைப்பில் மாநாட்டு மலருக்குக் கட்டுரையெழுதிச் சென்னையிலுள்ள புலவர் புலமைதாசரிடம் கொடுத்திருந்தேன். அக்கட்டுரையை மட்டும் வாங்கிக்கொண்டு, மலேசியா திரும்பிய மணிவெள்ளையர், என்னைச் சந்திக்க இயலாமைக்கு வருத்தம் தெரிவித்து, முத்தமிழ்க் காப்பியத்தில் இயற்றமிழின் ஆட்சி என்னும் தலைப்பில் நான் ஆய்வுரை நிகழ்த்த வேண்டுமென்றும், பயணச்செலவில் பாதி தருவதாகவும், பல்வேறு சூழல்களால் 12–12–99 ஒருநாள் மட்டும் காலை 8 முதல் இரவு 8 வரை

செந்தமிழ்ச்சிலப்பதிகார உலகளாவிய மாநாடு, கோலாலம்பூரில் நடைபெறும் என்றும் எழுதியிருந்தார்.

பயணமுயற்சி :

மாநாட்டு அழைப்பிதழுடன் 10-12-99 காலை கோலாலம்பூர் வரவேண்டும் என்றும் விமானநிலையம் வந்து வரவேற்று அழைத்துச்செல்வதாகவும் மணிவெள்ளையர் எழுதிய மடலும் வந்தது. மலேசிய விமானம் சென்னையில் பின்னிரவு 1 மணிக்குப் புறப்பட்டு 3 மணிநேரப் பயணத்திற்குப் பின் 4 மணிக்குக் கோலாலம்பூர் விமானநிலையம் சென்று சேரும். இந்திய நேரத்துடன் கோலாலம்பூர் நேரம் இரண்டரை மணி கூடுதலாக இருக்கும். எனவே விமானம் அங்குத்தரையிறங்கும்பொழுது ஆறரை மணியாக இருக்கும்.

ஏற்கனவே என்கருக் கடவுச் சீட்டு வாங்கிக் கொடுத்திருந்த திருச்சி குளோப் குழுமத்திடம் விமானச்சீட்டு, நுழைவுச்சீட்டு(VISA) ஆகியவை வாங்கும் பணியை ஒப்படைத்தேன்.

விமானப் பயணச்சீட்டு எளிதாகக் கிடைத்தும் அயல்நாட்டு நுழைவு அனுமதிச்சீட்டு எளிதில் கிடைக்காமல் பெருமுயற்சி செய்யவேண்டியிருந்தது. மூன்றுவார முயற்சிக்குப்பிறகு சென்னையில் செனறுமுயலும்படியாகக் கூறிவிட்டார்கள்.

6-12-99 இரவு சென்னைக்குப் பயணம் புறப்படத் திட்டமிட்டிருந்தேன். முனைவர் கோடப்பிள்ளை, முத்தமிழ் வித்தகர் க. இராசவேலு செண்பகவல்லி ஆகியோர் எனக்குச் செண்பகத் தமிழரங்கில் வழியனுப்புவிழா நடத்த திட்டமிட்டுச் செய்தி தெரிவித்தனர். 4-12-99 மாலை குடும்பத்துடன் திருவரங்கம் சென்றேன். அன்று அடியார்பெருமை பற்றிப் பேச இருந்த கவிஞர் கோபண்ணன் எனக்காகப் பேசும் நேரத்தைச் சுருக்கிக் கொண்டார். தமிழ்மாமணி சேதுமாணிக்கம் தலைமையில் செண்பகத்தமிழரங்கில் என்னை வாழ்த்தி வழியனுப்பி வைத்தார்கள்.

மாநாட்டு அழைப்பிழ் பொதுவாக அச்சிட்டிருந்ததால் தமிழகத்திலிருந்து யார் யார் மலேசியாவிற்கு வருகின்றனர்

என்னும் விவரம் தெரியாமலிருந்தது.

5-12-99 அன்று குழித்தலைத் தமிழ்க் 'கா.சு.' இலக்கியக் கழகத்தின் 35ஆம் ஆண்டு விழாவிற்குச் சென்றிருந்தேன். 'நமது வழிகாட்டிகள்' என்னும் கருத்தரங்கில் பங்குகொண்டிருந்த அறிஞர்களை அறிமுகப்படுத்தும் பணி எனக்கு.

அவ்விழாவிற்கு வந்திருந்த புதுவைத் தமிழறிஞர் புலவர் இறைவிழியர் மூலம், புதுவையிலிருந்து இசையறிஞர் இரா. திருமுருகனார், 'வெல்லும் தூயதமிழ்' இதழாசிரியர் க. தமிழ்மல்லர், பாவலர் கதிர்முத்தையர் ஆகியோர் மாநாட்டில் பங்குகொள்ள இருப்பதாக அறிந்தேன்.

அன்றிரவே பயண ஏற்பாட்டுடன் சென்னைக்கு புறப்பட இருந்ததால் மாலை ஊர் திரும்பினேன். என்னை வழியனுப்பி வைப்பதற்காக உறவினர் வந்து காத்திருந்தனர். உறவினர்களும் நண்பர்களும் வாழ்த்தி வழியனுப்பி வைக்க, தம்பிமகன் அரவிந்தன் உடன் துணைக்குவர இரவு 8மணிக்கு வீட்டை விட்டுப்புறப்பட்டேன்.

சென்னைக்குச் சென்று நுழைவுச்சீட்டு பெற்றுவிட முடியும் என்னும் நம்பிக்கையில் இவ்வளவு ஏற்பாடும் நடந்தது. 'தன்னம்பிக்கை' என்னும் முனையில்தானே உலகமே சுழல்கிறது.

குறளியத்தில் தொடர்கட்டுரையாக வந்து கொண்டிருந்த "திருவள்ளுவரும் பன்னாட்டறிஞர்களும்" என்னும் நூலை நவம்பரில் பதிப்பித்து, ஐம்பது படிகளும், திருவள்ளுவர் தந்த வாழ்வு, முயற்சி திருவினையாக்கும், குறுந்தொகை காட்டும் வாழ்வு, கனவிலும் மறவேன் என்னும் நூல்களில் சில சில படிகளும் உடன் கொண்டு சென்றேன்.

சென்னைக்குச் சென்றதும் திசம்பர் 6, 7 ஆகிய இருநாட்களும் மூத்தமகன் திருவள்ளுவனும் நானும் நுழைவுச்சீட்டு பெறுவதற்குரிய முயற்சியில் ஈடுபட்டோம். திருவல்லிக்கேணி நெடுஞ்சாலை, 29 - 343, CASIO, AIR TRAVELS (P) LTD என்னும் குழுமத்தினரின் முயற்சியாலும்

உதவியாலும் ஏழாம் நாள் மாலை பெற்றுவிட முடியும் என்னும் நம்பிக்கை ஏற்பட்டது. மறுநாள் திருவள்ளுவன் அலுவலகப்பணி காரணமாக வரமுடியாமல் பரிந்துரை மடலுடன் ஏனைய முக்கியச் சான்றுகளையும் எடுத்துக் கொண்டு மருமகள் அருள்மொழியைத் துணைக்கு அழைத்துக் கொண்டு மலேசியத் தூதரகம் சென்றேன். எனக்குச் செவிகேளாக் குறையால் துணைக்கு ஒருவர் வேண்டியுள்ளது. மலேசியத் தூதரை நேரில் சந்தித்து, மாநாட்டழைப்பிதழ், நான் எழுதிய நூல்கள் ஆகியவற்றைக் காட்டி ஒப்புதல் பெற்றேன். மாலை தருவதாகக் கூறினார்.

திசம்பர் 10ஆம் நாள் கோலாலம்பூர் வரச் சொல்லியிருந்ததால், 9ஆம் நாள் இரவுப் பயணத்திற்குக் குறிக்கச் சொல்லியிருந்தேன். பின்னிரவு ஒருமணிக்கு விமானம் புறப்படுவதால், 9ஆம் நாள் அங்குப் போகவேண்டும் எனக் கருதி 8ஆம்நாள் இரவுப்பயணமாக விமானச்சீட்டில் குறித்திருந்ததை ஏழாம்நாள்தான் கவனித்தோம். ஆதலால், 9ஆம் நாள் காலையே விமானநிலையத்திற்கு என்னை அழைக்கவரும்படி ம.த.ப. இயக்க அலுவலகத்திற்குத் தொலைபேசி மூலம் செய்தி தெரிவித்தோம்.

8ஆம் நாள் இரவு 8 மணிக்குத்தான் நுழைவுச்சீட்டு எல்லா வேலையும் முடிந்து என்கைக்கு வந்துசேர்ந்தது. விமானம புறப்படுவதற்கு மூன்றுமணிநேரம் முன்பு விமானநிலையத்தில் இருக்கவேண்டுமென்பதால், 9 மணிக்குப் புறப்படத் தயாரானோம். திருவள்ளுவனின் நண்பர் மார்க் குடும்பத்தார் வீட்டிற்கு வந்து அன்பளிப்புக் கொடுத்து வாழ்த்தினர். திருவள்ளுவன் குடும்பத்தார் காரில் என்னுடன் விமானநிலையம் வந்தனர். இரவு 10மணிக்குச் சென்னைப் பன்னாட்டு விமானநிலையத்தை அடைந்தோம். ஆங்காங்கு நடக்கவேண்டிய சோதனைகள் முடிந்தபின் திருவள்ளுவன், அருள்மொழி, பெயரன் வாஞ்சிநாதன் ஆகிய மூவரும், விமானநிலையத்தில் வரக்கூடிய எல்லைவரை வந்து கையசைத்து வழியனுப்பினர்.

சுங்கச் சோதனை :

சுங்கச் சோதனையில் பலவித தொல்லைகள் ஏற்படும்

என்று கேள்விப்பட்டுள்ளேன். என் சுமைகளில் ஐயத்திற்குரிய பொருளோ, சட்டத்திற்குட்பட்ட எடைக்குமேலோ எதுவும் இல்லை. அதிகாரிகளும் நேர்மையுடன் தம் கடமையைச் செய்ததால் போகும்போதும் வரும்போதும் இருநாட்டு விமானநிலையங்களிலும் எனக்கு எந்தத் தொல்லையும் ஏற்படவில்லை. என் பெட்டியும் புத்தகக்கட்டும் முறையாகச் சோதனைக்கூடத்தின் வழித் தானியங்கி மூலமாக விமானத்திற்கு அனுப்பப்பெற்றன. தானியங்கி வழிச் செல்லும் சுமைகள் 20கிலோவரை இருக்கலாம். மேலிருந்தால் கட்டணம் செலுத்தவேண்டும். தோளில் தொங்கும் பையிலும் கைப்பையிலும் 5கிலோ எடைவரை வைத்திருக்கலாம். யாவும் இவ்வெடைகளுக்கு மிகாமல் இருந்ததாலும், ஐயத்திற்குரிய தவறான பொருளின்மையாலும், அதிகாரிகள் முறையாக நடந்துகொண்டதாலும் எந்தச் சிக்கலும் இன்றி அடுத்தடுத்த கடமைகள் முடிந்தன. எல்லாச் சோதனைகளும் முடிந்து, தோள்பை கைப்பைகளுடன் மலேசியப்பயணிகள் தங்குமிடத்திற்குச் சென்று, ஏற்கனவே சென்றிருந்தோருடன் ஒருமணிநேரம் தங்கியிருந்தேன்.

முதல் விமானப்பயணம் :

மலேசிய விமானம் வந்த உடன் காத்திருந்தோர் வரிசையாக விமானத்திற்குச் சென்றோம். விமானநுழைவாயிலும், நடைபாதையும் சமமாகவும் தூய்மையாகவும், அழகாகவும் இருந்தமையால் விமானத்திற்குள் நுழைவது தெரியாமலே நுழைந்து வியப்படைந்தேன். அவரவர் பயணச்சீட்டில் குறித்துள்ள இருக்கை எண் முறைப்படி அமர்ந்தோம். பயணத்தில் அறிமுகமானவர் யாருமில்லை. என்கைப்பையில் எப்போதும் ஏதேனும் ஒருநூலும், இலக்கியத்திங்களிதழும் இருந்துகொண்டே இருக்கும். அவைதாம் எனக்குற்ற வழித்துணைவர்கள்! நல்ல நண்பர்கள்!

இனிய வரவேற்பும் உதவிகளும் :

பொற்சிலை போன்ற அழகிய இளம் விமானப்பெண்கள் மலர்ந்த முகத்துடன் வரவேற்று, அவரவருக்குரிய இருக்கை காட்டி அமரச் செய்கின்றனர். இருக்கையில் பொருத்தப்பட்டிருக்கும் பாதுகாப்புவாரையெடுத்துத் தோளிலும்

இடுப்பிலும் மாட்டிக்கொள்ளவேண்டும். தெரியாதவர்களுக்குப் பணிப்பெண்கள் உதவுகின்றனர். விமானம் புறப்படும்போதும், இறங்கும்போதும் தவறாமல் பாதுகாப்பு வாரை மாட்டியிருக்க வேண்டும். இன்றேல் இருக்கையிலிருந்து கீழே விழுந்து உருளநேரும். ஒவ்வொரு இருக்கையிலும், மலேசியநாட்டுப்படம், விவரக்குறிப்புகள் அடங்கிய இதழ்கள் உள்ளன. அவ்வப்போது ஒலிபெருக்கி மூலம் வரும் அறிவிப்பை மென்மையாக அறிவிக்கும் செவிக்கருவி, நறுமணமும் வெதுவெதுப்பும் தூய்மையும் பொருந்திய கைக்குட்டை அடங்கிய பை அனைவருக்கும் வழங்கப்படுகிறது. கைக்குட்டையால் முகத்தைத் துடைத்துக்கொண்டு செவிக்கருவி பொருத்திக்கொண்டோம். பலவகை உணவுத் தட்டுகள் அடங்கிய அலமாரியுள்ள தள்ளுவண்டியுடன் வரும் பணிப்பெண்கள், அவரவர்க்கு வேண்டிய உணவுத்தட்டுகளை இனியமுகத்துடன் கொடுத்துச் செல்கின்றனர். எனக்கு வேண்டிய சைவஉணவைப் பெற்றுக்கொண்டேன். ஒவ்வொரு தட்டிலும், சிறிதளவு சோறு, காய்கறிகள், பால், சர்க்கரை, தேநீர் முதலியன தனித்தனியாக இருக்கும். அவரவர் விருப்பப்படி பயன்படுத்திக் கொள்ளலாம். சிறுகரண்டிகளும், கைதுடைக்கும் தாளும் இருக்கும். இருக்கையிலேயே இருந்து அனைத்தும் பயன்படுத்திக் கொள்ளலாம். அருந்தி முடித்தபிறகு, உணவுத்தட்டுகளை முன்புபோலவே தள்ளுவண்டியில் எடுத்துச் சென்றுவிடுவர். இருக்கையில் தூய்மையான, மென்மையான உள்ளன்போர்வையும் இருக்கும். வேண்டியவர் பயன்படுத்திக் கொள்ளலாம்.

இனிமையான வான்வழிப்பயணம் :

விமானம் புறப்பட்டு மேலே செல்லும்போது ஒளிவெள்ளத்தில் மூழ்கியிருக்கும் விமானநிலையத்தைக் கண்ணாடிச் சாளரம் வழியாகப் பார்த்துச் சுவைத்துக்கொண்டே சென்றேன். குறிப்பிட்ட உயரம் சென்றஉடன் விண்வெளியில் அசைவின்றி மெதுவாக ஊர்ந்து செல்வதைப் போல் உள்ளது. மலேசிய விமானம் அழகும் தூய்மையும் வசதியும் மிக்கதாக இருக்கிறது. வான்வழிப் பயணம் மிக இனிமையாக இருந்தது. இடையிடையே சிறுஉறக்கம், மலேசியாவைக் காணும் ஆர்வமிகுதியால் நல்ல உறக்கம் வரவில்லை. இரவுப்

பயணமாகையால் இருள்சூழ்ந்த வெளியுலகைக் காணமுடியவில்லை. பையில் வைத்திருந்த இலக்கிய இதழ்களால் நேரம்போவதும் தெரியவில்லை. பன்னூறு கி.மீட்டர் தூரத்தை மூன்றுமணிநேரத்தில் கடந்து இந்தியநேரம் பின்னிரவு நான்குமணி மலேசியநேரம் கூடுதல் இரண்டுமணி – ஆறுமணிக்கு மலேசியத்தலைநகர் கோலாலம்பூர் சிப்பாங் விமானநிலையத்தில் விமானம் இறங்கியது. என் காலங்காட்டும் கருவியையும் இரண்டும்மணி அதிகமாக்கிக் கொண்டேன்.

உலகிலேயே சிறந்த நிலையம் சிப்பாங்(SEPANG) :

அண்மைக்காலத்தில் மிகப்புதுமையாக அமைக்கப்பட்ட மலேசியப் பன்னாட்டு விமானநிலையம் சிப்பாங் நிலையம் மிகத் தூய்மையாகவும் அழகாகவும் பெரிதாக்வும் புதுமையாகவும் இருந்தது. யாவும் பெரும் வியப்பையூட்டின. உலகிலேயே சிறந்த பெரிய புதுமையான நிலையம் என்று கூறுகின்றனர். புதிய சிப்பாங் விமானநிலையம் கோலாலம்பூரிலிருந்து 40 கல்தொலைவிலும் சிரம்பானிலிருந்து 25 கல்தொலைவிலும் உள்ளது. பழைய நிலையம் சுபாங் (SUBANG) கோலாலம்பூருக்கு அருகில் உள்ளது. காலை 7 மணிக்கு மேல்தான் கதிரவனொளியைக் காணமுடியுமாதலால் மின்னொளி வெள்ளம் மேலும் அழகையூட்டியது. விமானநிலைய அழகை நேரில் பார்த்தால்தான் முழுஅழகும் புரியும். மிகப்பெரிய நிலையமாதலால், விமானத்தை விட்டு வெளிவந்தவுடன் பயணிகளை மின்சாரவண்டி யேற்றிக்கொண்டு, விமானப்பொருள்கள் பெறுமிடத்திற்குக் கொண்டுசென்றது. சுழல்மேடையில் வந்த என்பெட்டியையும் புத்தகக் கட்டையும் அடையாளம் கண்டு எடுத்து, தள்ளுவண்டியில் வைத்துத் தள்ளிக்கொண்டு வருகையில், "ஆ.வே.இரா. வாருங்கள்" என்ற புதிய இனிய குரல்கேட்டுத் திரும்பினேன். இனிமையாக வரவேற்று என் சுமையையும் வாங்கிக்கொண்ட அவருக்கும் எனக்கும் அதுவரை எந்தத் தொடர்பும் கிடையாது. தாங்கள் யார்? என்றேன். 'கன்னல் மணியம்' என்றார். என்னையெப்படி அறிந்தீர்கள்?

"தாங்கள் மேலே போட்டிருக்கும் மஞ்சள் துண்டால்

அறிந்தேன்".

நான் மணிவெள்ளையருக்கு எழுதிய அடையாளத்தைச் சொல்லியனுப்பியுள்ளனா். இவரைப்பற்றிப் பின்னர் விளக்கமாக எழுதுவேன். "மாணிக்கம் வரவில்லையா ?" என்று கேட்டேன். "அதோ அங்கே காருடன் நிற்கின்றார்"என்றார். அவரை நோக்கி ஆர்வமுடன் சென்றேன். அவரும் ஆர்வமுடன் வரவேற்றுக் காரில் ஏற்றிக்கொண்டார்.

2. மலேசிய நண்பர்கள்

புணர்ச்சி பழகுதல் வேண்டா உணர்ச்சிதான்
நட்பாம் கிழமை தரும் – 785

நட்பு கொள்வதற்குத் தொடர்பும் பழக்கமும் வேண்டியதில்லை ஒத்த உணர்ச்சிதான் நட்புகொள்வதற்கு உரிமையைக்கொடுக்கும்.

திருக்குறள் செம்மல் க. இராமமாணிக்கம் :

எந்த அறிமுகமும் தொடர்பும் இல்லாமல் முதன்முதலாக எனக்கு ஆயிரம் ரூபாய் அனுப்பி, நான் எழுதிய "திருக்குறள்நயம்" (இல்லற இயல்) நூறு நூல்கள் மலேசியாவில் பரப்புவதற்கு அனுப்பச்சொல்லியிருந்தார். வியந்துபோனநான் தீர்ந்துபோய் கைவசம் இருந்த முப்பது நூல்களும், "திருக்குறள்நயம்" (பொருளும் இன்பமும்) சில நூல்களும் கப்பல்வழியில் அனுப்பி, எஞ்சிய தொகைக்கு, பதிப்பிக்க இருக்கும் "திருவள்ளுவர் தந்த வாழ்வு" (நாடகம்) அனுப்புவதாக எழுதியிருந்தேன். அங்ஙனமே நாடக நூல் அச்சான உடன் பாக்கித் தொகைக்குக் கணக்கிட்டு அனுப்பினேன். அதன்பின் மடல் தொடர்பு மட்டுமே உண்டு. அன்றுதான் முதன்முறையாகச் சந்தித்தோம்.

இரட்டைக்கோபுரம்போல் :

கோலாலம்பூர் நகரை அழகுபடுத்தும் பெட்ரோனாசு என்று சொல்லப்படும் இரட்டைக் கோபுரம் சுமார் நூறு மாடிகளையுடையன. எங்குநின்று நோக்கினும் இரண்டும் இணைந்து தோன்றி நகருக்கு அழகுசெய்கின்றன. அவற்றைப்போல மலேசியத் தமிழ்ப்பண்பாட்டியக்க

வளர்ச்சிக்கும் அரிய தமிழ்ப்பணிகளுக்கும், பொதுச்செயலாளர் செந்தமிழ்ச் செம்மல் மு. மணிவெள்ளையருக்கு இருகைகள்போல கன்னல்மணியமும், இராமமாணிக்கமும் முறையே துணைச்செயலாளராகவும் பொருளாளராகவும் இருந்து அனைத்துப் பணிகளிலும் உதவுகின்றனர். இவர்கள் காலையில் வீட்டைவிட்டுப் புறப்பட்டால், நாள்தோறும் சொந்தப்பணிகளோடு இயக்கப்பணிகளையும் செய்து முடித்து இரவு 10 மணிக்குமேல்தான் வீடு திரும்புவர். இராவணகாவிய மாநாடு, திருக்குறள் மாநாடு, சிலப்பதிகார மாநாடு முதலியவை நடந்தபோது, சுமார் ஒரு திங்கள் காலம், காலையில் 6 மணிக்கு முன்பே புறப்பட்டு இரவு 12 மணிக்குமேல் வீடு திரும்புவர். இப்பணிகளுக்கு மாணிக்கத்தின் கார் அதிகமாகப் பயன்படும். ஆயுள்காப்பீட்டு முகவர்களாகப் பணியாற்றும் மணிவெள்ளையரும் மாணிக்கமும் சொந்தப் பணியிலும் தமிழ்ப்பணியிலும் இரட்டைக் கோபுரங்களே! மணிவெள்ளையர் குடும்பச்செலவிற்காகவும் தமிழ்ப்பணிச் செலவிற்காகவும், ஆயுள்காப்பீட்டு முகவர், மொழிபெயர்ப்பாளர் ஆகிய இருபணிகளையும் இரட்டைக் கோபுரங்களாகச் செய்கின்றார். என்னே இவர்களின் தமிழ்ப்பற்று!

மாணிக்கத்தின் கார்:

சிலப்பதிகார மாநாட்டிற்குத் தமிழகத்திலிருந்து நான் (ஆ.வே.இரா), முனைவர் மு.பி. பாலசுப்ரமணியம், இசைப்பேரறிஞர் இரா. திருமுருகனார், தனித்தமிழ்க்காவலர் க. தமிழமல்லர், பாவலர் கதிர்முத்தையா ஆகிய ஐவரும் அழைக்கப்பட்டிருந்தாலும், ஒவ்வொருவரும் ஒவ்வொரு நாளாகத் தனித்தனியாகத்தான் செல்ல முடிந்தது. ஒவ்வொருநாளும் காலை 6 மணிக்கு 40 கல் தொலைவிலுள்ள சிப்பாங் விமானநிலையத்தில் மாணிக்கம் மணியம் ஆகியவர்களுடன் மாணிக்கத்தின் கார் காத்திருந்து வரவேற்று அழைத்துச் செல்லும். மாநாடு முடிந்து தமிழகத்திற்குத் திரும்பும்போதும் தனித்தனியாகத்தான் திரும்ப முடிந்தது.

இரட்டைக்கோபுரத்தினருகில் சிறிது தூரம் தள்ளி வானளாவிய ஒற்றைக் கோபுரம் திகழ்கிறது. இதன் விவரம் பிறகு எழுதுவேன். எங்களை வழியனுப்புவதற்கு, வரவேற்ற

இருவருடன் மணிவெள்ளையரும் விமானநிலையம் வந்தார். தனித்தனியாக வழியனுப்பவும் மாணிக்கம் காரே பயன்பட்டது. மாநாட்டிற்கு நன்கொடை வசூலிக்கவும், நன்கொடையாளர்களுக்கு மாநாட்டு மலர் வழங்கவும், கோலாலம்பூரில் அதிகமான இடங்களை நான் சுற்றிப்பார்க்கவும் மாணிக்கத்தின் காரே பயன்பட்டது.

க. இராமமாணிக்கத்தின் குடும்பத்தினரும் உபசரிப்பும் :

செந்தமிழ்ச் சிலப்பதிகார மாநாட்டிற்கு முதன்முதலாகச் சென்ற என்னைச் சிப்பாங் விமானநிலையத்தில் வரவேற்ற மாணிக்கத்தின் கார், புக்கிட்கெமுனிங் நகரில் உள்ள அவர்களின் இல்லத்தில் என்னை இறக்கிவிட்டு மாநாட்டுப்பணிக்காகப் பறந்துவிட்டது. நான் மலேசியாவிலிருந்த 24 நாட்களில் அதிகமாகத் தங்கியது மாணிக்கம் இல்லத்தில்தான்.

கிள்ளான் மாவட்டத்தைச் சேர்ந்த 'புக்கிட்கெமுனிங்' என்னும் சிறுநகரில் பாவேந்தர் தெருவிலுள்ள அவர்கள் இல்லம் எல்லாவசதிகளுடன் பெரிய நூலகமும் பலர் தங்கும் வசதியும், பண்பான குடும்ப உறுப்பினர்களும் உடையது.

அவருடைய மனைவி திருமதி. இலீலாமணி (39), மக்கள் செல்வி சீலா (21), செல்வன் இரவீந்திரன் (19) செல்வி தேன்மொழி (10) ஆகிய அனைவரும் என்னிடம் பேரன்பு காட்டிப் பழகி இன்முகமும் இன்சொல்லும் கொண்டு உபசரித்தனர். நான்காம் வகுப்புப் பயிலும் செல்வி தேன்மொழி விடுமுறைக்காலமாதலால், தாயாருக்கு உதவியாக வீட்டிலேயே தங்கிக் காலந்தவறாது உணவருந்த அழைப்பார். பள்ளிப்படிப்பு முடிந்த ஏனையோர், பெற்றோருக்குத் தொல்லை தராமல் சுயமாகச் சம்பாதித்துக் கல்லூரிக்கல்விக்குப் பயன்படுத்த வேண்டும் என்னும் நோக்கத்ததுடன் செயல்பட்டனர். ஓரலுவலகப் பணியிலிருந்த இரவீந்திரருக்கு அதிகம் என்னிடம் பேச நேரம் இருக்காது. கணினிப்பயிற்சிக்குச் சென்று கொண்டிருந்த செல்வி சீலா முற்பகல் பயிற்சி முடித்து வந்தபிறகு, பிற்பகல் முழுவதும் தாத்தா! தாத்தா! என்று என்னை அன்புடன் அழைத்து ஏதேனும் உதவி

செய்துகொண்டும் பைந்தமிழில் பேசிக்கொண்டும் இருப்பார். பெரும்பாலான இல்லங்களில் தேநீருக்குப் புட்டிப்பாலும் பக்குவப்படுத்தப்பட்ட பால்தூளுமே பயன்படுத்தியதால் மோர் இருக்காது. எனக்கு மோர் விருப்பம் என்பதையறிந்து, செல்வி சீலா பயிற்சி முடிந்துவரும்போது உணவு விடுதியில் மோரும் வேறு தின்பண்டங்களும் வாங்கி வருவார்.

முதுமைப்பருவம் இரண்டாம் குழந்தைப்பருவம் என்பர். என்னையும் அக்குடும்பத்தின் ஒரு குழந்தையாகவே கருதி அன்பு காட்டி வேண்டிய உதவிகள் செய்வர். இறுதிநாள் உதவிகளைப் பிறகு தெரிவிப்பேன்.

தமிழ்மணம் :

கண்ணாடி அலமாரிகளில் ஏராளமான தமிழ்நூல்கள் இருக்கின்றன. திருக்குறள் தொடர்பாக யான் எழுதிய நூல்களும் இருக்கின்றன. யான் இப்பொழுது கொண்டு சென்ற நூல்களையும் அவற்றுடன் சேர்த்துவைத்தேன். குறளியம், தெளிதமிழ், வெல்லும் தூயதமிழ் முதலிய தமிழக இதழ்களை நிறைய தருவித்து அங்குள்ள தமிழார்வலர்களுக்குக் கொடுத்து உதவுகின்றார். நூலக அலமாரிகளுக்குமேல் சுவரில் மூன்று படங்கள் உள்ளன. இடையில் தமிழ்த்தாயின் படம். ஒருபக்கம் தெய்வப்புலர் திருவள்ளுவர், மறுபக்கம் முத்தமிழ்க்காவலர் விசுவநாதம் படங்களைக் கண்டு மகிழ்ந்தேன்! வியந்தேன். இராவணகாவியமாநாட்டு மலர், திருக்குறள் மாநாட்டுமலர் முதலியன எனக்குக் கொடுத்து உதவினார்.

பரதநாட்டியப்பயிற்சி :

9-12-99 அன்று மாலை உலாவச் சென்றேன். பாவேந்தர் தெருவிற்கு அடுத்த நெடுஞ்சாலையில் நடக்கும்பொழுது, மகாமாரியம்மன் கோயில் ஒன்று கண்டு உள்ளே சென்று சுற்றிப்பார்த்தேன். இந்து சமயப் பல தெய்வங்களும் சுதைச் சிற்பங்களாக இருந்தன. ஓரிடத்தில் பரதநாட்டியப்பயிற்சி நடந்தது கண்டு மகிழ்ந்தேன். பின்னர் தமிழ்ப்பண்பக அலுவலகத்திலும் பரதநாட்டியப் பயிற்சி நடந்ததைப் பார்த்தேன். மாநாட்டு மேடையிலும் மாதவியின் நாட்டிய அரங்கேற்றக் காட்சி அமைத்திருந்தனர். இங்ஙனம் மலேசியாவில் தமிழ்மணம், திருக்குறள் நெறி, தமிழ்க்கலை, தமிழ்ப்பண்பாடு முதலியவற்றை அவ்வப்பொழுது கண்டு களிக்கும் வாய்ப்பு கிடைத்தது.

1051

தூய்மையும் அழகும் :

மலைவளமும் மழைவளமும் மிக்க மலேசியா இயற்கையழகும் செயற்கையழகும் மிக்கு விளங்குகிறது. நெடுஞ்சாலை, குறுஞ்சாலை, தெரு ஆகிய யாவும் மேடுபள்ளம், குப்பை கூளம் இன்றி அழகாகவும் தூய்மையாகவும் இருக்கின்றன. எங்குச் சென்றாலும் ஆங்காங்கு உள்ள வீடுகள் யாவும் சீருடையணிந்ததுபோல் ஒரே சீராகவும் அமைப்பாகவும் இருக்கும். எல்லா வீடகளிலும் ஓடு வேய்ந்திருக்கும். மாடிவீடாயினும் உச்சியில் ஓடு வேய்ந்திருக்கும். ஓடிஓடித்தேடினாலும் ஓடில்லா வீட்டைக் காண்பதரிது. தீவிபத்தைத் தவிர்ப்பதற்காக ஓடு வேய்ந்திருக்க வேண்டுமென்பது சட்டம். பெரும்பாலான வீடுகள் வீட்டுவசதி வாரியத்தால் கட்டப்பட்டவை. வீடுகளுக்கிடையில் இடைவெளியில்லை. சாக்கடை, குப்பை, கூளம் சண்டைசச்சரவு எதுவும் இருக்காது.

தனியார்கள் கட்டிக்கொண்டவீடும் சட்டத்திற்குட்பட்டு ஒரேசீராக ஓடுவேய்ந்தும் அவரவர் வசதிக்கேற்பச் சுற்றிலும் தோட்டம் உள்ளதாகவும் இருக்கும். மாணிக்கத்தின் வீடும் சுற்றிலும் புல்வெளியும் தோட்டமும் உடையதாக இருக்கிறது.

நம்நாட்டு அரசியல்வாதிகள் போலச் சாலைகளையும் பொதுவிடங்களையும் பாழ்படுத்தும் வழக்கம் அங்கு இல்லை. நான் சென்ற சமயம் பொதுத்தேர்தல் நடந்துமுடிந்து டத்தோத் திரு. டாக்டர் மகாதீர் முகம்மது தலைமையில் 10ஆம் அமைச்சரவை அமைத்தசமயம். ஆயினும் எங்கும் சாலைகளில் மேடுபள்ளங்களோ வரவேற்பு வளைவுகளோ, அவற்றிற்காகப் பறித்த குழிகளோ இல்லை. சுவர்களில் வண்ணச் சுவரொட்டிகளும் விளம்பரங்களும் இல்லை. எங்கும் தூய்மையும் அழகுமே மிக்கிருந்தன.

முனைவர் மு.பி.பா :

10-12-99 முற்பகல் 10மணிக்கு மாணிக்கம் இல்லத்தின் வாசலில் கார்வந்து நின்றது. காஞ்சிப்பச்சையப்பர் கல்லூரியின் முன்னாள முதல்வர் முனைவர் மு.பி. பாலசுப்பிரமணியர் முகிலருடன் வந்து இறங்கினார். வரவேற்று அளவளாவினோம். அவர் இளமை முதலே தமிழ் இலக்கியங்களிலும் திராவிட இயக்கத்திலும் ஈடுபாடு மிக்கவர். சிறந்த பேச்சாற்றலும்

எழுத்தாற்றலும் மிக்கவர். தமிழகத்திலும் அயல்நாடுகளிலும் குறிப்பாக மலேசியாவிலும் திருக்குறளின் சிறப்பையும் சிலப்பதிகாரத்தின் சீர்மையையும் பரப்பியவர். 'மணிவேந்தன்' என்னும் புனைபெயரில் நூல்பல எழுதியவர். அவருடைய மாணவர் திரு. வே. எழிலரசு என்பவர் 'தென்பாண்டித்தென்றல்' என்னும் தலைப்பில் மு.பி.பா. வாழ்வும் பணியும் பற்றி விரிவான நூல் எழுதியுள்ளார். அன்றுகாலை மாநாட்டிற்கு வந்த அவரை மாணிக்கமும் கன்னல் மணியமும் வரவேற்றுத் தமிழ்ப்பண்பகத்தில் விட்டபிறகு, என்னையும் அங்கு அழைத்துச் செல்ல வந்திருந்தார்.

நான் சென்னைநகரில் அவருடைய சொற்பொழிவைக் கேட்டிருந்தபோதும், அன்றுதான் நேரில் சந்தித்து அளவளாவும் வாய்ப்பு பெற்றேன். மாநாட்டிற்குப் பிறகு மலேசியாவில் பலநகரங்களில் நான், அவர், இசையறிஞர் திருமுருகர் ஆகிய மூவரும் சொற்பொழிவாற்றியுள்ளோம்.

தமிழ்ப்பண்பகம் :

மலேசியத் தமிழ்ப்பண்பாட்டியக்கத்தின் தலைமையகமாகிய தமிழ்ப்பண்பகம் கோலாலம்பூர் நகரில், "198 B , இரண்டாம் மாடி, துன்சம்பந்தன் சாலை, பிரிக்ஃபீல்ட்சு, 50470 கோலாலம்பூர்" என்னும் முகவரியில் செயல்பட்டு வருகிறது. 10-12-99 முற்பகல் 11 மணிக்கு அங்கு அழைத்துச் செல்லப்பட்டேன். 12-12-99இல் நிகழ இருக்கும் செந்தமிழ்ச் சிலப்பதிகார உலகளாவிய மாநாடு பற்றிய ஆலோசனைக் கூட்டம் நடந்துகொண்டிருந்தது. பொன்னிறமேனியும் நெடியதோற்றமும் கொண்ட ஒருவர் தலைவராக வீற்றிருந்தார். அவர்தான் ம.த.ப. இயக்கத்தின் பொதுச்செயலாளரும் மாநாட்டு ஏற்பாட்டாளரும், என் நீண்டநாள் உணர்ச்சியொத்த நண்பருமாகிய செந்தமிழ்ச்செம்மல் மு. மணிவெள்ளையார். வணக்கம் சொல்லி அனைவராலும் வரவேற்கப்பட்டேன். அதுதான் முதல் சந்திப்பு.

கூட்டத்தில் இருந்தோர் :

ம.த.ப. இயக்கத்தலைவர் திரு.ப.கு. சண்முகம், துணைத்தலைவர் புலவர் கா.ப. சாமி, பொருளாளர் க. இராமமாணிக்கம், துணைச்செயலர் கன்னல்மணியம், மலேசியத் தமிழ்நெறிக்கழகத் தேசியத்தலைவர் புலவர் இரா. திருமாவளவர், அறிஞர் அருள்முனைவர் முதலியோர் இருந்தனர். ஒருவருக்கொருவர் அறிமுகம் செய்துவைக்கப் பெற்றோம்.

அலுவலக அமைப்பு :

திருக்குறள்பணிக் களமாகவும், தமிழ்ப் பண்பாட்டுக்களமாகவும் செயல்படும் அவ்வலுவலகம் நூலகத்துடன் கூடிய 20அடிச்சதுர அறை, 30அடிச்சதுரக்கூடம், 10அடிச்சதுர வைப்பகம், கழிப்பறை, குளியலறை ஆகிய அனைத்து வசதிகளுடன் கூடியது. ஒரு வாரம் நான் தங்குமிடமாகவும் பயன்பட்டது.

உணவுவிடுதி :

அருகிலேயே தமிழா் நடத்தும் சிற்றுண்டிச் சாலைகளும் பெரிய உணவுவிடுதிகளும் உள்ளன. முக்கிய ஆலோசனைகளுக்குப்பிறகு, தமிழர் நடத்தும் பெரிய உணவுவிடுதிக்கு அழைத்துச் செல்லப்பட்டோம். உணவுவிடுதியில் தாய்த் தமிழகத்திலிருந்து சென்ற தமிழறிஞர்களுக்குத் தனிமரியாதையும் சிறப்பான உபசரிப்பும் கொடுத்தனர். அங்கிருந்தோருள் நான் மட்டும் சைவஉணவுக்காரன். “இவர் சைவஉணவுக்காரர். இவருக்கு இரசமும் மோரும் வேண்டும்” என்று மணிவெள்ளையா் கூறினார். பிறகு அவ்விடுதிக்கு நான் போகும்போதெல்லாம் நான் சிறப்பாகக் கவனிக்கப்பட்டேன். பச்சரிசிச் சோறு, புழுங்கலரிசிச் சோறு இரண்டும் உண்டு. அவரவர்களுக்கு வேண்டியதைக் கேட்டுப் போடுவர். நான் புழுங்கலரிசிச் சோறே அதிகம் பயன்படுத்துவேன். புழுங்கலரிசி மட்டும் தமிழகத்திலிருந்தும் துவரம்பருப்பு ஆஸ்திரேலியாவிலிருந்தும் இறக்குமதி செய்துகொள்கின்றனர். பயிறுவகைகளும், பல்வகைக் காய்களும் மலேசியாவில் நிறைய விளைகின்றன. தட்டைப்பயிற்றின் முளையும் பாசிப்பயிறும் காய்களும் வீடுகளிலும் உணவு விடுதிகளிலும் நிறையப் பயன்படுத்துகின்றனர்.

உணவு நான்கு வெள்ளி. நம்நாட்டில் தற்போதைய மதிப்பு ஒருவெள்ளி பதினொரு ரூபாய். நம்நாட்டுத்தொகை கணக்கிட்டால் வயிறார உணவருந்த மனம்வராது. தேநீரும் குழம்பியும் (காபி, அங்கு ‘கோபி’ என்பர்) ஒரே விலை. பெரிய விடுதியில் 80 பைசா. சிறியவிடுதியில் 70 பைசா. (100 பைசா ஒரு வெள்ளி) வெள்ளியை அங்கு ரியாம் (REYAM)என்றும், காசை சென் (SEN) என்றும் வழங்குவர்.

ஒரு சிற்றுண்டி விடுதியில் உள்ள ஒரு தமிழன்பர் நான் தனியாகச் செல்லும்போது தொகைவாங்கமாட்டார். அவரே பெரிய உணவுவிடுதியில் நான் தனியாக உணவருந்திக் கொண்டிருந்தேபாது வந்து உணவருந்தியவர், என்னைக் கொடுக்கவிடாமல் அவரே கொடுத்துவிட்டார்.

சுற்றிப்பார்த்தல் :

மலேசியாவிற்கு நான் சென்றது முதல்முறையாதலால், மாணிக்கமும் மணியமும் மாணிக்கம் காரில் என்னைக் கடைவீதிக்கு அழைத்துச் செனறனர். எங்குப் பார்த்தாலும் வானளாவிய கட்டிடங்கள். 50,60 மாடிகளுக்கு மேற்பட்ட கட்டிடங்கள். அமரர் துன்சம்பந்தம் என்ற தமிழர் அமைச்சராக இருந்தபோது கட்டப்பட்ட அரசு அலுவலகம் 70 மாடிகளுடையது.

இரட்டைக்கோபுரம் :



பெட்ரோனாஸ் (PETRONAS) என்பவரால் வடிவமைக்கப்பட்டதால் பெட்ரோனாஸ் இரட்டைக்கோபுரங்கள் எனப்படும் அவை 100 மாடிகளுக்குமேல் உடையன. முதல் சிலமாடிகள் இரண்டையும் இணைப்பன. இவற்றில் பலவகைக் கடைகளும் உணவு விடுதிகளும் உள்ளன. தானியங்கி மூலம் இவற்றிற்குச் சென்று பார்க்கவும் வேண்டிய பொருள்கள் வாங்கவும் செய்யலாம். அவற்றிற்கு மேல் அரசு அலுவலகங்கள் இயங்குவதால் செல்ல அனுமதியில்லை. நகரின் எப்பகுதியிலிருந்து பார்த்தாலும் வானளாவத் தெரியும் அவை இரவு நேரங்களில் மின்னொளியால் கண்கொள்ளாக் காட்சியாக இருக்கும். இவற்றைவிட உயரமான ஒற்றைக்கோபுரம் பற்றிப் பின்னர் எழுதுவேன்.



அமெரிக்க டாலர்:

இந்தியாவில் ஒரு அமெரிக்க டாலர் 43 ரூபாய். மலேசியாவில் ஒரு டாலர் நான்கு வெள்ளி. அன்னியச் செலாவணிக்காக நானூறு அமெரிக்க டாலர் வாங்கிச் சென்றிருந்தேன். முதலில் இருநூறு டாலருக்கு வெள்ளி மாற்றிக்கொண்டேன்.

செவிக்கருவி வாங்கல் :

என் செவிக்கருவி பழையதாகி விட்டதால் தரமான புதுக்கருவி வாங்கவிரும்பினேன். கன்னல் மணியம் கோத்தாராயா பேரங்காடியில் உள்ள அவருக்குப் பழக்கமான செவிக்கருவி அங்காடிக்கு அழைத்துச்சென்றார். என் செவித்திறன் சோதனை செய்யப்பட்டு, REXTON 49 PP என்னும் கருவி கொடுத்தனர். 558 வெள்ளி. தவறலாக 20 வெள்ளி அதிகம் கொடுக்கப்பட்டுவிட்டது. இரவு கணக்குப் பார்த்துத் தனியாக எடுத்துவைத்து அடுத்தநாள் போய்க் கேட்டவுடன் கொடுத்துவிட்டனர். கருவி சிறப்பாக இயங்குகிறது.

கன்னலார் இல்லம் :

அன்றிரவு மணியம் சாஆலாம் பகுதியிலுள்ள அவருடைய இல்லத்திற்கு அழைத்துச் சென்றார். அவருடைய துணைவியார் இலக்குமி அம்மையார் அன்புடன் வரவேற்று விருந்தோம்பினார். அவருடைய மக்கள் எழிலரசன், தமிழரசி, இராசகுமாரன் ஆகியோரும் அன்புடன் பழகினர்.

மறுநாள் காலை மணியம் எனக்குச் சில அன்பளிப்புப் பொருள்களை நல்கி மின்தொடர்வண்டி மூலம் கோலாலம்பூருக்கு அழைத்துச்சென்றார். தொடர்வண்டியில் பயணம் செய்தாலும் பேருந்தில் பயணம் செய்தாலும், காரில் பயணம் செய்வதுபோலவே இனிமையாக உள்ளது.



காலை எட்டுமணிக்குப் பண்பகத்திற்குவந்து, குளியலறைக்கும் மற்றவற்றிற்கும் வேண்டிய தண்ணீர் மோட்டார் மூலம் ஏற்றுதல், மற்றும் சில பணிகளைத் தொண்டுள்ளத்தோடு செய்து முடித்துவிட்டு, சிற்றுண்டிச்சாலைக்கு அழைத்துச்சென்று சிற்றுண்டி அருந்தியபின், அவர் முப்பதாண்டுகளாகத் தொழில்நுணுக்கராகப் பணியாற்றும் பார்வையற்றோர் சங்க அலுவலகத்திற்கு அழைத்துச் சென்றார். அவ்வலுவலகம் மிக அழகிய பெரிய அடுக்குமாடிக்கட்டிடத்தில் செயல்படுகிறது. அங்கு ஏராளமான பார்வையற்றோர் தங்கிக் கல்வி பயின்றும் தொழில்கற்றும் நல்வாழ்வு பெறுகின்றனர். அவ்வலுவலக முகவரி 166-2, ஜலான் துன்சமபந்தன், பிரிக்பீல்ட்சு 50470 கோலாலம்பூர். கட்டிடத்தின் மேல் WISMA MAB என்று எழுதப்பட்டிருக்கும்.

அந்த அழகிய கட்டிட அமைப்பில், தமிழகத் தலைநகர் சென்னையில், பண்பகத்திற்குச் சொந்தக் கட்டிடம் அமைக்க மணிவெள்ளையார் திட்டமிட்டிருப்பதாகக் கூறினார். அந்த அலுவலகத்தின் சார்பாக எனக்குச் சில நினைவுப்பொருள்கள் கொடுத்தார்.

11-12-99 மாலையும் என்னைக் கடைவீதிக்கு அழைத்துச்சென்று சில வானளாவிய கட்டிடங்கள் முன்பு நிறுத்திப் படமெடுத்தார். அவரது அழகிய அலுவலகக் கட்டிடத்தின் முன்பும் எடுத்திருந்தார்.



'சாலான்மசுஜித் இந்தியா' என்னும் பேரங்காடிக்கு அழைத்துச் சென்றார். சொற்பொழிவுகளைப் பதிவுசெய்ய கையடக்கப்பதிவுக்கருவியும் பதிவு நாடாக்களும் 140 வெள்ளிக்கு வாங்கினேன். மாநாட்டு நிகழ்வுகளையும் வேறுபல சொற்பொழிவுகளையும் பதிவுசெய்துகொண்டு வந்துள்ளேன். அன்று காலை வந்து சேர்ந்த இசையறிஞர் திருமுருகனாரையும் அவர் மனைவியாரையும் இரவு சந்தித்து அளவளாவினோம். மறுநாள் காலை 8மணிக்கு மாநாடு தொடக்கமாகையால் அனைவரும் ஒரு பெரிய – வசதியான விடுதியில் தங்கவைக்கப் பெற்றோம். அண்மையூரிலிருந்து வந்திருந்த பண்பகத் தலைவர் திரு. சண்முகமும் நானும் ஓரறையில் தங்கினோம். மறுநாள் மாநாடு நடத்த இருக்கும் ம.த.ப. இயக்கத்தின் வரலாற்றையும் அதன் அரிய செயல்பாடுகளையும் முதலில் அறிவோம்.

3. மலேசியத் தமிழ்ப்பண்பாட்டியக்கம்

"இருந்தமிழே உன்னாலிருந்தேன் – இமையோர்
விருந்தமிழ்தம் என்றாலும் வேண்டேன்."

– தமிழ்விடுதூது

உலகத் தமிழ்ப் பண்பாட்டியக்கம் :

இது 1974இல் இலங்கையில் தோன்றி பேராசிரியர் இர.ந. வீரப்பரால் மலேசியாவில் வளர்க்கப்பட்டு நாற்பது நாடுகளில் கிளை பரப்பி உலகளாவிய 6 மாநாடுகளை நடத்தியுள்ளது. இதன் வரலாறு பின்னர் விரிவாக எழுதப்படும்.

மலேசியத்தமிழ்ப்பண்பாட்டியக்கம் :

உ.த.ப. இயக்கத்தின் கிளையாக 1990இல் ம.த.ப. இயக்கம் தோற்றுவிக்கப்பட்டது. மேற்கூறிய தமிழ்ப் பண்பகத்தைத் தலைமையகமாகக் கொண்டு பொதுச் செயலாளர் மு. மணிவெள்ளையரால் இயக்கப்பெற்று, தமிழ், தமிழ்ப்பண்பாடு, திருக்குறள்நெறி ஆகியவற்றைப் பரப்பிவருகிறது. மூன்று மாநாடுகளை நடத்தியுள்ளது.

இதன் கொள்கைகளுள் ஒன்று திருக்குறளைப் பரப்புவதும் பரப்பச் செய்வதுமாகும். ஞாயிற்றுக்கிழமைதோறும் பண்பகத்தில் காலை 9மணி முதல் பிற்பகல் 2மணிவரை தமிழியநெறிப்பேரவை நடத்தித் திருக்குறளைப் பரப்புகிறது.

தமிழார்வலர்களின் இல்லங்களில் காரிக்கிழமை(சனி) தோறும் மாலையில் திருக்குறள் ஓதும் குடும்பக் கூட்டங்கள் நிகழ்கின்றன. மூன்று அகவைமுதல் முதியோர்வரை குடும்பம் குடும்பமாகக் கூடிப் பாயிர இயலை இசையுடன் ஓதும் காட்சி அரிய காட்சியாகும். திருக்குறள் ஆய்வுரைக்குப் பிறகு சைவவிருந்து அளிக்கப்பெறுகிறது. இது தமிழகத்தில் நடைபெறும் குறளாய நிலவுக்கூட்டம் போன்றும், திங்கள்தோறும் திருக்குறள் முற்றோதுதல் நிகழ்த்தும் தென்காசித் திருவள்ளுவர் கழகம் போன்றும் செயல்படுகிறது.

மலேசியத் தமிழர் வாழ்வியலில் நடைபெறும் எல்லா மங்கல அமங்கல நிகழ்வுகளிலும் திருக்குறளுக்கே முதன்மை வழங்கப்படுகின்றது. திருக்குறளறக் குடும்பங்களைப் பண்பட்ட விழுமியங்களைக் கொண்ட நல்லதொரு தமிழ்க்குமுகாயம் தோற்றுவிப்பதில் இயக்கம் கவனம் செலுத்திவருகிறது.

“இருள்நீக்க விளக்கொளி வேண்டும் – தமிழர்
இருக்கின்ற வீட்டுக்கோர் திருக்குறள் வேண்டும்”
– சிங்கைமுகிலன்

நடத்திய மாநாடுகள்

1. இராவணகாவிய மாநாடு : இவ்வியக்கம் நடத்திய முதல் மாநாடு 17–5–1992இல் கோலாலும்பூரில் நடத்திய இராவணகாவிய இலக்கிய மாநாடு ஆகும். இவ்வியக்கம் நடத்திவரும் ‘தமிழியம்’ இதழ் வெளியிட்ட இராவணகாவிய மலரில் மாநாட்டு நோக்கம் பற்றிச் சில சான்றோர்கள் எழுதியுள்ள கருத்துகளில் சில :

பொதுச்செயலர் மு. மணிவெள்ளையர் :

தமிழினம் வாழ்விழந்து வகை கெட்டுப்போக அற்றைய நாளிலும் பல நூல்கள் எழுந்தன. இற்றைய நாளிலும் அவ்விதமுயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுப்பல நூல்கள் பலரால் எழுதப்பட்டுவருகின்றன. ஆனாலும் “தூளாய்ப்பறந்திடும் வஞ்சநெடுங்குன்றம்” என்பதற்கொப்ப அவ்வப்போது தமிழினநலங் காக்கும் ஆன்றோரும் சான்றோரும் தோன்றி இனம் – மொழி – பண்பாட்டுக்கூறுகள் அழிபடாவண்ணம் காத்து வருகின்றனர். இராவணகாவியம் தமிழ் மற்றும் தமிழர் நலங்காக்கப் படைக்கப்பட்ட காவியமென்பதில் எள்ளளவும் ஐயமில்லை.

இலக்கியநயம் மிகுந்த இராவண காவியத்தின் இனிமையிலும் அழகுமிளிரும் தமிழ்நடையிலும் தம் மனத்தைப் பறிகொடுத்த கம்பராமாயணச் சொல்லின் செல்வர் இரா.பி. சேதுப்பிள்ளை

"தேனினும் இனிய செந்தமிழ்க்குழந்தை!

நான் கம்பராமாயணக் கவிச் சுவையில்கட்டுண்டுக் கிடந்தனன். தங்கள் இராவண காவியம் அக்கட்டை அவிழ்த்துவிட்டது. கருத்து மாறுபாடு வேறு". என்றும். புலவர் ஐயன்பெருமாள் என்பவர்,

"இனியொரு கம்பனும் வருவானோ
இப்படியும் கவிதருவானோ?
கம்பனே வந்தான் அப்படியொரு கவிதையும் தந்தான். ஆனால், கருத்துத்தான் மாறுபட்டது" என்றும்

இராவண காவியச் சிறப்புகளை வாயாரப்புகழ்ந்துள்ளனர்.

உலகில் நடைபெறும் முதல்மாநாடாக ம.தி.ப. இயக்கம் இந்த இலக்கிய மாநாட்டை நடத்துவதில் பெருமிதம் கொள்கிறது.

உலகத் தமிழ்ப்பண்பாட்டு இயக்கத் தலைவர்பேராசிரியர் இர.ந. வீரப்பர் :

இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு மேலாகவே வரலாற்றுச் சிறப்புள்ள தமிழரசரின் வீரகாவியமான இதனை மீண்டும் நினைவுபடுத்தி எண்ணுவதும் எண்ணச் செய்வதும் இன்றும் தேவை. இது எப்போதும் தேவை என்பதே எங்கள் உயிர்மூச்சு! இன்றைய அரசியலிலும் பொருளியலிலும் மூழ்கிப்போய் வறுமையுடன் சோறும் சுகமுமே வாழ்வின் இலட்சியம் என்று ஏமாற்றம் அடைந்துவிட்டவர்களை எழுப்பிவிடவே இந்தமாநாடும், இந்த அரிய மலரும் மாபெரும் படைப்புகள். இதுவே எங்கள் துணிவுடைமை!

தமிழில் வந்து இறக்குமதி இலக்கியமாகிவிட்ட மூடத்தனத்தை உடைப்பதே இதன் முழுமுதற் குறிக்கோள்! மாவீரனை அரக்கன், கொடுங்கோலன் என்ற வரலாற்றுத் திசைகளைத் திருப்பிவிட்ட தீமைகளைத் திருத்தியெழுதிய தீர்ப்பு இது! உலக இலக்கிய வழக்கின் மாறுபட்ட முடிவல்ல இது!

பொருளாளர் க. இராமமாணிக்கம் :

நாட்டில் பல இயக்கங்கள் இருந்தாலும் விரல்விட்டு எண்ணக்கூடிய ஒருசில இயக்கங்களே இனம் – மொழி – பண்பாடு – சமயம் என்ற வகையில் தமிழ்மக்களுக்குத் தொண்டாற்றி வருகின்றன. அவற்றுள் ஒன்றுதான் ம.த.ப. இயக்கமாகும். மிகச் சிறந்து விளங்கும் ஒருதமிழ் இலக்கியமான இராவண காவியத்தை மக்களுக்கு அறிமுகப்படுத்தும் நன்னோக்கத்தில் இந்த மாநாடு கூட்டப்பெறுகிறது. ஒப்புயர்வற்ற ஓர் இலக்கியத்தை அந்தந்த நாட்டுமக்கள் எதிர்கால நலன் கருதிப் பரப்புவதில் தவறு என்ன இருக்கிறது? "தேமதுரத்தமிழோசை உலகமெலாம் பரவும்வகை செய்தல்வேண்டும்" எனப் பாரதியாரே கூறியிருக்கின்றாரே! 'என்ன இராவணனுக்கு மாநாடா?' என்பது வெற்றுப் பேச்சுத்தான்! உண்மை வரலாறுகளை வருங்காலத் தலைமுறையினர் படித்துணர்ந்து சிந்தித்துத் தெளிந்து ஏற்றுக்கொள்ளும் காலம் வந்துவிட்டது. பொய் எப்போதும் நிலைத்துநிற்பதில்லை! பொய்யன்று மெய்புகும் என்பதே உலக அறமாகும். உண்மை வெல்க!

பாவேந்தர் பாரதிதாசன் :

தென்திசையைப் பார்க்கின்றேன் என்சொல்வேன் என்றன்
சிந்தையெலாம் தோள்களெலாம் பூரிக்கு தடா!
அன்றந்த இலங்கையினை ஆண்டமறத்தமிழன்
ஐயிரண்டு திசைமுகத்தும் தன்புகழை வைத்தோன்!
குன்றெடுக்கும் பெருந்தோளன்! கொடைகொடுக்கும் கையான்!
குள்ளநரிச் செயல்செய்யும் கூட்டத்தின் கூற்றம்!
என்றமிழர் மூதாதை! என்றமிழர் பெருமான்!
இராவணன்காண்! அவன்நாமம் இவ்வுலகம் அறியும்.

தாய்த்தமிழகத்தின் நாமக்கல்லில் பாவேந்தர் பேரவை நடத்தும் புலவர்கள் கந்தசாமி சுப்பண்ணர் முயற்சியால் இராவணகாவிய மாநாடு நடத்தப்பட்டது. சிலம்பொலி செல்லப்பர் இராவணகாவியத் தொடர்சொற்பொழிவாற்றினார். மாண்புமிகு தமிழவேள் கலைஞர் மு. கருணாநிதி அவர்களின் நிறைவுரையுடன் மாநாடு நிறைவுற்றது.

2. உலகத் தமிழ்மறை திருக்குறள் வாழ்வியல் மாநாடு :

20–1–1996, 21–1–1996 ஆகிய இருநாட்கள் ம.த.ப. இயக்கத்தால் இரண்டாம் மாநாடு திருக்குறள் மாநாடாக நடத்தப்பெற்றது. தமிழியம் வெளியிட்ட மாநாட்டு மலரிலிருந்து சில கருத்துகள்.

பேராசிரியர் இர. ந. வீரப்பர் :

உலகத் தமிழரின் பொதுமறையான நமது திருக்குறளுக்கு இருநாள் மாநாடு நடத்துகிறோம். இதுவே மலேசியத் தமிழர் வரலாற்றில் திருக்குறளுக்காக நடைபெறும் முதல் மாநாடாகும். ம.த.ப. இயக்கம் உலகளாவிய தமிழரை இம்மாநாட்டின்மூலமாகவும் இணைக்கிறது. இது நமது உலகத்தமிழ்ப்பண்பாட்டியக்கத்தையும் இணைக்கிறது.

வீடும் நாடும் திருக்குறளைப் படிக்கவேண்டும். வீட்டுக்கு வீடு ஓதப்படவேண்டும் என்பதே எங்கள் முதன்மை நோக்கம். தமிழ்ப்பள்ளிகளில் கல்விக்கண் திருக்குறளால் திறக்கப்படவேண்டிய கட்டாயம் கல்வித்துறைச் சான்றோருக்கும் ஆசிரியர்களுக்கும் உண்டு. இந்தப் பொறுப்பாண்மையிலிருந்து எப்போதுமே எவரும் விலகி நிற்கமுடியாது.

ஆண்டாண்டுதோறும் திருவள்ளுவர்விழா நடத்திவரும் கழகங்கள் கடந்த 40ஆண்டுகளில் திருக்குறளைக் குமுகாயத்திடம் பரப்பி ஓரளவு பணியாற்றி இருக்கின்றன. இதன் முதிர்ச்சியே இம்மாநாடு. மூன்று அகவைக் குழந்தையும் ஓதத்தொடங்கும் குறளோதும் பண்பாட்டுக் குடும்பங்களை உருவாக்கி வருகிறோம். இதனால் பல ஊர்களிலும் இயக்க உறுப்பினர் வீடுகளிலும் இப்பண்பாட்டுக்குடும்பங்களால் திருக்குறளால் கருவாகிய குமுகாயம் பண்படுத்தப்பட்டிருக்கின்றது.

திருவள்ளுவர் கண்ட அரசியல்நெறி (பாவலர் சா.சி. குறிஞ்சிக்குமரனார், ஈப்போ, மலேசியா) என்னும் கட்டுரையிலிருந்து சில பகுதிகள் :

திருவள்ளுவம் ஓர் அறிஞருற்று; அறத்தின் குழுமம்; செம்மையின் நிறைவு; சீர்மையின் விரிவு; செப்பத்தின் மீமிசை; அறிவுத்துறையின் கொடுமுடி, திருவள்ளுவப் பேராசானின் ஆட்சியின் அமைப்புமுறை அரசையும் குடிமக்களையும் நடுவாகக் கொண்டு செறிந்துள்ளதெனலாம். ஒருநாட்டின் ஆட்சியில் மற்றும் பொருளியல் குறிக்கோள்களைச் சீரியமுறையில் செயலாக்கம் செய்வதற்கு அந்நாட்டின் அரசையே திறன்சான்ற முதற்பெரும் கருவியாக அமைத்துக்காட்டுவர். அரசு, அமைச்சு, குடி, கூழ், நட்பு, அரண், படை போன்ற ஆறு உடைமைகளையும் பெற்று உயிர்ப்புடன் இயங்கும்.

இனி, திருவள்ளுவர் முடியாட்சி பற்றித்தானே கூறுகின்றார்; குடியாட்சி பற்றிக் கூறவில்லையே என்கின்ற ஐயம் கொள்வார் ஆழ்ந்து எண்ணிப்பார்ப்பின் முடியரசில் குடியரசு கண்ட கோமானாகத் திருவள்ளுவர் திகழ்கின்றார் என்பது தெளிவுறும். பேராசான் கூறுகின்ற முடியரசை வரலாற்றுக்கண் கொண்டு ஒப்பீடுசெய்து காணின், மக்களை மதிக்காது நானே அனைத்தும் என்று செருக்குடன் அரசு நடாத்திய இங்கிலாந்தின் முதலாம் சார்லசு, நாடு போற்றும் நல்லவர்களையெல்லாம் சிறையிட்டு, மக்களை மாக்களாகக் கொடுமைப்படுத்திய ஃபிரான்சு நாட்டு லூயி மன்னன், மக்கள் பசியென்றால் புசி புல்லையென்று கொன்றுகுவித்த கொடுமையாளன் உருசியநாட்டு சார்லசு மன்னன் முதலியவர்களைப் போன்றல்லாது மக்கள் கொடுத்த தண்டனையைப் பெற்று ஆட்சி நடத்திய பொற்கைப்பாண்டியன், குற்றம் புரிந்தவன் தன்மகனாக இருந்தும் தேர்க்காலில் இட்டுக் கொன்றசோழன், தான்செய்தது அறப்பிழையென்று கண்ணகியால் அறிந்த அக்கணமே உயிர்நீத்த ஆரியப்படைகடந்த நெடுஞ்செழியன் முதலியவர்களைப் போன்று மக்கள் நலன் போற்றி ஆட்சி நடத்துதல் வேண்டும் என்னும் அரசியல் பிழையாத அரசையே திருவள்ளுவர் வகுத்துக் காண்பித்தார்.

"குடிதழீஇக் கோலோச்சும் மாநில மன்னன்
அடிதழீஇ நிற்கும் உலகு." – குறள் 544

என்றாங்கு குடிதழுவி இயலுகின்ற நல்லாட்சியை அடிதழுவி நிற்பர் குடிமக்கள். அதனால் குடிதழுவாத ஆட்சியின் அடிதழுவமாட்டார் என்பதும் உணர்த்தப்பெறும். இக்குறட்பாவில் மக்களாட்சியின் இரண்டு அடிப்படைக் கோட்பாடுகள் ஒளிர்கின்றன எனக் காண்க.

தமிழிய வாழ்வு ஏன் வேண்டும்? (மு. மணிவெள்ளையன்) என்னும் கட்டுரையின் பகுதி :

தமிழியம் என்பது என்ன? தமிழியவாழ்வு ஏன் வேண்டும்? இது குறித்து ஒவ்வொருவரும் அறிந்துகொள்வது நல்லது. இவ்வுலகில் பல்வேறு சமயக் கொள்கைகளும் நெறிகளும் மக்களால் பின்பற்றப்படுகின்றன; போற்றப்படுகின்றன. இந்துக்களுக்கு இந்துமதமும் கிறித்துவர்களுக்கு கிறித்துவமதமும், முகமதியர்களுக்கு இசுலாமும் இன்னோரன்ன பிறவும் இருப்பனபோலத் தமிழ்மக்களுக்கு உரிய சமயமாக நெறியாக இருப்பதே தமிழியமாகும்.

தமிழியம்(TAMIZHISM) என்பது பொதுவாகக் குறள்நெறிதான். குறள்நெறியென்பது பொய்தீர்ந்த ஒழுக்கநெறியுமாகும். என்றாலும் இனம், மொழி, பண்பாடு ஆகியவற்றில் செம்மையும் சீர்மையும் அடைவதே தமிழியத்தின் குறிக்கோளாகும். தாய்மொழியையும் தமிழ்ப்பண்பாட்டையும் உள்ளீடாகக் கொண்டு முகிழ்த்தலர்வதே தமிழியம் என்றால் அதில் எள்ளளவும் மிகையில்லை. திருவள்ளுவப்பேராசான் தமிழ்நெறியின் உண்மை கூறுமுகத்தான்,

பொறிவாயில் ஐந்தவித்தான் பொய்தீர் ஒழுக்க
நெறிநின்றார் நீடுவாழ்வார் – 6

என்று கூறியுள்ளார்.

தமிழ்ப்பண்பாட்டுக் கூறுகள் யாவை? தமிழியநெறியின் தன்மைகள் யாவை? இவற்றை வெளியே காணவேண்டிய கட்டாயமில்லை. அல்லது புதிதாகப் படைத்துக் காட்டவேண்டியதுமில்லை. அது நம்மிடமே பன்னெடுங்காலமாக உள்ளது. பாராமுகமாக உள்ளது. பரப்பப்படாமலும் புரக்கப்படாமலும் உள்ளது. அது திருவள்ளுவர் வாய்மொழியேயன்றி வேறென்ன?

அறிவு(ஞான) ஒளிவீசும் நூல்கள் என்று உலகில் எத்துணையோ உண்டு. ஆனால் அவற்றில் குன்றின் மேலிட்ட விளக்காக உலகத்துக்கு ஒளியூட்டிக் கொண்டிருப்பது திருக்குறள் மட்டுமே. இது தமிழ்மொழியில் காணப்படும் நூல்களில் முதல் நூலாகக் கொள்ளப்பட்டுள்ளது. திருக்குறள் ஓர் இலங்குநூலல்லவோ?

உலகத் தமிழ்மறைத் திருக்குறள் மாநாட்டு நிகழ்வு விவரம் :

மலேசியக் கூட்டுறவுக் கல்லூரியில் (103, ஜலான்டெம்பலெர், பெடாலிங்ஜெயா) 20–1–96 காரிக் (சனி) கிழமை இரவு நிகழ்ச்சியாக தமிழ்ப்புத்தாண்டுப் பொங்கல் மாலை – 96 என்னும் நிகழ்ச்சி, ம.த.ப. இயக்கத்தின் கட்டிடநிதிக்காக விருந்துடன் கூடிய பண்பாட்டுக் கலைநிகழ்ச்சியாக நடைபெற்றது. நுழைவுக்கட்டணம் 50 வெள்ளி இரவு 7 மணிக்கு நடைபெற்ற சுவைமிக்க விருந்திற்குப்பிறகு 8 மணிக்குப் புகழ்பெற்ற மலேசியக் கலைஞர்களின் இன்னிசை விருந்தும், பரதநாட்டியம், நகைச்சுவை விருந்து முதலியன நிகழ்ந்தன.

21–1–96 ஞாயிறு காலை 9–30 முதல் இரவு மணி 11 வரை, உலகளாவிய தமிழறிஞர்களின் திருக்குறள் சொற்பொழிவுகள், பல்வேறு கழகங்கள் பங்குபெற்ற கருத்தரங்குகள் வில்லுப்பாட்டு ஆகியன நடைபெற்றன.

ஏற்கனவே குறிப்பிட்ட சான்றோர்களுடன் திரு அ. இளவழகனார் (இராமன்) மாநாட்டுச் செயலாளராகச் செயல்பட்டார்.

4. செந்தமிழ்ச் சிலப்பதிகார உலகளாவிய மாநாடு

நெஞ்சை யள்ளும் சிலப்பதிகாரம் என்றோர்
மணியாரம் படைத்த தமிழ்நாடு

– பாரதியார்

கற்போர் நெஞ்சைக் கவரக்கூடிய சிலப்பதிகாரம் என்னும் மாணிக்கமாலையை உண்டாக்கிய பெருமைமிக்கது தமிழ்நாடு.

கோலாலம்பூரின் முதன்மை :

வானளாவிய கட்டிடங்கள், தூய்மையான சாலைகள், ஒழுங்கான போக்குவரவு நெறிகள் போன்ற பலவற்றால் சிறப்புற்ற கோலாலம்பூர் தமிழ்ப்பணியிலும் முதன்மை பெற்று விளங்குகிறது.

முதலாம் உலகத்தமிழாராய்ச்சி மாநாட்டையும், முதலாம் உலகத் தமிழர் மாநாட்டையும் வெற்றிகரமாக நடத்தி அதன்பின் உலகின் பல்வேறு பகுதிகளிலும் தாய்த்தமிழகத்திலும் பல மாநாடுகள் நடைபெறவும் தமிழும் தமிழினமும் முன்னேறவும் வழிவகுத்த பெருமை கோலாலம்பூரையும் மலேசியத் தமிழர்களையும் சாரும். அவற்றைப் போலவே, இராவண காவியத்திற்கு முதல்மாநாடு நடத்திய ம.த.ப. இயக்கம், நெஞ்சையள்ளும் செந்தமிழ்ச் சிலப்பதிகாரத்திற்கும் முதல்மாநாடு நடத்தத் திட்டமிட்டது.

பொதுச்செயலாளர் செந்தமிழ்ச் செம்மல் மு.மணிவெள்ளையர் கடந்த ஈராண்டுகளாகப் பெருமுயற்சியெடுத்துக் கொண்டார். அவ்வியக்கத்தைச் சார்ந்த ஏனைய தமிழ்ச்சான்றோர்களும் மலேசியத் தமிழ்நெறிக்கழகத்தாரும் பெரிதும் ஒத்துழைத்தனர்.

நோக்கங்கள் :

தெய்வப்புலவர் திருவள்ளுவருக்கடுத்துத் தமிழ் இலக்கிய வரலாற்றில் மாபெரும் புரட்சியைச் செய்த இளங்கோவடிகளின் பெருமையையும் சிலப்பதிகாரத்தின் சிறப்பையும், பண்டைய தமிழரின் பண்பாட்டையும், முத்தமிழின் மாண்பையும், உலகெலாம் பரப்புதல், வங்கக்கடலில் மூழ்கிவிட்ட பூம்புகாரின் பெருமைமிக்க சின்னங்கள் யாவற்றையும் முழுமையாக அகழ்வாராய்ச்சி மூலம் வெளிப்படுத்த தமிழக அரசையும் இந்திய அரசையும் வேண்டித் தூண்டுதல், சிலப்பதிகார மாநாட்டைத் தாய்த் தமிழகமும் தமிழர் வாழும் ஏனையநாடுகளும் நடத்த ஊக்குவித்தல் முதலியன சிலப்பதிகார மாநாட்டின் நேரிய நோக்கங்களாகும்.

மாநாட்டுமலர் :

மாநாட்டு நினைவாகச் சிறந்த மலரொன்றும் வெளியிடப்பட்டது. அம்மலரில் வந்துள்ள இரண்டு முக்கிய வாழ்த்துச் செய்திகளை நோக்குவோம்.

ம.இ.கா. தேசியத்தலைவரும், சிறந்த தமிழறிஞரும் தமிழ்ப்புரவலரும் மலேசியப் பொதுப்பணித்துறை அமைச்சருமான

மாண்புமிகு டத்தோ ஸ்ரீ டாக்டர் ச.சாமிவேலு அவர்களின் வாழ்த்துச்செய்தி :

தமிழகத்தின் தமிழ்மொழி தோன்றி வளர்ந்து

மணம்பரப்புகிறது என்றில்லாமல், கடந்த நூறாண்டுகளுக்கு மேலாகவே புலம்பெயர்ந்த நாடுகளில் வாழ்கின்ற தமிழரிடையே குறிப்பாக மலேசிய மண்ணில் வாழ்கின்ற தமிழரிடையே தமிழ்மணம் இலக்கியத் தென்றலாக வீசி வருகின்றது. தமிழ்மொழி மேம்பாட்டுக்காக நம்து மேலசிய அரசு ஆண்டுதோறும் பல இலக்க வெள்ளிகளைச் செலவிட்டுவருவது இங்கே நினைவுகூரத் தக்கது.

மலேசியாவில் தமிழ்வளமாகவும் நிலையாகவும் இருந்து உயர்ந்ததோர் இலக்கினை அடைய, பெரும் முணைப்புடன் செயலாற்றிவருவதை உறுதிப்படுத்தும் முகத்தான் இந்தச் செந்தமிழ்ச் சிலப்பதிகார மாநாடு இவ்வாண்டின் இறுதியில் நடைபெறுகிறது.

தமிழ் இலக்கியத்தில் முதன்மைநூல்களாகக் கொள்ளப்படுபவை மூன்று. அவை 1. தொல்காப்பியம் 2. திருக்குறள் 3. சிலப்பதிகாரம் என்பனவாம். தொல்காப்பியம் 5000 ஆண்டுகள் பழைமை வாய்ந்தது. திருக்குறள் 2000 ஆண்டுகளுக்கு முந்தியது. சிலப்பதிகாரம் 1800 ஆண்டுகளுக்கு முற்பட்டது என்பது வரலாற்று ஆய்வாளர்கள் கூற்று.

செந்தமிழ்க்காப்பியமான சிலம்பே பழந்தமிழரின் பண்பாட்டு வரலாறு. இக்காப்பியத்தில் இளங்கோவடிகளாரின் பாவளமும் சொல்லடுக்கு முறையும் தனிச்சிறப்பிடம் பெறுகின்றன. சிலப்பதிகாரகாலத்திலிருந்த தமிழிசை நுட்பங்களையும் கூத்துவகைகளையும் நாம் இந்நூலின் வழியே அறிய முடிகின்றது. மேலும் தமிழரின் நாகரிகம், பழக்கவழக்கம், கலைகள், அரசியல், வணிகம் முதலியவை குறித்தும் அறிந்துகொள்ள முடிகிறது. அதனாலன்றோ சிலப்பதிகாரம் இன்றளவும் ஒருமணியாரமாக நமது நெஞ்சங்களில் ஒளிர்ந்துக்கொண்டிருக்கிறது.

சிலப்பதிகாரத்தின் வழி கண்ணகியின் பெருமையுணர்ந்த பாவேந்தர் பாரதிதாசனார் கண்ணகிப் புரட்சிக் காப்பியமே இயற்றியது ஈண்டுக் குறிப்பிடத் தக்கவொன்றாம்.

கடந்த 10 ஆண்டுக்காலமாக மலேசியாவில் இயங்கிவரும் இயக்கமான மலேசியத் தமிழ்ப்பண்பாட்டியக்கம் தனது தொடர்பணிகளாகப் பல்வேறுதமிழ்மொழி இலக்கியப் பண்பாட்டு நிகழ்ச்சிகளை நடத்திவருவதை நானறிவேன். அவ்வகையில் இந்த நூற்றாண்டின் இறுதிப் பகுதியில் உலகளாவிய செந்தமிழ்ச் சிலப்பதிகார மாநாட்டினைத் தமிழ்கூறுநல்லுலகம் நலம்பெற

வேண்டி நடத்துவதைக் கண்டு உளமாரப் போற்றிப் பாராட்டுகிறேன். எனது நல்வாழ்த்துக்கள்!

நன்றி!

இவ்வண்ணம்,

டத்தோ ஸ்ரீ டாக்டர் ச. சாமிவேலு

எஸ்.பி.எம்.பி, எஸ்.பி.எம்.ஜே, டி.பி.எம்.எஸ், ஏ.எம்.என், பி.சி.எம்.

வினையாற்றி வெல்வோம்

(அமரர் உலகத்தமிழ்ப்பண்பாட்டியக்கத் தலைவர் பேராசிரியர் இர. ந. வீரப்பர்)

பழந்தமிழர் வீரத்திற்கு ஒரு நூலே சிலப்பதிகாரம். சிலப்பதிகாரம் பற்றிப்பிறர் கூறும் முரண்பாடுகளை உடைத்தெறிய வேண்டும். தமிழ் எங்கள் உயிர்! தமிழ்ப்பள்ளி எமது உடல்! என்பதற்கான வேரே இம்மாநாடு.

தமிழக 'மடமை மரபு' நமக்கு அறவேவேண்டாம். கண்ணகியின் மாண்பு பறைசாற்றப்படுதலே இம்மாநாட்டின் நோக்கமாகும். அரசியல் பிழைத்தார்க்கு அறம் கூற்றம் என்பதைப் பறைசாற்றும் மாநாடு இது. ஊழல் புரிந்தாரை ஊழ்வினை வந்து ஒறுத்துவிடும் என்பதைத் தமிழகத்திற்கு ஒலிபரப்பவேண்டும்.

சிலப்பதிகார வரலாறு - முதல் நூற்றாண்டே இதன் காலமாகும். கி.பி. 77இல் இக்கதைக்கான சூழல் நடந்துள்ளது என்பதற்கும் பிறநாட்டுச் சான்றுகள் உள்ளன. திருவள்ளுவருக்குப் பிறகு இளங்கோவடிகள் 108ஆண்டுகளுக்குப் பின்னர் இந்நூலைப் படைத்தார். மூன்று அரசுகள், மூன்று நாடுகள், முந்நகரம் என்ற தமிழகக் களம் அமைந்த நிலமாகும் தமிழ்நாடு. 1800 ஆண்டுகளுக்குமுன் சிலப்பதிகாரக் காப்பியம் எழுந்தகாலம் எனச் சான்றோர் சொல்லிப் போந்தனர். அவர்கள் அவ்வாறு முடிவெடுத்த காலம் கி.பி. 1930 ஆகும். இதுவே மெய்ச் சான்றாயினும் கூட இரண்டாம் நூற்றாண்டென்பது உறுதி.

பழந்தமிழ்ப்பண்பாட்டு வாழ்வியத்தில் தமிழரின் முதல் வரலாற்றுச் சான்று சிலப்பதிகாரம் என்பதுவே மாநாட்டின் கருப்பொருளாகும். தமிழருக்குக் கிடைத்த அரும்பெருஞ்

செல்வங்கள் தொல்காப்பியம், திருக்குறள், சிலப்பதிகாரம் ஆகியன. தமிழ் வரலாற்றுக்குச் சான்று இம்மூன்றுமே! அதனால்தான் "தமிழுக்குக் கதி மூன்று" எனப்புலவர் பெருமக்கள் போற்றுவர்.

குமரிக்கண்டம் முதல் நாவலந்தீவு உட்பட்ட தமிழகப் பேராட்சித்திறன்களை இந்நூலில் காணலாம். தமிழரின் வாழ்வியல் கோட்பாடுகளும் அறெநறிகளும் இதில் விளக்கப்பட்டுள்ளன. தமிழியத்தின் அகப்பொருட்டுறை, புறப்பொருட்டுறை முதலியவற்றைச் சிலம்பில் பயிலலாம். ஒன்பான் சுவையில் உயர் தனிச் செந்தமிழ்க்காப்பியமே சிலப்பதிகாரம். கண்ணகியின் நீதிமுறை அக்காலத்தில் உலகளாவிய மனிதநீதியின் மிகப்பெரிய சாதனை வரலாறாகப் பரவியுள்ளது. கண்ணகி மாண்பால் இரண்டாம் நூற்றாண்டு முதல் உலகெலாம் பரவி 12ஆம் நூற்றாண்டில் ஈழத்தில் கண்ணகி அம்மனாக வரலாறு வளர்ந்து, 13ஆம் நூற்றாண்டுகளின் மரியம், மேரியாக மேலைநாடுகளில் பரவி வேரூன்றிச் சமய நீதியை வளர்த்த கதை இது. கற்பரசி கண்ணகி நீதியுரைத்த பாங்கினை உலகம் வியந்து போற்றியதுடன் பலவரலாறுகளை மேலைநாட்டார் எழுதியுள்ளனர்.

தமிழ் இலக்கியக் கழகத்தால் 18ஆண்டுகளுக்கு முன் சிலப்பதிகார விழா கால்கோள் விழாவாக நடத்தப்பட்டது. சித்திரைப்பிறப்பு இளங்கோவடிகளின் சிலப்பதிகாரநாள் என்று உலக முழுவதும் அறிவிக்க வேண்டும். வினையாற்றி வெல்வோம்.

(அமரர் இர.ந.வீ. 17–8–96இல், ம.த.ப. இயக்கப் பொதுச்செயலாளர் மு. மணிவெள்ளையனுக்கு வழங்கிய ஆய்வறிக்கையிலிருந்து தொகுக்கப்பட்ட சில செய்திகள்)

மாநாட்டு நிகழ்ச்சிகள் :

திருவள்ளுவராண்டு 2030 நளித்திங்கள் 26ஆம் நாள் (12–12–1999) ஞாயிற்றுக்கிழமைக் காலை 8மணிக்குக் கோலாலும்பூரின் மையப்பகுதியில் உள்ள தேவான் பாகாசா டான்புத்தாகா அரங்கத்தில், அமரர் இர.ந.வீ. அவர்களின் கனவு மூன்றாண்டுகளுக்குப் பிறகு நனவாக மலர்ந்து மணம் பரப்பத்தொடங்கியது.

பன்னாட்டுத் தமிழறிஞர்களும் சிறப்பாகத் தாய்த்தமிழக அறிஞர்களும் மலேசியத் தமிழறிஞர்களும் இலக்கிய ஆர்வலர்களும் குழுமினர். அனைவர்க்கும் சுவையான சிற்றுண்டி வழங்கப்பெற்றது.

நாதசுர இசைமுழக்கத்துடன் உலகளாவிய செந்தமிழ்ச் சிலப்பதிகார மாநாட்டு நிகழ்வுகள் தொடங்கின. காலை 9மணிக்குத் திருக்குறள் ஓதுதல் அரங்கம், மலேசியத்தமிழ்நெறிக்கழகத் தேசியத் தலைவர் புலவர் இரா. திருமாவளவர் தலைமையில் ம.த.ப. இயக்கத்தவரும், த.நெ.கழகத்தவரும் மன ஓர்மையுடன் தமிழ்மறையாம் திருக்குறளின் பாயிர இயலை இசையுடன் ஓதினார்.

மாதவி நடன அரங்கேற்ற நிகழ்ச்சியில் பண்டைய தமிழகத்தின் பரதநாட்டிய விருந்து அளிக்கப் பெற்றது.

புலவர் மு. தமிழரசு – மைதீ. சுல்தான் பொறுப்பில் அமரர் வீரப்பனார் அரங்க நிகழ்ச்சிகள் தொடங்கின.

சிங்கப்பூர் தமிழியப்பாவலர் பெரி. நீல. பழனிவேலனார், அமரர் இர.ந. வீரப்பனாரின் நினைவேந்தல்பா பாடினார். மாநாட்டுச் செயலர் திரு எஃச்.பி. சிவக்குமாரின் வரவேற்புரைக்குப் பிறகு, மாநாட்டு வினைக்குழுத் துணைத்தலைவர் புலவர் கா.ப. சாமி மாநாட்டு முன்னுரை நிகழ்த்தினார். மாநாட்டுத் தலைவர் மு. மணிவெள்ளையனார் தொடக்கவுரையாற்றினார்.

மலர் வெளியீடு :

பொதுப்பணித்துறையமைச்சர் டத்தோ ஸ்ரீ ச. சாமிவேலு விழாத்தலைமையேற்றுச் சிறப்புரையாற்றிச் சிலப்பதிகார மாநாட்டு மல்ரை வெளியிட்டார். சிறப்பு அழைப்பாளர் பலர் மலர் பெற்று நன்கொடை வழ்ங்கினர். மலர் வெளியீட்டுக்குழுத் தலைவர் அ. இராமன் மலரின் சிறப்புகளை விளக்க, டத்தோ கே. ஆர். சோமசுந்தரம் வாழ்த்துரை வழங்கினார். தக்கோர் சிலர் சிறப்பிக்கப்பட்டனர். ம.த.ப. இயக்கத்தலைவர் திரு. ப.கு. சண்முகம் நன்றிநவின்றபின் மூன்றாம் அரங்கம் தொடங்கப்பெற்றது.

திரு இளந்தமிழர் பொறுப்பில், முதுபெரும் பாவலர் குறிஞ்சிக்குமரனார் அரங்கம் 12மணிக்குத் தொடங்கப்பெற்றது. ம.தி.க. தேசியத் தலைவர் ரெ.சு. முத்தையா தலைமையில், புதுச்சேரியிலிருந்து வந்திருந்த பாவலர் கதிர்முத்தையனார், "பழந்தமிழ்ப்பண்பாட்டு வாழ்வியத்தில் தமிழரின் முதன்மை வரலாற்றுச் சான்று சிலப்பதிகாரம்" என்னும் தலைப்பில் பேருரையாற்றினார்.

டாக்டர் சுதாசினிவிஜயகுமாரி – சிரம்பான் "மாதவியிடம் மிகுந்திருந்தது கலையா? காதலா?" என்னும் தலைப்பிலும், திரு. வி. விவேகானந்தன் முன்னாள் தமிழ்நேசன் ஆசிரியர், "சிலப்பதிகாரம் காட்டும் தமிழர் வாழ்வியல்" என்னும் தலைப்பிலும் முனைவர் சு.ப. திண்ணப்பன் "சிங்கப்பூரும் சிலப்பதிகாரமும்" என்னும் தலைப்பிலும், திருவாட்டி சீ. வசந்தி (அகழ்வாய்வாளர் – தமிழகத் தொல்பொருளாய்வுத்துறை) "பூம்புகாரில் நடைபெற்ற அண்மைய அகழ்வாய்வுகள்" என்னும் தலைப்பிலும் பேருரையாற்றினர்.

மாநாடு இடைவெளியின்றித் தொடர்ந்து நடைபெற்றதால், கீழ்க்கூடத்தில் வழங்கப்பட்ட மதிய உணவையும் மாலைச் சிற்றுண்டியையும் அவரவர் விரும்பும் நேரத்தில் போய் அருந்திக் கொண்டனர். பிற்பகல் 2மணிக்கு நான்காவதாகப் பாவலரேறு பெருஞ்சித்திரனார் அரங்கம், மலேசியத் தமிழ்நெறிக்கழகப் பொதுச்செயலர் பழ. வீரன் பொறுப்பில், தொ.கூ. நாணயச் சங்கத் தேசியத்தலைவர் டாக்டர் எம். இலட்சுமணன் தலைமையில் தொடங்கப்பெற்றது. வெல்லும் தூயதமிழ் இதழாசிரியர் தனித்தமிழ் வல்லார் பாவலர் க. தமிழமல்லர் "சிலப்பதிகாரம் தமிழனின் தனிப்பெருஞ்சொத்து" என்னும் பொருளிலும், தமிழியப்பாவலர் பெரி. நீல. பழனிவேலனார், சிங்கை – "சிலம்பில் செம்மைநெறி" என்னும் பொருளிலும், மலேசியத்தமிழ்நெறிக் கழகத்துப்பாவலர் இர. திருச்செல்வம் "சிலம்பில் கற்பு" என்னும் பொருளிலும், கோலாலும்பூர் பாவலர் அக்பர்தீன் "சிலம்பில் முத்தமிழ்" என்னும் பொருளிலும் தாமியற்றிவந்த பாடல்களைப் பாடினர்.

ஐந்தாவதாக, தந்தைப்பெரியார் அரங்கம் நாடக அரங்கமாகும். மலேசியத் தமிழ்நெறிக்கழகத்துத் திரு



அருள்முனைவர் அரங்கப் பொறுப்பேற்று முன்னுரை வழங்கினார். திருக்குறளறிஞராகிய இவர் பல்வேறு இடங்களில் நடந்த என் திருக்குறள் சொற்பொழிவுகளைக் கேட்டு மகிழ்ந்து பாராட்டியவர். உலகத்தமிழர் மையத்தின் பெருந்தலைவர் டத்தோ டாக்டர் கணேசா தலைமையேற்று வாழ்த்துரை வழங்க, நாடக ஆசிரியர் திரு ஜி.எஸ். மணியம் இயற்றிய "இளங்கோவடிகளின் தூளுரை" என்னும் நாடகம் இரண்டுமணிநேரம் நடந்தது. நாடகக் காட்சிகளும் நடிப்பும் உரையாடலும் அனைவரையும் சிலப்பதிகாரக் காலத்திற்கே அழைத்துச் சென்றன. ஆறாவது, பாவலர் திருமாலனார் அரங்கம் சிலப்பதிகார மாநாட்டு உரைப்பொழிவு அரங்கமாகும். நாடகநேரம் நீண்டுவிட்டதால், 6மணிக்குத் தொடங்கவேண்டிய இவ்வரங்கம் 7மணிக்குத்தான் தொடங்கியது. ஆதலால் இவ்வரங்கில் பேசியோர் நேரத்தைச் சுருக்கிக்கொள்ள அறிவிக்கப்பட்டனர்.

ம.த.நெறிக்கழகத் தேசியத்தலைவர் புலவர் இரா. திருமாவளவர் அரங்கப் பொறுப்பேற்று முன்னுரை வழங்கினார்.

இயலிசைச்செம்மல் முனைவர் இரா. திருமுருகனார் – (புதுவை) "சிலப்பதிகாரக் கால இசைநுட்பங்களும் கூத்துவகைகளும்" என்னும் தலைப்பில் ஆய்வுரை நிகழ்த்தி, புல்லாங்குழல் மூலம் சில பண்களை இசைத்தும் மகிழ்வித்தார்.

திருக்குறள் மூதறிஞர் திருச்சி ஆ.வே. இராமசாமி "முத்தமிழ்க்காப்பியத்தில் மிகவும் சிறப்புப்பெறுவது இயற்றமிழே" என்னும் தலைப்பிலும், காஞ்சிபுரம் பச்சையப்பா கல்லூரி முன்னாள் முதல்வர் முனைவர் மு.பி. பாலசுப்பிரமணியர் கண்ணகியிடம் விஞ்சியிருந்த பண்புநலன்கள் பற்றியும் ஆய்வுரை நிகழ்த்தினர்.

இறுதியாக, மகளிர் மாமணி டத்தின்ஸ்ரீ இந்திராணிசாமிவேலு பல்வேறு போட்டிகளுக்குப் பரிசளித்துச் சிறப்பித்தார். மாநாட்டுத் தீர்மானங்கள் படிக்கப்பெற்றபின், ம.த.ப.இ. செயலர் திரு. பரிதிதாசர் நிறைவுரையாற்ற, இரவு 10மணிக்கு மாநாடு முடிவுற்றது.

தமிழ்நெறித்தென்றல் :

மாநாட்டில் முனைவர் மு.பி.பா., மாநாட்டு வினைக்குழுத் தலைவர் மு. மணிவெள்ளையருக்குத் "தமிழ்நெறித் தென்றல்" என்னும் விருதளித்துச் சிறப்பித்தது குறிப்பிடத்தக்கதாகும்.

கணினி :

மாநாட்டு நிகழ்வுகளையும் நோக்கங்களையும், தமிழ்ப்பண்பாட்டியக்கத்தின் அருஞ்செயல்களையும், கொள்கை விளக்கங்களையும் கணினியில் பதிவுசெய்து திரையில் படமாகக் காட்டியது சிறப்பும் பயனும் மிக்கதாக இருந்தது.

தமிழக அரசுக்கும் இந்திய நடுவணரசுக்கும் செந்தமிழ்ச் சிலப்பதிகார உலகளாவிய மாநாட்டு வினைக்குழுவினரின் வேண்டுரையும் தீர்மானமும்

புத்தரின் பிறந்த இடம், நேப்பாலில் உள்ளதென அகழ்வாராய்ச்சி மூலம் ஆய்வாளர்களால் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. அதுபோலப் பூம்புகாரை அகழ்வாய்வு செய்து சிலப்பதிகாரகாலப் பண்பாட்டுக் கலைச்செல்வங்களை வெளிப்படுத்தி, உலகுக்கு அறிமுகப்படுத்த வேண்டும்.

இயற்றமிழின் சிறப்பு :

மாநாட்டில், "முத்தமிழ்க்காப்பியத்தில் இயற்றமிழின் ஆட்சி" என்னும் தலைப்பில் நான் (ஆ.வே.இரா.) ஆற்றிய சொற்பொழிவின் சாரம்.

தமிழுக்கே உரிய இயல், இசை, நாடகம் என்னும் முத்தமிழுக்கும் விளக்கமாக அமைந்த முத்தமிழ்க் காப்பியமே நெஞ்சையள்ளும் சிலப்பதிகாரம். இம்முத்தமிழ்க்காப்பியத்தில் இயற்றமிழே மிகுதியும் ஆட்சிகொண்டு விளங்குகிறது.

இசைத்தமிழுக்கும் நாடகத்தமிழுக்கும் இயற்றமிழே அடிப்படை. இயற்றமிழின்றேல் இசைத்தமிழுமில்லை நாடகத் தமிழும் இல்லை. முத்தமிழ்க் காப்பியத்தில் இயற்றமிழ் தனித்தும் மிகுதியாகவும் இருப்பதோடு, இசைத்தமிழ்ப் பகுதியிலும், நாடகத்தமிழ்ப்பகுதியிலும் ஊடுருவியும் உள்ளது.

இயற்றமிழ்ப்பாக்கள் :

நேரிசையாசிரியப்பா, நிலைமண்டில ஆசிரியப்பா, இணைக்குறள் ஆசிரியப்பா, அடிமறிமண்டில ஆசிரியப்பா ஆகிய ஆசிரியப்பா வகைகளும், நேரிசை வெண்பா, இன்னிசை வெண்பா, குறள்வெண்பா, பஃறொடை வெண்பா ஆகிய வெண்பாவகைகளும் கலிப்பா வகைகளும் இயற்றமிழ்ப் பாக்களாகும். இவற்றை இசைவல்லார் இசையுடன் பாடினாலும், தக்க பண்ணமைத்துப் பாட இயலாது. எனவே அவை இசைத்தமிழ்ப் பாக்களாகா. சங்க இலக்கியங்களில் பெரும்பகுதி ஆசிரியப்பாக்களே. பதினெண்கீழ்க்கணக்கு நூல்கள் யாவும் வெண்பாவகைகளாகும். திருக்குறள் குறள்வெண்பாவாலானது.

இயற்றமிழ்க் காதைகள் :

முத்தமிழ்க்காப்பியமாகிய சிலப்பதிகாரம் மூன்று காண்டங்களாகவும் முப்பது காதைகளாகவும் பகுக்கப்பட்டுள்ளது. புகார்க் காண்டத்தில் பத்துக் காதைகளும், மதுரைக் காண்டத்தில் பதின்மூன்று காதைகளும், வஞ்சிக் காண்டத்தில் ஏழுகாதைகளும் உள்ளன. இவற்றில் பதினெட்டுக் காதைகள் நிலைமண்டில ஆசிரியப்பாவாலானவை. (எல்லா அடிகளும் அளவொத்த நான்கு ஈரசைச்சீர்களாலமைவது நிலைமண்டில ஆசிரியப்பாவாகும். ஈற்றயலடி மட்டும் முச்சீரடியாக அமைவது நேரிசையாசிரியப்பாவாகும்.)

இயற்றமிழ்ப்பாவகைகளிலும் இளங்கோவடிகள் ஒரு புரட்சி செய்துள்ளார். நிலைமண்டில ஆசிரியப்பாவினிடையே குறள்வெண்பாவையும் தனிச்சொல்லையும் சேர்த்துக் குறள்மிடை

மண்டிலம் எனப்பெயரிட்டுக் 'கட்டுரைக் காதையில் சேர்த்துள்ளார்.

2000 பாக்களடங்கிய சங்க இலக்கியத்தில் நிலைமண்டில ஆசிரியப்பா 27 பாடல்களே. நேரிசையாசிரியப்பாக்களே அதிகம்.

'காதை' யென்று முடிவனவாகிய இருபத்திரண்டும் இயற்றமிழ்க்காதைகளாகும்.

அவையாவன :

புகார்க்காண்டம்

வ. எண்	காதை	காதையெண்
1.	மனையறம்படுத்த காதை	2
2.	அரங்கேற்றுக்காதை	3
3.	அந்திமாலைச் சிறப்புச்செய்காதை	4
4.	இந்திரவிழவு ஊர் எடுத்த் காதை	5
5.	கடலாடுகாதை	6
6.	வேனில்காதை	8
7.	கனாத்திறம் உரைத்த காதை	9
8.	நாடுகாண் காதை	10

மதுரைக் காண்டம்

வ. எண்	காதை	காதையெண்
9.	காடுகாண்காதை	11
10.	புறஞ்சேரியிருந்த காதை	13
11.	ஊர் காண்காதை	14
12.	அடைக்கலக்காதை	15
13.	கொலைக்களக்காதை	16
14.	வழக்குரை காதை (இயலும் நாடகமும்)	20

வஞ்சிக் காண்டம்

இசைத்தமிழ்க் காதைகள் ஆறு

நாடகத்தமிழ்க் காதைகள் மூன்று :

வரலாற்றுக் காப்பியம் :

இளங்கோவடிகள் கண்ணகியின் வரலாற்றோடு தமிழக வரலாற்றையும் பாடவிரும்பினார். தாம் கண்ட தமிழ்நாட்டின் வளம், தமிழினத்தின் வாழ்வு, பண்பாடு, முடியுடை மூவேந்தர்களின் அரசியல்முறைமை, அவர்களுக்கு அயல்நாட்டோடு இருந்த தொடர்பு, வாணிகச் சிறப்பு முதலிய அனைத்தையும் விளக்கும் வரலாற்றுக் காப்பியமாக நெஞ்சையள்ளும் சிலப்பதிகாரத்தைப் பாடினார். தமிழ் இலக்கியங்களுள் சிலப்பதிகாரம் மட்டுமே சங்ககாலத் தமிழ்ப்பண்பாட்டையும் வரலாற்றையும் உணர்த்தும் தலைசிறந்த காப்பியமாகத் திகழ்கிறது. புறநானூறு மன்னர்களைப் பற்றிய குறிப்புகளை மட்டுமே புகல்கிறது. இத்தகைய வரலாற்றுக் காப்பியம் பாடுவதற்கு இயற்றமிழே ஏற்றது. ஆதலால் இயற்றமிழாட்சி மிக்க காப்பியமாகச் சிலப்பதிகாரம் திகழ்கிறது.

நிறைவுரை :

நெஞ்சையள்ளும் சிலப்பதிகாரத்தின் 30 காதைகளுள் 22 காதைகள் இயற்றமிழ்க் காதைகளாகவும், 6 காதைகள் இசைத்தமிழ்க் காதைகளாகவும், மூன்று காதைகள் நாடகத் தமிழ்க்காதைகளாகவும் இருப்பதாலும், இசைத்தமிழ், நாடகத்தமிழிலும் இயற்றமிழ் ஊடுருவியிருப்பதாலும் முத்தமிழ்க்காப்பியத்தில் இயற்றமிழ் ஆட்சியே மிக்கு விளங்குகிறது.

பொன்மாலையை அழகுசெய்ய இடையிடையே முத்தும் பவழமும் பதிக்கப்பட்டாலும் பொன்மாலை அல்லது பொன்னணியென்றே சொல்லப்படும். அதைப்போல இயற்றமிழ்க்காப்பியத்தைச் சிறப்பிக்க ஆங்காங்கே இசைத்தமிழும் நாடகத்தமிழும் பயன்பட்டாலும் இயற்றமிழாட்சி மிக்க காப்பியமே சிலப்பதிகாரமாகும். இயற்றமிழாட்சி மிக்க சிறந்த தமிழக வரலாற்றுக் காப்பியமாகவும் சிலம்பு விளங்குகிறது.

சிலம்பைக் கற்போம்! பூம்புகாரை அகழ்வாய்வு செய்து பழந்தமிழ்ப்பண்பாடுகளைப் போற்றி உலகெலாம் பரப்புவோம்.

இம்மாநாட்டடில் இவ்வாய்வுரையை நிகழ்த்த எனக்கு

வாய்ப்பளித்த ம.த.ப. இயக்கத்தாருக்கும் கேட்டுச் சுவைத்த அவையினருக்கும் நன்றி!

மாநாட்டு நிகழ்ச்சிகளின்போது, இடையிடையே வாய்ப்புநேரும்போது, தமிழினப்பற்று மிக்கவரும் தமிழன் என்னும் நூலின் ஆசிரியருமாகிய முசிறி எம்.எஸ். ஆறுமுகம், சிரம்பான் பொறியாளர் அருள்தாசு, சிரம்பான் புலவர் அ. பழனியாண்டி, மலேசியத் திருக்குறளறிஞர் துரை. இலக்குமணர் ஆகியோர் என்னைச் சந்தித்து அளவளாவி மகிழ்ந்தனர்.

5. நற்றமிழ் நண்பர்

நவில்தொறும் நூல்நயம் போலும் பயில்தொறும்
பண்புடையாளர் தொடர்பு

என்னும் குறளுக்கொத்த நண்பர் புலவர் அ. பழனியாண்டி. அவர் பல்லாண்டுகளாக என்னுடன் மடல் தொடர்பு கொண்ட நல்ல நண்பராவார். இரண்டு திங்களுக்கு ஒருமடலாவது தவறாது வரைவார். நானும் உடனுக்குடன் பதில் எழுதிவிடுவேன். சிறந்த பாவலரும் எழுத்தாளருமாகிய அவர் என்னைப் போல் ஓய்வுபெற்ற தமிழாசிரியர். அவரை ஒருவகைத் தோல்நோய் பற்றி வாட்டியது. பல்வகை மருத்துவம் செய்தும் நோய் முழுவதும் நீங்கவில்லை.

என்னிடம் பேரன்பு கொண்டவர். "முயற்சி திருவினையாக்கும்" என்னும் என் வாழ்க்கைக்குறிப்புநூல் அச்சாகும்போது வாழ்த்துப்பாவும் பொருளும் அனுப்பி உதவிய பெருந்தகையாளர். பெற்றோரின் நினைவாக சின்னம்மா, அருணாசலம் என்னும் பெயர்களைச் சுருக்கி "சின்னருணா" என்னும் அடைமொழியைத் தன் பெயருக்கு முன்னால் சேர்த்துக் கொண்டவர். சிறுவர்களுக்கேற்றபாநூலும் இலக்கணநூலும் இயற்றி வெளியிட்டவர்.சிரம்பான் நகரில் வாழும் அவருக்கும், அதே நகரில் உள்ள மருத்துவமனையில் செவிலியாக (NURSE) ப்பணியாற்றிய என் கொழுந்தியார் ஜான்சிராணிக்கும் மடல்வழி அறிமுகப்படுத்தினேன். அவர்களும் நட்புகொண்டு ஒருவர்க்கொருவர் உதவியாக இருந்தனர்.

ஜான்சியின் தோழிகள் :

திருமதிகள் சரோஜா, சரசுவதி ஆகிய இருவரும் ஜான்சியுடன் செவிலிகளாகப் பணியாற்றிய நல்ல தோழிகளாவர். சரோஜாவின் கணவர்தான் பொறியாளர் அருள்தாசு. இவர்களைப் பற்றிப் பிறகு எழுதுவேன்.

சிரம்பான் பயணம் :

நெகிரிசெம்பிலான் மாநிலத்தைச் சேர்ந்த மாவட்டத் தலைநகர் சிரம்பான் கோலாலம்பூருக்குத் தெற்கில் 40 கல் தொலைவிலுள்ளது. சிப்பாங் விமானநிலையத்திலிருந்து 15கல் தொலைவு. சிரம்பான் நகரில் வாழும் நண்பர் பழனியாண்டி, உடல்நலமற்ற நிலையிலும், அவர்கள் இல்லத்திற்கு என்னை அழைத்துச்சென்று விருந்தோம்புவதற்காக, அவருடைய காரில், மகள், மருமகன் ஆகியவர்களுடன் மாநாட்டிற்கு வந்திருந்தார். மாநாடு முடிந்தவுடன் அவர்கள் காரில் என்னைச் சிரம்பானுக்கு அழைத்துச்சென்றனர். 12-12-99 இரவு 10 மணிக்குச் சிரம்பான் நகரிலுள்ள நண்பர் இல்லத்திற்குச் சென்றோம்.

நண்பர் குடும்பத்தினர்:

நண்பரின் துணைவியார் திருமதி பார்வதி, மகன் அறிவழகன், மகள்கள் செல்வமலர், கலைவாணி, பெயர்த்தி மிந்தியா ஆகியோர் என்னை அன்புடன் வரவேற்று உபசரித்தனர். முதல் சந்திப்பாயினும், மடல்தொடர்பு மூலம் என்னை நன்கறிந்தவர்களாகையால், என்னிடம் பேரன்புபொழிந்தனர். மறுநாள் நிகழ்வுக்குமுன் மலேசியாவின் சாலைநெறிகளை எழுதுகிறேன்.

சாலைநெறிகள் :

மலேசியச் சாலைகளின் அழகு, தூய்மை பற்றி ஏற்கனவே எழுதியுள்ளேன். முக்கியச் சாலை நெறிகளையறிவோம்.

பாதுகாப்புப்பட்டை :

விமான இருக்கையில் இருக்கும் பாதுகாப்புப் பட்டைபோல், காரிலும் பாதுகாப்புப்பட்டையுண்டு. முன்னிருக்கையில் இருப்போர் கட்டாயம் வாராலான பாதுகாப்புப்பட்டை மாட்டிக் கொள்ள வேண்டுமென்பது சட்டம். பின்னிருக்கையிலிருப்போரும் மாட்டிக்கொள்ளும்படி அறிவுறுத்தப்படுவர். முன்னிருக்கையில் அமர்வோர் சட்டப்படித் தவறாது மாட்டிக்கொள்வர்.

சாலைவரி :

நெடுஞ்சாலையில் பயணம்செய்யும்பொழுது கார், பேருந்து, சரக்குந்து (லாரி – அங்கு லோரியென்பர்) ஆகியவற்றின் ஓட்டுநர் குறிப்பிட்ட இடத்தில் அததற்குரிய கட்டணத்தைச் செலுத்தியபின்பே, பயணம் தொடர அனுமதிக்கப்படுவர். குறிப்பிட்ட இடம் வந்தவுடன் கைகாட்டிக் கீழே இறங்கி வண்டியை மறிக்கும். கட்டணம் செலுத்திச் சீட்டுப் பெற்ற உடன் கைகாட்டி மேலே ஏறிவழிவிடும். ஓட்டுநர் வண்டியிலிருந்தபடியே கட்டணம் செலுத்த வசதியாக, காருக்கும் பேருந்துக்கும் தனித்தனிவழியும், அததற்கேற்ற உயரத்தில் கட்டணம் வசூலிப்போர் அறையும் இருக்கும். யாவும் முறையாகவும் காலதாமதம் இன்றியும் இயங்கும். சாலைவரி வசூலிக்கும் இடத்தில் பெரும்பாலும் இளம்பெண்களே இருப்பர்.

நேர்ச்சி (விபத்து) :

தமிழகத்தில் நாள்தோறும் சாலைநேர்ச்சிச் சாவு பற்றிய செய்திகள் செய்தித்தாள் விரித்த உடன் தென்படும். நான் மலேசியாவில் தங்கியிருந்த மூன்றுவார காலத்தில் அச்செய்தியே தென்படவில்லை. இங்ஙனம் யாவும் அங்குச் சிறப்பாக உள்ளன.

('வெல்லும் தூயதமிழ்' இதழில் வந்த பாடல் – நன்றி).

மலேசியச் சாலைநெறி

(க.தமிழமல்லன்)

பொதுத்தேர்வில் அமர்ந்தெழுதும் மாணவர்போல்
பொறுப்பாகச் சாலைகளில் அணிவகுக்கும்
புதுவீட்டில் அடுக்கிவைத்த பொருள்களைப்போல்
பொலிவாகச் சாலைகளில் வரியமைக்கும்
எதுநேர மென்றாலும் இந்தக் காட்சி
இம்மியள வுந்தவறா தியங்கு தங்கே
பொதுவான சாலைநெறி உயிராய்க் கொண்டு
போக்குவர வைநடத்தும் மலையம் வாழ்க!

திரைப்படத்தின் சீட்டுகளைப் பெறுவதற்கும்
திண்பண்டம் மண்ணெண்ணெய் வாங்கு வதற்கும்
கரையின்றி மக்களிங்கே ஈக்க ளைப்போல்
கட்டின்றி மூட்டைபோல் திரண்டி ருப்பர்
விரைவாகப் போம்விருப்பால் விரைவைச் சீய்த்து
வீணாகச் சாலைகளைக் குழப்பும் தீமை
வளமான மலையகத்தில் காண வில்லை
வரையறைக்குள் அம்மக்கள் வாழ்கின் றார்கள்!

காத்திருக்கும் வண்டிகளைக் கடப்ப தற்கே
காட்டுவிலங் காண்டிகள்போல் இடைபி ளப்பில்
பூத்திருக்கும் மலரிடுக்கில் நுழையும் வண்டாய்ப்
போய்ச் செலுத்தி உந்துகளை நுழைத்தல் இல்லை!
கூத்தடிக்கும் சாலையெலாம் அங்கே யில்லை
கொண்டாட்டப் பந்தல்கள் சாலை காணா!
நாத்தடிப்பால் நடுச்சாலை நாறும் வண்ணம்
நாய்போலக் குரைத்தாரும் ஏசல் இல்லை!

காவலர்கள் சாலைகளில் காண வில்லை
கண்டபடிப் பேசுகின்ற கயமை யில்லை!
ஏவலர்கள் இல்லாமல் சாலை யெங்கும்
ஏற்பாடாம் குறிப்பொளியால் இயங்கும் அங்கே.
நாவலர்போல் ஒலிவாங்கி பிடித்துக் கொண்டு
நடுத்தெருவில் நமையேசும் நடத்தை யில்லை.
ஆவலுடன் அவரவரும் கோள்க ளைப்போல்
அழகாகச் செல்வதனால் சாதல் இல்லை!

போர்ட்டிக்சன் கடற்கரை :

13–12–99 காலையுணவு முடித்த உடன் நண்பர் புலவர் பழனியாண்டி, நோய்த்தொல்லையைப் பொருட்படுத்தாமல், சுமார் 30 கல் தொலைவிலுள்ள போர்ட்டிக்சன் (மாவட்டத் தலைநகர்) நகருக்கு அவருடைய காரில் அழைத்துச் சென்றார். வழிநெடுக உளள செம்பனைமரச் சோலைகளின் இயற்கையழகைச் சுவைத்துக் கொண்டே சென்றேன். முதலில் கடற்கரைக்குச் சென்றோம். சென்னையிலுள்ள மெரினாக் கடற்கரைக்கு அடுத்தபடியான அழகிய பெரிய கடற்கரை. மெரினாவைப் போன்ற அகன்ற மணற்பரப்பு இல்லை. புதுவைக் கடற்கரையைப் போல் சாலையை ஒட்டிய கடற்கரை. வானளாவிய கட்டிடங்கள். பொது இடத்தைக் கவர்ந்து வணிகநோக்குடன் தங்கும் விடுதிகள் அமைந்த கட்டிடங்களும் உள்ளன. கடலினுள் சிறிது தூரத்தில் தீவுபோன்ற சிறிய மலைக்குன்று உள்ளது.

மகாமாரியம்மன் கோயில் :

மலேசியத் தமிழர்கள் வாழுமிடமெல்லாம் மகாமாரியம்மன் கோயிலும் உள்ளது. போர்ட்டிக்சனில் உள்ள பெரிய கோயில் ஒன்றில் திருப்பணி நடந்துகொண்டிருந்தது. பொருளாளர் திரு. கெ. சீனிவாசர் அன்புடன் வரவேற்று உபசரித்துச் சில விவரங்களைக் கூறினார். 12 ஆண்டுகளுக்குமுன் நடந்த குடமுழுக்குவிழா மலரும் கொடுத்தார்.

தமிழகக் காரைக்குடியைச் சேர்ந்த சுப்ரமணியம், இராசவீரன் முதலிய 15 சிற்பிகள் திருப்பணியில் ஈடுபட்டிருந்தனர். தஞ்சையைச் சேர்ந்த நாதசுரக் கலைஞர்கள் சா. சோமசுந்தரம் இராம. சாமிநாதன் ஆகியோர் ஐந்தாண்டு ஒப்பந்த அடிப்படையில் அங்குப் பணியாற்றினர்.

சிலைச்செல்வம் :

திருப்பணி நடைபெறுவதால் ஒரு கூரைக்கொட்டகையில் ஏராளமான அழகிய ஐம்பொன் சிலைகள் வைக்கப்பட்டிருந்தன. அவற்றின் அருகில் சென்று சிற்பக்கலையைச் சுவைக்க விரும்பினேன். அங்கே போகக்கூடாது என்றனர்.

ஆரியம் :

திருப்பணியில் ஈடுபட்டிருப்போரெல்லாம் தமிழா். பூசையறையில் மட்டும் தமிழா் செல்ல முடியாமல் ஆரியம் ஆட்சி செலுத்துகின்றது. தமிழா் போகுமிடமெல்லாம் ஆரிய அடிமைப்புத்தியையும் விடாமலிருப்பது கண்டு வேதனைப்பட்டேன். அனைவரிடமும் விடைபெற்றுத் திரும்பினோம்.

பசியாறல் :

மலேசியாவில் உணவருந்தலைப் 'பசியாறல்' என நல்ல தமிழில் வழங்குகின்றனா். காலை, மாலையில் 'என்ன தண்ணீா் வேண்டும்?' எனக் கேட்பா். அங்குத் தண்ணீா் என்பது தேநீா் (டீ) குளம்பி (காபி) முதலியவற்றிற்குப் பொதுப்பெயா். தமிழகத்தில் சில இடங்களில் தண்ணீா் என்றால் வேறுபொருள் (மதுவகை) படும். நீா்வேட்கைக்குத் தண்ணீா் கேட்டால் 100 மில்லியா 200 மில்லியா? என்று கேட்பா். குடித்தண்ணீரையே சீசாவில் அடைத்து அதிகவிலைக்கு விற்றுப் பொருளீட்டுவோரும் உளா். அங்குக் காபியைக் கோபியென்றும் 'லாரி' யென்னும் சொல்லை 'லோரீ என்றும் வழங்குகின்றனா்.

நல்ல சைவ உணவுவிடுதிக்கு நண்பா் அழைத்துச் சென்றாா். வழக்கம்போல் புழுங்கலா? பச்சையா? என்று கேட்டனா். எல்லா உணவுவிடுதிகளிலும் புழுங்கலரிசிச் சோறும் பச்சரிசிச் சோறும் இருக்கும். வேண்டியதைக் கேட்டுப்போடுவா். புழுங்கல் என்றோம். சுவையான உணவு கிடைத்தது. விடுதிக்குரியவரே சிலசமயம் உணவு பரிமாறல், இலையெடுத்தல், மேசைதொடைத்தல் முதலிய எதையும் தயங்காமல் செய்வா். எத்தொழிலையும் யாரும் இழிவாகக் கருதுவதில்லை. உழைப்பை மதிக்கும் நாடு. ஆதலால் அனைவரும் வளமாகவும் உள்ளனா். செல்வா் வீடுகளிலும் வேலைக்காரரைப் பாா்க்க முடியவில்லை. ஆனால் வீடு தூய்மையாக இருக்கும்.

பாவலா் இளவழகு :

பசியாறியபிறகு நண்பா் ஒரு பல்பொருளங்காடிக்கு அழைத்துச் சென்றாா். அவ்வங்காடிக்கு உரியவா் ஐ. இளவழகு.

புகழ்பெற்ற பாவலர் ஐ. உலகநாதரின் இளவல். பெயரும் இளவழகு. அவரும் பாவலர், எழுத்தாளர்; போர்ட்டிக்சன் மாவட்ட எழுத்தாளர் சங்கத்தலைவர். அறிமுகம் செய்துவைத்த உடன், இனிய அளவளாவல் நடந்தது. அவர் நடத்தும் 'அகரம்' என்னும் சிறந்த திங்களிதழ் சிலவும் வேறுசில பொருள்களும் அன்பளிப்பாக வழங்கினார். நானும் சில நினைவுப் பொருள்களை விலைகொடுத்து வாங்கிக் கொண்டேன். அன்றிரவு நண்பர் பழனியாண்டி இல்லத்தில் கூட்டம் கூட்டுவது எனவும் நான் திருக்குறள் சொற்பாெழிவாற்றுவதெனவும் முடிவாயிற்று.

செம்பனை :

மாலை நான்கு மணிக்குப் போர்ட்டிக்சனை விட்டுப் புறப்பட்டோம். திரும்பும்பொழுதும் மாலை நேரத்தில் இயற்கையழகைச் சுவைத்துக் கொண்டேவந்தோம். ஓரிடத்தில் இறங்கிச் செம்பனைத் தோட்டத்திற்குள் நுழைந்து மரத்தின் அமைப்பு, குலை முதலியவற்றைக் கவனித்தேன். இங்குப் பாமாயில் என்று சொல்லப்படும் சமையல் நெய் (கடலை நெய்யைவிட மலிவானது) தரும் மரந்தான் செம்பனை. இதன் மட்டை, தென்னை மட்டையைப் போலிருக்கும். மரம் பனைமரம்போல் செரும்புடையதாக இருக்கும். பழக்குலை ஈச்சம்பழக் குலைபோல் பெரிதாக இருக்கும். பழத்தின் மேல்தோல், சதை, விதை யாவும் நெய்ப்பசை மிகுந்திருக்கும். பழம் கரியநிறம். பழக்குலையை நீண்ட தொரட்டினால் அறுவடை செய்து, குலைகளைத் திரட்டி ஆலையிலிட்டு நெய் தயாரித்து, உள்நாட்டுத் தேவைபோக எஞ்சியதை ஏற்றுமதி செய்கின்றனர். மலேசியாவிற்கு அதிக வருவாய் தருவது செம்பனை நெய்தான். இரப்பர் மரத்தைவிட அதிக வருவாய் செம்பனையில் கிடைப்பதால், பல இடங்களில் முதிய இரப்பர் மரங்களழிக்கப்பட்டுச் செம்பனை பயிர் செய்கின்றனர்.

எண்ணெய் :

எள் + நெய் = எண்ணெய். எண்ணெய் என்னும் சிறப்பு மரபுச்சொல் பொதுச்சொல்லாக மாறிவிட்டதால், எள்நெய்க்கு நல்ல என்னும் அடைமொழி சேர்த்து நல்ல எண்ணெய் என்றும் கடலை எண்ணெய் என்றும் வழங்குகிறோம். எள்நெய்,

கடலைநெய், தேங்காய்நெய், செம்பனைநெய் என்று சொல்வதுதான் மரபு நிலையாகும்.

இடையில் சில இடங்களைப் பார்த்துவிட்டு மாலை 6 மணிக்கு வீடு திரும்பினோம். இரவுக்கூட்டத்திற்கு நண்பரும் சிலரோடு தொலைபேசிமூலம் தொடர்புகொண்டார். திடீர் ஏற்பாடாகையால் எதிர்பார்த்த கூட்டம் சேரவில்லை.

கூட்டம் :

இரவு 9 மணிக்குமேல் ஒவ்வொருவராகச் சுமார் பதின்மர் கூடினர். பாவலர் ஐ. இளவழகு, நெகிரிசெம்பிலான் நகரிலிருந்து வந்திருந்தார். சிரம்பானில் உள்ள பல்மருத்துவர் துரை, அவரது தாயார், ஜான்சியின் தோழி சரோஜா, அவரது கணவர் அருள்தாசு முதலியோரும் நண்பர் குடும்பத்தினரும் கூட்டத்தில் பங்குகொண்டனர். சுமார் 1 1/2 மணிநேரம் திருக்குறள் தொடர்பான கருத்துகள் வினாவிடைகளாக அளவளாவல் நிகழ்த்தினோம். ஒருமருத்துவரும் ஒருசெவிலியும் அக்கூட்டத்திலிருந்ததால், மருந்து என்னும் அதிகாரக் குறள்களையும் விளக்கினேன்.

கூட்டமுடிவில், எழுத்தாளர் இளவழகு, நான் உடன்கொண்டு சென்றிருந்த என் "திருவள்ளுவரும் பன்னாட்டிறிஞர்களும்", "திருவள்ளுவர் தந்த வாழ்வு", "குறுந்தொகை காட்டும் வாழ்வு" என்னும் நூல்களில் ஒவ்வொருபடி பெற்றுக்கொண்டு இருபது வெள்ளி கொடுத்தார். மற்றும் சிலர் பப்பத்து வெள்ளி கொடுத்தனர். அவர்களுக்கும் எனது நூல் ஒவ்வொன்று கொடுத்தேன்.

14–12–99 காலை உணவுமுடித்துக் கோலாலம்பூருக்குப் புறப்பட்டேன். திருமதி பார்வதி பழனியாண்டி எங்கள் வீட்டுப்பெண்களுக்குக் கொடுக்கும்படி மூன்று புதிய சேலைகள் கொடுத்தார். உழுவலன்பர் நூறு வெள்ளி கொடுத்தார். நானும் மீதியிருந்த என் நூல்களைக் கொடுத்து விற்றுக்கொள்ளும்படிக் கூறினேன். நண்பர் பேருந்து மூலம் என்னை அழைத்து வந்து தமிழ்ப்பண்பகத்தில் விட்டுச்சென்றார்.

6. சமுதாயச் சிற்பி சாமிவேலு


தோன்றின் புகழொடு தோன்றுக அஃதிலார்
தோன்றலின் தோன்றாமை நன்று.

ஒருதுறையில் தோன்றினால் செயற்கரிய செய்து புகழோடு விளங்க வேண்டும். இல்லாவிட்டால் அத்துறையை மேற்கொள்வதைவிட மேற்கொள்ளாமலிருப்பதே மேலாகும்.

மலேசியாவில் புகழ்பெற்ற தமிழர்களில் டத்தோ ஸ்ரீ டாக்டர் ச. சாமிவேலு தலைசிறந்தவர். இவர் கலை, இலக்கியம், சமூகப்பணி முதலியவற்றோடு அரசியலிலும் ஈடுபட்டு இளமை முதலே குறிக்கோள்களுடன் ஊக்கங்கொண்டு விடாமுயற்சியோடு அயராதுழைத்துச் செயற்கரும் செயல்களைச் செய்து மலேசிய இந்தியர்களின் தனிப்பெருந்தலைவராகவும் சமுதாயச் சிற்பியாகவும், மலேசிய முன்னேற்றத்திற்குச் சாதனைகள் பல செய்தவராகவும் விளங்குகிறார்.

பொதுப்பணித்துறை :

ஐந்தாம் முறையாகப் பொதுப்பணித்துறை அமைச்சராகியுள்ள சாமிவேலு, அத்துறையில் செய்த சீர்திருத்தங்களும் சாதனைகளும் மிகப்பலவாகும். மலேசியச்சாலைகளின் சிறப்பிற்கும், உயர்ந்த சாலைநெறிகளுக்கும் காரணம் இவரே. அகன்ற நீண்ட தூய்மையான அழகிய நெடுஞ்சாலைகள், போக்குவரவு நெரிசலைத் தவிர்க்கும் மேம்பாலங்கள், ஆற்றுப் பாலங்கள், வானுயர்ந்த கட்டிடங்கள் யாவும் இவரின் கைவண்ணமே.



உலகில் அவ்வப்பொழுது தோன்றும் அறிவியல் புதுமைகளைக் கூர்ந்துநோக்கி அவற்றை மலேசிய முன்னேற்றதிற்குப் பயன்படுத்துவதில் வல்லவர்.

கடலுக்குள் மிகநீண்ட உறுதியான பாலம் அமைத்துப் பினாங்குநகரை முதன்மை நிலப்பகுதியுடன் இணைத்திருப்பதும், உலகிலேயே தலைசிறந்த அழகிய பெரிய புதுமையான சிப்பாங் விமானநிலையமும், மாமனிதர் ச.சாமிவேலுவின் பெருமையைப் பாரில் என்றும் பறைசாற்றிக் கொண்டிருக்கும்.

தமிழ்ப்புரவலர் :

தமிழ்மாநாடுகளுக்கும் இலக்கிய நிகழ்வுகளுக்கும், தமிழறிஞர்களுக்கும் வாரிவாரி வழங்கும் வள்ளலாகவும் உள்ளார். அவரை நாடிச் செல்வோருக்கு மட்டுமன்றி அவரே நாடிச்சென்று வழங்கும் நிகழ்ச்சிகளும் உண்டு. அவரும் அவரது துணைவியார் மகளிர் மாமணி டத்தினி இந்திராணி சாமுவேலும் பலமுறை தமிழகம் வந்து, பல்வேறு இலக்கிய நிகழ்வுகளிலும், பொதுநிகழ்வுகளிலும் பங்குகொண்டு தமிழ் எழுத்தாளர்களுக்குப் பேருதவி செய்துள்ளனர்.

15-12-99 அன்று சிலப்பதிகார மாநாட்டிற்கு வந்த தமிழறிஞர்கள் சிலர் வள்ளல் சாமிவேலுவைச் சந்திக்கச் சென்றனர். முனைவர் மு.பி.பா., பாவலர் தமிழமல்லர், இசைத்தமிழறிஞர் திருமுருகனார் ஆகியோர் சென்ற காரில் திருமுருகனார் அவர் மனைவியாரையும் உடன் அழைத்துச் சென்றதால், எனக்குக் காரில் அமர இடமில்லையென என்னை ஒதுக்கிவிட்டனர். சென்றவர்களை வள்ளல் வரவேற்று, தலைக்கு ஆயிரம் வெள்ளி கொடுத்துச் சிறப்பித்ததாகக் கேள்விப்பட்டேன்.

மறுநாள் மாமனிதர் சாமிவேலு தமிழகம் வந்துவிட்டதாலும், நான் அங்கிருந்த காலத்தில் மீண்டும் ஒருமுறை, மாமனிதர் மாண்புமிகு கலைஞர் கன்னியாகுமரிக் கடலில் வான்புகழ் வள்ளுவருக்கு அமைத்த வானளாவிய சிலைதிறப்பு விழாவிலும் பங்குகொள்ள வந்ததாலும், நான் அவரைச் சந்திக்கும் வாய்ப்பே இல்லாமல் போய்விட்டது.

எனக்கு அப்பேறு கிடைக்காவிட்டாலும் ஏனைய தமிழறிஞர்களுக்குக் கிடைத்த நற்பேறு பற்றி மகிழ்ச்சியே.

திரும்பும் சிக்கல் :

தமிழக அறிஞர்கள் கோலாலும்பூருக்குச் செல்லும் பொழுதும் சேர்ந்து செல்லவில்லை. திரும்பும்பொழுதும் சேர்ந்து வரஇயலவில்லை. என் விமானப்பயணச் சீட்டில் 25-12-99 திரும்பும் நாளாகக் குறிக்கப்பட்டிருந்தது. மலேசிய விமானநிலையத்தார் அதையேற்றுக் கொள்ளவில்லை. மலேசியாவிற்கும் தமிழகத்திற்கும் வணிகத் தொடர்பாக வந்துசெல்பவர்களுக்கே இடச்சிக்கல் இருந்தது.

விமான நிலைய அலுவலரும் தமிழார்வலருமாகிய திரு கு.மு. துரையின் முயற்சியால், 1-1-2000 இரவு விமானத்தில் எனக்கும் திருமுருகர் குடும்பத்தாருக்கும் பதிவு செய்யப்பெற்றது. புலவர் தமிழமல்லர், பாவலர் கதிர்முத்தையா, ஆசிரியர் குப்பமுத்து ஆகியோர் அரசுப்பணியில் உள்ளவர்களாகையால் விடுமுறைச் சிக்கலைத் தீர்க்க, முயன்று எங்களுக்குமுன்பே இடம் பெற்றுத் திரும்பிவிட்டனர். நானும் திருமுருகரும் ஓய்வுபெற்றவர்களாகையாலும், முதல்முறையாக மலேசியா சென்றிருப்பதாலும் அதிக நாள் அங்குத் தங்கும் வாய்ப்பையே விரும்பினோம். எங்களுக்கும் அத்தகைய சூழலே அமைந்தது.

7. பாரிட்புந்தார்

செல்வத்துள் செல்வம் செவிச்செல்வம் அச்செல்வம்
செல்வத்துள் எல்லாந் தலை. - குறள்

அறிவையும் மாண்பையும் வளர்க்கும் நல்லவற்றைக் கேட்பதால் உண்டாகும் கேள்வியறிவுச் செல்வமே செல்வங்கள் யாவற்றிலும் சிறந்த செல்வமாகும்.

ம.த.நெ.கழகம் :

மலேசியா முழுவதும் பரவியிருக்கும் மலேசியத் தமிழ்நெறிக்கழகத்தார் தமிழக அறிஞர்களின் சொற்பொழிவைக் கேட்கவிரும்பினர். ம.த.நெ.க. தேசியத் தலைவர் புலவர்

இரா.திருமாவளவர், ம.த.ப. இயக்கப்பொதுச்செயலாளர் தமிழ்நெறித் தென்றல் மு. மணிவெள்ளையர் ஆகியோர் ஏற்பாட்டின்படி, 18-12-99 பாரிட்புந்தாரில் உள்ள ம.த.நெ.க. கிளையிலும், 19-12-99 மாலை பெங்கலான்உலுவிலுள்ள கிளையிலும், 20-12-99 மாலை ஈப்போ நகரிலுள்ள கிளையிலும் நாங்கள் பேசும் வாய்ப்பு ஏற்பட்டது.

18-12-99 சனிக்கிழமைக் காலை 8 மணிக்குப் பாரிட்புந்தாரிலிருந்து கார் வந்தது. தமிழ்ப்பண்பகத்தின் அருகிலுள்ள தமிழரின் 'இராஜ்' சைவஉணவு விடுதியில் அனைவரும் காலை உணவருந்தினோம்.

இடநெருக்கடி :

ம.த.கழகத்தின் உதவித்தலைவர் புலவர் மு. தமிழரசு எங்களை அழைத்துச் செல்ல வந்திருந்தார். காரோட்டுநரும் ஒருபுலவரே. அவர் பெயர் நினைவில்லை. புலவர் தமிழரசு காரோட்டியின் அருகில் உள்ள முன்னிருக்கையில் அமர்ந்து கொண்டார். அவர்தான் வழிகாட்டி அழைத்துச் செல்லவேண்டும். பின்னிருக்கை மூவரமரக்கூடிய இருக்கை. இசையறிஞர் திருமுருகர் போகுமிடமெல்லாம் அவர் மனைவியாரையும் அழைத்துச் செல்லவேண்டும் என்கின்றார். சூழ்நிலையறிந்து பாவலர் தமிழமல்லர் ஒதுங்கிக்கொண்டார்.

ஒரு ஓரத்தில் முனைவர் மு.பி.பாவும், மற்றொரு ஓரத்தில் திருமுருகர் மனைவியும் அமர்ந்துகொள்ள இடையில் திருமுருகரும் நானும் அமர்ந்தோம். மூவரிருக்கையில் நால்வர். திருமுருகரும் அவர் மனைவியாரும் பருத்த உடலினர். சுமார் 300 கல் தொலைவு ஆறுமணிநேரம் பயணம் செய்து மலேசியாவின் வடகோடியிலுள்ள பாரிட்புந்தாருக்குச் செல்லவேண்டும். ஓரங்களில் அமர்ந்த இருவரும் வசதியாகப் பின்னால் சாய்ந்துகொள்ள, இடையில் சிக்கிய நாங்களிருவரும் அன்று முழுவதும் பட்டபாடு ... அம்மம்ம! சொல்லிலடங்காது! நாங்களிருவரும் முன்னும்பின்னும் மாறிமாறியும் உடலை நெளித்துக் கொண்டும் பட்டபாடு அதிகம். பின்பக்கம் கைகளை நீட்டலாம் என்றால் ஒருகை அவ்வம்மையார்மேல்படும். அதனால் வலக்கையை ஆறுமணிநேரம் அசைக்கக்கூட முடியாதநிலை.

பத்துநாட்களாகத் திருவாளர்கள் மாணிக்கத்தின் காரிலும் பழனியாண்டி காரிலும் தனியாகவும் வசதியாகவும் பயணம் செய்த என்னுடலுக்கு அன்று கடுமையான சோதனையாகிவிட்டது.

மலேசியாவில் பேருந்துப்பயணம் கூடக் காரப்பயணம் போலவே வசதியாக இருக்கும்.

இன்பமும் துன்பமும் :

வழிநெடுகில் இருந்த பசுமையான இயற்கைக்காட்சிகள் கண்ணுக்கும் மனதிற்கும் இன்பமளிக்க இடநெருக்கடி உடலுக்குத் துன்பமளிப்பதாயிருந்தது. இன்பமும் துன்பமும் கலந்ததுதானே வாழ்க்கை! உழைப்பது உடலுக்குத் துன்பமானாலும், பின்னர் வரப்போகும் பயனை நினைத்தால் மனதிற்கு இன்பமாக இருக்கும். அன்றைய பயணத்தின்போது உடல் துன்புற்றாலும், பாரிட்புந்தாரிலுள்ள இலக்கிய ஆர்வலர்களை – தமிழ்நெஞ்சங்களை அன்று மாலையில் சந்தித்து அளவளாவும்பேறும் சொற்பொழிவாற்றும் வாய்ப்பும் எண்ணி மகிழ்ந்தோம்.

இயற்கையின்பம் :

மலைவளமும் மழைவளமும் வழவழப்பான நெடுஞ்சாலையும் நிறைந்த மலேசியாவின் நீண்ட பயணத்தில் எங்கு நோக்கினும் இனிய இயற்கைக் காட்சிகள்! வானளாவிய செம்பனை மரங்களும், இடையிடையே தோன்றிமறையும் மேகமூட்டங்களும், வானத்தின் தூரல்களும், குளிர்ந்த காற்றும் உடலுக்கும் மனதிற்கும் சிறப்பாகக் கண்களுக்கும் பெரும் விருந்தாயின. காருக்குள்ளே இருந்த தமிழறிஞர்களின் மனங்கலந்த அளவளாவல் மனதிற்கு மேலும் இன்பமூட்டியது.

அழகிய இளம்பெண்ணின் மேலாடையை தென்றல் காற்று விலக்கியும் மூடியும் அழகை வெளிப்படுத்துவதுபோல், மலைமங்கையின் உடலை மேக ஆடைமூடியும் திறந்தும் காட்டிக்கொண்டிருந்தது. வழிநெடுகிலும் அழகிய இளமங்கையர் அணிவகுத்து நின்று பன்னீர் தெளித்து எங்களை வரவேற்பதுபோல் இயற்கையன்னை காட்சியளித்தாள். தமிழன்னையின் புகழ்பரப்பச் செல்லும் எங்களுக்கு இயற்கையன்னை இனிய வரவேற்பளித்தாள். என்னே மலையகத்தின் மாண்பு!

விடுதலை :

பிற்பகல் இரண்டு மணிக்குச் சாலையோர உணவு விடுதியில் எங்கள் வண்டி நின்றது. வண்டியைவிட்டு இறங்கி எங்களுடலுக்கு விடுதலை கொடுத்துப் பசிக்கும் விடுதலை கொடுக்கச் சென்றோம்.

அவ்விடுதி உணவுவிடுதியாக மட்டும் இல்லாமல் பலவகைப் பொருள்களும் விற்கும் பேரங்காடியாகவும் திகழ்ந்தது. பசியாறிப் பசிக்கு விடுதலை கொடுத்த பின்பு சிறிது நேரம் உலாவினோம். சிலபொருள்கள் வாங்கினோம். நிலக்கடலை வேகவைத்து விற்கும் கடை. மலைவளத்திறகேற்ப வளமாகப் பெருத்த கடலை கண்ணையும் வேகவைத்த மணம் மனத்தையும் கவர, வழியில் கொரிப்பதற்கு வேண்டியதைத் தமிழரசு வாங்கிக் கொடுத்தார். இனி இரவு 9 மணிக்குமேல்தான் பசி தலைகாட்டும். ஆனால் இன்னும் சிலமணிநேரம் உடலை வண்டிக்குள் சிறைப்படுத்தியே ஆகவேண்டும். மீண்டும் இன்பமும் துன்பமும் கலந்த பயணம் தொடங்கியது.

தமிழ்நெஞ்சங்களின் வரவேற்பு :

மாலை ஆறுமணிக்கு உரிய இடத்தையடைந்தோம். உடலுக்கு முழுவிடுதலை கிடைத்தது. ம.த.நெ.கழகத்தின் பாரிட்புந்தார் கிளையின் தலைவர் திரு க. முருகையன், தேசியப் பொதுச்செயலர் திரு இர. செல்வம், திரு இரா. இராசேந்திரன், திருவாளர்கள் ம. தமிழ்ச்செல்வன், சு. சற்குணன் முதலியோரும் செயற்குழு உறுப்பினர்களும் தலைவர் முருகையன் குடும்பத்தாரும் எங்களை மகிழ்வுடன் வரவேற்று மாலைச் சிற்றுண்டி கொடுத்து உபசரித்து, கூட்டம் கூடியுள்ள மண்டபத்திற்கு அழைத்துச் சென்றனர். மண்டபம் நிறைந்த கூட்டம் கணிசமான பெண்களுடன் கூடியிருந்தது. பலர் குடும்பம் குடும்பமாக வந்திருந்தனர். சிறியவர் பெரியவர் எல்லோரும் ஆர்வத்துடன் குழுமியிருந்தனர்.

பெருமை :

பாவலரேறு பெருஞ்சித்திரனார், முத்தமிழ்க்காவலர் கி.ஆ.பெ. விசுவநாதம், தமிழ்க்கடல் இரா. இளங்குமரனார்,

தமிழ்க்குயிலார் கா. கலியெபருமாள், பேராசிரியர் இர.ந. வீரப்பனார், தமிழ்நெறித்தென்றல் மு. மணிவெள்ளையனார் போன்ற பல பேரறிஞர்களால் சிறப்பிக்கப்பட்ட பெருமையுடையது–திங்கள்தோறும் திருக்குறள் வகுப்பும் ஆய்வுக்கூட்டமும் நடத்திவருவது பாரிட்புந்தார் கிளை.

கிளைத்தலைவர் க. முருகையன் தலைமையில் இரவு 7 மணிக்குக் கூட்டம் தொடங்கியது. தொடக்கத்தில் தமிழிறைவணக்கம் பாடப்பட்டது.

மலேசியத் தமிழ்நெறிக்கழகத்தைத் தோற்றுவித்து மலேசியா முழுவதும் பரப்பிய பெரியவர் அமரர் தமிழ்நெறிஞாயிறு ஐயா அ.பு. திருமாலனார் பாடிய தமிழிறைவணக்கப்பாடல் :


1. இயலிசை நாடகமாய் இன்னொலியின் கூறாய்
   பயில்வடிவத் தோடுணர்விற் பாய்ந்து – செயலாகி
   ஆன்ற அகம்புறமாய் ஆதனுறைந் தேயாளும்
   தீந்தமிழ் ஒன்றே திரு.

2. புலனுணர்வில் தோன்றும் பொருளாகிப் பொய்தீர்
   பொருளில் மறைந்து புலனாய் – புலத்தமரும்
   பேறாய் அணுவண்டப் பிண்டமுமாய் நின்றொளிரும்
   கூறாய்க் குறையகற்றும் கோன்.

3. கொள்ளா துலகெனினும் கொள்ளும் கருப்பொருளாய்
   விள்ளாமல் விள்ளும் விளக்கமதாய் – தொல்லுலகில்
   நில்லாமல் நிற்கும் நெடும்பொருளே நின்தாளுக்
   கல்லால் உண்டோ கனிவு.

4. ஓமென் னொலிக் கூறாய் ஓங்கி வளர்ந்தகர
   மாமென் னுயிராகி மெய்யுமாகி – யாமுணர
   முச்சுட்டி லேபிறந்து மூவா வரிவடிவில்
   எச்சுட்டு மாகும் இறை.

தமிழிறைவணக்கப் பாடலுக்குப்பிறகு, முனைவர் மு.பி.பா.



சிலப்பதிகாரத்தின் மாண்பு பற்றியும், குறளன்பன் ஆ.வே.இரா. திருக்குறள் காட்டும் வாழ்வியல்நெறி பற்றியும், இசையறிஞர் திருமுருகர் தமிழிசை மாண்பு பற்றியும் விளக்கவுரையாற்றினர். சுமார் நான்குமணிநேரம் கூட்டம் கலையாமல் அமைதியாகக் கேட்டது. இறுதியில் திருமுருகனார் குழலிசை மூலம் அனைவருள்ளத்தையும் இசைவித்துப் பிணித்தார்.

முன்வரிசையில் அமர்ந்து இறுதிவரை ஆர்வமுடன் கேட்டநிறைவயிற்று அம்மையார் (முருகையர் மைத்துனர் மனைவி) மறுநாள் தாய்மைப்பேறுற்றதாக, நாங்கள் பெங்கலான்உலுவில் பேசிக் கொண்டிருக்கும்பொழுது செய்தி வந்தது.



நான் கிள்ளான் நகரில் வள்ளல் மாரியப்பர் வீட்டில் ஓய்வாகத் தங்கியிருந்தபொழுது அந்த அம்மையாருக்கு (29-12-99)இல் எழுதிய வாழ்த்துமடலில்,

"தமிழார்ந்த அம்மையீர்! வணக்கம். தங்களூரில் நாங்களாற்றிய சொற்பொழிவுகளை ஆர்வமுடன் கேட்டுச் சுவைத்த தாங்கள் மறுநாள் தாய்மைப் பேறுற்றதாகக் கேள்விப்பட்டுப் பெரிதும் மகிழ்ந்தோம். தங்கள் குழந்தை எதிர்காலத்தில் தமிழாலும் திருக்குறளாலும் உலகப்புகழ்பெற்று விளங்குமென்பது உறுதி! வாழ்க! தங்கள் குடும்பத்திலுள்ள அனைவர்க்கும் வணக்கம்" என்று எழுதியிருந்தேன்.

கூட்டம் முடிந்தபிறகு தலைவர் முருகையர் இல்லத்தில் அனைவர்க்கும் சிறப்பான விருந்து வழங்கப்பட்டது. நீண்டநேரம் அளவளாவல் நடந்தது. பாரிட்புந்தார் நகரில் நானாற்றிய சொற்பொழிவின் சுருக்கத்தைத் தருகிறேன்.

8. திருக்குறள் காட்டும் வாழ்வியல் நெறிகள்

எல்லாப் பொருளும் இதன்பால் உளஇதன்பால்
இல்லாத எப்பொருளும் இல்லையால் – சொல்லால்
பரந்தபா வாலென் பயன்வள் ளுவனார்
சுரந்தபா வையத் துணை.

– மதுரைத்தமிழ் நாகனார்.

இதன்பொருள் :

பலவகை நூல்களிலும் சொல்லப்பட்ட எல்லாப் பொருளும் இந்நூலகத்து அடங்கியுள்ளன. இதனிடத்தில்லாத எந்தப் பொருளும் எந்நூலிலும் இல்லை. அதனால் சொல்லினால் விரிந்த நூல்களால் பயன்யாது? திருவள்ளுவரால் தரப்பட்ட இந்நூலொன்றே மண்ணுலகத்தாருக்குத் துணையாதலமையும்.

(பாரிட்புந்தார் சொற்பொழிவின் சாரம்)

அனைவர்க்கும் வணக்கம்.

ஒப்பற்ற நூல் :

வையகத்து மாந்தரெல்லாம் வாழ்வாங்கு வாழ்ந்து வானுறையும் தெய்வநிலையெய்த வழிகாட்டும் ஒரே நூல் – ஒப்பற்ற நூல் திருக்குறள். காலம், தேயம், இனம், மதம் யாவும் கடந்து என்றும் எல்லோரும் ஏற்றுப்போற்றும் நூல் திருக்குறள் ஒன்றே. அதற்கிணையான நூல் எதுவும் இல்லை. அதிகமான மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டதும், அதிகமான ஆய்வுகளும் உரைகளும் காலந்தோறும் பெற்று வருவதும் திருக்குறளே.

மூவகை நூல் :

தெய்வம் மனிதனுக்குக் கூறியது பகவத்கீதையென்றும், மனிதன் தெய்வத்தைப் பாடியவற்றுள் தலைசிறந்தது திருவாசகம் என்றும், மனிதன் மனிதனுக்குப் பாடிய நூல் திருக்குறள் என்றும் கூறுவர்.

திரு :

'திரு' என்னும் சொல் அழகு, மேன்மை, உயர்வு, செல்வம், தெய்வத்தன்மை முதலியபல பொருள் தரக்கூடிய உயர்ந்த சொல். திரு என்னும் அடைமொழியைப் பெற்ற நூல் சில ; ஆசிரியரும் சிலர் ; நூல் 4. திருக்குறள், திருமந்திரம், திருவாசகம், திருவருட்பா. ஆசிரியர் ஐவர். திருவள்ளுவர், திருமூலர், திருத்தக்கதேவர், திருநாவுக்கரசர், திருஞானசம்பந்தர். ஆசிரியர்க்கும் நூலுக்கும் சேர்ந்து திரு என்ற அடைமொழி வருவன இரண்டே. திருவள்ளுவர் இயற்றிய திருக்குறள். திருமூலர் இயற்றிய திருமந்திரம். இவற்றுள் திருக்குறள் மட்டுமே மனிதவாழ்வைத் தெய்வவாழ்வாக்கும் முழுநூலாகும்.

முப்பாலில் நாற்பால் :

மனித வாழ்வோடு நேரான தொடர்புடைய அறம், பொருள், இன்பம் ஆகியவற்றை முப்பாலாக விளக்கி அவற்றின் மூலம் வீடு பேற்றையும் விளக்குவதாகக் கூறுவர். யாரும் வீட்டை (மோட்சத்தை)த் தேடிச்செல்ல வேண்டியதில்லை. வாழ்வாங்கு வாழ்ந்தால் வீடுதானே தேடிவரும்.

வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப் படும்.

– குறள் 50

வாழ்வாங்கு வாழ வழிகாட்டுவதுதான் 1330 குறட்பாக்களும். எனவே முப்பாலின் சாரமாக இக்குறள் திகழ்கிறது எனலாம்.

அறத்துப்பால் தனிவாழ்வின் அறநெறியையும் பொருட்பால் குமுகாயம் (சமுதாயம்) அரசியல் முதலியவற்றின் பொது நெறிகளையும், காமத்துப்பால் குடும்பவாழ்வின் காதல் நெறியையும் உவமை, உருவகம் முதலிய அணிகளோடு இலக்கிய நயத்துடன் விளக்குகின்றன.

எதுஅறம்? மனதில் மாசின்றி வாழ்வதே சிறந்த அறம். மனமாசுடன் – வஞ்சநெஞ்சத்துடன் செய்யும் நற்செயல்களெல்லாம் உலகை ஏமாற்றும் ஆரவாரச் செயல்களாகும்.

மனத்துக்கண் மாசிலன் ஆதல் அனைத்தறன்
ஆகுல நீர பிற.

அனைத்தறன் – அனைத்தும் அறம் என்று கடைக்குறையாக வந்துள்ளது. மனத்தூய்மையோடு பிறருக்கு உதவுவதும், பெற்றோரும் ஆசிரியரும் பிள்ளைகளைக் கண்டிப்பதும் குற்றவாளிகளைச் சட்டம் ஒறுப்பதும் (தண்டிப்பதும்) அறமே.

எது மனமாசு? அழுக்காறு (பொறாமை)தான் எல்லாக் குற்றங்களுக்கும் அடிப்படை. பிறர் ஆக்கம் கண்டு பொறாமைப்படுபவன் உள்ளத்தில், அதைக் கவரும் அவா(ஆசை) தோன்றுகிறது. கவரமுடியாதேபாது சினமும் இன்னாச்சொல்லும் தோன்றுகின்றன. தொடர்ந்து அடிதடி, கொலை, சிறும்போர், பெரும்போர், உலகப்பெரும்போர் ஆகியன நிகழ்வதற்குப் பொறாமையே அடிப்படையாகும். பல தொற்றுநோய்களைப் பரப்பும் சாக்கடை – அழுக்கு ஆறுபோல, பல குற்றங்களை உருவாக்கும் பொறாமையை 'அழுக்காறு' என்னும் சொல்லால் தெய்வப்புலவர் குறிக்கிறார். 'மனத்துக்கண்' என்னும் குறளுக்கு அடுத்த குறள்,

"அழுக்காறு அவாவெகுளி இன்னாச்சொல் நான்கும்
இழுக்கா இயன்றது அறம்" என்பதாகும்.

அழுக்காறை நீக்கினால் எல்லாக் குற்றங்களும் தாமே நீங்கிவிடும். அழுக்காறற்ற தூய உள்ளத்துடன் செய்யும் எல்லாச் செயல்களும தூய அறமே! அறத்திற்கு இத்தைகய சிறந்த இலக்கணம், மனித சமுதாயம் முழுதும் ஏற்றுப்போற்றும் இலக்கணம் வகுத்தவர் தெய்வப்புலவர் திருவள்ளுவரைத் தவிர வேறு யார் ?

அறநெறியை இல்லறம் துறவறம் எனப்பகுத்து, இல்லறமே தலைசிறந்த அறம் என விளக்குகிறார் வான்புகழ் வள்ளுவர்.

அறநெறி தவறாமல் தூய மனத்துடன் இல்லறம் நடத்துபவன் பெறும் பயனைவிடப் புறநெறியாகிய துறவறத்தால் பெறும் பயன் யாதுளது ?

அறத்தாற்றின் இல்வாழ்க்கை ஆற்றின் புறத்தாற்றில்
போஒய்ப் பெறுவ தெவன் ?

துறவறத்தை விரும்புவோர் இல்லறத்தின் வழியாக உலக இன்பங்களைத் துய்த்து, ஆசைகளடங்கி மனப்பக்குவம் ஏற்பட்டபிறகே துறவறத்தை மேற்கொள்ளவேண்டும். இன்றேல் கூடாஒழுக்கமும் வீண்பழிபாவங்களுமே நிகழும்.

இல்லற இயலின் இறுதியில் புகழ் அதிகாரமும், அதனிறுதியில்

"வசையொழிய வாழ்வாரே வாழ்வார் இசையொழிய
வாழ்வாரே வாழா தவர்"

என்னும் குறட்பாவை வைத்துள்ள நயம் நோக்கத்தக்கதாகும். இக்குறட்பாவில் தமிழுக்கே உரிய சிறப்பு ழகரம் ஆறுமுறை வந்துள்ளது. மனிதக் குமுகாயம் முழுவதற்கும் பொதுவாக உலகப் பொதுமறையாக இயற்றியதால், தமிழ், தமிழ்நாடு, தமிழினம், தமிழ்ப்பண்பு முதலிய சிறப்புச் சொற்களைப் பயன்படுத்தாமல் தமிழ்மொழியின் நயத்தையும் தமிழ்ப் பண்பாட்டையும் ஆங்காங்கு நயமாக நாயனார் நவிலும் குறட்பாக்களில் இதுவும் ஒன்று.

ஊழ் :

அறத்துப்பாலின் இறுதியிலுள்ள 'ஊழ்' அதிகாரம் பெரும் சிந்தனைக்குரியதாகும். 'ஊழ்வினை' யென்னும் தொடர் சங்க இலக்கியங்களிலோ திருக்குறளிலோ இல்லை. நெஞ்சையள்ளும் சிலப்பதிகாரம் இயற்றிய இளங்கோவடிகள்தான் காப்பிய நயத்திற்காக முதன்முதலில் 'ஊழ்வினை' என்னும் தொடரைப்பயன்படுத்தினார்.

திருவள்ளுவர் காட்டும் ஊழ் இயற்கைச்சூழலை உணர்த்துவதாகும். ஐம்பெரும்பூதங்களாலாகிய இயற்கைச்சூழலால் அவ்வப்போது நிகழ்பவை மிக்கவலிமை வாய்ந்தவைதாம்.

ஊழிற் பெருவலி யாவுள மற்றொன்று
சூழினும் தான்முந் துறும்?

பெருவலியாவுள? என்று வினவிய பொய்யாமொழியார் ஊழ் முந்துறும் என்று சொன்னாரே ஒழிய வெல்லும் என்று சொல்லவில்லை.

ஓட்டப்பந்தயத்தில் முதலில் முந்திக்கொண்டு வருபவரை, பின்னால் வருபவர் முயற்சியால் முன்வந்து வெல்லுவதும் உலகியலில் காண்கின்றோம் அல்லவா? முந்துறும் வலிய ஊழை வெல்வது எது?

உள்ளுவதெல்லாம் உயர்வு உள்ளி, மடியை மடித்து, இடுக்கண் கண்டு அஞ்சாது நக்கு, இடும்பைக்கு இடும்பைப்படுத்து அயராது செய்யும் முயற்சி வலிய ஊழை வென்றே தீரும்.

"ஊழையும் உப்பக்கம் காண்பர் உலைவின்றித்
தாழா துஞற்று பவர்".

ஊனமுற்றோரும் வாழ்வில் முன்னேறவும், பிறரை வாழ்விக்கவும் வழிகாட்டுவது வள்ளுவம்.

பொறியின்மை யார்க்கும் பழியன்று அறிவறிந்து
ஆள்வினை யின்மை பழி.

பொறியின்மை – உறுப்புக்குறைபாடு. ஊமை, செவிடு,

குருடு, மொண்டி, முடம் முதலியவற்றுள் ஒன்றோ பலவோ குறைபாடுடையவராகப் பிறப்பதோ, இடையில் சூழலால் ஆக்கப்படுவதோ பழியாகாது. அறியவேண்டியவற்றை அறிந்து செய்யவேண்டிய முயற்சியைச் செய்யாமையே பழியாகும். இக்குறள் நெறியைப் பின்பற்றி முன்னேறிய ஊனமுற்றோரும் செயற்கரிய செய்து புகழ்பெறுவோரும் எவ்வளவு பேர்! ஆய்க்குடி அமர் சேவாசங்க நிறுவனரும் தலைவரும் ஆகிய இராமகிருட்டிணரும், செயலராகிய சங்கர ராமரும் கழுத்துக்குக்கீழ் எந்த உறுப்பும் செயல்படாது பிறருதவியின்றி இயங்க முடியாதவர் தாம். ஆனால் அவர்கள் இயக்கும் அமர்சேவாசங்கம் மூலம் ஆயிரக்கணக்கான ஊனமுற்றோர் வாழ்வு பெறுகின்றனர்.

அமரநிலையெய்தி விட்ட உதவிக்கரம் முத்து ஊனமுற்றோர் சங்கத் தலைவராகச் செயல்பட்டு, சக்கர நாற்காலி மூலமாகவே கிழக்காசியநாடுகள் முழுவதும் சுற்றியவர். ஊமை, செவிடு, குருடாகிய அமெரிக்க 'கெலன்கெல்லர்' என்னும் பெண்மணி அறிவறிந்து செய்த ஆள்வினையால் பல்கலைக்கழகப் பட்டங்கள் பல பெற்றவர்.

இங்ஙனம் மனித சமுதாயம் முழுவதற்கும் வாழும் வழிகாட்டுவதே வள்ளுவம் ! ஊக்கமுடைமை, மடியின்மை, இடுக்கணழியாமை, ஆள்வினையுடைமை ஆகிய நான்கதிகாரங்களையும் படித்துப் பின்பற்றும் எந்த மனிதனும் வாழ்க்கையில் முன்னேறியே தீருவான்.

செயல்திறன் :

மேலும் பழியின்றி முன்னேறுவதற்கு வினைத்திட்பம், வினைத்தூய்மை, தெரிந்து செயல்வகை, தெரிந்துதெளிதல் முதலிய அதிகாரங்கள் சிறந்த வழிகாட்டிகளாகும்.

ஆராய்ந்து நல்ல தொழிலைத் தேர்ந்தபின் அத்தொழிலை வெற்றிகரமாக முடிக்கவும் மேலும் மேலும் முன்னேறவும் தெரிந்து தெளிதல் என்னும் அதிகாரம் நல்ல வழிகாட்டியாகும். மேற்கொண்ட தொழிலுக்கு உதவியாளைத் தேர்வதாயினும், பொதுத்தேர்தலில் நல்ல வேட்பாளரைத் தேர்ந்தெடுப்பதாயினும் தக்காரை அறிவது எப்படி ?

உலகம் இருமை மயமானது. இரவு, பகல் – மேடு, பள்ளம் – ஆண், பெண் – நன்மை, தீமை – இங்ஙனம் இருமை மயமான உலகில் ஒவ்வொரு மனிதனிடமும் குணமும் குற்றமும் கலந்தே இருக்கும். நல்லவரை அறிவது எப்படி ?

"குணம்நாடிக் குற்றமும் நாடி அவற்றுள்
மிகைநாடி மிக்க கொளல்"

என்னும் குறள் நல்லவரைத் தேர்ந்தெடுப்பதற்கு நல்ல வழிகாட்டியாக உதவுகிறது. ஒருவனிடமுள்ள குணத்தையும் குற்றத்தையும் தனித்தனியாக ஆராய்ந்து, குணம் மிகுதியாகவும் குற்றம் குறைவாகவும் இருந்தால் நல்லவனாகக் கருதலாம். குற்றம் மிகுதியாகவும் குணம் குறைவாகவும் இருந்தால் தீயவனென்று ஒதுக்கிவிட வேண்டும்.

இப்படி ஆராயாமல் தீயவனை – குற்றம் மிகுதியானவனைத் தேர்ந்தெடுத்தால், நம்பித் தேர்ந்தெடுத்தவனுக்கு மட்டுமல்ல, அவன் பரம்பரைக்கும் நீங்காத துன்பமே உண்டாகும்.

தேரான் பிறனைத் தெளிந்தான் வழிமுறை
தீரா இடும்பை தரும். (குறள் 508)

ஆராய்ந்து தக்கவரைத் தேர்ந்தெடுத்தபின், அவர்மீது ஐயங்கொண்டால், அவரது ஊக்கமும் செயல்பாடும் குன்றி நீங்காத் துன்பத்தையே உண்டாக்கும்.

தேரான் தெளிவும் தெளிந்தான்கண் ஐயுறவும்
தீரா இடும்பை தரும். (குறள் 510)

'தெரிந்து தெளிதல்' என்னும் அதிகாரத்தில் வரும் இக்குறள்களோடு, தெரிந்து வினையாடல் என்னும் அதிகாரத்தில் வரும் சில குறள்களும் தொழில் வெற்றிக்கும் முன்னேற்றத்திற்கும் மிக முக்கியமானவை. தக்கவனைத் தேர்ந்தெடுத்துச் செயலை ஒப்படைத்தபின், அவனை மேலும் மேலும் தகுதியுடையவனாக உயர்த்த வேண்டும்.

இதனை இதனால் இவன்முடிக்கும் என்றாய்ந்து
அதனை அவன்கண் விடல். (குறள் 517)

வினைக்குரிமை நாடிய பின்றை அவனை
அதற்குரிய னாகச் செயல் (குறள் 518)

என்னும் குறட்பாக்கள் தொழில்முன்னேற்றத்திற்கு எவ்வளவு சிறந்த வழிகாட்டுகின்றன.

மிக எளிய குடும்பத்தில் பிறந்து சிறுவயதிலேயே தந்தையை இழந்துவிட்ட வி.ஜி.பி. உடன்பிறப்பாளர்சள் உலகில் தலைசிறந்த தொழிலதிபர்களாகவும் செல்வர்களாகவும் முன்னேறியதற்கு மேற்கூறிய சில குறட்பாக்கள் சிறந்த வழிகாட்டிகளாக இருந்தன என்று அவர்களே கூறுவர். தொழில்துறைக்கு மட்டுமன்று, மேலதிகாரிகள் கீழதிகாரிகளைத் தேர்வதற்கும், செயல்பாட்டிற்கும் ஆட்சித் துறையினருக்கும் நல்ல வழிகாட்டிகளாகும்.

இங்ஙனம் எல்லாத் துறையினருக்கும் எல்லாவகைகளிலும் பேருதவியாக இருக்கும் திருக்குறள் காட்டும் வாழ்வியல் நெறிகளைப் பின்பற்றி முன்னேறுவோமாக.

ஓங்குக வள்ளுவம் ! வாழ்க வையகம்!

9. பெங்கலான்உலு

எனைத்தானும் நல்லவை கேட்க அனைத்தானும்
ஆன்ற பெருமை தரும். (குறள் 416)

எந்த அளவாயினும் நல்லறிஞர்களின் சொற்பொழிவுகளைக் கேட்க வேண்டும். கேட்குமளவுக்கு மிக்க பெருமையைத் தரும்.

'பெங்கலான்உலு' என்னும் நகரிலுள்ள ம. த. நெ. கழகத்தின் கிளைக்கழகத்தார் தமிழறிஞர்களின் சொற்பொழிவு கேட்பதிலும், பொதுப்பணியிலும் ஆர்வம் மிக்கவர். பெங்கலான்உலு கிளையின் பொதுச்செயலர் திரு பழ. வீரர். திரு மு. தமிழ்வாணர் செயலர். திரு மு. அருளரசு (சின்ன கருப்பர்) துணைச் செயலர்; நடுவண்செயற்குழு உறுப்பினர். மன்னர் துணைத்தலைவர். திரு வடிவேலு பொருளாளர்.

கிளைக்கழகத்தின் பணிகள் :

தமிழ்ப்பள்ளியில் மாணவர்களைச் சேர்க்கவேண்டுமென வீடவீடாகச் சென்று பரப்புரை செய்வது, தமிழ்ப்பள்ளி



மாணவர்களுக்குத் தேர்வு அணியப்பயிற்சிகள் நடத்துவது, திருக்குறள் முற்றோதுதல் நடத்துவது, ஈழ அகதிகளுக்கு உதவிகள் செய்வது, தமிழ்நெறி சார்ந்த விழாக்கள் நடத்துவது, பிறர் நடத்துவதற்கு ஒத்துழைப்பது முதலிய பணிகளைக் கிளைக்கழகத்தினர் தொடர்ந்து செய்துவருகின்றனர்.

19-12-99 அன்று, எங்களைப் பெங்கலான்உலுவுக்கு அழைத்துச் சென்றனர். தலைவர், பொதுச்செயலர், செயலர், துணைச்செயலர், பொருளாளர் முதலியோர் திரண்டு எங்களை வரவேற்று பொதுச்செயலர் இல்லத்திற்கு அழைத்துச் சென்றனர்.

கலைக்குடும்பம் :

நீதிமன்றத்தில் மொழிபெயர்ப்பாளராகப் பணியாற்றும் பொதுச்செயலர் திரு பழ. வீரர் குடும்பத்தில் தமிழ்மணம் வீசுகிறது. இல்லத்தின் பெயர் தமிழ்ப்பொழில். மனைவியின் பெயர் கலைச்செல்வி (இலீலாவதி) மக்களின் பெயர்கள் பூங்குன்றன், பூங்குழலி, பூம்பொழிலன், பூஞ்செல்வன், பூந்தென்றல், பூங்கனி, பூந்தளிர். இங்ஙனம் தமிழ்மணம் வீசும் பெயர்களுடைய மக்கள் எழுவரும் 500க்கு மேற்பட்ட குறள்கள் மனனம் செய்துள்ளனர். ஒவ்வொருவரிடம் ஒவ்வொரு வகையான திறன்மிக்கிருக்கிறது. சொற்பொழிவு, இசை, நடனம், நடிப்பு முதலிய திறன்களைக் காட்டி எங்களை மகிழ்வித்தனர். மதிய உணவு சுவையான அறுசுவை விருந்தாக வழங்கப்பெற்றது. பிற்பகல் ஓய்வுக்குப்பிறகு மாலையில் கூட்டம் நடக்கும் மண்டபத்திற்கு எங்களை அழைத்துச் சென்றனர்.

திருக்குறள் பற்று :

மண்டபம் நிறையக் கூட்டம் நிறைந்திருந்தது. முதலில் என்னைச் சொற்பொழிவாற்றச் சொல்லினர். அன்று நான் சீவகசிந்தாமணிக் காப்பியம் பற்றிப் பேசும் திட்டத்தில் சென்றேன். எவ்வளவு நேரம் பேசலாம் என்று கேட்டேன். சிலப்பதிகார மாநாட்டு மலரில் 'திருக்குறள் மூதறிஞர்' என்று என் பெயர் விளம்பரமாகியிருந்ததால், திருக்குறள் பற்றியே ஒரு மணிநேரம் பேசுங்கள் என்றனர். முதல்நாள் பாரிட்புந்தார் கிளையில் என் திருக்குறள் சொற்பொழிவு கேட்ட அறிஞர்கள் இருவர் உடனிருப்பதால், திருக்குறள் வாழ்வியல் நெறிகள் பற்றி முதல் நாள் கூறாமல் விடுபட்ட குறட்பாக்களுக்கு ஒரு மணிநேரம் விளக்கம் கூறினேன். அனைவரும் திருக்குறள் விளக்கம் விரும்பிக் கேட்டனர். பழ. வீரா் மகன் பூங்குன்றன், தயாளன், ஆறுமுகம் மதலிய இளைஞர்கள் முன் வரிசையிலமர்ந்து மிக ஆர்வமுடன் சுவைத்துக் கேட்டு மகிழ்ந்தனர். இவர்கள் கூட்டம் முடிந்தபின்பும், என்னிடம் சில விளக்கங்கள் கேட்டு மகிழ்ந்து அன்பளிப்பு கொடுத்துதவினர். நான் தமிழகம் திரும்பி வந்தபிறகும் வீ. பூங்குன்றன் எனக்குத் தொடர்ந்து மடல் எழுதிக்கொண்டும் திருக்குறள் விளக்கம் கேட்டுக்கொண்டும் உள்ளார்.

எனக்குப் பிறகு ஏனைய அறிஞர்கள், அவர்கள் திறமையைக் காட்டி அவையோரை மகிழ்வித்தனர். வழக்கம்போல் இறுதியாகத் திருமுருகனாரின் குழலிசையில் அனைவரும் மூழ்கித் திளைத்தனர்.

அன்றிரவு துணைச்செயலா் திரு அருளரசு இல்லத்தில் சுவையான விருந்தளித்தனர். போகுமிடம் எல்லாம் அந்நாட்டுச் சூழலுக்கேற்ப அசைவ விருந்து அதிகமிருக்கும். நான் மட்டும் சைவ உணவு மட்டுமே அருந்திவந்தேன். நீண்டநேர அளவளாவலுக்குப் பிறகு நாங்கள் விடைபெற்றபொழுது, அக்குடும்பப் பெண்கள் என்னிடம் அதிக மரியாதை காட்டினர். பாரிட்புந்தாரிலும் திருமுருகையா் குடும்பப் பெண்கள் இங்ஙனமே சிறப்பித்தனர். என் திருக்குறள் பொழிவும், சைவ உணவுநெறியும் பெண்களை மிகவும் கவா்ந்துள்ளன. அவர்கள் செய்த சிறப்பும் மரியாதையும் தெய்வப்புலவர் திருவள்ளுவரையும், மனிதநேய மாண்புமிக்க திருக்குறளையுமே சாரும்.

இரவு தங்கும் விடுதியில், பதனக் குடுவையில் (பிளாஃஸ்க்) இருந்த வெந்நீரைக் கவனக்குறைவாக நான் பயன்படுத்த தொடங்கியபொழுது, உதட்டில்பட்ட உடன் சூடு மிகுதியால் துப்பிவிட்டேன். கீழுதடு நன்றாகச் சுடப்பட்டு கொப்புளம் போட்டுவிட்டது. மறுநாள் பொதுச்செயலரும் செயலரும் மருத்துவரிடம் அழைத்துச் சென்று ஊசி போடச்செய்து, உதட்டில் தடவும் மருந்தும் வாங்கிக் கொடுத்தனர். ஆயினும் உதட்டுப் புண் ஆறுவதற்குப் பத்து நாட்களுக்குமேல் ஆகிவிட்டது. நாக்கு பாதிக்கப்படாமல் தப்பியதால், என் சொற்பொழிவு நிகழ்ச்சிகள் தடையின்றி நடைபெற்றன.

20-12-99 அன்று மாலை ஈப்போ நகரில் நிகழ்ச்சியாதலால், அனைவரும் எங்களைப் பாராட்டி ஈப்போ நகருக்கு வழியனுப்பி வைத்தனர். இவர்கள் தமிழகத்திற்கும் எங்கள் பேரவைக்கும் வந்த நிகழ்ச்சிகளைப் பின்னர் தனியே எழுதுவேன்,

10. ஈப்போ

"பெண்ணடிமை தீருமட்டும் மண்ணடிமை தீராது"
– பாவேந்தர்

இனிய பயணம் :

மலேசியாவின் மேற்குப் பகுதியில் உள்ள ஈப்போப்பயணம் மிக இனிமையாக இருந்தது. எங்களுக்கு வழிகாட்டியாக வந்த புலவர் தமிழரசு பெங்கலான்உலுவில் தங்கிவிட்டதால், முன்னிருக்கையில் முனைவர் மு.பி.பா, அமர்ந்து கொள்ள, பின்னிருக்கையில் நாங்கள் மூவரும் வசதியாக அமர்ந்து கொண்டோம். இயற்கைக் காட்சிகளைச் சுவைத்துக் கொண்டும் இனிய தமிழில் அளவளாவிக் கொண்டும் இனிமையாகப் பயணம் செய்தோம், இப்பகுதியில் செம்பனைத் தோட்டத்தோடு, இரப்பர்மரத் தோட்டங்களையும் ஆங்காங்குக் காண முடிந்தது. ஓரிடத்தில் வண்டியை நிறுத்திவிட்டு இரப்பர் மரத் தோட்டத்திற்குள் சென்று இரப்பர் பால் வடித்தெடுக்கப்படும் முறையைக் கண்டறிந்தோம்.

தமிழ்மணம் :

ஈப்போ நகரின் கம்பார் குடியிருப்புப் பகுதியில் வாழும் தமிழறிஞர் வீ. குப்புசாமி தமது வசதியான பெரிய காருடன் பேருந்து நிலையத்திற்கு வந்து எங்களை வரவேற்று அவருடைய காரில் அழைத்துச் சென்றார்.

அவர் மனைவி திருமதி திருமேனி, மக்கள் அன்புமொழி, அறவாழி, அறிவழகன், அல்லி, அருள்மணி ஆகியோர் அன்புடன் வரவேற்றனர். மனைவி மக்களின் பெயர்களில் மட்டுமன்று. தமிழ் இலக்கிய, இலக்கண நூல்கள் நிறைந்த நூலகத்தால் இல்லம் முழுவதும் தமிழ் மணம் கமழ்ந்தது.

'கனிமொழி' என்னும் புனைபெயருடைய குப்புசாமி வாரந்தோறும் இலக்கிய இலக்கண வகுப்புகளும் நடத்தித் தமிழ்ப்பணியாற்றுபவராக இருந்தார். மதியம் சுவையான விருந்தளித்துச் சிறப்பித்தனர்.

தலைப்பும் ஏமாற்றமும் :

பாரிட்புந்தாரிலும், பெங்கலான்உலுவிலும் திருக்குறள் பற்றியே பேசச்சொல்லி விரும்பிக் கேட்டதால், ஈப்போவிலும் திருக்குறள் விளக்கமே விரும்புவரெனக் கருதி, தொடர்ந்து என்னுடன் வரும் அறிஞர்களுக்குச் சலிப்பு ஏற்படாமலிருக்க, முதலிரு நாட்களும் பேசாத திருக்குறள் கருத்துகளை முதல்நாளிரவே தொகுத்து வைத்திருந்தேன். ஆனால் மதிய உணவருந்தும்போது, குப்புசாமியார், பாவேந்தர் மன்றம் சார்பாக விழா நடைபெறுகிறது. ஆதலால் பாவேந்தரைப் பற்றியே நீங்கள் பேசுங்கள் என்று கூறினார். எனவே உணவுக்குப் பிறகு தக்க ஓய்வெடுக்காமல், பாண்டியன் பரிசு காப்பியம் பற்றி ஒருமணி நேரம் பேசுவதற்குக் குறிப்புத் தயார் செய்தேன்.

மாலை 6 மணிக்குத் தமிழவேள் மண்டபத்தில் கூட்டம் தொடங்கியது. ஏனைய ஊர்களைவிட அங்குக் குறைவான கூட்டமே. இருந்த கூட்டத்தில் ஆண்களைவிடப் பெண்கள் மிகுதியாக இருக்கக் கண்டு வியந்தேன். தமிழ்நாட்டு இலக்கியக் கூட்டங்களில் பெண்க்ளைக் காண்பது அரிதாக இருக்குமே! திரு வீ. குப்புசாமியார் தலைமையில், திருமதி திருமேனி குப்புசாமி அம்மையாரின் இனிய குரலோடு கூடிய தமிழ்த்தாய் வாழ்த்துப் பாட்டுடன் கூட்டம் தொடங்கியது.

ஏமாற்றமும் மனவேதனையும் :

முதலில் இசையறிஞர் திருமுருகனாரும், இரண்டாவதாக யானும், இறுதியில் முனைவர் மு.பி. பாலசுப்ரமணியரும் பேச நிகழ்ச்சியமைத்திருந்தனர். திருமுருகனார் பேசிக்கொண்டிருக்கும்பொழுதே, மு.பி.பா. ஏதோ தலைவர் குப்புசாமியிடம் கூற, அவர் என்னிடம் "இருபது நிமிடத்திற்குள் தங்கள் சொற்பொழிவு இருக்கவேண்டும்" என்று கூறினார். எனக்கு முன்னும் பின்னும் பேசுபவர்களுக்குக் காலக்கட்டுப்பாடு விதிக்காமல், இடையில் பேசும் எனக்கு மட்டும் காலக்கட்டுப்பாடு விதித்தது ஏன்? என்று எண்ணி வருந்தினேன். என் தன்மானம் பாதிக்கப்பட்டதாகக் கருதி இரவு உணவருந்தக் கூடாது என்றும் முடிவு செய்தேன். நான் பேச எழுந்தவுடன், அவை வணக்கம் கூறி, "பெண்ணடிமை தீருமட்டும் பேசும் திருநாட்டு மண்ணடிமை தீராது" என்று பாவேந்தர் பாடியதற்கேற்பப் பெண்கள் மிகுதியாக வந்திருப்பது கண்டு மகிழ்கிறேன். பாவேந்தரின் பாண்டியன் பரிசுக் காப்பியம் பற்றிப் பேசப் போகின்றேன். இருபது மணித்துளிக்குள் முடிக்கவேண்டுமெனத் தலைவர் கூறியுள்ளார். அக்காப்பியத்தைப் படித்துச் சுவைத்தோர் அவையில் இருந்தால் என் பணி எளிதாகி விடும். படித்துச் சுவைத்தோரோ, கதையை மட்டுமாவது அறிந்தோரோ அவையில் இருந்தால் கை தூக்குங்கள் என்றேன். ஒருவரும் கை தூக்கவில்லை. எனவே, கதைச் சுருக்கம் கூறுவதற்குப் பத்து மணித்துளியும் பாநயம் விளக்குவதற்கு இருபது மணித்துளியும் எடுத்துக் கொண்டு முப்பது மணித்துளியில் முடித்தேன். எனக்குப்பிறகு பேசிய மு.பி.பா. அவர்களுக்குக் காலக் கட்டுப்பாடு விதிக்கவில்லை.

கூட்டம் முடிந்தபிறகு எனக்கு மட்டும் ஏன் காலக் கட்டுப்பாடு விதித்தீர்கள்? என்று தலைவரைக் கேட்டேன். "அவர்கள் பெயர்கள் மட்டுந்தான் அழைப்பிதழில் போடப்பட்டுள்ளது. தங்கள் பெயர் விளம்பரம் செய்யப்படவில்லை" என்றார். மதியம் "பாவேந்தரைப் பற்றிப் பேசுங்கள்" என்று சொல்லும்போதே இந்த விவரமும் சொல்லியிருக்க வேண்டுமல்லவா? என்று கேட்டேன். எனக்கு ஏற்பட்ட நிலை மற்றவர்களுக்கு ஏற்படக்கூடாதென்பதற்காக இவ்விளக்கம் எழுதினேன்.

இரவு விருந்து :

தமிழ்ப்புரவலர் கூத்தரசர் இல்லத்தில் இரவு விருந்து நடைபெற்றது. அங்கு என் மனக்கருத்தை வெளிப்படுத்தாமல் "வயிறு சரியில்லை ; ஆதலால் உணவு வேண்டாம்" என்றேன். "சிறிதாவது அருந்துங்கள்" என்றனர். விருந்தளிப்போர் உள்ளம் வருந்தக் கூடாது என்பதற்காக இரசம் உணவு மட்டும் அருந்தினேன்.

கூத்தரசர் உதவி :

என் விமானப் பயணச்சீட்டில் முதலில் குறித்திருந்தபடி திசம்பர் 25 இரவு சென்னைக்குத் திரும்புவதாக, சென்னையிலுள்ள என் மூத்த மகன் திருவள்ளுவனுக்கு மடல் வரைந்திருந்தேன். 1-1-2000 அன்று இரவுதான் திரும்பமுடியும் என முடிவான பிறகு, 25-12-99க்குள் வெளிநாட்டுக்கு மடல் போக வாய்ப்பின்மையால், தொலைபேசிமூலம் தெரிவிக்க இருமுறை முயன்று முடியாமல், கூத்தரசர் இல்லத்தில் முயன்று செய்தி தெரிவித்தேன். வெளிநாட்டிற்குத் தொலைபேசிக் கட்டணம் மிகுதியாகையால் கட்டணம் கொடுக்க முயன்றேன். திரு. கூத்தரசர் வேண்டாம் என மறுத்து விட்டார். அது எனக்குப் பேருதவியாகவும் இருந்தது.

அன்றிரவு திரு வீ. குப்புசாமி, தமிழ்மணம் கமழும் அவரில்லத்தில் தங்க வைத்து, மறுநாள் அவருடைய வசதியான மூடுந்திலேயே (VAN) எங்களைக் கோலாலும்பூருக்கு அழைத்துச் சென்றார். செல்லும் வழியில், ஈப்போ நகரில் உள்ள மலையைச் சார்ந்த புத்தர் கோயிலுக்கு அழைத்துச் சென்றார்.

இயற்கையும் செயற்கையும் :

மலையடிவாரத்தில் மலையைக் குடைந்து சீனர்களால் உருவாக்கப்பட்ட புத்தர் கோயிலுக்குச் சென்றோம். பெருமளவில் மலைய்க குடைந்து குகைக்கோயிலாகவும், திறந்த வெளியில் கலையழகுடன் கட்டப்பட்டக் கட்டிடக் கோயிலாகவும் உள்ளன. நான்கு பக்கமும் மலை சூழ்ந்த பள்ளத்தாக்கில் உள்ள பெரும்குளங்களில் முதலைப்பண்ணை, ஆமைப்பண்ணை முதலியன உள்ளன. இயற்கையும் செயற்கையும் கூடிக் குலாவும் அருமையான காட்சிகள்.

கோயில் வளாகத்தில் கோயிலுக்குப் பின்புறம் இறந்தோர் உடலை எரிக்கும் பெரிய கூடம் உள்ளது. ஒரே சமயத்தில் பல பிணங்களையெரிக்கும் பெரிய அடுப்புகள் பல இருந்தன. ஏராளமான விறகுக் குவியல். நாங்கள் சென்றபோது இரண்டு பிணங்கள் எரிந்துகொண்டிருந்தன. உறவினர்கள், சீனமுறைப்படிச் சடங்குகளும் வழிபாடும் நடத்தினர். இறந்தோர் பயன்படுத்திய பொருள்கள் யாவும் அங்குக் கொண்டுவந்து குவிக்கப்பட்டிருந்தன. சீனர்களின் சில பழக்கவழக்கங்களை அங்கு அறியமுடிந்தது. அங்கிருந்த பல்வேறு காட்சிகளைக் கண்டு சுவைத்துவிட்டுக் கோலாலம்பூருக்குப் புறப்பட்டோம். அங்குப் போய்ச் சேரும்வரை மலேசியத் தமிழர்களின் தமிழ்ப்பணி, தமிழ்ப்புலமை முதலியவற்றில் சிலவற்றைச் சுவைப்போம்.

11. தமிழ்ப்பயிற்சியும் எழுச்சியும்

“எங்கள் வாழ்வும் எங்கள் வளமும்
மங்காத தமிழென்று சங்கே முழங்கு”
– பாவேந்தர்

கம்பார் குப்புசாமி நடத்திய தமிழ்யாப்பிலக்கணப்பயிற்சி வகுப்பில் ஏராளமான மாணவமாணவிகள் சேர்ந்து பெரும்பயன் பெற்றனர். “தமிழ்யாப்பிலக்கணம் பயிற்சிப் பாடங்கள்” என்னும் நூலின் அட்டையில் உள்ள பாடல் :

மழையின்றேல் உயிரில்லை
மொழியின்றேல் இனமில்லை
இனத்தின் உயிராய் இருப்பது மொழியே
இனத்தைக் காத்திட மொழியைக் காத்திடு.
மொழியைக் காப்பது என்பது
மொழியின் பெருமை அறிதலும்
மொழியில் புலமை பெறுதலும்
மொழியால் புதுமை படைத்தலுமே.
காலந் தவறாமை, கைவிடாமுயற்சி
ஞாலத்தில் வெற்றியை நாட்டிடும் வழிகளாம்.

இந்நூலின் உள்ளே பாவேந்தர் பாரதிதாசர் பாடல்களே எடுத்துக்காட்டுகளுக்குப் பயன்படுத்தப்பட்டுள்ளன.

எழுச்சி :

யாப்பிலக்கணப் பயிற்சி பெற்ற மாணவ மாணவிகள் பாடிய பாடல்கள், கம்பார், "கனிமொழி"யால் 'எழுச்சி' யென்னும் தலைப்பில் தொகுக்கப்பெற்றுள்ளன.

அவற்றுள் சில பாடல்கள் :

எழுந்திடு! தமிழனே எழுந்திடு!

ஞானஜோதி(கிண்டாவேலி, பத்துக்காஜா)

எழுந்திடு தமிழனே எழுந்திடு – நீ
எழுச்சியை வாழ்க்கையில் நாட்டிட
எழுந்திடு தமிழனே எழுந்திடு

உறங்கிடும் உறவுத்தமிழனை – நீ
உசிப்பி எழுப்பிட எழுந்திடு
அருந்தமிழ் மறவனே எழுந்திடு – பகுத்
தறிவை வளர்த்திட எழுந்திடு
– எழுந்திடு தமிழனே எழுந்திடு!

அஞ்சி வாழாதே தமிழனே – நீ
அடங்கி முடங்காதே தமிழனே
கெஞ்சிக் கேட்காதே தமிழனே – பிறர்
கேலிக்கு ஆளாகாதே தமிழனே
– எழுந்திடு தமிழனே எழுந்திடு!

அறியாமை அகற்றிடு தமிழனே – மன
ஆற்றலைப் பெருக்கிடு தமிழனே
உரிமைக்குப் போராடு தமிழனே – நீ
உண்மைக்குத் தொண்டாற்றுத் தமிழனே.
– எழுந்திடு தமிழனே எழுந்திடு!

மற்றவர் மதித்திட தமிழனே – தன்
மானத்தோடு வாழ்ந்திடு தமிழனே
கற்றுச் சிறந்திடு தமிழனே – உயர்
கலைகளில் தேர்ந்திடு தமிழனே.

நல்லவனாக வாழ்ந்திடு

திருமேனி (கம்பார்)

நாடும் வீடும் உன்னைப் போற்ற – தம்பி
நல்லவனாக வாழ்ந்திடு
பாடுபட்டு உழைத்திடு – நீ
பகுத்தறிவோடு செயல்படு.
நல்லவர் நட்பை நாடிடு – நீ
நலமே வாழ்வில் பெற்றிடு.
பொல்லா நட்பைத் தள்ளிடு – நீ
புதுமையை வாழ்வில் கண்டிடு
அன்பாய் என்றும் வாழ்ந்திடு – நீ
அன்னையின் பாதம் பணிந்திடு
பண்பைப் பெற்று வாழ்ந்திடு – நீ
படிக்கும் அறிவை வளர்த்திடு.
தந்தை சொல்லைக் கேட்டிடு – நீ
தன்மானத்துடனே வாழ்ந்திடு
சிந்தனை உணர்வை வளர்த்திடு – நீ
சீர்திருத்தம் வாழ்க்கையில் கொண்டிடு
உண்மையை என்றும் பேசிடு – நீ
ஒழுக்கத்தை உயிராய்க் காத்திடு
வன்மையை என்றும் ஓட்டிடு – நீ
வல்லமை பெற்று வாழ்ந்திடு

வாசிப்பு ஒருகலை

செ.பெரியண்ணன் (சிப்பாங்)

1. வாசிப்ப தென்பதொரு கலையாகும் – அதை
வளர்த்துக் கொள்வது இன்பமாகும்
வாசிப்பு என்பது இல்லையேல் – மக்கள்
வாழ்வில் வருவது துன்பமாகும்

2. அகந்தை அகற்றிடும் வாசிப்பு – பகுத்
தறிவை வளர்த்திடும் வாசிப்பு
அகத்தைத் தூய்மை யாக்கி – மன
ஆற்றலைப் பெருக்கிடும் வாசிப்பு

3. வாசி வாசி சிவாயநம வெனவாசி – உன்
வாழ்நாள் ஏற்றமுறு மெனவாசி
யோசி யோசி முன்னோர் சொன்னதை – யோசி
நேசி நேசி உள்ளத்தால் அதைநேசி

4. திருக்குறள் கற்பது சிறப்பு – அதைச்
சிந்தித்திட வந்திடும் வியப்பு
திருக்குறளுக் குண்டோ மறுப்பு – குறளைத்
தினங்கற்றிட வந்திடும் பொறுப்பு

தாய்மொழிப் பெயர்

நடராசன் (கோலாலம்பூர்)

1. அழைக்கும் பெயரைக் கொண்டு
அதிர்ஷ்டம் வருமென்று எண்ணித்தாய்
மொழிக்குள் அடங்காச் சொல்லில் – நாம்
மோகம் கொள்வது முறையோ ?

2. எண்கள் என்ன செய்யும்
எண்ணத்தில் துணிவு இருந்தால்
விண்ணில் உள்ள கிரகம் – உன்
வீட்டுக்கு வந்தா வாழ்த்தும் ?

3. இறைவன் பெயரை வைத்தால், நம்
எண்ணம் மகிழும் சரிதான்
அரிய அப்பெயரைச் சூட்டி – பிள்ளையை
அதட்டி அழைத்தல் முறையோ ?

4. திரைக்கூத்தர் திறமையை வியந்துஅதைச்
செப்பி மகிழ்தல் இயல்பே
திரைக்கூத்தர் பெயரைச் சூட்டி – நம்
செந்தமிழப் பெருமையை அழிப்பதோ ?

5. தேன்தமிழ் மொழியில் கோடி
சிந்தைக் கினிய பெயரிருக்க
ஏன்தான் வேற்றுப் பெயர்சூட்டி – நம்
இனத்தின் மானத்தை இகழ்வதோ ?

மே தினம்

இரா. செ. ஆறுமுகம் (கோலாலம்பூர்)

1. உழைப்பவர் மகிழும் பெருநாள் மேதினம் – தொழிலாளர்
ஒற்றுமையைக் காட்டும் திருநாள் மேதினம்
களைப்பினை மறக்கும் திருநாள் மேதினம் – நல்ல
கருத்துகள் பரவும் பெருநாள் மேதினம்

2. மொழிஇனம் நாடு கடந்தது மேதினம் – தொழிலாளர்
முன்னேற வழிதனைக் காட்டியது மேதினம்
மலைபோன்ற எதிர்ப்பை மண்ணாக்கியது மேதினம் – தொழிலாளர்
மதிப்பை உயர்த்திக் காட்டியது மேதினம்

3. விலையில்லாத் தொழிலாளர் நலத்தினைப் பாடுவோம் – அவர்
வருத்தமில்லா வாழ்வுக்கு மருந்தொன்று காணுவோம்
பிழையில்லாத் தொழிலாளர் பெருமையினைப் பாடுவோம் – அவர்
பேருளின் உதவியால் பிழைக்கும் வாழ்வு எண்ணுவோம்

12. ம.த.நெ.கழகத்தாரின் கருத்துரைகளில் சில

"நாடும் மொழியும் நமதிரு கண்கள்"
புலவர் இரா. திருமாவளவன்
(ம.த.நெ.கழகத்தின் தேசியத்தலைவர்)

தைப்பிங் நகரில், நடைபெற்ற நாம் தமிழர், நம் மறை திருக்குறள் பரப்புரை நிகழ்வில் தமிழர் வாழ்வும் வரலாறும் என்னும் தலைப்பில் ஆற்றிய உரை. பாரிட்புந்தார் கிளை 1997 இல் வெளியிட்ட மலரிலிருந்து தொகுக்கப் பெற்றது.

"மாந்தன் தொடர்புகளுக்காக மொழியை உருவாக்கினான். அந்த மொழிவழியாகப் பண்பாட்டுக் கூறுகளை வளர்த்துக் கொண்டான். மொழியென்பது ஓரினத்தின் மனமாகவும் ஓரினத்தின் அடிப்படைக் கூறுகளை விளக்கிக் காட்டவல்ல ஒன்றாகவும் கொள்ளப்படுகிறது".

தமிழ்மொழியின் தோற்றம் என்பது இன்றைக்கு 50,000 ஆண்டுகட்கு முந்தையது. 25,000 ஆண்டுகளில் இலக்கியமும், பின் இலக்கணமும் உருவாக்கப்பட்டன என்று கூறுவார் மொழிஞாயிறு தேவநேயப்பாவாணர் அவர்கள். அலை கடற்கோள்களாலும் ஆரியச் சூழ்ச்சியினாலும் நமது மக்களால் 'மோட்சம்' என்ற பெயரில் அழிந்து போயின. இன்று தொகை நூல்கள் போக, நமக்கிருக்கும் ஒரே பழைமையான நூல் தொல்காப்பியம் மட்டுமே.

ஐந்திரம், இந்திரன் போன்ற சொற்களுக்குப் பல்வேறு விளக்கங்கள் கூறப்படுகின்றன. ஐந்து திறப்பாடுகளை நிலம், நீர், தீ, காற்று, விசும்பு எனும் பூதவியல் தன்மைகளால் எழுந்த மன உணர்வுகளை மெய், வாய், கண், மூக்கு, செவி வழி கண்டு கேட்டு உண்டு உயிர்த்தும் மாந்தவியல் தன்மைகளையும் எழுச்சிகளையும் விளக்கியெழுதப்பட்ட வாழ்வியல் வரலாற்று இலக்கிய இலக்கண நூலே ஐந்திரம் எனப்படுவது.

இந்த ஐந்து திறங்களையும் உணர்ந்து செயல்பட்டவன்தான் இந்திரன் என்பான். தமிழியம் காட்டும் இந்திரன் வேறு புராணம் காட்டும் இந்திரன் வேறு.

'நிறைமொழி மாந்தர் ஆணையிற்கிளந்த மறைமொழிதானே மந்திரம் என்ப' என்பது தொல்காப்பியம். அதைத்தான் திருவள்ளுவரும், 'ஐந்தவித்தான் ஆற்றல் அகல் விசும்புளார் கோமான் இந்திரனே காலும் கரி' என்றார்.

தமிழரின் வாழ்வு எது? பண்பாடு எது? தமிழரின் நாகரிகம் எது? என்பவற்றைத் தெளிவாகக் காட்டுவது திருக்குறள்தான். அது எக்காலத்தும் எல்லா மாந்தருக்கும் பொருந்துவதேயாகும். சிலர் ஒழுக்கம் கெட்டு வாழ்கிறார்கள் என்பதற்காக, ஒழுக்கம் கெடக் கூடாது என்னும் பொதுவறத்தை நாம் மீற முடியுமா? நாம் ஒழுக்கமுடைமையையும் வள்ளுவத்தையும் போற்றி வாழ வேண்டும்.

க. முருகையன்
(தேசியப் பொருளாளர், பாரிட்புந்தார் கிளையின் தலைவர்)

'நடப்புச் சிக்கலும் நலம் தரும் தீர்வும்' என்னும் தலைப்பில் ஆற்றிய உரை :

மலேசியாவில் தமிழினத்தை எடுத்துக் கொண்டால், தொடும் ஒவ்வொரு துறையும் சிக்கலுடையதாகத்தான் இருக்கிறது. தாய்மொழியுணர்வு அறவே அற்றவனாகத்தான் இருக்கின்றான். மொழி அழிந்தால் இனம் அழியும் இனம் அழிந்தால் சமயம் அழியும் பின் பண்பாடு, வாழ்க்கை நெறிமுறை அனைத்துமே அழிந்து போகும்.

நம்மினத்தின் இளைஞரிடையே குண்டர்தனம் எப்படி வந்தது? 30, 40 ஆண்டுகளுக்கு முன்பே பெற்றோரும் சமுதாயமும் அந்த இளைஞர்களைச் சரியாக வழிநடத்த தவறியதால் வந்த நிலை, முறையாக வழிகாட்டியிருந்தால் இன்று நம் இளம்பெண்கள் வங்காள தேசத்து இளைஞரிடம் சிக்கிச் சீரழிந்து போவார்களா?

'எண்ணம் போல் வாழ்வு! எண்ணம் போல் தாழ்வு!' நமதெண்ணம் சீரடைந்தால் ஒழிய இனம் ஏற்றம் பெற வழியில்லை – என்று சீர்செய்யும் வழிமுறைகளையும் முருகையன் கூறினார்.

இரா. திருச்செல்வம்
(ம.தமிழ் நெறிக்கழகத்தின் தேசியப் பொதுச் செயலாளர்) :

பாரிட்புந்தார் கிளையின், திருக்குறள் காட்டும் வாழ்க்கை நெறித் தொடர்கூட்டத்தில் அன்புடைமை அதிகாரம் பற்றிய சொற்பொழிவின் சுருக்கம் :

மாந்தர் வாழ்வில் பல உடைமைகள் உண்டு. அவற்றில் தலையாய உடைமைகளில் ஒன்றாக இருப்பது அன்பு என்கின்ற உடைமையாகும். அன்பு என்கின்ற ஒன்று மாந்தரினத்தில் சிறப்பாகப் பேசப்பட்டாலும் மற்ற உயிர்களிடத்திலும் அன்புடைமை இருப்பதைப் பார்க்க முடியும். அந்த அளவிற்கு அன்புடைமை அத்தனை உயிர்களிடத்திலும் உட்பொருளாய் – ஊடகமாய் இருப்பதைக் காண முடியும். அத்தகைய சிறப்புக்குரிய அன்புடைமை இல்லையென்றால் அகிலமில்லை என்று கூறிய அவர், இல்வாழ்க்கை நிலைப்பதற்கும், மக்கட்பேறு மாண்புடையதாவதற்கும், நட்பு சிறப்பதற்கும், சுற்றம், தெளிந்த உறவினர் (தென்புலத்தார்) வாழ்வாங்கு வாழ்பவர்(தெய்வம்) விருந்தினர் என்ற உறவுகள் வளர்வதற்கும், வாழ்வதற்கும், உலகம் தழைப்பதற்கும் இப்படி நன்மைகள் நடப்பதற்கு மட்டும் அன்புடைமை காரணமாகாமல் மற (வீர)ப் பணிகள் நடப்பதற்கும் கூட அன்புடைமையே காரணமாகின்றது.

எனவே அன்புடைமையின் சிறப்புப் பற்றியும், அன்புடைமையின் ஆக்கம் பற்றியும் அன்புடைமையின் ஆழம் பற்றியும் வள்ளுவப் பேராசான் இவ்வதிகாரத்தில் தெளிவுபடுத்தி, இனிவரும் அதிகாரங்களில் அவற்றை விரிவுபடுத்திச் செல்கிறார் – என்று கூறித் தமது ஒன்றரை மணி நேர உரையை நிறைவு செய்தார்.

– 'மலேசியநண்பன்' 7–3–96 இதழில் வந்த செய்தி.

13. பாசீர்பாஞ்சாரங்

பீலிபெய் சாகாடும் அச்சிறும் அப்பண்டம்
சால மிகுத்துப் பெயின் - குறள் 475

21-12-99 மாலை ஐந்து மணிக்குக் கோலாலம்பூரையடைந்து, தமிழ்ப்பண்பக அலுவலகத்திற்குச் சென்றோம். திருவாளர்கள் மணிவெள்ளையர், மாணிக்கம், மணியம், கா.ப.சாமி, திருமாவளவர் ஆகியோர் எங்களை வரவேற்று, அருகிலுள்ள இராஜ் உணவு விடுதிக்கு அழைத்துச் சென்றனர். அனைவரும் சிற்றுண்டி அருந்திய பின்னர், திரு. வீ. குப்புசாமி விடைபெற்று ஈப்போ திரும்பினார்.

திரு. அருள்தாசு, என்னை மீண்டும் சிரம்பானுக்கு அழைத்துச் செல்ல அன்று மாலை வருவதாகக் கூறியிருந்தார். ஆயினும் அன்று வர இயலவில்லை.

22-12-99 மாலை, திருவாளர்கள் அருள்தாசும் சரோஜாவும் தமிழ்ப்பண்பகத்திற்கு வந்து, அவர்கள் காரில் என்னைச் சிரம்பனுக்கு அழைத்துச் சென்றனர். சிரம்பானுக்குச் சென்ற உடன் முதலில் புலவர் பழனியாண்டி இல்லத்திற்குச் சென்று நலம் விசாரித்து விட்டு, பாசீர்பாஞ்சாங்கில் கூட்டம் உள்ளது வருகிறீர்களா ? என்று அருள்தாசு கேட்டார். முக்கிய அலுவல் இருப்பதாகப் பழனியாண்டி கூறிவிட்டார். அருள்தாசு இல்லத்திற்குச் சென்ற உடன் மீண்டும் பயணம் தொடங்கி, இரவு 10 மணிக்குப் போர்டிக்சன் வட்டத்தைச் சேர்ந்த பாசீர்பாஞ்சாங்கை அடைந்தோம். ஒரு தோட்டப் பகுதியில் இருந்த அருள்தாசு மைத்துனர் ஜயரஜா இல்லம் சென்றோம். அந்த நேரத்தில் தோட்டத் தொழிலாளிகள், நண்பர்கள், உறவினர்களாக ஐம்பதின்மர் எங்கள் வருகைக்காகக் காத்திருந்து எங்களை வரவேற்றனர்.

சரோஜாவின் பெற்றோர் பெருமாள் மாரியாயி ஆகியோர் என்னைக் கைகுலுக்கி வரவேற்று, அவர்களுக்கு ஏற்கனவே அறிமுகமான என் கொழுந்தியார் ஜான்சியின் நலம் விசாரித்தபின், தொழிலாளர் ஒற்றுமைபற்றிப் பேசச் சொன்னார்கள்.

திருக்குறள் கருத்துகளை அறிந்தாலே ஒற்றுமையேற்படும் என்று கூறி, திருக்குறள் காட்டும் வாழ்வியல் நெறிகளைக் கூறி, மெல்லிய மயிலிறகு மூலம் வான்புகழ் வள்ளுவர் ஒற்றுமையை விளக்கும் மாண்பைத் தெளிவுபடுத்திய விதம் :

மெல்லிய மயிலிறகைக் கட்டுக்கட்டாகக் கட்டி, அளவுக்குமேல் வண்டியில் ஏற்றினால், வண்டியின் வலிய அச்சும் முறித்துவிடும்.

பீலிபெய் சாகாடும் அச்சிறும், அப்பண்டம்
சால மிகுத்துப் பெயின்

என்னும் குறட்பா வலியவர்களுக்கும் எளியவர்களுக்கும் வாழ்வு நெறியை உணர்த்துகிறது.

வலியவர்க்கு :

வலியவர் எளிய பலரைப் பகைத்துக் கொண்டால், பலரும் ஒன்றுகூடி வலியவரை வென்றுவிடுவர். ஆதலால் வலியவர் பலைரப் பகைத்துக் கொள்ளக்கூடாது. எவ்வளவு வலியவரும், தம் ஆற்றலுக்கு மிஞ்சிய பல செயல்களை ஒரே சமயத்தில் மேற்கொண்டாலும் தோல்வியும் அழிவுமே காண்பர். ஆதலால் எத்தகைய வலியவரும் தம் ஆற்றலுக்கு மிஞ்சிய செயலைச் செய்யக் கூடாது.

எளியவர்க்கு :

எளியவர்கள் யாவரும் ஒற்றுமையாக இருந்து செயல்பட்டால் எளிதாக வலியவரை வெல்லலாம். பல எளியவர்கள் ஒன்றுகூடி அரும்பெரும் செயல்களைச் செய்து முடிக்கலாம். தொழிலாளர் ஒற்றுமையால் உரிய உரிமைகளைப் பெறலாம்! வாழ்வில் உயரலாம்! கூட்டுறவே நாட்டுயர்வு.

ஒன்றுபட்டாலுண்டு வாழ்வு – நம்மில்
ஒற்றுமை நீங்கினால் அனைவர்க்கும் தாழ்வே

என்று பாடினார் பாரதியார். இவ்வளவு கருத்தையும் மெல்லிய மயிலிறகால் வலிய வண்டியச்சை முறித்துக் காட்டுவதன் மூலம் தெய்வப்புலவர் திருவள்ளுவர் விளக்குகிறார்.

எனவே அனைவரும் திருக்குறளைக் கற்று, அதன்படி வாழ்ந்து வாழ்க்கையில் உயரவேண்டும். ஓங்குக வள்ளுவம்! வாழ்க வையகம்! என்று கூறி முடித்தேன். அனைவரும் மகிழ்ந்து பாராட்டி நன்றிகூறி விடைபெற்றனர்.

இரவு 12 மணிக்கு உணவருந்தி நன்றி நவின்று விடைபெற்றுப் பின்னிரவு ஒரு மணிக்குச் சிரம்பானில் உள்ள சரோஜா அருள்தாசு இல்லம் அடைந்தோம்.

23-12-99 அன்றும் என்னை விருந்தினனாக அருள்தாசு தம்பதியர் அவர்கள் இல்லத்தில் தங்க வைத்துக் கொண்டனர். சிரம்பானில் வாழும் ஜான்சியின் மற்றொரு தோழியான சரசுவதியையும் அங்கு வரவழைத்து அறிமுகம் செய்து அளவளாவச் செய்தனர்.

ஆசிரியை அறிமுகம் :

அவர்கள் தெருவில் குடியிருக்கும் தெரசா என்னும் ஒய்வுபெற்ற ஆசிரியை இல்லத்திற்கு அழைத்துச் சென்று, சரோஜா அறிமுகம் செய்துவைத்தார். ஆசிரியை தெரசா திருச்சியில் பிறந்து வளர்ந்து, மணப்பாறையில் ஆசிரியையாகச் சிறிதுகாலம் பணியாற்றி, 1949இல் குடும்பத்துடன் மலேசியாவிற்குச் சென்று பலபகுதிகளில் 34 ஆண்டுக்காலம் தமிழ்பயிற்றுவிக்கும் ஆசிரியையாகப் பணியாற்றி ஒய்வுபெற்றுச் சிரம்பானில் வாழும் தம் அனுபவங்களைக் கூறினார். திருக்குறளில் பல விளக்கங்கள் கேட்டு மகிழ்ந்தார். அவர் அண்ணன் மகள் பியா என்பவர் திருச்சிப் புனித சிலுவைக் கல்லூரியில் பேராசிரியையாகப் பணியாற்றுவதாகவும் கூறினார்.

தொடக்கப்பள்ளி :

அன்று மாலை உலாவச் சென்ற பொழுது, மலாய்க்காரர்களுக்கு என்றமைந்த ஒரு தொடக்கப்பள்ளியைக் கண்டு வியந்தேன். தமிழ்நாட்டுக் கல்லூரி போன்ற மாடிக்கட்டிடம்! பரந்த இடப்பரப்பு! ஒவ்வொரு மாணவருக்கும் தனித்தனி நாற்காலியும் கைம்மேடை (மேசை)யும் உள்ளன. தமிழகத்தில் பல மேனிலைப்பள்ளிகளில் மரத்தடி வகுப்பு நடப்பதைப் பார்த்திருந்த எனக்கு மலாய்க்காரர்களின் தொடக்கப்பள்ளி வசதி பெரும் வியப்பையே அளித்தது.

அதே சாலையில் மற்றொரு கோடியில் இருந்த பெரிய, மகா மாரியம்மன் கோயில் ஒன்று திருப்பணி நடந்து கொண்டிருந்தது. பளிங்குத்தரை, பெரிய மண்டபம், தூய்மை, தமிழகத்துக் கலைநுணுக்கம் வாய்ந்த சுதை வேலைப்பாடு முதலியன மனதைக் கவர்ந்தன. தமிழர் வாழுமிடமெல்லாம் மகா மாரியம்மன் கோயிலும் முருகன் கோயிலும் தவறாமல் உள்ளன.

அன்றிரவு, அருள்தாசு, அவருடைய உறவினர் இல்லத்திற்கு அழைத்துச் சென்று அறிமுகம் செய்துவைத்தார். அவ்வில்லத்திலிருந்த சிறியவர்களும் பெரியவர்களும் திருக்குறள் விளக்கம் கேட்டு மகிழ்ந்தனர்.

24-12-99 காலை பசியாறியபிறகு, அருள்தாசு அவர் காரிலேயே அழைத்துச் சென்று காலை 10 மணிக்குக் கோலாலம்பூர்த் தமிழ்ப் பண்பகத்தில் என்னைவிட்டு அடுத்த வாரம் சந்திப்பதாகக் கூறி விடைபெற்றார்.

14. பத்துத் தீகா

தந்தை மகற்காற்றும் நன்றி அவையத்து
முந்தி யிருப்பச் செயல் - குறள் 67

24-12-99 மாலை பத்துத்தீகா என்னும் ஊரில் தமிழ் எழுச்சிக் கருத்தரங்கக் கூட்டம் ஏற்பாடு செய்திருந்தனர்.

நாங்கள் ஈப்போவிலிருந்து வருவதற்கு முன் புலவர் தமிழமல்லர் புதுவைக்குத் திரும்பி விட்டார். சிரம்பானிலிருந்து நான் வருவதற்கு முன் திருமுருகனார் குடும்பம் சிங்கப்பூர்க்குச் சென்றுவிட்டது.

புலவர் திருமாவளவர் என்னையும், மு.பி.பா., பாவலர் கதிர் முத்தையன், புலவர் ஆ. குப்புசாமி ஆகியோரையும் திரு க. மாணிக்கம் காரில் அழைத்துச் சென்றார். ஒரு தோட்டப்பகுதியிலுள்ள கிளான்மேரித் தமிழ்ப்பள்ளியில் கூட்டம் நடப்பதாக இருந்தது. நாங்கள் சென்று அரைமணி நேரங்கழித்துத்தான் கூட்டம் கூடத் தொடங்கியது.

திருக்குறளறிஞர் அருள்முனைவரும் வந்திருந்தார். இவர் மலேசியத் தமிழ் நெறிக் கழகத்தின் தேசியத்துணைத்தலைவர். திருக்குறளில் அதிக ஈடுபாடு கொண்டவர்.

புலவர் திருமாவளவர் திருக்குறளை இசையுடன் ஓதி எங்களை அறிமுகம் செய்து வைத்தார். ஓரிளைஞர் பரதநாட்டியம் ஆடி அனைவரையும் மகிழ்வித்தார். நான் அவரைப் பாராட்டி, திருவள்ளுவரும் பன்னாட்டறிஞர்களும் என்னும் என் நூலைப் பரிசாகக் கொடுத்தேன்.

பாவலர் கதிர்முத்தையனும் புலவர் ஆ. குப்புசாமியும் தமிழர் வாழ்வியலில் தமிழ் என்னும் தலைப்பில் பேசினர்.

திருக்குறள் நெறியில் மக்கள் வளர்ப்பு என்னும் தலைப்பில் நான் பேசவேண்டும் என்றனர். நான், பதினாறுவகைச் செல்வங்களுக்கும் மேலான செவிச்செல்வத்தின் சிறப்பைக்கூறி, அதற்காகக் குழுமியுள்ள நீங்கள் காலங்கடந்து கூடியதால், நாங்கள் எங்கள் பேச்சைச் சுருக்கிக் கொள்ள வேண்டியுள்ளது. அடுத்த கூட்டத்திலிருந்து நீங்கள் உரிய காலத்தில் கூடவேண்டும் எனக் கூறி, மிகச் சிறந்த பேறாகிய நன்மக்கட்பேறு அடைவதற்குரிய வழிவகைகளை விளக்கி, தந்தையின் கடமை, மக்களின் கடமை, தாயின் மகிழ்ச்சி முதலியவற்றைத் திருக்குறள் நெறியில் விளக்கிப் பேசினேன்.

நான்கு வயதிற்குள் திருக்குறள் முழுதும் மனனம் செய்து, இந்தியா முழுதும் இலங்கையிலும் திருக்குறள் கவனகம் நடத்திச் சிறப்புப் பெற்றுள்ள திருக்குறள் அரசன் திருமூலநாதன், திருக்குறள் அரசி பிரதீபா முதலியோர் திறன்களை விளக்கி மாணவச் செல்வங்களுக்கும் பெற்றோர்களுக்கும் பயன்படும் கருத்துக்களை விளக்கினேன்.

முடிவில், புதிதாகத் தொடங்கப் பெற்ற மன்றத்திற்கு பெயர் சூட்டும்படி திருமாவளவர் கூறினார். தமிழகத்தில் செயல்படும் திருக்குறள் பேரவைகளின் சிறப்பையும் பணிகளையும் கூறி, அம்மன்றத்திற்கும் திருக்குறள் பேரவை என்றே பெயர் சூட்டினேன்.

எனக்குப் பிறகு முனைவர் மு.பி.பா. தமிழ்வழிச் சிந்தனைகளை விளக்கிப் பேசினார்.

15. மாணவர் பண்பாட்டு விழா

(பத்துமலை)

25–12–99 முற்பகல், ம.த.நெ.கழகத்தின் சார்பாக மாணவர் பண்பாட்டுவிழா பத்துமலை அடிவாரத்திலுள்ள தமிழர் குடியிருப்பு மண்டபத்தில் தமிழ்நெறித் தென்றல் மு. மணிவெள்ளையன் தலைமையில் நடைபெறப் புலவர் திருமாவளவர் ஏற்பாடு செய்திருந்தார்.

பெங்கலான் உலு கிளைக்கழகத்தைச் சேர்ந்தவர்கள் நீண்ட தொலைவிலிருந்து குடும்பத்துடன் வந்திருந்தனர். மாணவச் செல்வங்கள் ஒன்று திரண்டு திருக்குறள் இசையுடன் ஓதும் நிகழ்ச்சியை சிறப்பாக நடத்தினர். பெங்கலான் உலு கிளைத்தலைவர் பழ. வீரனின் மக்களாகிய பூங்குன்றன், பூங்குழலி, பூம்பொழினன், பூஞ்செல்வன், பூந்தென்றல், பூங்கனி, பூந்தளிர் ஆகியோர் தங்கள் கலைத்திறமையைக் காட்டினர். ஏனைய மாணவச் செல்வங்களும், சொற்பொழிவு, இசை, பரதநாட்டியம் முதலிய முத்தமிழ்க் கலைநிகழ்ச்சிகளை நடத்தி அனைவரையும் மகிழ்வித்தனர்.

தலைவர் மணிவெள்ளையர் தமிழும் பண்பாடும் என்ற தலைப்பில் அருமையான பேருரையாற்றினார்.

மதநெறிப் பண்பாடு மனப்பக்குவத்தைத் தருவதாயினும், சிலர் பொதுமக்களை ஏமாற்றிப் பணம் பறிப்பது வருந்தத் தக்கதாகும்.

மொழிவழிப் பண்பாடு, சிறுவர் நீதிநூலாகிய ஆத்திசூடி முதல் அனைவரையும் வாழ்வாங்கு வாழ வைக்கும் திருக்குறள் வரைப் பல நீதிநூல்களால் மனித சமுதாயத்தை மேம்படுத்தக் கூடியது. அகப்பொருள் இலக்கியங்கள் காதல்நெறியுடன் பல்வகைப் பண்புகளையும், புறப்பொருள் இலக்கியங்கள் வரலாற்றுக் குறிப்புடன் பல்வகைப் பண்புகளையும் விளக்கிப் பண்படுத்துவதே மொழிவழிப்பண்பாடாகும் என்று கூறிப்பல்வகை மேற்கோள்களைக் காட்டி விளக்கினார். நான் (ஆ.வேஇரா) பாவலர் கதிர்முத்தையன், புலவர் குப்புசாமி ஆகியோர் திருக்குறள் நெறிகளைக் கூறி வாழ்த்துரை வழங்கினோம்.

முடிவில் மாணவச் செல்வங்களுக்குப் பரிசுப் பொருளும், சொற்பொழிவாளர்களாகிய எங்களுக்கு ம.த.நெ.கழகத்தின் பெயர் பொறிக்கப்பெற்ற பட்டயமும் வழங்கினர். பாரிட்புந்தார், பெங்கலான்உலு முதலிய ஊர்களிலும் நினைவுப்பட்டயம் வழங்கினர். அவையும், ம.த.பண்பாட்டியக்கம் வழங்கிய சான்றிதழும் எங்கள் இல்லத்தை அலங்கரிக்கும் நினைவுப்பொருள்களாக உள்ளன.

பத்துமலை :

கோலாலம்பூரில் பார்க்க வேண்டிய இடங்களில் ஒன்று பத்துமலை. அதிலுள்ள முருகன் கோயிலும் திருவள்ளுவர் கோட்டமும் முக்கியமானவை. அன்று மாலை, தமிழகம் செல்ல இருந்த சில அறிஞர்களுக்கு வழியனுப்புவிழா, தமிழ்ப்பண்பகத்தில் நடத்த வேண்டியிருந்ததால், மலைமேல் ஏறிப் பார்க்க நேரமில்லை. அதன்பிறகும் பார்க்கும் வாய்ப்பு நேரவில்லை. மலேசியா போகும் வாய்ப்பு நேராத தமிழகத்தமிழர் அறிவதற்காக, மூவேந்தர் முத்து எழுதிய நெஞ்சம் நிறைந்த மலேசியா என்னும் நூலிலிருந்து சில குறிப்புகள் தருகிறேன்.

ஈப்போ சாலையிலுள்ள பத்துமலை கல்குகைகளைக் கொண்டுள்ளது. BATU CAVES என்பர். BATU – கல். CAVES – குகைகள், என்பதைப் பத்தாக்கி, பத்துமலையென்று தமிழர் வழங்குகின்றனர். தைப்பூசத்தன்று அங்குப் பெருங்கூட்டம் கூடும். துணைவன் திரைப்படத்தில், அங்கு நடைபெறும் தைப்பூசத் திருவிழாவைக் காட்டுவர்.

அமைப்பு :

மலையின் அடிவாரத்தில், கைவினைப் பொருட்காட்சி உள்ளது. சென்னையில் உள்ள காதிக் கிராமத்தொழில் பொருட்காட்சி போன்றது. எல்லாவகைப் பொருட்களும் விற்பனைக்கு உள்ளன.

பல ஆண்டுகளுக்கு முன் தமிழ்மாமுனிவர் குன்றக்குடி அடிகளார் அங்குச் சென்றிருந்த போது, மலையின் அடிவாரத்திலுள்ள ஒரு மண்டபத்தில் தங்கித் தமிழ்ப்பணியாற்றியுள்ளார். பகுத்தறிவோடும் தமிழின உணர்வோடும் பக்தியைப் பரப்பிய அடிகளாரின் இயல்பை அனைவரும் பாராட்டிப் பேசினர்.

மலைமேல் ஏறுவதற்கு 270 படிகள் உள்ளன. ஏறுவதற்கும் இறங்குவதற்கும் தனித்தனி வழிகள் உள்ளன. பழனிமலையில் உள்ளதுபோல் இழுவை இரயில் பெட்டியும் உள்ளது. வழியின் இருபக்கமும் பல்வகைக் கடைகள் உள்ளன.

மலையின் உச்சியில் இயற்கையாகவே அமைந்த குகைக்கோயில். தமிழ்க்கடவுள் முருகனுக்குகந்த இடம் மலைப்பகுதியாகிய குறிஞ்சி நிலந்தானே! இயற்கையான இந்த இடத்தைத் தேர்ந்தெடுத்த நம்மவரின் திறத்தைப் பாராட்ட வேண்டும். நகரத்தின் மையப்பகுதியில் உள்ள மகாமாரியம்மன் கோயிலின் நிர்வாகத்தில் இது உள்ளது.

மரங்களைச் செதுக்கியது போன்ற மலையின் தோற்றம்! நீண்டநேரம் பார்த்துச் சுவைப்பதற்குரிய இயற்கையழகு! உச்சிக்குச் சென்ற பிறகு இருபது படிகள் கீழே இறங்க வேண்டும். பெரிய பரப்பளவு கொண்ட குகையமைப்பு அங்குச் சென்றதும் இயற்கையே குளிர்சாதனம் செய்தது போன்ற இதமான பகுதி இன்பமாக இருக்கும். என்னே இயற்கையின் திருவிளையாடல்! அதைக் கண்டுபிடித்து உபயோகிக்கும் மனிதனின் ஆற்றல்!

கோயிலமைப்பு :

குகையின் மேற்குப் பகுதியில் மேடையமைத்துச் சிறிய கோயிலும் கட்டியுள்ளார்கள். உள்ளே முருகப்பெருமான் புன்முறுவல் தவழ நின்றுகொண்டுள்ளார். மின்சார விளக்குகள் ஒளிவீசிக் கொண்டுள்ளன. கலையம்சமும் இயற்கையழகும் பொருந்திய அந்த இடத்தை விட்டுக் கீழே இறங்கி வள்ளுவர் கோட்டம் காணச்செல்ல வேண்டும்.

வள்ளுவர் கோட்டம் :

அடிவாரத்தின் வலப்பக்கத்தில் உள்ள வள்ளுவர் கோட்டம் செல்லும் வழியில் உள்ள 100 மீட்டருக்குமேல் நீளமுள்ள பாலத்தைக் கடக்கவேண்டும். கீழே நீர்தேங்கியுள்ள பெரிய ஏரி போன்ற தோற்றம். பாலமும் கைப்பிடியும் சிறப்பாக அமைக்கப்பட்டுள்ளன. நிறைய பேர் ஒரே நேரத்தில் செல்லலாம். எதிர்க்கரையில் சாத்தனூர் அணைக்கட்டுப் பூங்காபோலப் பலவகைச் சிலைகள் உள்ள பூங்கா உள்ளது.

பாலத்தைத் தாண்டிக் கரையை அடைந்ததும் ஐம்பதடி தூரத்தில் வள்ளுவர்கோட்டம் செல்லும் குகை இருக்கிறது. ஒரு வெள்ளி கட்டணம் செலுத்தி உள்ளே செல்லவேண்டும். வண்ணக்குழல் விளக்கொளியும் இயற்கையாகக் குளிர்ச்சியும் பொருந்திய அழகிய இடம்! ஆங்காங்குத் தமிழர்கள் இருந்து தமிழிலேயே விளக்கம் தருவது மகிழ்ச்சியாக உள்ளது. சிறிது தூரம் சென்று வலப்பக்கம் திரும்பினால் எதிரே பெரிய உலக உருண்டை, அகரமுதல எழுத்தெல்லாம் ஆதி பகவன் முதற்றே உலகு என்னும் குறளுக்கு ஒப்ப அமைக்கப்பட்டுள்ளது. சங்கச் சான்றோரும், வள்ளலாரும், பாரதியார், பாரதிதாசன் போன்றோரும் குழுமியிருக்க நடுநாயகமாகத் தெய்வப்புலவர் திருவள்ளுவர் வீற்றிருக்கும் காட்சி கண்கொள்ளாக் காட்சியாகும். குறட்பாக்கள் தமிழிலேயே எழுதப்பட்டுள்ளன. ஒவ்வொரு சிலையும் நீண்டநேரம் பார்த்துச் சுவைக்கும் வண்ணம் சிறப்பாக அமைக்கப்பெற்றுள்ளன.

வள்ளுவர் கோட்டத்தின் பக்கத்தில் உள்ள கலைக்கூடத்தில், திருவருட்பா, திருவாசகம் முதலிய பாக்களைக் கற்களில் செதுக்கியுள்ளார்கள். உள்ளேபோகும்போது, மேலிருந்து நீர்கொட்டிக் கொண்டே உள்ளது. படிகளில் இறங்கிக் கீழே சென்றால் எதிர்வளாகத்தில் பெரிய அளவில் முருகப்பெருமான் ஓவியம் உள்ளது. பல்வகை ஆன்மிகக் காட்சிகளும், இலக்கியக் காட்சிகளும் ஓவிய வடிவில் திகழ்கின்றன. அங்கு வாழ்ந்து மறைந்த ஐந்துகால் மாட்டிற்கும் நினைவுச் சின்னம் எழுப்பியுள்ளனர்.

தமிழ்மணக்கும் மலேசியா என்னும் இந்நூலுக்கு 2001இல் கோலாலும்பூரிலேயே வெளியீட்டுவிழா நடத்தும் திட்டம் உள்ளது. அதற்குப் போகும்போது, பத்துமலை முருகன்கோயில், வள்ளுவர் கோட்டம் மற்றும் முதல்முறை பார்க்க முடியாத சில முக்கிய இடங்கள், சிங்கப்பூர் ஆகியவற்றைப் பார்த்து விடுவேன்.

வழியனுப்புவிழா :

25-12-99 அன்று இரவு தமிழகம் செல்ல இருந்த பாவலர் கதிர் முத்தையன், புலவர் ஆ.குப்புசாமி, புலவர் கா.ப.சாமி ஆகியோர்க்கு வழியனுப்புவிழா அன்று மாலை நான்கு மணிக்குத் தமிழ்ப் பண்பகத்தில் நடைபெற்றது.

கா.ப.சாமி :

சிலப்பதிகார மாநாட்டின் துணைத்தலைவராகிய புலவர் கா.ப.சாமி தமிழகத்தில் நாகை மாவட்டத்தில் பிறந்து வளர்ந்து படித்துவிட்டு இளமையிலேயே மலேசியாவில் குடியேறி, அங்குத் தமிழாசிரியராகப் பணியாற்றி ஓய்வு பெற்றவர். மலேசியாவின் புகழ் பெற்ற தமிழமைச்சர் டத்தோ சாமிவேலு இவருடைய மாணவராவார்.

இவர் சிறந்த கவிஞர் எழுத்தாளர் பன்னூலாசிரியர் தீவிரத் திராவிட இயக்கத்தவர் எப்பொழுதும் கருப்புத் துண்டுடன் காட்சியளிப்பவர். ம.த.ப.இயக்கம் நடத்தும் மாநாடுகளுக்கும் நிகழ்ச்சிகளுக்கும் பெரிதும் ஒத்துழைப்பவர். கா.ப.சாமி எழுதிய நூல்கள் – தமிழர் போர், நினைவில் நின்றவர்கள், தூது, காப்பியம் தந்த நினைவுகள், நெருப்பாற்றில் நீந்தியவர்கள், வரலாற்றில் தமிழகம் முதலியனவாகும். எண்பது வயதுக்கு மேலும் தமிழ்ப்பணியில் தளராதவர். இவர் தமிழகத்திலுள்ள தம் உறவினர்களைப் பார்ப்பதற்காக, உலகத் தமிழ்ப்பண்பாட்டியக்கத்தின் தமிழகக் கிளைத் தலைவராகிய பாவலர்கதிர் முத்தையருடனும் புலவர் குப்புசாமியுடனும் தமிழகம் புறப்பட்டார்.

ம.த.ப. இயக்கத்தின் தலைவர் ப.கு. சண்முகம். திருவாளர்கள் வேங்கடேசன், இராம. மாணிக்கம், கன்னல் மணியம், புலவர் திருமாவளவர் முதலியோர் திரு. மணிவெள்ளையர் தலைமையில் நடந்த வழியனுப்புவிழாவில் பங்குகொண்டனர். யானும் பங்குகொண்டேன். சுவையான சிற்றுண்டியருந்திய பிறகு, தமிழகம் செல்ல இருப்போரின் தமிழ்ப்பணிகளைப் பாராட்டிப் பேசிய பின் ஒவ்வொருவருக்கும் நினைவுப்பரிசு வழங்கப்பெற்றது. தமிழகம் செல்வோர் நன்றியுரை வழங்கினர். கா.ப.சாமி நன்றியுரையின்போது, மணிவெள்ளையரின் மாத்தமிழ்ப் பணிகளையும், தனக்குச் செய்த உதவிகளையும் மனமுருகப் பாராட்டிப் பேசினார். அனைவர் பேச்சும் பதிவு செய்யப் பெற்றது. நாங்கள் சிப்பாங் விமானநிலையம் சென்று வழியனுப்பி வைத்தோம்.

16. பாவலர் அ.பு. திருமாலனார்

செயற்கரிய செய்வார் பெரியர் சிறியர்
செயற்கரிய செய்கலா தார் - குறள் 26

என்னும் தமிழ் மறைக்கேற்ப, தமிழுக்கும், தமிழ்நெறிக்கும், தமிழினத்திற்கும் செயற்கரிய செய்த மலேசியப் பெரியார்களுள் ஒருவர் தமிழ்நெறிக் காவலர், மெய்ப்பொருளறிஞர் பாவலர் அ.பு.திருமாலனாராவார். அவருடைய வரலாற்றுச் சுருக்கத்தையும், செயற்கரும் செயல்கைளயும் இக்கட்டுரையில் காண்போம்.

பிறப்பும் வளர்ப்பும் :

பாவலர் திருமாலனார், கெலாமாவைச் சேர்ந்த ஒலிருட் தோட்டத்தில், 8-6-1931 திங்கட்கிழமையன்று, திருவாளர்கள் மு. அரிப்புத்திரனார் கி. அன்னபூரணி இணையரின் இரண்டாம் மகவாகத் தோன்றினார்.

மாலிய (வைணவ) மரபுப்படிப் பெற்றோர் நாராயணசாமி என்னும் பெயர் வைத்தனர். பிறகாலத்தில் தனித்தமிழ்ப்பற்றால் திருமாலன் எனத் தமிழ்ப் பெயராக்கிக் கொண்டார்.

பாவலரின் உடன்பிறந்தோர் தமக்கையார் வீரம்மாளும் தம்பி மணியனாரும் ஆவர்.

கலைக்குடும்பம் :

பாவலரின் குடும்பம் இசைத்தமிழும் நாடகத்தமிழும் வல்ல கலைக்குடும்பம். கருவிலே திருவுற்ற பாவலர் எட்டாம் வயதிலேயே இராமாயண மகாபாரதங்களை இசைகூட்டி கேட்டார்ப் பிணிக்கவும், கேளாரும் வேட்பவும் சொற்பொருள் விளங்கப் படிக்கும் திறம் பெற்றிருந்தார்.

படிப்பு :

ஒலிருட்டில் மூன்றாண்டுகளும் தைப்பிங்கில் இந்து வாலிபர் சங்கத்தமிழ்ப் பள்ளியில் ஏழாம் வகுப்பு வரையும் தமிழ்க் கல்வி கற்றார். ஆசிரியர் பயிற்சித் தேர்வில் சிறப்பு முதனிலைத் தேர்ச்சிபெற்றார்.

பணி :

பொதுவுடைமைக்காரர்களின் போர்க்களமாக இருந்த பகாங் மாநிலத்தில் அரசினர் பள்ளியில் ஆசிரியர் பணி கிடைத்தது. தாயாருக்கு விருப்பமின்மையால் பாவலர் அப்பணியை ஏற்கவில்லை. அவரின் முன்னாள் தலைமையாசிரியர் ஒருவர் நூறு வெள்ளி கொடுத்தால் ஆசிரியப்பணிக்கு ஏற்பாடு செய்வதாக பாவலரின் தாயாரிடம் தெரிவித்தார். பண்பாளராகிய பாவலர் என்னுடலில் உரமுண்டு உழைத்துண்பேன் கையூட்டுகொடேன்! என்று மறுத்துக் கூறி விட்டார்.

தமிழர்களின் துயர்களையெல்லாம் கண்டுகண்டு மனம் நைந்து, அவர்களின் துயர்களைத் தீர்க்க நல்ல வழிமுறைகளைத் தேடிய வண்ணமாக இருந்தார்.

சிறுசிறு பணிகள் செய்து குடும்பக் கடமையாற்றிக் கொண்டு ஓய்வு நேரங்களில் உயர்ந்த குறிக்கோளுடைய நூல்களை ஆராய்ந்த வண்ணம் இருந்தார்.

இறைவன் பெயரால் நடைபெறும் ஏமாற்று வேலைகளையும் மூடநம்பிக்கைகளையும் கண்டித்துப் பகுத்தறிவுப் பணியாற்றியதால், குமுகாயத்தில் எதிர்ப்பு நிறைந்தது.

பொதுவாழ்வு :

பகுத்தறிவு வழிப்பட்ட இறைமை நெறியினராக இருந்ததால் 1953 முதல் 1957 வரை, ஒலிருட் தோட்டத் தொழிற்சங்கத்தில் துணைத்தலைவராகப் பணியாற்றினார். தொழிலாளர் ஒற்றுமை, உரிமை, சாதியொழிப்பு, மூடநம்பிக்கையொழிப்பு, மதுவொழிப்பு முதலிய பணிகளாற்றினார்.

தான், தோட்டத் தொழிலாளியாகப் பணியாற்றிக் கொண்டே, தோட்டத் தொழிலாளர் நலத்திற்காக இடைவிடாது பாடுபட்டார்.

தமிழ்ப்பணி :

தமிழ்ச்சங்கம், தமிழிளைஞர் மணிமன்றம் போன்ற

தமிழமைப்புகளில் இணைந்தும், தனித்தும், பல தமிழியல் விழாக்களையும் நிகழ்வுகளையும் நடத்தியும் நடப்பித்தும் வந்துள்ளார்.

குமுகாய மறுமலர்ச்சி நோக்குடன், 1954ஆம் ஆண்டிலேயே தமிழ்த்திருமணம் ஒன்றை நடத்தி, தாலியின் சிறப்பை உள்ளடக்கிய தமது முதல் வாழ்த்துரையை வழங்கினார்.

திராவிடர் கழகத்தில் பலவேறு பொறுப்புகளை வகித்துப் பதின்மூன்றாண்டுகள் குமுகாயத் தொண்டுகளாற்றினார்.

தமிழ்நெறிக் கழகம் :

தனித்தமிழ்க்கொள்கையே தமிழர் உய்வதற்குள்ள ஒரே வழியெனத் தாம் கொண்டிருந்த உயிர்க் கொள்கையை முன்னிருத்தி மொழி – இனம் – சமயம் என்று முக்கூற்று விளக்கத்துடன் 1970ஆம் ஆண்டில் தமிழ்நெறிக் கழகத்தைத் தோற்றுவித்துத் தலைவராகி, மலேசியா முழுவதும் கிளைகள் தோன்றச் செய்தார்.

ம.த.நெ.கழகத்தின் நிறுவனரும் தேசியத் தலைவருமாகிய மெய்ப்பொருளறிஞர் பாவலர் அ.பு.திருமாலனார் மறைந்தபின், அவரின் மாணவரும், நாம் தமிழர், வழுவிலா வள்ளுவம் என்னும் நூல்களின் ஆசிரியருமாகிய புலவர் இரா.திருமாவளவர் தேசியத் தலைவராகவும், திருக்குறளறிஞர் இளம்பாரி தேசியத் துணைத்தலைவராகவும், ஆசிரியர் மு.தமிழரசு உதவித்தலைவராகவும், மு. தமிழ்வாணர் பொருளாளராகவும், பழ.வீரன் பொதுச் செயலாளராகவும் இருந்து மலேசியா முழுவதுமுள்ள ம.த.நெ.க. கிளைகளைச் சிறப்பாக இயக்கிவருகின்றனர்.

இசை–நாடகக்கலைப்பணி :

பாவலர் திருமாலனார், தைப்பிங் நகரில் தம் செவ்விசை, மெல்லிசை, நாடகக் கலைத்திறன்களை நன்கு வளர்த்துக் கொண்டார். அதனால் தாமே நாடகங்களை எழுதி இயக்கவும், பாடல்களைப் புணைந்து இசையமைக்கவும் வல்லவரானார்.

கலைப்பணியும் குமுகாயக் காப்புக்காகவே இயங்கியது. 1951இல் செலாமா தமிழ்ப்பள்ளிக் கட்டட நிதிக்காக பதிபக்தி என்னும் நாடகத்தையெழுதி – இயக்கி – இசையமைத்து – நடித்து நிதி திரட்டித் தந்தார். சுமார் பத்து நாடகங்கள் எழுதியுள்ளார். 300க்கு மேற்பட்ட பாடல்களை இயற்றியுள்ளார். பாடல்களுக்கு இசையமைத்துப் பாடுவதிலும், இசைக்கருவிகள் இயக்குவதிலும் வல்லவர். பொதுநிகழ்ச்சிகள், விழாக்கள், இல்ல நிகழ்ச்சிகள் முதலியவற்றில் இசைநிகழ்ச்சிகள் நடத்தியுள்ளார்.

இல்வாழ்க்கை :

22–10–1962இல் மீனாட்சியம்மையாரை வாழ்க்கைத் துணைவியாக ஏற்றார். அம்மையார், பாவலரின் பொதுப்பணிகளுக்கு உறுதுணையாக இருந்தார். அரிப்புத்திரன், அரியநாயகன் என்னும் ஆண்மக்கள் இருவரும், அன்பரசி, அன்புமலர் என்னும் பெண்மக்கள் இருவரும் உள்ளனர்.

இயல் – இலக்கியப்பணிகள் :

பள்ளிப்பருவத்திலேயே ஈரடிப்பாக்கள் இயற்றி ஈரடியார் எனப் போற்றப்பெற்றார். அரிய பெரிய கருத்துகளடங்கிய புதுக்குறள் ஐம்பது அதிகாரங்கள் இயற்றியுள்ளார். சான்றுக்கு ஒன்று

அன்பினால் ஆகும் அனைத்தும் அறிவென்னும்
ஆற்றல் துணைக்கு வரின்

பேராமாநில தமிழ் எழுத்தாளர் சங்கத்தில், பாவலர் பேசும்போது தாம் மற்ற எழுத்தாளர்களைப் போல் ஓர் எழுத்தாளரல்லரெனவும், தம் குமுகாயப் பணிக்குக் கைகண்ட கருவிகளில் ஒன்றாக எழுத்தைப் பயன்படுத்துவதாகவும், சுவைஞர்களுக்கு அவரவர்க்கேற்பச் சுவையறிந்து சுவையூட்டும் சுவைப்புக்களைத் தாம் தருவதில்லை எனவும் கூறித்தம் எழுத்து, குமுகாய மறுமலர்ச்சிக்கு மட்டுமே என்று உறுதிபடப் புலப்படுத்தினார். இஃது பாவலரின் உள்ளக்கிடக்கைகளையும் உயர்ந்த பண்பினையும் நாமறியச் செய்கிறது.

வெறும் பணத்திற்காகக் கொச்சைத் தமிழிலும் தமிங்கில நடையிலும் பாலுணர்வூட்டியும் வன்முறையைத் தூண்டியும் இளைய குமுகாயத்தைப் பாழ்படுத்தும் கதைகளையெழுதும் எழுத்தாளர்களும், ஆபாசக்காட்சிகளை மிகுதியாகக் காட்டும் சின்னதிரை பெரிய திரைக்காரர்களும் பாவலரின் பெரும்பண்பையுணர்ந்து திருந்தவேண்டும்.

படைப்புகள் :

பல்வேறு துறைகளைச் சேர்ந்த ஆய்வுக்கட்டுரைகள் பதினைந்து எழுதியுள்ளார். கலை, பண்பாடு, பொது எனப் பல்வேறு துறைப்பாக்கள் 200க்கு மேல் எழுதியுள்ளார். அருணகிரிநாதர் யாத்த வண்ண யாப்பில் தமிழைத் தலைமையாகக் கொண்டு திருவிசைப்பா என்னும் தலைப்பில் நூறு தனித்தமிழ் வண்ணங்களை இயற்றியுள்ளார்.

எழுதிய நூல்கள் :

கனல் (பாநூல்), இனப்பற்று (கட்டுரைநூல்) தமிழ்நெறிவிளக்கம் (பொழிவுநூல்), தேவையற்றது எழுத்துச்சீர்திருத்தம், தமிழர் சமயம், வள்ளலார் கண்ட தமிழர் சமயநெறி, புதுக்குறள், தமிழர் வாழ்வறத்தில் தாலி முதலிய நூல்கள் இயற்றியுள்ளார்.

எழுத்துப் பணியைப் பரப்பிய இதழ்கள் :

தமிழ்நேசன், தமிழ்மலர், தமிழ்ஓசை, தமிழ்நிலம், சங்கமணி, தென்மொழி, கொள்கைமுரசு முதலிய இதழ்கள் இவரது படைப்புகளை வெளியிட்டன.

பிற :

விழாமலர்கள், சிறப்பு வெளியீடுகள், பாவரங்குகள், ஆய்வரங்குகள் முதலியன.

பொறுப்புகள் :

த.நெ.க. தேசியத்தலைவர், தென்மொழிபுரப்பாசிரியர், தமிழ்நிலக் கண்ணிய உறுப்பாசிரியர்.

இங்ஙனம் மெய்ப்பொருளறிஞர் பாவலர் ஐயா திருமாலனார் தம்வாழ்வால், தமிழ்மறைப் பொருளாய், தமிழ்மெய் வாழ்வாய், வரலாறாய் உலகமெலாம் தொழுதேத்தித் தொடர்ந்துய்ய வாழ்வாங்கு வாழ்ந்து வானுறையும் தெய்வமாகியுள்ளார்.

முன்பே குறிப்பிட்ட வண்ணம் மேற்கண்ட இன்றைய பொறுப்பாளர்கள், மலேசியா முழுதும் பரவியுள்ள த.நெ.கழகக் கிளைகள் மூலம், தமிழ்ப்பணியும் திருக்குறள்பணியும் தமிழினப் பணியும் தளராதாற்றி வருகின்றனர்.

வெல்க தமிழ்! வாழ்க பாவலர் புகழ்!

தமிழர் வாழ்வறத்தில் தாலி

மெய்ப்பொருளறிஞர் பாவலர் திருமாலனார் எழுதிய தலைசிறந்த நூலான தமிழர் வாழ்வறத்தில் தாலி என்னும் நூலுக்கு, முதுபெரும் பாவலரும் பாவாணர் தமிழ்மன்றத்தின் ஆசிரியருமான செந்தமிழ்க் குறிஞ்சி சா.சி.குறிஞ்சிக்குமரனார் அளித்த விரிந்த அணிந்துரையின் ஒரு பகுதி:

மலையகத்தில் வாழ்ந்துறையும் தமிழினப்பாங்கில் செலாமா என்னும் சிற்றூரில் வாழ்வாற்றும் மலேசிய மாமூர் எனப் போற்றத்தகும் மெய்யுணர்வாளரும் தமிழிய முனைவரும், தமிழ்நெறிக்காவலரும் தமிழ்நெறிக்கழகத்தின் தனிப்பெருந்தலைவருமான பாவலர் அபு. திருமாலனார் அவர்கள் அஃகியகன்ற அறிவாண்மையால் எழுதியுள்ள தமிழர்வாழ்வறத்தில் தாலி என்னும் அரியதோர் ஆய்வுப்பனுவலைப் படித்தறியும் பேறுபெற்றேன். பெற்றதுடன் நூல் பற்றிய கருத்துரையும் எழுதப் பணிக்கப்பட்டுள்ளேன்.

நூலாசிரியர் பாவலர் திருமாலனாரின் ஆன்றொழுகும் ஆற்றல் பற்றி எடுத்து விளக்கப் புகின் அதுவே ஒரு நூலாகும். அத்துணைச் சிறப்பிற்குரிய செழுந்தமிழறிவராவர்.

ஆசிரியர் தாம் எடுத்துக்கொண்ட தமிழர் வாழ்வறத்தில் **தாலி என்னும் பொருளை நான்கு பகுப்புகளாக வகுத்து, வரலாற்றில் தாலி, கற்பியலில் தாலி, குடும்ப இயலில் தாலி,**

இறைமையியலில் தாலி பற்றிய செய்திகளைச் செறிந்த அகப்புறச் சான்றுகளுடன் தமிழர் வாழ்வியல் வரலாற்றையும் அதன் பாங்குபோங்குகளையும் செம்மாந்த நடையில் அறியக் காட்டும் செவ்வி அருமையுடையதாகும்.

தாலி தேவையன்று என்பார்க்கும் கற்பு என்பது என்ன என்பதை அறியாதார்க்கும் தக்க தடைவிடைகளால் தாலியின் தோற்ற வரலாற்றையும், அதன் மெய்ம்ம உருவினையும், தாலியின் இன்றியமையா உட்பொருளையும், கற்பின் பேரியல்பினையும் தெள்ளத்தெளியக் காட்டி நிறுவியுள்ளார் என்பதை நூல் முழுதும் ஆழ்ந்து கற்போர் அறிவார்கள்.

களவொழுக்கத்தில் இணைபூண்டொழுகிய தலைவனும் தலைவியும் உற்றார், உறவினர், ஊரார் அறிய மனையறம் நிகழ்த்தற்கு உரிமை செய்தளிக்கும் செயல்முறைகளே பண்டைத்தமிழர் கொண்டொழுகிய மணவிழாச் சடங்காகும். இதில், ஈகையரிய இழையணி மகளிர் என்ற அகநானூற்றுக் குறிப்பும், வால்இழை மகளிர் என்ற புறநானூற்றுத் தொடரும், மணமகளுக்கு மணமகன் மணக்குறியாகத் தாலி கட்டுவது தமிழரிடையே பண்டுதொட்டே இருந்து வரும் வழக்கு என்பது பெறப்படும். இந்நிலையினை மிகப்பலவாய சான்றுகளுடனும் காரணகாரிய விளக்கத்துடனும் சுட்டிச் செல்லும் சீர்மை ஒப்பிமகிழும் உயர் உடையதாகும்.

இக்கற்பியலின் பெரும்பரப்பினையெல்லாம் ஆசிரியர் நுண்மைசூழக் காட்டும் வேர்ச்சொல் விரிப்பும் – சொற்பொருள விளக்கமும் – மெய்ப்பொருள் ஆர்ப்பும் பொறியலர் காட்சியர்க்கன்றி, காழ்ப்புணர்ச்சியர்க்கும், நுனிப்புல் மேய்வார்க்கும் விளங்குதற்கரிதாமென அடங்கலுற்றிருத்தலைக் கண்டு தெளியலாம்.

இறுதியாக, தமிழர் வாழ்வறத்தில் தாலி எனும் இப்பனுவல் தமிழர் பண்பாட்டு விளக்கத்திற்கு ஓர் அணி கொழிக்கும் முத்திரையாகவும், தமிழர் மரபுநிலைக்கு ஒரு மெய்யூன்றிய

வித்தாகவும் அமைந்துள்ளதென்பதை உண்மைத்தமிழர் உணர்வர். தாலி நூல் தந்த மெய்யறிவர் திருமாலனாரைப் போற்றி அமைவல்.

இனி, நூலில் புகுந்து பாவலர் திருமாலனாரின் எழுத்தாற்றலுக்குச் சில சான்றுகள் காண்போம். (பக் 55)

இத்தகைய இழையணியைக் கழகக்கால மங்கலமகளிர் (குடும்பப்பெண்கள்) அணிந்திருந்தனர் என்பதற்குப் பல்வேறு சான்றுகள் உள்ளன. இங்கே ஒரு சிலவற்றைக் காண்போம்.

> புதல்வர் பயந்த திதலையவ் வயிற்று
> வாலிழை மகளிர் நால்வர் கூடி (அகம் 86)

பெருமழைப்புலவர் வாலிழை மகளிர் என்ற சொற்றொடருக்கு மங்கலநாண் உடைய மகளிர் என்று உரைவகுத்துள்ளார். அனைத்து உரையாசிரியர்களும் ஒருங்கே மங்கல அணி என்றே தெளிவாகப் பொருள் குறித்துச் சென்றுள்ளனர் என்பது ஈண்டு நினையத் தகும்.

> மழைபட்டன்ன மணன்மலி பந்தர்
> இழையணி சிறப்பின் பெயர்வியர்ப்பாற்றி (அகம் 136)

என்ற அகப்பாடல் வரிகளுக்கு உரையாசிரியர்கள் மழைபெய்தாற் போன்ற ஒலியையுடைய புதுமணல் மிக்க மணப்பந்தரிலே அணிகலன்களை அணிந்தமையால் உண்டான சிறப்பழகினோடு இவள் இயங்குதலால் உண்டான வியர்வையும் விசிறியால் ஆற்றி என்று உரைவகுத்துள்ளனர்.

ஆயினும் அப்பாடலுக்கு அவ்வாறு பொருள் கொள்ளாமல், மேற்கூறிய சான்றுகள் வழி இழையணி என்பது மங்கல அணியைக் குறிப்பதாக ஆகிறது. அவ்வழி பொருள் கொண்டு இந்தப் பாடலுக்கு மழைபெய்தாற் போன்ற மகிழ்ச்சி ஆரவாரம் மிக்க புதுமணல் பரப்பப்பட்ட பந்தலிலே இழையணியை அணிவிக்கின்ற (மங்கல அணியை அணிவிக்கின்ற) சிறப்பிற்குரிய திருமண வினைகளின் காரணமாகவும், மனத்தில் ஏற்படுகின்ற அச்சங்கலந்த நாணவுணர்வின் காரணமாகவும் இயல்பாக உண்டாகும் வியர்வையை விசிறிக் கொண்டு ஆற்றி என்று பொருள் கொள்வதே சாலவும் பொருத்தமாகின்றது.

தாலி – சொற்பொருள் விளக்கம் (பக் 64) :

ஞால் என்ற சொல் தொங்கு என்று பொருள்படும்

ஞாலுதல் – தொங்குதல்,

ஞாலம் – அந்தரத்தில் தொங்குவது போல் உள்ள உலகம்

ஞாய் – என்ற சொல் தாயைக் குறிக்கும்.

அது (ஞாய்) தாய் என்று திரிபு பெறும்

(ஞாய் – தாய் – அன்னை, ஈன்றவள்)

இவ்வாறே ஞால் என்ற சொல் தால் என்று திரிபு பெற்று உள்ளது. (ஞால் – தால்) தால் என்ற சொல்லும் தொங்குதல் என்னும் பொருளைத் தன்னுள் கொண்டதாகும். தால் + இ – தாலி என்று வரும். தாலி என்ற சொல் தொங்கும் பொருள் அல்லது தொங்குகின்ற பொருள் என்று பொருள்தரும் சொல்லாகும். நார், நூல், கொடி போன்ற ஏதாவதொன்றிலே கோத்து, தொங்குமாறு அணிகின்ற பொருளும் தாலி என்றே கூறப்படும். முன்பு கூறியுள்ளபடி புலிப்பல் கோத்த புலம்பு மணித்தாலி என்பது திருமணத்தின் போது ஆண்மையின் சின்னமாகிய மங்கல அணியுடன் நூலில் கோத்து கழுத்திலே நெஞ்சுவரை தொங்குமாறு கட்டப்படும். ஆதலால் மங்கல அணியும் தாலி என்றே பெயர்பெற்று வழங்கிவந்தது.

கற்பு – மெய்ப்பொருள் விளக்கம்

(பக் 83–86) :

இயற்கைக்கூறுகள் நிலம், நீர், தீ, வளி, விசும்பு என ஐம்பூதங்களாக விளங்குகின்றன. இவ்வைந்து பூதக்கூறுகளும் இயங்குநிலையில் இருகூறுகளாக அமைந்து இயங்குவதை நாம் மறந்துவிடக்கூடாது. இவ்விரு கூறுகளையும் அவற்றின் அடிப்படைத் தன்மைகளை வைத்து வெம்மை, தண்மை என்பர். **இவ்விரண்டும் குணங்களின் இயல்புக்கூறுகளாகும்.**

வெம்மை யெனில் வெப்பம் – சூடு எனப் பொருள்படும். இஃது இயக்க நிலையில் ஆற்றல் என உணரப்பெற்று, அதன் இருப்பியக்கமாக வீரம் என்ற குணத்துடன் மக்களுள் ஆண்மை என்ற இயல்பியக்கக் கூறாக விளங்கும்.

ஆண்மை என்பது வீரம் – ஆற்றல். வெப்பம் – வெம்மை. அறிவு எனும் கிளர்நிலைகளையுடையது. இஃது உயிர்மூலக்கூறு ஆகும். மேற்சொன்ன ஐம்பூத நிலையில் இருவிதக் கூறுபாட்டில் தண்மை (பெண்மை) எனில் குளிர் – குளிர்ச்சி எனப்பொருள்படும். இஃது இயக்கநிலையில் பொருள் என உணரப்பெற்று அதன் இருப்பியக்கமாக அன்பு என்ற குணத்துடன் மக்களுள் பெண்மை என்னும் இயல்பியக்கக் கூறாக விளங்கும்.

பெண்மை என்பது அன்பு – பொருள் – குளிர்ச்சி – தண்மையுணர்வு என்னும் கிளர்நிலைகளையுடையது. இஃது உடல்மூலக்கூறாகும்.

ஆண் – பெண் என உடலின் உறுப்புக்களின் வேறுபாட்டை வைத்தே எளிதாகக் கூறுகின்றனர். இஃது இவர்களின் புறத்தோற்ற வேறுபாட்டால் எளிதில் காணக்கூடியதாகும்.

அஃதாவது ஆண்மை – பெண்மை – புறத்தோற்றத்தில் ஆண் – பெண் என்ற உடல் வடிவ வேறுபாட்டைக் காண்பதுபோல், அகத்தியக்கம் ஆண்மை – பெண்மை எனவும் இயக்கக் குண இயல்பால் உணரப்பெறும்.

அணுவியல் தந்தை ஆல்பர்ட் ஐன்சுடின் அவர்களின் கோட்பாட்டின்படி பொருள் ஆற்றலாகவும், ஆற்றல் பொருளாகவும் உருவாகும். எனவே பொருள் – ஆற்றல். ஆற்றல் – பொருள் என பொருளில் ஆற்றலும், ஆற்றலில் பொருளும் இணைந்தே உள்ளன. அஃதாவது ஆற்றல்தான் பொருள். பொருள்தான் ஆற்றல். இஃது இறைமையின் இருவேறு இயக்கம். அவ்வாறே இயற்கையின் அஃதாவது இறைமையின் இவ்விருகூறுபாடுகளே வெம்மையும் தண்மையுமாய் இரண்டறக் கலந்து இயங்குதலும், ஆண்மையும் பெண்மையுமாய் ஒன்றுக்குள் ஒன்று கலந்து இயங்குதலும் இறைமையின் வெளிப்பாடாகும்.

எனவே இறைமையே அனைத்தும் என்னும் அடிப்படையில், இறைமையே வாழ்வென்றும், அவ்வாழ்வே மீமிசை வாழ்வாகிய சமய வாழ்வென்றும், அச்சமயம் என்பதே ஆண்மையும் பெண்மையும் கலந்து உருவாகும் மெய்வாழ்வியல் ஒழுக்கநெறியாகும். அவ்வொழுக்கியல் நெறியில் இருகூறுகளாக அமைவதே அகம் – புறம் என்றும், அகம் என்பதற்கு அன்பு, காதல் போன்ற கூறுகளின் இருப்பிடமாகிய பெண்மைக்குத் தலைமையும். புறம் என்பதற்கு வீரம் – வினையாற்றல் போன்ற கூறுகளின் இருப்பிடமாகிய ஆண்மைக்குத் தலைமையும் வகுத்து இவ்விரு கூறுகளையும் இணைத்துக் காண்பதே மீமிசை அல்லது வீட்டுப்பேற்றுக்கு அடியாக விளங்கும் துறவு என்பதையும், அத்துறவும் இல்லறத்தால் மலரவேண்டிய ஒன்றே என்பதையும் முறையாகத் தெளியக் கூறுவதே தமிழர்தம் இலக்கியச் செல்வங்களாகும் என்பதற்குச் சான்றாக வருவனவே கீழ்வரும் பாடல்களாகும்.

சக்தியும் சிவமும் ஆய தன்மையிவ்
வுலக மெல்லாம்
ஒத்தொவ்வா ஆணும் பெண்ணும்
உணர்குண குணியுமாகி
வைத்தனன் அவளால் வந்த
ஆக்கமிவ் வாழ்க்கை யெல்லாம்
இத்தையும் அறியார் பீட
இலிங்கத்தின் இயல்பும் ஓரார்

– சிவ ஞானசித்தி.

எழுத்தறிய தீரும் இழிதகைமை தீர்ந்தால்
மொழித்திறத்தின் முட்டறுப்பா னாகும் –
மொழித்திறத்தின்
முட்டறுத்த நல்லோன் முதனூற் பொருளுணர்ந்து
கட்டறுத்து வீடு பெறும். (பழம்பாடல்)

எனவே ஆண் பெண் என்னும் மக்களினத்தின் இவ்விருபால் கூறுபாடுகளும் இறைமையின் வடிவங்களாகவும்

அவ்வடிவங்கள்வழி ஆற்றல்களின் மூலமாகவும், அவ்வாற்றல் என்பது அணுவின் நிலையில் உள்ளது போன்ற இருவேறு தன்மையதாக, அஃதாவது நேர்மின் எதிர்மின் போன்று (POSITIVE, NEGATIVE) அறிவு, அன்பு, வெம்மை – தண்மை என்ற நிலையில் ஆற்றல் – பொருள் என்பதாக இறைமையின் இயக்கமாக விளங்குவதை உணர்ந்து தமிழர்கள் தங்களுக்குள் மெய்யறிவு வழிபாட்டில் மீமிசை உணர்வைக் கண்டனர்.

இனி ஆண்மையும் பெண்மையும் இயற்கை நிலையில் அமைந்துள்ள வகையைக் கீழ்வரும் வரைநிலை அமைப்பில் காண்க :

பொருட் கூறு	இயல்புக் கூறு	தன்மை	வெளிப்பாடு	சிறப்புக் கூறு	
ஆண்	ஆண்மை	வெம்மை	ஆற்றல்	சான்றாண்மை	இறைமை
பெண்	பெண்மை	தண்மை	பொருண்மை	கற்பு	

மாந்த நிலையில் இவ்விரு இயல்புக்கூறுகளும் அந்தந்த அகக் குண இயல்பில் முறைப்பட அமைகின்ற நிலையைத் தான் சான்றாண்மை என ஆண்மைக்குரிய சிறப்பியல்பாகவும், கற்பு, கற்புடைமை எனப் பெண்மைக்குரிய சிறப்பியல்பாகவும் முறைப்பட எண்ணித் திறம்பட வகுத்தனர். இந்நெறி தமிழினத்திற்கே உரிய தனிப்பெருநெறியாகும். அஃதாவது ஆண்மையின் பொருட்கூறு ஆண். இவ்வாண்மையின் தன்மை வெம்மை. இஃது ஆற்றலின் வெளிப்பாடு. உயிர் இங்குத் தானிருக்கிறது. பெண்மையின் பொருட்கூறு பெண். இப்பெண்மையின் தன்மை தண்மை (குளிர்ச்சி) இஃது பொருண்மையின் வெளிப்பாடு. இஃது உடல் இருக்குமிடம்.

இனி, இவ்வாண்மையும் பெண்மையும் ஒன்றுக்குள் ஒன்று விழுக்காட்டு நிலையில் கூடியும் குறைந்தும் சமப்பட்டும் (சரிநிகராக) அமைந்து, மக்களுள் வேறுபாட்டுத் தன்மையை விளக்கும். பின்வரும் வரைநிலைபடுத்தப்பட்ட அமைப்பில் காண்க.

ஆண்மை (வீரம்) ஆணுக்குள் பெண்மை விழுக்காட்டு நிலையில்		பெண்மை(அன்பு) பெண்ணுக்குள் ஆண்மை விழுக்காட்டு நிலையில்	
ஆண்மை (வீரம்)	பெண்மை (அன்பு)	பெண்மை (அன்பு)	ஆண்மை (வீரம்)
50%	50%	50%	50%
60%	40%	60%	40%
70%	30%	70%	30%
80%	20%	80%	20%
90%	10%	90%	10%
100%	--	100%	--

30 – 70 விழுக்காடாகக் கொண்டு பெண்தன்மை மிகுந்து பிறக்கும் ஆண்மை அலித்தன்மையுடையதாகவும், அதேபோல 30க்கு 70 விழுக்காடாக ஆண்தன்மை கொண்டு பிறக்கும் பெண்மை பெண்ணில் அலித்தன்மையுடையதாகவும், இவ்விரு தன்மைகளிலும் மேலும் நுண்ணுட்பிரிவுகள் அமைந்து பிறப்பதும் உண்டு.

தாலியின் சிறப்பும் மாண்பும் :

பாவலர் திருமாலனாரின் பாத்திறனுக்குச் சான்றாக த.வா.தாலி என்னும் நூலின் தொடக்கத்தில் உள்ள நான்கு விருத்தப்பாக்களைக் கீழே தருகிறேன்.

1. பலகோடி ஆண்டகவை பெற்றிருந்தும்
பழமைக்குப் புதுமையாய்ப் பொலிந்து நாளும்
நிலவென்னும் நங்கையோடு உடுக்கள் யாவும்
நீண்டபர வெளிதன்னில் உறவு கொண்டு

பலப்பலவாய் உயிர்கோடி வகைக ளீன்றும்
பருவநிலை மாறாமல் கன்னி யாகி
நிலவுகின்ற உலகில்முதற் றோன்றி யாண்டும்
உலவியதொல் குடியினரே தமிழ ரென்பார்!

2. குமரியென்னும் கடல்கொண்ட நிலப்ப ரப்பில்
குறிஞ்சி, முல்லை நிலவாழ்வில் வீரம் தோன்றி
அமைந்தமுதற் குடும்பெநறி அடுத்து வந்த
மருத, நெய்தல் நிலவாழ்வில் செம்மை யாகி
இமயம்வரை புகழ்பரவி இனிமை சேர்க்கும்
இல்லறத்தின் மாண்பதனை எடுத்து ரைக்கும்
அமுதத்தமிழ் வரலாற்றில் தாலி மின்னும்
அருந்திறத்தைப் பேணுதல்நம் கடமை யன்றோ!

3. ஒருத்திக்கு ஒருவனென்ற உண்மை நோக்கில்
ஒழுக்கமதை உயிராக மதித்து வாழ
பொருத்தமிகு மில்லறத்தின் மாண்பு சற்றும்
பிறழாமல் கற்புவழு வாமல் என்றும்
இருமனமும் கலந்தொழுக இனிமை சேர
இல்லறத்தார் சூழநின்று வாழ்த்து கூற
திருமணத்தில் தாலிபெறும் சிறப்பா மஃதே
தமிழர்களின் வரலாற்றுச் சிறப்பா கும்மே!

4. கண்ணுக்கு இமைக்காவல், பரந்து காணும்
கடலுக்குக் கரைக்காவல், உயிர்வளர்க்கும்
மண்ணுக்குக் கதிர்காவல், மக்கள்பெற்ற
மனத்திற்கு மதிக்காவல், அகப்புறத்தை
எண்ணுங்கால் அனைத்திற்கும் காவல் உண்டு
இட்டநற் பயிருக்கு வேலி போலப்
பெண்ணுக்குத் தாலியே வேலி யாகி
பெண்மையாம் கற்புக்குக் காவ லாமே!

மேலே காட்டிய பலவகைச் சான்றுகள் பாவலர் மெய்ப்பொருளறிஞர் திருமாலனாரின் தமிழ்ப்பற்று, தமிழினப்பற்று, ஆழ்ந்தகன்ற கல்வித்திறன், நுண்மாண்நுழைபுலம், கலைத்திறன், பாத்திறன், அனைத்திற்கும் மேலான சான்றாண்மை முதலியவற்றைத் தெளிவாக விளக்கும். பானைச் சோற்றுக்கு ஒரு பற்கை பதம் போல, பாவலரின் சான்றாண்மை, புலமை முதலியவற்றிற்குச் சிற்சில சான்றுகளே காட்டினேன். தமிழர்வாழ்வறத்தில் தாலி என்னும் நூல் ஒவ்வொருவரும் முழுமையாகப் படித்துணர வேண்டிய நூலாகும்.

வாழ்க பாவலர் புகழ்! ஓங்குக தமிழ்நெறி!

குறிப்பு :

வள்ளல் மாரியப்பர் ஆறுமுகம் முயற்சியால் பாவலர் பிறந்து வளர்ந்து வாழ்ந்த ஊராகிய செலாமாவில் பல இலக்கம் வெள்ளி செலவில் பாவலருக்கு நினைவிடம் அமைக்கப்பெற்றுள்ளது. வள்ளல் மாரியப்பரைப் பற்றிப் பின்னர் எழுதுவேன்.

17. நகர்வலம்

ஒல்லும் வகையான் அறவினை ஓவாதே
செல்லும்வாயெல்லாம் செயல். – குறள் 33

26,27–12–1999 நாட்களில் இனிய நண்பர் க. இராம மாணிக்கம், அவருடைய மகிழுந்து மூலமாகக் கோலாலம்பூரின் பல பகுதிகளைப் பார்க்க உதவினார்.

ஒற்றைக் கோபுரம் :

உலகிலேயே உயரமான இரட்டைக் கோபுரங்கள் பற்றியும் கன்னல் மணியம் உதவியால் அவற்றைப் பார்த்ததையும் முன்பே எழுதியுள்ளேன். அவற்றின் பின்புறமுள்ள ஒற்றைக் கோபுரம் நகரின் மையப்பகுதியிலுள்ள ஒரு குன்றின் (சிறியமலை) மீது கட்டப்பட்டிருப்பதால், இரட்டைக்

கோபுரத்தை விட உயரமாகத் தெரிகிறது. அது சிறந்த சுற்றுலாத் தலமாகத் திகழ்கிறது. மின்தூக்கி (லிஃப்ட்) மூலம் உச்சிக்குச் சென்று நகர்த் தோற்றம் முழுவதையும் காணலாம். தமிழகத்தின் திருச்சிராப்பள்ளியின் மையத்திலும், நாமக்கல்லின் மையத்திலும் உள்ள மலைக்கோட்டை போன்ற பகுதி கோலாலும்பூருக்கு ஒற்றைக் கோபுரம்.

உச்சிக்குச் சென்று பார்ப்பதற்கு எட்டு வெள்ளி கட்டணம். தமிழக மதிப்பிற்கு 88 ரூபாய். முதியோருக்கு 6 வெள்ளி. சிறுவர்களுக்கு 3 வெள்ளி. நான் எழுபதைக் கடந்தவனாகையால் எனக்கு ஆறு வெள்ளியும் நடுத்தர வயதுடைய மாணிக்கத்திற்கு எட்டு வெள்ளியும் கட்டணம் செலுத்தி நுழைவுச்சீட்டு வாங்கி, மின்தூக்கி மூலம் மேலே சென்றோம்.

இடையிடையே பல்பொருளங்காடிகள் உள்ளன. உச்சியிலும் மிகப்பரந்த வட்டமான பகுதி. சுற்றிலும் ஆங்காங்கு தொலைநோக்கிக் கண்ணாடி வைத்துள்ளனர். ஒரு வெள்ளி செலுத்தினால் குறிப்பிட்ட நேரம் வரை கண்ணாடி திறந்திருந்து பிறகு தானாக மூடிக்கொள்ளும். அதன்வழியாக அப்பகுதி நகர் முழுதும் தெளிவாகத் தெரியும். நான்குபுறமும் நான்கு வெள்ளி செலுத்தி நகர்த்தோற்றம் முழுவதும் காணமுடிந்தது.

அகமும் புறமும் :

நண்பர் மாணிக்கம் ஆயுள்காப்பீட்டுக் கழக (L.I.C.) முகவராகையால், வாடிக்கையாளர்களைச் சந்திப்பதற்கு நகரத்திற்குள்ளும் புறத்தே உள்ள தோட்டப்பகுதிகளுக்கும் அழைத்துச் சென்றார். போகுமிடங்களில், உறுப்பினர் கட்டணம் வசூலித்தல், என்னை அறிமுகம் செய்தல், சிலப்பதிகார மாநாட்டு மலருக்கு விளம்பரம் கொடுத்தோருக்கு மாநாட்டுமலர் கொடுத்தல், விளம்பரப்பாக்கி வசூலித்தல் ஆகிய பணிகளையும் செய்தார். இவ்வகையில் மாணிக்கம், மணியம் இருவருமே மாநாட்டிற்குப் பின்பும் மாநாடு தொடர்பான பணிகளைச் செய்து சிறந்த தமிழ்த் தொண்டர்களாக விளங்கினர்.

தோட்டப்பகுதிகளில் புறம்போக்கிடங்களில் குடியிருப்போர் இல்லங்கள் எளிமையும் தூய்மையும் வசதியும்

வாய்ந்தவையாக உள்ளன. தரையிலிருந்து சுமார் ஒரு மீட்டர் உயரம் மட்டும் சுவர் எழுப்பி, அதற்குமேல் மரப்பலகைகளால் தடுப்பெழுப்பி ஓடுவேயப்பட்டுள்ளது. உள்ளே சிமெண்ட் தரையும், தொலைக்காட்சி, வானொலி போன்ற வசதிகளும் உள்ளன. இவர்களுக்கு வசதியான குடியிருப்பு அமைத்துத்தர மலேசிய அரசு திட்டமிட்டுள்ளது. பல இல்லங்களில் பெற்றோர் தோட்டத் தொழிலாளிகளாக இருந்தால், மக்களில் ஓரிருவர் நகருக்குள் வேலைவாய்ப்பு பெற்றுள்ளனர். பல இல்லங்களில் மகிழுந்து (கார்) வசதியுமுண்டு. மகிழுந்து இல்லாருக்கும் துள்ளுந்து (மோட்டார்சைக்கிள்) வசதியாவது இருக்கும். மிதிவண்டி (சைக்கிள்) காண்பதே அரிது. அவ்வில்லங்களில் வாழுங்குழந்தைகள் புதிதாக வருவோருக்கு வணக்கம் சொல்லும்படியாகத் திரு மாணிக்கமும் பெற்றோரும் பழக்கிவைத்துள்ளனர். பல இல்லங்களில் உள்ள குழந்தைகள் எங்களை வணக்கம் கூறி வரவேற்றன. சில குழந்தைகள் திருக்குறள் ஒப்பித்து மகிழ்வித்தன.

மலேசியப்பழங்கள் :

டொரியன் (முள்நாறி) ரம்புடான் (முடிநாறி) ஆகிய இரண்டும் அங்கு மிகுதியாக விளையும் பழங்களாகும். டொரியன் பழம் சிறிய பலாப்பழம் அளவிலும் தோற்றத்திலும் இருக்கும். அதைத்தமிழர் முள்நாறி என்று தமிழில் வழங்குகின்றனர். அதைக் கத்தியால் பிளந்தால், உள்ளே இரண்டு அல்லது மூன்று சுளைகள் இருக்கும். பலாச்சுளை போன்று வடிவிலும் நிறத்திலும் பெரிதாக இருக்கும். உள்ளே கொட்டையும் இருக்கும். சுவையில் பலாச்சுளையைவிடக் குறைந்த இனிப்பும் மணமும் உடையது. பால்பிசின் இருக்காது. புறத்தே முள்ளும் அகத்தே ஒருவகை மணமும் இருப்பதால் முள்நாறி என்கின்றனர்.

ரம்புடான் (முடிநாறி) :

தமிழகத்தில் உள்ள கொட்டைமுத்துக்காய் தோற்றத்தில் இருக்கும். ஒரு குலையில் பத்து, பதினைந்து பழங்கள் இருக்கும். உள்ளே பனை நொங்கு போல் வெண்மையாகவும் உருண்டையாகவும் ஒரு சுளையிருக்கும். குளிர்ச்சியும் சுவையும் நொங்கு போலவே இருக்கும். இவ்விரண்டையும் சாலையோரக்

கடைகளில் சீனப் பெண்களும் மலாய்ப்பெண்களும் அதிகமாக விற்பனை செய்கின்றனர். திரு மாணிக்கம் வாங்கிக் கொடுத்துச் சுவைக்கச் செய்தார். நொங்கு போன்ற முடிநாறிப்பழத்தையே அதிகம் விரும்பிச் சுவைத்தேன். தமிழகத்தில் வல்விலோரி ஆண்ட கொல்லிமலைப் பலாக்கனியைச் சுவைக்கும் வாய்க்கு அந்த முள்நாறி (டொரியன்) பழம் சுவைக்கவில்லை. ஆனால் திரு மாணிக்கம் அப்பழத்தை நன்கு சுவைத்து வீட்டிற்கும் வாங்கிக் கொண்டார். அவர்களுக்கு அது கொல்லிமலைப் பலாக்கனியைப் போல ஆகும்.

முக்கனியும் முத்தமிழும் :

முத்தமிழ்போல் சுவைமிகுந்த தமிழகத்து முக்கனிகளுக்கு ஈடான கனிகள் உலகில் எங்குமே இல்லை. ஏழைகளுக்கும் எளிதாகக் கிடைக்கும் வாழைக்கனி நம் நாட்டுத் தேவைக்கே சரியாக இருக்கும். பதந்தவறினால் அருந்த முடியாத பலாக்கனியும் நம் நாட்டிறகே சரியாகி விடுகிறது. சுவையும் மணமும் மிக்க மாங்கனி மட்டும் பக்குவப்படுத்தப்பட்டும், சாறாக எடுத்தும் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகிறது. உருசிய நாட்டு முன்னாளதிபர் குருசேவ் இந்தியாவிற்கு வந்தபோது மாங்கனியை மிக விரும்பிச் சுவைத்து, ஏற்றுமதிக்கும் ஏற்பாடு செய்து சென்றாராம்.

முக்கனிகளை விரும்பிச் சுவைக்கும் தற்காலத் தமிழகத் தமிழர்கள் முத்தமிழைச் சுவைக்கத் தெரியாமல் பாழ்படுத்துகினறனரே! எங்கும் தமிழ்! எதிலும் தமிழ்! என்று அரசியல்வாதிகள் முழங்க, பொதுமக்கள் எங்கும் தமிழ் இல்லாமல் எதிலும் தமிழ் இல்லாமல் செய்கின்றனரே! ஆங்கில நாட்டு ஆடுமாடுகளும் அம்மா என்றழைக்கத் தமிழ்நாட்டுக் குழந்தைகள் மம்மி என்கின்றனவே! இப்படி அழைப்பதைக்கண்டு மகிழும் பெற்றோர் தமிழரா ? என்ற வினா ஒருபுறம் இருக்கட்டும். தாய்மொழியை மதிக்கத்தெரியாதவர் மனிதரா ?

மலேசியத் தமிழர்கள் முக்கனிகளைச் சுவைக்க முடியாவிட்டாலும் முத்தமிழைச் சுவைத்துப் போற்றுவதில் மாண்புமிக்க தமிழராக வாழ்கின்றனர். ஆனால், தமிழக இளைய குமுகாயத்தைப் பாழ்படுத்தும் தொலைக்காட்சி ஆபாசங்கள் வான்வழி சென்று மலேசிய இளைய

குமுகாயத்தையும் பாதிக்கத் தொடங்கியுள்ளது! தன்னல வெறிகொண்ட சின்னதிரை பெரிய திரைத்துறைகள் திருந்துமா? தாய்மொழியைப் போற்றத் தெரியாத மனிதப்பதர்கள் திருந்த மாட்டார்களா?

மலேசியத் தமிழர்களிடையே வலம் வந்தால் செந்தமிழைச் சுவைத்து மகிழலாம்! தமிழகத்தமிழரிடையே வலம் வந்தால் தமிங்கிலத்தைத்தான் கேட்டு மனம் நோகமுடியும்!

(இப்பகுதியை எழுதிக்கொண்டிருக்கும்பொழுது தமிழ்வழிக் கல்விக்கும், மாண்புமிகு கலைஞராணைக்கும் எதிரான தீர்ப்பை உயர்நீதிமன்றம் வழங்கிய செய்தி வருகிறது. ஒல்காப்பெரும்புகழ்த் தொல்காப்பியத்தையும் தெய்வத்தமிழ்மறையாம் திருக்குறளையும் நீதிபதிகள் முழுமையாகக் கற்றுணர்ந்திருந்தால் இத்தகைய தீர்ப்பை வழங்குவார்களா?)

டொரியன் என்னும் முள்நாறியைச் சுவைத்தபொழுது பலாக்கனி நினைவும் அதைத் தொடர்ந்து முக்கனி, முத்தமிழ் நினைவுகளும் தமிழக நிலையும் என்னுள்ளத்தில் எழுந்தன. நாங்கள் சென்ற இடமெல்லாம் ஒல்லும் வகையான் ஓவாதே தமிழ்ப்பணியும் திருக்குறள் பணியும் ஆற்றிவந்தோம். முழங்குக முத்தமிழ்!

18. பினாங்கு

நாடென்ப நாடா வளத்தன நாடல்ல
நாட வளந்தரு நாடு. – (குறள் 739)

என்னுங் குறளுக்கேற்பக் குறைந்த உழைப்பில் நிறைந்த வளம் தரும் நாடாகத்திகழும் மலேசியாவின் நுழைவாயிலாக ஒருகாலத்தில் பினாங்கு இருந்தது. இந்தியாவும் மலேசியாவும் ஆங்கிலேயரின் ஆட்சியில் இருந்த காலத்தில், இரப்பர் தோட்டத் தொழிலாளிகளாக இந்தியர்களை – முக்கியமாகத் தமிழர்களைப் பினாங்குக்குத்தான் முதலில் ஆங்கிலேயர் அழைத்துச் சென்றனர்.

தம் உழைப்பால் பினாங்கு நகரை வள்பபடுத்திய தமிழர் நாளடைவில் மலேசியா முழுதும் பரவி, நாட்டையும் வளப்படுத்தித் தாமும் வளம் பெற்றனர்.

தமிழரால் வளம் பெற்ற பினாங்கு நகரைக் காண 28–12–99 முற்பகல் 10 மணிக்கு நானும் நண்பர் மாணிக்கமும் பேருந்துப் பயணம் தொடங்கினோம். பினாங்கின் புறப்பகுதிக்கும் அகப்பகுதிக்கும் இடையில் பெரிய கடற்பரப்பு உள்ளது.

பொதுப்பணித்துறை அமைச்சர் டத்தோ சாமிவேலு அவர்களின் முயற்சியால் கடலுக்குள் பெரிய நேர்த்தியான பாலம் அமைக்கப்பெற்று, இரண்டுநிலப் பகுதிகளும் இணைக்கப்பெற்றுள்ளன. அகன்று நீண்ட உறுதியான பெரியபாலம் அது. மலைப்பாதையிலும், கடல் வழியிலும், இயற்கையழகைச் சுவைத்துக் கொண்டு 4 1/2 மணிநேரப் பயணத்திற்குப்பிறகு பிற்பகல் 2 1/2 மணிக்குப் பினாங்கு நகரின் உள்பகுதியை அடைந்தோம். பினாங்கு நகரம் கோலாலம்பூரில் பாதியளவிருக்கும்.

பேருந்துநிலையம் :

மலேசியாவின் பேருந்து நிலையங்கள் எல்லாம் உயர்ந்த கட்டிடங்களுக்கு அடிப்பகுதியில் பரந்து விரிந்த இடத்தில் வசதியாகவும் அழகாகவும் தூய்மையாகவும் இருக்கும். மேடுபள்ளம், குப்பை முதலியவற்றைக்காண முடியாது. கடைகள் கட்டிடத்திற்குள்தான் இருக்கும். பயணிகள் தங்குவதற்கும் நடமாடுவதற்கும் மாளிகை போன்ற இடங்கள்.

படக்கருவி :

அழகிய பினாங்கு நகரையடைந்ததும் பசியாறி கடைவீதிக்குச் சென்றோம். கோலாலும்பூரில் இருந்தவரை கன்னல்மணியத்தின் நிழற்படக்கருவி (கேமிரா) மிகவும் பயன்பட்டதால், அதுவாங்க வேண்டுமென்ற எண்ணம் தோன்றவில்லை. பினாங்கு சென்றஉடன் பினாங்குக் காட்சிகளைப்படமெடுக்க, அக்கருவி வாங்க வேண்டுமென எண்ணினேன். அதற்காகத் தகுதியான கடைதேடி நீண்டநேரம்

முயன்று ஒரு பெரிய கடையில் முந்நூறு வெள்ளி விலையில் ஒருகருவி வாங்கினோம். தமிழ்நாட்டு மதிப்பிற்கு மூவாயிரம் ரூபாய்க்கு மேலாகும்.

கொடிமலை :

இயற்கையழகும் வளமும் மிக்க கொடிமலையில் ஏறுவதற்கு இழுப்புத்தொடர் வண்டி வசதியுள்ளது. மேலே ஏறி இறங்க நான்கு வெள்ளி கட்டணம். இயற்கைக் காட்சிகளைச் சுவைத்துக் கொண்டே உச்சிக்குச் சென்றோம். வண்டியைவிட்டு இறங்குவதற்குள் மழை வந்துவிட்டது. மழையும் இருளும் இணைந்துவிட்டதால், உச்சிப்பகுதியைச் சுற்றிப் பார்க்க முடியாமல் அதே வண்டியில் திரும்பியிறங்கி விட்டோம். நகரப்பேருந்து பிடித்துத் தங்குமிடத்திற்கு வருவதற்குள் நனைந்து விட்டோம். மலைநாடுகளில் எதிர்பாராது இயற்கை நினைத்தபொழுது மழைபொழியும்.

புத்தர் ஆலயம் :

29–12–99 புதன் காலைக் கடனை முடித்துப் பசியாறி விட்டுச் சுற்றிப்பார்க்கப் புறப்பட்டோம். பினாங்கிலேயே உயரமான கட்டிடம் கொம்டார். ஐம்பது மாடிகைளயுடையது. அதனழகைச் சுவைத்துக் கொண்டு புத்தராலயம் சென்றோம். சீனர்களால் கட்டப்பெற்ற அவ்வாலயம் பரந்த இடத்தில் பல்வேறு கலையழகு பொருந்திய சுதைச்சிலைகளுடன் திகழுகிறது. புத்தர் நின்ற கோலத்திலும், அமர்ந்த கோலத்திலும், படுத்த கோலத்திலும் மிகப்பெரிய அளவிலும் அழகாகவும் காட்சியளிக்கிறார். ஆலயம் முழுவதும் அழகும் தூய்மையும் அமைதியும் நிறைந்த கலைக்கூடமாகத் திகழ்கிறது. முதல் நாள் பயன்படுத்த முடியாத நிழற்படக் கருவியைப் புத்தராலயத்தில் நன்கு பயன்படுத்திப் பல்வேறு காட்சிகளைப் படமெடுத்தோம். செயற்கைக் கருவியில் செயற்கைக் காட்சிகள்தாம் முதலில் இடம் பிடித்தன.

கடற்கரை :

பெசியாரான்கர்னி சாலை எனப்படும் கடற்கரைச்சாலைக்குச் சென்றோம். இச்சாலையிலும் ஆங்காங்குப் பல வானளாவிய கட்டிடங்கள் உள்ளன. ஆனால்

சென்னை மெரினாக் கடற்கரை போன்று அகன்ற மணற்பரப்பு எங்கும் காண இயலவில்லை.

தேசியப்பூங்கா :

நான்கு பக்கமும் மலைசூழ்ந்த அகன்று பரந்த பள்ளத்தாக்கில் தேசியப்பூங்கா அமைந்துள்ளது. அகன்று வானளாவிய சோலையில் பலவகை மரங்கள் உள்ளன. பலவகைப்பூஞ்செடிகளும் கொடிகளும் விற்பனைக்குள்ள அழகிய கண்காட்சி சாலை. சிலவற்றை வாங்க வேண்டுமென்ற ஆவலிருந்தாலும், நம்மிடம் கொண்டு வந்து சேர்ப்பது அரிது. ஆங்காங்கு கனிக்கடைகளும் பிறகடைகளும் உள்ளன. கண்ணுக்கும் உடலுக்கும் குளிர்ச்சியான இடம். சிறந்த சுற்றுலாத்தலம்.

தண்ணீர்மலை :

கோலாலும்பூரில் பத்துமலை போன்று, பினாங்குத் தண்ணீர் மலையும் முருகன் கோயில் உள்ள மலையாகும். ஆனால் குகைக்கோயிலன்று. அடிவாரத்தில் பெரியகோயில் உள்ளது. மலையின் நடுப்பகுதியில் ஒரு கோயில். ஏறுவதற்கும் இறங்குவற்கும் தனித்தனி வழியுள்ளது. தைப்பூசம், பஞ்குனி உத்தரம் போன்ற விழாக்காலங்களில் பெருங்கூட்டம் கூடுமாம். பார்க்க வேண்டிய இடங்களைப் பார்த்துவிட்டு, நகரப்பேருந்துக்காக நீண்டநேரம் காத்திருக்க வேண்டியிருந்தது.

பசியாறல் :

நகருக்கு வந்து சேர்வதற்குள் பசி பற்றிக்கொண்டது. நல்ல உணவுதேடிப் பலகடைகளுக்கு அலைந்தோம். காலங்கடந்து விட்டதால், சோர்ந்துபோன எங்களுக்குச் சோறு எங்கும் கிடைக்கவில்லை. கிடைத்த சிற்றுண்டியால் ஓரளவு பசியாற்றிக் கொண்டோம். குறிப்பிட்ட நேரத்திற்குள் கோலாலும்பூர் சென்றால்தான், மாணிக்கம் இல்லத்திற்குச் செல்ல நகரப் பேருந்து கிடைக்கும். ஆதலால், தங்குமிடத்தில் வைத்த எங்கள் பொருள்களையெடுத்துக் கொண்டு, பிற்பகல் 4 மணிக்குப் பினாங்கைவிட்டுப் பிரியத்தொடங்கினோம். இயற்கைக் காட்சிகளைச் சுவைத்துக்கொண்டு மலைப்பயணம் மேற்கொண்டோம்.

19. கிள்ளான் வள்ளல் மாரியப்பர் :

கைம்மாறு வேண்டா கடப்பாடு மாரிமாட்டு
என்னாற்றுங் கொல்லோ உலகு - குறள் 211

(தமக்குதவும் மழைக்கு உலகத்தார் என்ன கைம்மாறு செய்கின்றனர் ? மழைபோன்றவர் செய்யும் உதவியும் கைம்மாறு கருதாதது.)

என்னும் குறளுக்கேற்ப வாழ்பவர் கிள்ளான் நகரவள்ளல் மாரியப்பர் ஆறுமுகம். ஆம், மாரிக்குணம் உடையவர்தான் மாரியப்பர்! திருச்சி அல்லூரிலுள்ள திருவள்ளுவர் தவச்சாலைக்குப் பெரும்பொருள் அறக்கட்டளையாக வழங்கியுள்ளார். தவச்சாலை நிறுவனர் தமிழ்க்கடல் செந்தமிழந்தணர் இளங்குமரர் எழுதிய திருக்குறள் உரைநூல் வெளியீட்டிற்கும் அறக்கட்டளை வழங்கியுள்ளார். மாரியப்பர் குடும்பத்தாரனைவரும் தமிழ்ப்பற்றும் திருக்குறள் பற்றும் மிக்கவர்கள்.

20-2-99 அன்று திருவரங்கம் செண்பகத்தமிழரங்கு, இலக்கியச் செம்மல் இளங்குமரர் தலைமையில் எனக்குத் தமிழ்மாமணி விருது வழங்கிச் சிறப்பித்தது. அப்பொழுது தமிழகம் வந்திருந்த வள்ளல் மாரியப்பரும் திருமதி வெற்றிச்செல்வி மாரியப்பரும் முன்பின் அறிமுகமில்லா எனக்குப் பொன்னாடை போர்த்தி ஐந்நூறு ரூபாயும் கொடுத்து வாழ்த்தினர்.

ம.த.நெ.க.கிளை :

பாவலர் திருமாலனார் தோற்றுவித்த மலேசியத் தமிழ்நெறிக்கழகத்தின் கிளையை முதன்முதலாகக் கிள்ளான் நகரில் மாரியப்பனார் தொடங்கிப் பொங்கல்விழாக் கலைநிகழ்ச்சியும் பெருஞ்செலவில் நடத்தினார். கோலாலும்பூரில் நடைபெற்ற ஆறாம் உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டிற்கு வந்ததமிழறிஞர்களைத் திருமாலனாருக்கு அறிமுகம் செய்து வைத்து மலையகச் சுற்றுச்செலவிற்கும் ஏற்பாடு செய்தார்.

ஐயா திருமாலனார் மறைவிற்குப்பின், அவருக்கு நினைவுச்சின்னம் எழுப்புவதற்குக் குழுவொன்று கூட்டி, செலாமா நகரில், ஆறுஇலக்கம் செலவில் கருங்கல்லறை எழுப்பினார்.

தமிழர்களின் பொருளாதார வளர்ச்சிக்காக 1998இல், தமிழ்நெறிக் கூட்டுறவுக் கழகத்தைத் தோற்றுவித்துத் தலைவராக இருந்து இயக்கிவருகிறார்.

தமிழ்க்கடல் :

1997 திசம்பர் ஒன்றில், தமிழகத்தமிழ்க்கடல் இரா. இளங்குமரனாரை மலையகத்திற்கு வருவித்து, அத்திங்கள் முழுவதும், மலேசியநாட்டின் பலபகுதிகளில் ஒவ்வொரு நாளும் கூட்டத்திற்கு ஏற்பாடு செய்து, தமிழ்நெறியும் திருக்குறள் மாண்பும் பரப்பச்செய்தார். 1–1–98இல் சிங்கப்பூரில் இருநிகழ்ச்சிகளுக்கு ஏற்பாடுசெய்து, தமிழ்ப்பணிக்குப் பெருந்தொகையுடன் தமிழகம் அனுப்பிவைத்தார்.

குறிக்கோள் :

ஆரியக்கலப்பையும் மூடநம்பிக்கையையும் ஒழித்தல், தனித்தமிழ்நெறியைப் போற்றுதல், வள்ளுவத்தை வாழ்க்கை நெறியாக்குதல் முதலிய குறிக்கோள்களைத் தம் கடைக்கு வரும் வாடிக்கையாளர்களிடமும், செல்லுவாயெல்லாம் ஒல்லும் வகையிலும் ஓவாதே பரப்பிவருகிறார். தம் மக்களையும் தமிழ்ப்பள்ளிகளிலேயே பயில்வித்துத் தனித் தமிழாளர்களாகவே உருவாக்கியுள்ளார்.

சந்திப்பு :

இத்தகைய தமிழ்ப்புரவலரை, நான் இரண்டாம் முறையாக, செந்தமிழ்ச் சிலப்பதிகார மாநாட்டு மண்டபத்தில் 12–12–99 அன்று சந்தித்து அளவளாவும் பேறுபெற்றேன். நான் கொண்டு சென்றிருந்த என் நூல்களைக் கொடுத்து நலம் விசாரித்தேன். தம்மில்லத்திற்கு ஒருநாள் வரவேண்டும் என்றார்.

30–12–99 அன்றுதான் அவ்வாய்ப்புக் கிட்டியது. நண்பர் க. மாணிக்கம் அவர் மகிழுந்திலேயே கிள்ளான் நகருக்கு அழைத்துச் சென்று, வீட்டிற்கு வேண்டிய மரப்பொருள்கள்

விற்பனை செய்யும் சி.எஸ்.கே.டிரேடிங் (32, ஜாலான் தெங்குடியாவுடின்) - இல் என்னை விட்டுவிட்டு, மறுநாள் மாலை அழைக்க வருவதாகச் சொல்லிச் சென்றார். கடையிலிருந்த வள்ளல் மாரியப்பரும் அவர்மக்களும் என்னை அன்புடன் வரவேற்றனர்.

கூட்ட ஏற்பாடு :

முதல்நாள்தான் பெருங்கூட்டம் நடந்ததாகவும், அன்று எனக்காக இயன்றவரை முயல்வதாகக் கூறிவிட்டு, இரவு 10 மணிக்குக் கடையிலேயே என் சொற்பொழிவு நடைபெற இருப்பதாகத் தொலைபேசி மூலம் பலருக்குத் தெரிவித்தார்.

குடும்பத்தாரின் பேரன்பு :

ஜாலான் தெப்பிசுங்கையிலுள்ள அவரில்லத்திற்குக் காரில் அழைத்துச் சென்றார். திருமதி வெற்றிச்செல்வி மாரியப்பர், அவரது தாயார் மாரியம்மாள், மாரியப்பர் மகள் செல்வி சித்ரா ஆகியோர் அன்புடன் வரவேற்று உபசரித்தனர். ஆண்மக்கள் எழிலரசன், குயிலரசன் ஆகியோரும், வெற்றிச்செல்வியின் தங்கை எழிலரசி ஆகியோர் கடையிலேயே வரவேற்றனர். பசியாறிச் சிறிதுநேரம் ஓய்வெடுத்தபிறகு இரவு 10 மணிக்கு எங்களைக் கடைக்கு வரும்படியாகக் கூறிவிட்டுத் திரு. மாரியப்பர் சொந்த அலுவலாக வெளியில் சென்றுவிட்டார்.

திருமதி வெற்றிச்செல்வி, தமிழ்க்கடல் இளங்குமரனாரின் நலம் விசாரித்துவிட்டு, தமிழகம் வரும்போதெல்லாம், தவறாமல் திருவள்ளுவர் தவச்சாலைக்குச் செல்வதாகவும் அங்குச் செல்வதால் ஏற்படும் மன அமைதி, அறிவுப் பெருக்கம் ஆகியவற்றையும் கூறி மகிழ்ந்தார்.

பொருள்கள் வாங்கல் :

1-1-2000 இரவு நான் தமிழகம் திரும்ப வேண்டியிருப்பதாலும், இடையில் ஒருநாளே இருப்பதாலும், கோலாலும்பூருக்கடுத்த பெரிய நகரமாகக் கிள்ளான் இருப்பதாலும், நான் ஊருக்குக் கொண்டு செல்ல வேண்டிய பொருள்கள் வாங்க வேண்டுமெனத் தெரிவித்தேன். மாலை 4 மணிக்கு மேல், அவர்களில்லத்திலிருந்த மற்றொரு மகிழுந்தில் தாயும் மகளும் என்னைக் கடைவீதிக்கு அழைத்துச் சென்றனர்.

குழந்தை :

தகுதியும் தரமும் மிக்க பொருள்களாக வாங்குவதற்கும் பல்வேறுவகைப் பொருள்கள் வாங்குவதற்கும் பல்வேறு கடைகளுக்குச் செல்ல வேண்டியிருந்தது. மகிழுந்தை ஒருபக்கமாக நிறுத்திவிட்டுச் சாலையைக் கடந்து எதிர்ப்பக்கம் போக வேண்டிய சமயத்திலெல்லாம், செல்வி சித்ரா என் கையைப்பற்றி எச்சரிக்கையாக அழைத்துச் சென்றார். முதுமை இரண்டாம் குழந்தைப் பருவம் என்பர். உண்மையில், அன்று சிலமணி நேரம் செல்வி சித்ராவின் கையில் நான் குழந்தையாகவே மாறிவிட்டேன். நண்பர்கள் மாணிக்கம், மணியம் முதலியோரும் பலமுறை என்னை இங்ஙனமே குழந்தையாக்கியுள்ளனர். என்ன ஐயா! இவ்வளவு எச்சரிக்கைப்படுத்துகிறீர்கள்? நான் என்ன விவரம் தெரியாத குழந்தையா? என்று கேட்டால், பல்லாயிரம் கல் தொலைவுக்கப்பால் – நாடுவிட்டு நாடு வந்துள்ள தங்களைப் பாதுகாப்பாக அனுப்பவேண்டியது எங்கள் பொறுப்பு என்பர். இயல்பாகவே நான் சுறுசுறுப்பும் அஞ்சாமையும் மிக்கவன். அவர்களின் எச்சரிக்கையும் ஒருவகையில் சரியே. செல்வி சீலா (மாணிக்கம் மகள்) தாத்தா, தாத்தா என்று என்னை அழைத்து எனக்கு உதவி செய்தபொழுதெல்லாம் இப்படியே குழந்தையாக மாறிவிடுவேன். என்னே மலேசியத்தமிழர்களின் அன்புள்ளம்! அனைத்திற்கும் மேலாக அவர்களின் தாய்மொழிப்பற்றும் திருக்குறள் பற்றுமே என்னைப் புத்தேளுலகிற்கே அழைத்துச் சென்றுவிடும்! தமிங்கிலத் தமிழையே கேட்டுக்கேட்டு வருந்திய செவிகளுக்கு, அவர்களின் தனித்தமிழ்ப்பேச்சு பேரின்பத்தையே நல்கியது.

செல்வி சித்ராவின் அன்பு என்னைக் குழந்தையாக்கிய சூழலில், என்பெயரன் வாஞ்சிநாதனுக்கும், நண்பர்களின் குழந்தைகளுக்கும், தமிழகத்தில் கிடைக்காத விளையாட்டுப் பொருள்களும் தின்பண்டங்களும் வாங்கவே அதிகநேரம் செலவழித்தோம். அத்தகைய பொருள்களைத் தேர்ந்தெடுத்து வாங்குவதற்குத் திருமதி வெற்றிச்செல்வி மாரியப்பன் பேருதவியாக இருந்தார். அவர் தமிழகம் பல முறை வந்தவராகையால், இருநாடுகளிலும் கிடைக்கும் பொருள்களின் வேறுபாடறிந்தவர்.

எங்கள் வாஞ்சிமறுதோன்றி அச்சகத் தொழிலாள நண்பர்கள், நான் மலேசியாவிற்குப் புறப்படும்பொழுது, எங்களுக்கு ஏதாவது நினைவுப்பொருள் வாங்கி வாருங்கள் என்று கூறியிருந்தனர். அங்குப் பணியாற்றும் பதினைவருக்கும் ஒரேதரமான புதுமையான பொருள் என்ன என்று சிந்தித்து, திறவுகோல்(சாவி) கொத்து கவர்ச்சியானதாக இருபது வாங்கினேன். என்னை வரவேற்க விமானநிலையத்திற்கு வந்திருந்த நண்பர்கள் உறவினர்களில் சிலர் சிலவற்றை விரும்பிப் பெற்றுக் கொண்டதாலும், பதினைந்துக்குக் குறைந்து விட்டதாலும், அவர்களுக்குக் கொடுக்க முடியாமல், இனிய தின்பண்டம் மட்டுமே கொடுக்கமுடிந்தது. இந்நூலுக்குக் கோலாலம்பூரில் வெளியீட்டுவிழா நடத்தும் திட்டமிருப்பதால், அப்பொழுதாவது அவர்கள் எண்ணத்தை நிறைவேற்ற வேண்டும். என் நூல்களை அழகாக அச்சிடுபவர்கள் அவர்கள்தாமே!

தரைக்கடைகளிலும், பலமாடிகள் தானியங்கிப்படிகள் மூலம் ஏறியிறங்கும் கடைகளிலும் வேண்டிய பொருள்களைத் தேர்வுசெய்து வாங்கிக் கொண்டு, இரவு எட்டுமணிக்கு வீடு திரும்பினோம். திருமதி. மாரியம்மாள் (வெற்றிச்செல்வியின் தாயார்) சுவையாகத் தயாரித்து வைத்திருந்த உணவருந்திப் பசியாறி ஓய்வெடுத்த பிறகு, இரவு பத்து மணிக்குக் கூட்டம் நடைபெறும் இடத்திற்கு அனைவரும் சென்றோம்.

20. தமிழ்மறையா? பொதுமறையா?

மாலும் குறளாய் வளர்ந்திரண்டு மாணடியான்
ஞாலம் முழுதும் நயந்தளந்தான் – வாலறிவின்
வள்ளுவரும் தங்குறள்வெண் பாவடியால் வையத்தார்
உள்ளுவஎல் லாம்அளந்தார் ஓர்ந்து – பரணர்

(திருவள்ளுவமாலை – 6)

திருமாலானவர் சிறிய குறுகிய வடிவுடன் தோன்றிப் பின் வளர்ந்து, தம் இரண்டு பெரிய அடிகளால் உலகம் முழுவதையும் விரும்பி அளந்தார். அதுபோன்று, மெய்யறிவுடைய திருவள்ளுவரும் தம்மிடமிருந்து தோன்றிய

குறள் வெண்பாவின் இரண்டு சிறிய அடிகளால் உலகம் முழுவதிலும் உள்ளவரால் நினைக்கப்பட்டவற்றையெல்லாம் ஆராய்ந்து அளந்தார்.

எதிர்பாராமல் திடீரென்று ஏற்பாடு செய்யப்பெற்ற கூட்டத்திற்கு வள்ளல் மாரியப்பர் முயற்சியால், அவர்கடையில் முப்பதிற்கு மேற்பட்டோர் குழுமியிருந்தனர். கோலாலும்பூரிலிருந்து வந்த திருக்குறளார்வலர்கள் அருள்முனைவர், இமயவரம்பர், அவர்மகன் முகிலரும், கிள்ளானைச் சேர்ந்த காவல்துறையைச் சேர்ந்தோரும் பிறதுறையினரும் ஆர்வமுடன் குழுமியிருந்தனர்.

திரு. மாரியப்பர் தலைமையிலும், திரு. அருள்முனைவர் முன்னிலையிலும், திருமதி. வெற்றிச்செல்வியாரின் தமிழ்த்தாய் வாழ்த்துப் பாடலுடனும் கூட்டம் தொடங்கியது. திரு. அருள்முனைவர் திருக்குறள் தமிழ்மறையா? பொதுமறையா? என்பதைத் தெளிவுபடுத்தவேண்டும் என்றார்.

நான், திருக்குறளின் வாழ்வியல்நெறிகளை விளக்கும்போது, எங்ஙனம் தமிழ்மறையாகவும், பொதுமறையாகவும் திருக்குறள் திகழ்கிறது என்பதைத் தக்க சான்றுகளுடன் விளக்கினேன். அன்றைய சொற்பொழிவின் சுருக்கமும் சில முக்கிய குறிப்புகளும்

மூவகை நூல்கள் :

1) தெய்வம் மனிதனுக்குக் கூறியது பகவத்கீதை.

2) மனிதன் தெய்வத்திடம் வேண்டியது திருவாசகம்.

3) மனிதன், மனிதனைத் தெய்வநிலைக்கு உயர்த்த பாடியது திருக்குறள்.

தமிழ்மறை :

திருக்குறள் தமிழ்மொழியின் முதல்எழுத்தாகிய அகரத்தில் தொடங்கி இறுதியெழுத்தாகிய னகரத்தில், பெறின் என்று முடிகிறது.

அந்தணர் என்போர் அறவோர்மற் றெவ்வுயிர்க்கும்
செந்தண்மை பூண்டொழுக லான் – (குறள் 30)

இங்ஙனம் அகரத்தில் தொடங்கி னகரத்தில் முடிகின்ற குறட்பாக்களும் பத்து உள்ளன. அவற்றின் எண்கள் 30, 46, 92, 96, 147, 163, 175, 210, 483, 1076.

குழலினிது யாழினிது என்பதம் மக்கள்
மழலைச்சொல் கேளா தவர் - குறள் 66.

இக்குறட்பாவில் ல, ள, ழ என்னும் மூன்றொலிகளும் கூடிக் குழாவக் கண்டின்புறலாம்.

வசையொழிய வாழ்வாரே வாழ்வார், இசையொழிய
வாழ்வாரே வாழா தவர் - குறள் 240.

இக்குறட்பாவில் தமிழ்மொழிக்கே உரிய சிறப்பு ழகரம் ஆறுமுறை வந்து, அளவிலா இன்பத்துடன் ஆழ்ந்த கருத்தையும் உணர்த்துகிறது.

உலகத்திற்கே பொதுவாகப் பாடியதால் தமிழ், தமிழ்நாடு போன்ற சிறப்புச் சொற்களைப் பயன்படுத்தாவிட்டாலும் நூல் முழுவதும், தமிழ்மொழியின் நயமும் திறமும் தமிழ்ப்பண்பாடும், தமிழும் இனிமையும்போல இரண்டறக் கலந்துள்ளன! தமிழ்மொழிக்கும் தமிழினத்திற்கும் ஒப்பற்ற மறைநூலாக மிளிர்கிறது. ஆதலால் திருக்குறள் தலைசிறந்த தமிழ்மறையாகும்.

பொதுமறை :

காலம், தேயம், மொழி, இனம், சமயம் கடந்து வையகத்து மாந்தரெல்லாம் வாழ்வாங்கு வாழ்ந்து வானுறையும் தெய்வமாகப் போற்றப்பெற வேண்டும் என்னும் பொதுநோக்குடனும், தலைசிறந்த மனிதேநய மாண்புடனும், மேற்கூறியாங்குச் சிறப்புச் சொற்களை நீக்கிப் பொதுச்சொற்களால் பாடப்பட்டிருப்பதாலும் பொதுமறையாகவும் பட்டொளி வீசுகின்றது.

கற்க கசடறக் கற்பவை கற்றபின்
நிற்க அதற்குத் தக - குறள் 391.

முற்றுமோனையும் எதுகைநயமும் மிக்க இக்குறளின் கருத்து அனைவர்க்கும் எளிதாகப் புரியும். ஆனால், கற்பவை

என்னும் சொல் ஆழமும் நயமும் மிக்க திட்பநுட்பச் சொல்லாகும்.

கற்பவை – கற்கத் தகுந்த நூல்கள் யாவை? திருக்குறள் போன்ற பொதுவான நூல்கள் தவிர, மற்றவை காலந்தோறும் தேயந்தோறும், சமயந்தோறும், துறைதோறும் வேறுபடலாம். அவரவா் காலம், தேயம், சமயம், துறைக்கேற்ற நூல்களைக் கற்க வேண்டும். எனவே கற்பவை என்னும் பொதுச் சொல்லானது யாவருக்கும் பொருந்தக்கூடிய என்றென்றும் நின்றுநிலவக்கூடிய சொல்லாகும். பல்லாயிரமாண்டுகளாக எந்த மாற்றமுமின்றி, யாராலும் மாற்றமுடியாத சொல்லாகத் திகழ்கிறது. இத்தகைய பொதுச்சொற்களே நூல் முழுவதும் குறள்தோறும் வேருன்றியுள்ளன.

உழுவார் உலகத்தார்க் காணிஅஃ தாற்றாது
எழுவாரை எல்லாம் பொறுத்து. – குறள் 1032.

உழவுத்தொழிலின்றி உயிர்வாழ முடியுமா? உலகம் என்னும் தேருக்கு அச்சாணி போலவும் உலகம் என்னும் பரந்து விரிந்த மரத்திற்கு ஆணிவேர் போலவும் விளங்கும் உழவுத்தொழிலையும் இந்தக் குறளையும் (நூலையும்) போற்றாத நாடுண்டா?

மருந்து என்னும் அதிகாரத்தில், முதல் ஏழு குறள்களில், உணவே மருந்து, மருந்தே உணவு என்னும் இயற்கை மருத்துவப்படி, உணவுமுறைபற்றிக்கூறினாலும்,

நோய்நாடி நோய்முதல் நாடி அதுதணிக்கும்
வாய்நாடி வாய்ப்பச் செயல். – குறள் 948

என்னும் குறள் சொல்நயத்தோடு எவ்வளவு ஆழமான கருத்துடைய குறளாகத் திகழ்கிறது! நோய்நாடுவதற்கும் நோய்முதல்நாடுவதற்கும் எத்தனை வகையான புதுபுதுக் கருவிகள் நாளும் தோன்றிய வண்ணம் உள்ளன! இவற்றிற்கெல்லாம் அடிப்படை வழிகாட்டியாக இக்குறள் விளங்கவில்லையா?

இங்ஙனம் தொட்டதொட்ட இடமெல்லாம், உலகம் முழுவதற்கும் – மனித இனம் முழுவதற்கும் பொதுமையான

வழிகாட்டும் சொற்களையும் குறட்பாக்களையும் உடைய திருக்குறளைப் பொதுமறை – உலகப் பொதுமறை என்று ஏன் சொல்லக்கூடாது?

இங்ஙனம் தமிழ்மறை, பொதுமறை என்னும் இரண்டிற்கும் பொருத்தமான பல எடுத்துக்காட்டுகளையும் வாழ்வியல் நெறிகளையும் ஒன்றரை மணிநேரம் விளக்கிப்பேசியபின் சிறிதுநேரக் கலந்துரையாடலுடன் இரவு 12 மணிக்குக் கூட்டம் முடிந்தது. கூட்டம் கலைந்த பின்னும் சிலர் எங்களுடன் தொடர்ந்து வந்தனர்.

திரு.மாரியப்பர் குடும்பத்தினருடன் திருவாளர்கள் அருள்முனைவர், இமயவரம்பர், முகிலர், நெடுஞ்சேரலாதர், தமிழ்நெறிக்கழகத்தினர் திரு. மோகன், திரு. முருகேசன் (காவல்துறை அதிகாரிகள்) ஆகியோர் ஓர் இரவு உணவுவிடுதியில், இரண்டுபெரிய வட்டமேசைகளைச் சூழ்ந்தமர்ந்து கொண்டோம். இரண்டு மேசைகளிலும் பல்வகைச் சிற்றுண்டிகள் நிறைய வைக்கப்பெற்றன. அவரவர்க்கு வேண்டியவற்றை அருந்திக் கொண்டே, பலரும் பலவகை ஐய வினாக்களை எழுப்பினர். நானும், திருக்குறளைக் குறைகூறுவோரை மிகக் கடுமையாக ஒறுக்கவேண்டும் என்றுகூறும் அருள் முனைவரும் தக்க விளக்கம் கூறிக்கொண்டிருந்தோம்.

பெண்கள் முகத்தில் சோர்வு தோன்றியது. காலங்காட்டியைப் பார்த்தேன். பின்னிரவு இரண்டுமணி. காலம் கடந்துவிட்டது. பெண்கள் சோர்ந்து விட்டனர். இன்று இத்துடன் முடித்துக் கொள்ளலாம் என்று கூறி அன்றைய அளவளாவலுக்கு முற்றுப்புள்ளி வைத்தேன். என் வாழ்நாளில் மறக்க முடியாத அந்நிகழ்வையும் மலேசியத்தமிழர்களின் திருக்குறள் ஆர்வத்தையும் எண்ணியெண்ணி வியந்தேன்!

மறுநாள் 31-12-99 அன்று முற்பகலில் செல்வன் குயிலரசன் என்னிடம் நீண்டநேரமும், மற்றவர்களுக்கு ஓய்வு கிடைத்தபோதும் என்னிடம் அளவளாவி மகிழ்ந்தனர். ஓய்வு கிடைத்தபொழுது, பாரிட்புந்தார், பெங்கலான்உலு, ஈப்போ முதலிய இடங்களுக்கு எழுதிய மடல்களைக் குயிலரசனிடம் கொடுத்து அஞ்சலில் சேர்க்கச் சொன்னேன்.

அன்பளிப்பு :



அன்றைய பகலுணவிற்குப்பிறகு அனைவரும் படம் எடுத்துக் கொண்டோம். எனக்கு அன்பளிப்பாகச் சரிகைக்கரையிட்ட வேட்டி, துண்டுடன் நூறு வெள்ளியும் வைத்துக் கொடுத்தனர். அன்று பிற்பகல் மாணிக்கம் என்னை அழைக்க வருவதாகக் கூறியிருந்ததால், குடும்பப் பெண்களிடம் நன்றி நவின்று விடைபெற்றேன். திருவாளர்கள் மாரியப்பர், எழிலரசன், குயிலரசன் ஆகியோருடன் நான் ஒரு மகிழுந்திலும், கடையில் கணக்கெழுதிக் கொண்டிருக்கும் செல்வி எழிலரசி (வெற்றிச்செல்வியின் தங்கை) ஒரு மகிழுந்திலும் கடைக்குச் சென்றோம்.

மூன்றுமணிக்கு மாணிக்கமும் வந்தார். சிறிதுநேரம் அளவளாவிய பிறகு நானும் மாணிக்கமும் நன்றிநவின்று விடைபெற்றோம். நண்பர் மகிழுந்து மூலம் கிள்ளான் நகரின் பல்வேறு பகுதிகளைச் சுற்றிப்பார்த்து விட்டு ஒரு பெரிய கடைக்கு அழைத்துச் சென்று மாணிக்கத்தின் அன்பளிப்பாக ஒரு சட்டை வாங்கிக்கொடுத்தார். அன்றும் சில நினைவுப்பொருள்கள் வாங்கிக்கொண்டு, இரவு எட்டு மணிக்கு புக்கிட்கெமுனிங்கில் உள்ள நண்பர் இல்லத்திற்கு வந்தோம். மறுநாள் தமிழகம் திரும்ப வேண்டியிருப்பதால், அன்றிரவு நெடுநேரம் அளவளாவி மகிழ்ந்தோம்.

21. விடைபெறுதல்

உவப்பத் தலைக்கூடி உள்ளப் பிரிதல்
அனைத்தே புலவர் தொழில். – குறள் 394

உள்ளம் மகிழும்படியாகக் கலந்துறவாடி, மீண்டும் எப்பொழுது சந்திப்போமா என்று வருந்தும்படியாகப் பிரிதலே அறிஞர்களின் இயல்பு.

1999ஆம் ஆண்டு விடைபெற்றுவிட்டது. இருபதாம் நூற்றாண்டின் இறுதியாண்டாகிய 2000 பிறந்துவிட்டது. புத்தாண்டுதான் பிறந்துள்ளது. பலர் புத்தாயிரம் என்கிறார்களே எங்ஙனம் பொருந்தும்? இருபது நூறு இரண்டாயிரம் - இதுமுடிந்து அடுத்த சனவரிதானே இருபத்தொன்றின் தொடக்கம். யார் எங்ஙனம் கூறினும், இன்று தமிழகத்தின் வரலாற்றில் பொன்னெழுத்தால் பொறிக்கப்படவேண்டிய நாள்!

ஒப்பிலா முப்பால் தந்த முதறிஞருக்கு நினைவுச்சின்னமாகத் தமிழகத் தலைநகரில் வள்ளுவர் கோட்டம் எழுப்பியும், குறளோவியம் தீட்டியும் அழியாப்புகழ் பெற்ற மாண்புமிகு கலைஞர், தென்குமரிக்கடலில் 133 அடி உயரமுடைய திருவள்ளுவர் சிலைதிறந்து வானளாவிய புகழ்பெறும் நாள்! உலகத்தறிஞர்கள் கூடி திருவள்ளுவரையும் முத்தமிழறிஞர் கலைஞரையும் வாழ்த்தும் நாள்! மலையகத்தமிழமைச்சர் டத்தோ சாமிவேலு அவர்களும் பங்குகொள்ளச் சென்றிருக்கும் மாபெரும் திருவள்ளுவர் திருநாள்! குறளன்பனாகிய நானோ மலேசிய மண்ணில்! எங்களூர் நண்பர்கள், குறளன்பன் ஆ.வே.இரா. கன்னியாகுமரிக்குப் போகாமல் இன்று எப்படி மலேசியாவில் இருக்கின்றார்! என்று வியப்புடன் பேசிக் கொண்டார்களாம். நான் சூழ்நிலைக் கைதியாகி விட்டேன். இன்றிரவுதான் நான் மலேசியாவிலிருந்து தாயகம் திரும்ப அனுமதிக்கப்பட்டுள்ளேன். சிலப்பதிகார மாநாட்டிற்கு வந்த தமிழறிஞர்களுள், முனைவர் மு.பி.பா. மட்டும் கன்னியாகுமரிக்குச் சென்றுள்ளதாகக் கேள்விப்பட்டேன்.

மாண்புமிக்க குடும்பம் :

திருவள்ளுவராண்டு 2030 சிலை (மார்கழி) 17 (1-1-2000) சனிக்கிழமை - என்னுள்ளத்தில் இருவேறு உணர்வுகள்!, இருபத்துமூன்று நாட்களுக்குப் பிறகு தாயகம் திரும்பி உறவினர்களையும் நண்பர்களையும் காண இருக்கும் மகிழ்ச்சி! பல நாட்கள் தங்கும் இடமும் அன்பு உபசரிப்பும் கொடுத்த பண்பினரைப்பிரியும் வருத்தம்! அவர்கள் உள்ளத்தில் பிரிவுத்துயர் மட்டும். ஆயினும் மலர்ந்த முகத்துடன் அளவளாவினோம். பசியாறியபின் படம் எடுத்துக்கொண்டோம்.

செல்வி சீலா வண்ணத்தாள்கள் சுற்றி ஒட்டப்பட்ட சிறிய பெட்டியில் அன்புள்ள தாத்தாவிற்கு என்று எழுதி அன்பளிப்புப்பொருள் கொடுத்தார். வாழ்வாங்கு வாழ்க! என்று வாழ்த்தி நன்றி நவின்று, உடலால் பிரிந்தாலும் உள்ளத்தால் பிரியாத விடைபெற்றேன். அன்புருவங்களை உள்ளத்திலும் பதித்துக்கொண்டோம்.

28-4-2000 வெள்ளி விடியற்காலையில் இப்பகுதியை எழுதத் தொடங்கியபொழுது, அன்புமுகங்கள் என் அகக்கண்முன் தோன்றிக் கைகளை எழுதவிடாமல் தடுத்துவிட்டன. இவ்வொரு பத்தியை மட்டும் எழுத ஒருமணிநேரம் ஆகிவிட்டது. சில ஆண்டுகளுக்குமுன், முன்பின்னறியாத என்னை நம்பி திருக்குறள்நயம் (இல்லற இயல்) நூறுநூலனுப்பச் சொல்லி ஆயிரம் ரூபாய் அனுப்பிய மாணிக்கத்தைப் போன்றே, அவர் குடும்பத்தாரும் புதியவனாய் வந்த என்னிடம் பேரன்பு காட்டிப் பல நாட்கள் உபசரித்த பேருதவியைத் திருக்குறள் உள்ளத்தால் மறக்க இயலுமா?

இராசமாணிக்கம் :


புக்கிட்கெமுனிங்கில் உள்ள மகா மாரியம்மன் கோயில் அறங்காவலர் திரு. இராசமாணிக்கம் என்னைப் பார்க்க வேண்டுமென்றாராம். இரண்டு நாட்கள் முயன்றும் சந்திக்க இயலவில்லை. இன்று பயணத்துடன் செல்லும்பொழுது இல்லத்திலிருந்து அன்புடன் வரவேற்றுச் சுவைநீர் தந்து



அளவளாவினார். ஒரு வேட்டியும் பத்து வெள்ளியும் அன்பளிப்பாகக் கொடுத்தார். நானும் என் நூல் கொடுத்தேன். படம் எடுத்துக்கொண்டோம். அதிகம் பேச நேரம் இன்மையால் விடைபெற்றுப் புறப்பட்டோம்.

ஒரு மணிக்குத் தமிழ்ப்பண்பகம் வந்தோம். மணிவெள்ளையரும் மணியமும் திருமாவளவரும் காத்திருந்து வரவேற்றனர். அனைவரும் இராஜ் விடுதிக்குச் சென்று பசியாறியபின் விடுதியாரிடமும் விடைபெற்றேன். தமிழ்ப்பண்பகம் வந்தபின், எஞ்சியிருந்த என் சில நூல்களைப் பண்பகத்திற்குக் கொடுத்துவிட்டு, என்னிடம் இல்லாத சில நூல்களை அங்கிருந்து பெற்றுக்கொண்டேன்.

என் மலேசிய வருகைக்கும், பல இடங்களில் நான் சொற்பொழிவாற்றவும் காரணமாக இருந்த மணிவெள்ளையர், அன்றுவரை என்தனிச் சொற்பொழிவை முழுமையாகக் கேட்க வாய்ப்பில்லாமல் இருந்தார். அன்று முழுமையாகக் கேட்கவும் பதிவு செய்து கொள்ளவும் விரும்பினார்.



திருவள்ளுவர் காட்டும் ஒழுக்கநெறிகள் என்னும் தலைப்பில் அன்றைய என் பொழிவு பதிவு செய்யப்பெற்றது. ஒன்றரைமணிநேரப் பொழிவின் சாரத்தைச் சுருக்கமாகத் தருகிறேன்.

மனமாசின்மையே அறம் என்று அறத்திற்கும், தீமையற்ற சொல்லே வாய்மையென்று வாய்மைக்கும், மெய்ப்பொருள் காண்பதறிவு என்று அறிவிற்கும் தெளிவான இலக்கணம் சொன்ன தெய்வப்புலவர் ஒழுக்கம் என்றாலென்ன? என்று கூறியுள்ளாரா?

ஒழுக்கமுடைமை :

'ஒழுக்கமுடைமை' என்னும் அதிகாரத்தில் ஒழுக்கத்தின் உயர்வையும், இழுக்கத்தின் இழிவையும் கூறியுள்ளாரே தவிர, ஒழுக்கம் என்பதற்குத் தெளிவான இலக்கணம் கூறவில்லை. 139ஆம் குறளில் தீயவை சொல்லக்கூடாதென்றும், 140ஆம் குறளில் "உலகத்தோடொட்ட ஒழுகல்" என்றும் கோடிட்டுக்காட்டியுள்ளார். தெளிவான இலக்கணம் கூறவில்லை. ஏன்?

ஒழுக்கநூல் :

வையத்து மாந்தரையெல்லாம் வாழ்வாங்கு வாழவைப்பதற்கு எழுதப்பெற்ற திருக்குறள் முழுதும் ஒழுக்கநெறிகள் பரவியுள்ளன. பல்வேறு குறட்பாக்களில் பல்வேறு பண்புகளாகக் கூறப்பட்டுள்ள ஒழுக்க நெறிகளை ஒருசில குறட்பாக்களில் கூறிவிளக்கிவிட முடியாது. திருக்குறள் முழுதும் கற்றுத்தான் உணரமுடியும். முதலில் வேர்ச்சொல்லை நோக்குவோம்.

வேர்ச்சொல் :

'ஒழுகு' என்பதே 'ஒழுக்கம்' என்பதன் வேர்ச்சொல். 'ஒழுகு' ஒற்று இரட்டித்து, 'அம்' விகுதி பெற்று 'ஒழுக்கம்' என்றாயிற்று. 'ஒழுகல்' – அல் விகுதி பெற்ற சொல். 'ஒழுகு' என்னும் வேர்ச்சொல்லிலிருந்து தோன்றிய ஒழுகல், ஒழுங்கு, ஒழுக்கம் முதலிய பல்வேறு சொற்கள் திருக்குறளில் நாற்பத்துமூன்று இடங்களில் இடம்பெற்றுள்ளன.

இடம், காலம் முதலிய சூழ்நிலைகளுக்கேற்ப செய்யவேண்டிய கடமைகளை முறையாகத் தவறாமல் செய்வதே ஒழுங்குமுறை – ஒழுக்கமாகும்.

ஒழுகல் : – ஒழுகல் என்னும் சொல் திருக்குறளில் ஏழிடங்களில் வருகிறது.

> "உலகத்தோடு ஒட்ட ஒழுகல் பலகற்றும்
> கல்லார் அறிவிலா தார்". – (குறள் 140)

'உலகம் என்பது உயர்ந்தோர் மாட்டு' என்பது முதுமொழி. சான்றோர் ஒழுகும் – வாழும் முறையை ஒட்டி வாழ்பவரே அறிவுடையவராவர்.

மற்றும், 286, 482, 524, 602, 694, 855 ஆகிய குறட்பாக்களில் 'ஒழுகல்' என்னும் சொல் இடம்பெற்றுள்ளது. இவற்றின் கருத்துகள் தொகுப்புரையில் கூறப்படும்.

'ஒழுக்கம்' என்னும் சொல் ஒழுக்கமுடைமை என்னும் 14ஆம் அதிகாரத்தில் மட்டும் 11 முறை இடம்பெற்றுள்ளது. ஒழுக்கம் எனத்தொடங்கும் 131ஆம் குறளில் இரண்டுமுறையும், நன்றிக்கு எனத்தொடங்கும் 138ஆம் குறளில் இரண்டுமுறையும் இடம்பெற்றுள்ளது.

இனித்திருவள்ளுவர் கூறும் ஒழுக்கநெறிகளில் சிலவற்றைத் திருக்குறள் மூலமே அறிவோம்.

1) "பிறன்மனை நோக்காத பேராண்மை சான்றோர்க்கு
அறனொன்றோ ஆன்ற ஒழுக்கு". – (148)

எனவே பிறன்மனை நோக்காமை ஒரு ஒழுக்கநெறியாகும்.

2) "ஒழுக்காறாக் கொள்க ஒருவன்தன் நெஞ்சத்து
அழுக்கா றிலாத இயல்பு" – 161

அழுக்காறிலாத இயல்பு ஒரு ஒழுக்கநெறியாகும்.

3) "ஒழுக்க முடையவர்க்கு ஒல்காவே தீய
வழுக்கியும் வாயால் சொலல்" – (139)

தவறிகூடத் தீயவை சொல்லாமை ஒரு ஒழுக்கநெறி.

ஒழுகப்படும் : இச்சொல் இரண்டிடங்களில் வருகிறது.

"நிறையுடைமை நீங்காமை வேண்டின் பொறையுடைமை
போற்றி ஒழுகப் படும்" – (154)

பொறையுடைமை ஒரு ஒழுக்கமாகும்.

"இளையர் இனமுறையர் என்றிகழார் நின்ற
ஒளியோடு ஒழுகப் படும்" – (198)

மன்னரை – நாடாளும் தலைவரைச் சார்ந்தொழுகும் முறை கூறப்படுகிறது.

'ஒழுகலான்' என்னும் சொல் 30, 445, 1073 ஆகிய மூன்று குறட்பாக்களிலும், 'ஒழுகின்' என்னும் சொல் 244, 359, 892, 974 ஆகிய நான்கு குறட்பாக்களிலும், 'ஒழுகுதல்' என்னும் சொல் 444ஆம் குறளிலும், ஒழுகும் என்னும் சொல் 141, 278, 551, 563, 603, 874, 907 ஆகிய ஏழு குறட்பாக்களிலும் இடம்பெற்றுள்ளன. மற்றும், 'ஒழுகுவார்' என்னும் சொல் 143, 246, 691 ஆகிய மூன்று குறட்பாக்களிலும், 'ஒழுக்கமுடையவர்'என்னும் சொல் 139ஆம் குறளிலும், மொத்தமாக நோக்கின் சுமார் ஐம்பதிடங்களில் ஒழுக்கம் தொடர்பான சொற்கள் உடன்பாடாகவும், சில குறட்பாக்களில் எதிர்மறைப் பொருளிலும் வந்து பல்வேறு ஒழுக்கநெறிகளை உணர்த்துகின்றன. முக்கியமான சிலவற்றைத் தொகுத்து நோக்குவோம்.

தொகுப்புரை :

அறம், வாய்மை, அறிவு முதலிய பண்புகளுக்குத் தெளிவான இலக்கணம் வகுத்த வான்புகழ் வள்ளுவர், ஒழுக்கத்திற்கு மட்டும் தெளிவான இலக்கணம் வகுக்கவில்லை. ஏனென்றால் திருக்குறள் முழுவதும் பல்வேறு ஒழுக்கநெறிகள் விளக்கபடுகின்றன. சுருக்கமாகத் தொகுத்துநோக்கின், சான்றோர் வாழும் முறைப்படி வாழ்தல், அளவறிந்து வாழ்தல், காலம் போற்றி வாழ்தல் சோம்பலைநீக்கி விடாமுயற்சியுடன் வாழ்தல், பிறன்மனை நோக்காமை, அழுக்காறில்லாமை, தீயவை பேசாமை, பொய் பேசாமை, பிறர்பொருள் விரும்பாமை, கள் ஊன் முதலியன உண்ணாமை, கற்பொழுக்கம் போற்றி வாழ்தல், எல்லா உயிர்களிடத்தும் அன்பு காட்டி வாழ்தல், கூடா ஒழுக்கம் நீக்கல் முதலிய பல்வேறு ஒழுக்கநெறிகளை உடன்பாடாகவும் எதிர்மறையாகவும் தெய்வப்புலவர் திருவள்ளுவர் விளக்குகிறார். எனவே வான்புகழ் வள்ளுவத்தை முழுமையாகவும் தெளிவாகவும் கற்றுத் தீயவைநீக்கி, நல்லவை போற்றி வையத்து வாழ்வாங்கு வாழ்வோமாக.

ஓங்குக வள்ளுவம்! வாழ்க வையகம்!

திருக்குறள் பற்றிய என் சொற்பொழிவை விரும்பிக் கேட்டமைக்கும் ஒலிநாடாவில் பதிவுசெய்து கொண்டமைக்கும் நன்றி! என்று பேசி முடித்தேன்.

அதன்பிறகும் தமிழ்நெறித்தென்றல் மணிவெள்ளையர் சில ஐயவினாக்களை யெழுப்பினார். தக்க விளக்கம் கூறினேன். முடிவில் அவர் நன்றி நவில்கையில்,

தமிழ்மாமணி, திருக்குறள் மூதறிஞர் ஆ.வே. இரா. அவர்களே! இன்று, ஒழுக்கம் பற்றிய வள்ளுவர் கோட்பாடுகளைத் தெளிவாக விளக்கியமைக்கும், ஊழ்பற்றிய ஐயத்தைத் தெளிவுபடுத்தியமைக்கும், திருக்குறளில் எனக்கிருந்த சில ஐயங்களை நீக்கியமைக்கும் நன்றி! என்றார்.

புறப்பாடு :

மாலைச்சிற்றுண்டி அருந்திவிட்டு அனைவரும் விமானநிலையம் புறப்பட்டோம். புலவர் திருமாவளவர் மட்டும் அவருடைய துள்ளுந்தில் வந்தார். வழக்கம்போல், க. மாணிக்கம் மகிழுந்தை அவர் ஓட்ட, நாங்கள் மூவரும் என் பொருள்களுடன் அவருடைய மகிழுந்தில் ஏறிக்கொண்டோம். இறுதியாக ஒளிவெள்ளத்தில் கோலாலம்பூரையும் வழியிலுள்ளவற்றையும் சுவைத்துக்கொண்டும் அளவளாவிக்கொண்டும் இரவு எட்டு மணிக்குச் சிப்பாங் விமானநிலையத்தை யடைந்தோம்.

ஒழுங்குமுறை :

அங்கு நடைபெற வேண்டிய கடமைகள் முறையாக நடைபெற்றன. மலேசியாவில் எல்லாமும் ஒழுங்காகவும் முறையாகவும் நடைபெற்றன. வரிசையில் நிற்கும்பொழுது, குறிப்பிட்ட எல்லைக்கோட்டைத் தாண்டி ஒவ்வொருவராகத்தான் கடமையைச் செய்யவேண்டும். முன்னால் சென்றவர் கடமை முடிந்த பிறகுதான் அடுத்தவர் எல்லைக்கோட்டைத் தாண்டிச் செல்லவேண்டும். ஒருவரையொருவர் இடித்துக்கொண்டும் முந்திக்கொண்டும் செல்லும் வழக்கம் அங்கில்லை.

படமெடுத்தல் :

உலகில் மிகச்சிறந்த விமானநிலையம் ஒளிவெள்ளத்தில் மூழ்கியுள்ள காட்சியைப் பல்வேறு கோணத்தில் என் படக்கருவிக்குள் தொகுத்தேன். நாங்களனைவரும் சேர்ந்தும் படமெடுத்துக் கொண்டோம்.

நன்றி அகவல் :

மலைவளம் சான்ற மலேசிய நாட்டில்
நிலைபுகழ் நற்றமிழ் நற்பணி யாற்ற
மலேசியத் தமிழ்ப்பண் பகத்தை நிறுவி
திருக்குறள் ஓதும் திருநெறி பரப்பி
மறுவற்ற மாண்பு மாநிலத்தில் ஓங்க
பற்பல மாநாடு பாங்குடன் நடத்திக்
க்ற்றோரும் மற்றோரும் க்ளிக்கச் செய்து,
செந்தமிழ்ச் சிலப்பதிகார மாநாடும்
சீர்பெற நடத்திச் சிறப்பு பெற்றீர்!
வந்த எம்மை வகையாய்ப் போற்றி
பன்னாள் பற்பல உதவிகள் செய்தீர்!
என்றும் மறவோம் வாழ்க இனிதே!

இறுதியாக அவர்கள் வரவேண்டிய எல்லைவரை வந்து, என்கருக் கூறவேண்டிய வழிமுறைகளும் நன்றியும் வாழ்த்தும் கூறி விடைகொடுத்தனர். நானும் நன்றியும் வாழ்த்தும் கூறி விடைபெற்றேன்.

நான் என் கைப்பை, தோள்பையுடன் செல்லும்பொழுது, ஓரம்மையார் அதிகச்சுமையுடன் திண்டாடினார். அவரிடமிருந்து ஒரு சுமையை வாங்கிக்கொண்டு சிறிது தூரம் சென்று தள்ளுவண்டி பெற்று, அதில் அனைத்துச் சுமைகளையும் ஏற்றித் தள்ளிக்கொண்டு சென்று, தமிழகவிமானப் பகுதியுள் நுழையும்பொழுது, திரும்பிப் பார்த்து மேற்பகுதியில் தூரத்தில் என்னைப் பார்த்துக்கொண்டிருந்த நண்பர்களிடம் கையசைத்தும் கைகூப்பி வணங்கியும், உவப்பக்கூடிய நாங்கள் உள்ளப் பிரிந்தோம்.

பிரிந்தோர் கூடல் :

21–12–99 மாலை பிரிந்த இசைப்பேரறிஞர் திருமுருகரும், அவர் துணைவியாரும் சிங்கப்பூர் சென்றுவிட்டு, அங்குவந்து காத்திருந்தனர். மகிழ்வுடன் வணக்கம் கூறி அளவளாவினோம். படமெடுத்துக் கொண்டோம். மாநாட்டிற்குத் தனித்தனியாகச் சென்றவர்களுள் நாங்கள் மூவர் மட்டும் 1-1-2000 இரவு 9

மணிக்குச் சிப்பாங் விமானநிலையத்தில் இணைந்து ஒரு விமானத்தில் தமிழகம் திரும்பினோம். 9-30க்கு விமானத்தினுள் நுழைந்து எங்களுக்குரிய இருக்கைகளில் அமர்ந்தோம். மலேசியநேரம் 10 மணிக்கு விமானம் புறப்பட்டது. இந்திய நேரப்படி இரவு 11 மணிக்கு சென்னை விமானநிலையத்தையடைந்தோம்.

வரவேற்பு :

23 நாட்களுக்குப் பிறகு தமிழ்த்தாயக மண்ணில் தாவி இறங்கி மகிழ்ந்தேன். விமானத்திற்குளனுப்பிய எங்கள் பொருள்களைப் பெற வேண்டிய இடத்தில் பெற்றுக்கொண்டு அவரவர் உறவினர்களையும் நண்பர்களையும் சந்திக்கும் ஆர்வத்தில் பிரிந்தோம். என் பழைய மாணவரும் சிறுகதையெழுத்தாளருமாகிய திரு. ப. புகழேந்தி சென்னை விமானநிலைய அலுவலராக இருந்தமையால், அவர் என் வருகையறிந்து அன்புடன் வரவேற்றார்.

என் குடும்பத்தாரும் உறவினர்களும் நண்பர்களுமாகச் சுமார் பதினைவர் வரவேற்பிடத்தில் எனக்காகக் காத்திருந்து மகிழ்ச்சியுடன் வரவேற்றனர். நான் வானூர்தி (விமானம்)யிலிருந்து இறங்கும்பொழுதே தொலைக்காட்சி மூலம் என்னை முதன்முதலாகப் பார்த்த என்பெயரன் வாஞ்சிநாதன் திருக்குறள் தாத்தா வந்துவிட்டார் என்று கத்தி மற்றவர்களுக்கும்



காட்டியுள்ளான். குறிப்பிட்ட இடம் நான் வந்த உடன் பாட்டியின் இடுப்பிலிருந்த அவன் என்னிடம் தாவிக்கொண்டு வந்ததையும் நான் ஆவலுடன் தூக்கி மகிழ்ந்ததையும் என் மகன் திருவள்ளுவன் எடுத்த படம் இங்கே உள்ளது. அனைவரும் எனக்குப் பொன்னாடை போர்த்தி வாழ்த்தினர். நான் மலேசியாவிலிருந்து வாங்கிவந்த இனிப்புகளை அனைவர்க்கும் வழங்கினேன்.

22. உலகத்தமிழர் இர.ந.வீரப்பனார்

"முயற்சி திருவினையாக்கும்"

'திரு' என்னும் சொல், உயர்வு, சிறப்பு, மேன்மை, செல்வம் முதலிய பலபொருள் தரக்கூடிய உயர்ந்த தமிழ்ச்சொல். விடாமுயற்சியானது இவ்வளவையும் உண்டாக்கும் என்ற பொருளில்தான் "முயற்சி திருவினையாக்கும்" என்றார் தெய்வப்புலவர் திருவள்ளுவர். இதற்கு முழு எடுத்துக்காட்டாக வாழ்ந்தவர்தான் உலகத்தமிழர், பேராசிரியர் வீரப்பனார்.

பிறப்பும் வளர்ப்பும் :

இலங்கையில் நுவரேலியா தேயிலைத் தோட்டத்தில் தொழிலாளியாக வாழ்ந்த திரு. நடேசனார் இரத்தினம் அம்மையார் இணையர்களுக்கு 8-6-1930இல் இரண்டாம் குழந்தையாகப் பிறந்தவர்தான் பேராசிரியர் வீரப்பனார். ஆறுமாதக் குழந்தையாக இருக்கும்போது தமிழகத்திற்கு வந்து, உடனே மலேசியாவிற்குச் சென்று தொய்வ (ரப்பர்) மரங்களும் செம்பனை மரங்களும் நிறைந்த இராசாமுசாத் தோட்டத்தில் குடியேறினர் வீரப்பரின் பெற்றோர். தோட்டத் தொழிலாளிகளான பெற்றோருக்கு 4 பெண்களும் 2 ஆண்களும் பிறந்தனர். குடிப்பழக்கமுடைய நடேசனார் 6 பிள்ளைகளுடன் வறுமையில் வாடும் தோட்டத் தொழிலாளியாக விடாப்பிடியாக முயன்று நூறாண்டுக்காலம் வாழ்ந்தவர்.

வறுமையும் இளமையும் :

பிற்காலத்தில் தமிழுக்காகவும் உலகத் தமிழர்களுக்காகவும் அரும்பணியாற்றி உலகத்தமிழராகவும் பேராசிரியராகவும் பெரும்புகழ் பெற்ற வீரப்பனார் இளமையில் வறுமையில் பட்ட துயர்கள் கொஞ்சநஞ்சமன்று.

எட்டாம் வயதிலேயே செம்பனைத் தோட்டங்களிலும் தொய்வமரக்காடுகளிலும் வேலைக்குச் சேர்க்கப்பட்டார். காலை ஆறு மணியிலிருந்து பகல் ஒருமணி வரைப் பத்துக்காசு சம்பளத்திற்கு வேலை செய்துவிட்டுப் பிற்பகல் பள்ளிக்குச் செல்லவேண்டும். குறித்த காலத்தில் பள்ளிக்குச் செல்ல முடியாமல் அடி வாங்கிய நாட்கள் பல. அன்றைய நிலையை அவர் கூற்றாலேயே அறிவோம்.

"பத்து அகவை வரையிலும் ஒரு நாளைக்கு 10காசுக்கு வேலை செய்திடும் பலிகடா ஆக்கப்பட்ட விதி எனக்கு மட்டும் சொந்தமன்று. இது காலத்தின் கட்டாயமாக, கட்டளையாக அன்று இருந்தது. வெள்ளையர் தோட்டங்களின் கதைகளுள் ஒன்றுதான் இதுவும். நூற்றுக்கு மேற்பட்ட பச்சிளந் தொழிலாளர்களுள் நானும் ஒருவன்" என்கிறார்.

அரைவயிற்றுப் பட்டினிக்காரர்கள் பிள்ளைகளுக்குப் படிப்பும் அரைநாள்தான். அந்தப் படிப்புங்கூட இடையிடையே தடைபட்டு ஒருவழியாகத் தமிழ்ப்படிப்பை முடித்தார். வறுமையில் வாடிய நிலையிலும் அயரா முயற்சியுடன் தமிழும் ஆங்கிலமும் கற்றுத் தேர்ந்தார்.

இல்லறம் :

திரு. வீரப்பர், மாமன் மகள் நாகம்மையாரை வாழ்க்கைத் துணையாகத் தேர்ந்து 11-7-1951இல் தமிழ்முறைத் திருமணம் செய்துகொண்டார். அக்காலத்திலேயே, பல எதிர்ப்புகளுக்கிடையில் ஆரியச் சடங்குகளை எதிர்த்துத் தமிழ்ப்பண்பாட்டிற்கு வழிகோலினார். வீரப்பர் நாகம்மை இணையர் மூன்று மகளிரையும் ஒரு மகனையும் பெற்றனர். அவர்களின் தமிழ்ப்பெயர்கள் : திருமேனி, பொன்னி, அருணன், முல்லைவாணி ஆகும். வீரப்பரின் பொதுப் பணிகளுக்குப் பல்லாற்றானும் உற்ற துணையாகவும், வெற்றிமரத்திற்கு வேராகவும் திகழ்பவர் திருமதி. நாகம்மைவீரப்பர்.

ஆசிரியர் பயிற்சியும் பணியும் :

1952இல், கோலாலம்பூர் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியில் சேர்ந்து, பயிற்சி முடித்துப் பல்வேறு பள்ளிகளில் தமிழாசிரியராகப் பணியாற்றி 1985இல் ஒய்வு பெற்றார். அதன்பிறகும் கிள்ளான்

நகரில் உள்ள மலாய்ப் பள்ளியில் 1985 முதல் 1990 வரைத் தமிழ் கற்பித்து ஆசிரியப் பணியை முழுமை செய்தார்.

பண்புடைமை :

திரு. வீரப்பனார் ஏழைகளுக்கும், துயருற்றோர்க்கும் மனமிரங்கி உதவி செய்யும் அருள்குணத்தர். தம் தொழிலில் எதிர்ப்புக்கு அஞ்சாமலும், புகழ்ச்சிக்கு மயங்காமலும் பணியாற்றினார். எப்பணியாயினும் திட்டமிட்டுச் செய்யும் ஒழுங்கு, எண்ணித் துணிந்தபின் திண்ணமுடன் செயலாற்றி வெற்றிகரமாக முடிப்பது, குற்றம் புரிவோர் எத்தகையராயினும் அஞ்சாமல் கண்டித்தல், தமிழுக்கும், தமிழினக் காப்புக்கும் பாடுபடுதல் முதலியன இவரது பண்புடைமையாகும்.

ஆற்றல் :

பேச்சாற்றல் எழுத்தாற்றல் இரண்டிலும் வல்லவர் வீரப்பர். கேட்டார்ப் பிணிக்கவும், கேளாரும் வேட்பவும், வெல்லும் சொல்லே சொல்லவும் வல்லவர். ஆணித்தரமாகவும் அழுத்தம் திருத்தமாகவும் பேசுவார். இவருடைய மாநாட்டுப் பொழிவுகள் நமக்கு மலைப்பைத் தந்து மகிழ்ச்சியூட்டுவன. சிறுகதையெழுத்தாளர். நூல்களும் ஆய்வுக்கட்டுரைகளும் எழுதி வெளியிட்டுள்ளார். சிறந்த இதழாளராகவும், வரலாற்றாய்வாளராகவும், சீரிய சிந்தனையாளராகவும், புரட்சியாளராகவும் திகழ்ந்தார்.

உலகத்தமிழ்ப் பண்பாட்டியக்கம் :

உலகத்தமிழர்களின் உறவுக்காகவும் நலத்திற்காகவும் இலங்கைத் தமிழர் இரா. கனகரத்தினம், தமிழறிஞர்களுடன் கூடிக் கலந்து பேசி 8-1-1974இல் உலகத்தமிழ்ப் பண்பாட்டியக்கத்தைத் தோற்றுவித்தார். முனைவர் சாலை இளந்திரையர் இயக்கத் தலைவராகவும், இரா. கனகரத்தினம் பொதுச்செயலாளராகவும், இர.ந. வீரப்பர் பொருளாளராகவும் தேர்ந்தெடுக்கப்பெற்றனர்.

இந்தியா, இலங்கை, இலண்டன், மலேசியா, சிங்கப்பூர், பர்மா, இந்தோனேஷியா, பிஜி, தென்னாப்பிரிக்கா, மொரீசியஸ், இரெயூனியன் முதலிய நாடுகளில் கிளைகள் தோன்றி வளர்ந்தன.

ஈராண்டுகள் தலைவராகச் செயல்பட்ட முனைவர் சாலை இளந்திரையர், பிறகு விலகிக் கொண்டார். அதன்பிறகு பேராசிரியர் வீரப்பனாரே தலைமைப் பொறுப்பேற்று இறுதிவரை தமிழர்கள் வாழும் 75 நாடுகளில் தொடர்பு கொண்டு 40க்கு மேற்பட்ட நாடுகளில் கிளையமைத்துப் பல மாநாடுகள் நடத்தியும், சொந்தச் செலவில் 30 நாடுகளுக்குப் பயணம் மேற்கொண்டும் உலகத்தமிழராகத் திகழ்ந்தார். உ.த. பண்பாட்டியக்கத்தின் கிளையே ம.த. பண்பாட்டியக்கம்.

மறைவு :

இறுதியாக 1999 பிற்பகுதியில் தாய்த்தமிழகம் வந்து சென்னை மாநகரில் மாநாடு நடத்தி விட்டு, புதுச்சேரி சென்று, தமிழ்ப் பணியில் ஈடுபட்டிருக்கும்போது மாரடைப்பால் அமரநிலையெய்தினார். அவருடைய உடல் மலேசியா கொண்டு செல்லப்பட்டுச் சிறப்பாக அடக்கம் செய்யப்பட்டது. வாழ்நாளெல்லாம் தமிழுக்காகவும் தமிழினத்திற்காகவும் பாடுபட்ட வீரப்பனார் புகழ் உலகத்தமிழர் உள்ளமெல்லாம் நிலைத்திருக்கும்.

உலகத்தமிழர் வீரப்பரைப் பற்றிய சான்றோர் புகழுரைகளுள் சிலவற்றைக் காண்போம் :

புரவலர், முனைவர் ந.கோவிந்தசாமி (தலைவர்,
உ.த.ப.இ., வணிகமன்றம், புதுவை)

"தமிழர்கள் முன்னேற அவர்களுக்கு ஒற்றுமை, கல்வி, செயல், தன்மானம் ஆகியவை வேண்டுமென்று தொண்டுபுரிபவர் திரு. இர.ந. வீரப்பர்.

மலாயாவை விட்டு வெள்ளையன் வெளியேறியபோது, சீர்கெட்டநிலையில் இருந்த தமிழ்மக்களை ஒன்றுபடுத்தி, கூட்டுறவு முறையில் தோட்டங்களை வாங்கிச் செயற்பட மிக உதவி உறுதுணையாக இருந்தார்".

திருமதி பவானிமதுரகவி, புதுச்சேரி.

"திரு. வீரப்பனாரின் சிறுகதைகள் சுவையூட்டுவதோடு சிந்திக்கவும் வைக்கின்றன".

சிங்கைப் பாவலர், முல்லைவாணன்.

"கற்றவர் போற்றும் வண்ணம்
கட்டுரை பலவும் யாத்தார்.
மற்றவர் நோகா வண்ணம்
மாந்தரின் நேயம் காத்தார்".

வீரமதுரகவி, புதுவை மாநில உ.த.ப.இ. அமைப்பாளர்.

"தமிழர் வாழ்வில் மறைக்கப்பட்ட, மறுக்கப்பட்ட வரலாறுகளையும் தமிழரசர்களின் ஆட்சி உலக நாடுகளில் செழித்திருந்த செய்தியையும் திரு. வீரப்பனாரைப் போல் வெளிப்படுத்தியவர் எவருமிலர்".

முனைவர் இரா. திருமுருகனார், புதுச்சேரி.

"திரு. இரந. வீரப்பனார் பொழுதுபோக்குக்காக அன்றி, உலகநாடுகளில் வாழும் தமிழர் வாழ்வின் நிலை எத்தகையது? என்று அறியும் களப்பணிக்காகவே, சுற்றுப்பயணம் செய்துவரும் ஆராய்ச்சியாளர்".

சங்கொலி, சோலை இருசனார், சேலம்.

"மலேசிய நாட்டில் திரு. வீரப்பனார் முன்வைத்த 'தமிழே உலகமுதன்மொழி' என்னும் ஆய்வு முழக்கம் மொழி ஆய்வறிஞர்களைச் சிந்திக்கவைத்துள்ளது. இந்த அடிப்படையில் பல ஆய்வுகள் தமிழுக்கு அணி சேர்த்துக் கொண்டுள்ளன".

தமிழ்ப்பெரியார் மாரிமுத்து.

"பலகலை கற்றுப் பண்பாட்டுத் தூதராய்ப்
பாரினைச் சுற்றியே வந்தவர்.
திலகமாய்த் தமிழர்க்குத் திகட்டாத நூல்பல
தீந்தமிழில் யாத்துத் தந்தவர்".

புலவர் வே. கோவிந்தசாமி, தென்னாப்பிரிக்கா.

"உலகத் தமிழர்களின் ஆவணங்களைத் திரட்டிப் பாதுகாப்பதில் முன்னணியில் இருக்கிறார் பேராசிரியர் வீரப்பனார்"

பாவரசு ஐ. உலகநாதன், பெங்களூர்.

"உலகத் தமிழர் உயர்வுக்காக
ஒட்டகம் போல நடந்தவர்
கலகப் பகைவர் தடைகள் யாவும்
காலால் மிதித்துக் கடந்தவர்".

(இக்கட்டுரையெழுதுவதற்குப் பெரிதும் உதவிய நூல், பாவலர் கதிர். முத்தையா எழுதிய, உலகத் தமிழர், பேராசிரியர் இர.ந. வீரப்பனார் என்பதாகும். நன்றி.)

23. மலேசிய இதழ்களில் தமிழ்ப்பணி

மலேசிய நாட்டில், மலேசியநண்பன், தமிழ்நேசன் முதலிய நாளிதழ்களும், தமிழியம், அகரம், செம்பருத்தி, உங்கள் குரல் முதலிய திங்கள் இதழ்களும், தரமான தமிழ் இதழ்களாக வெளிவருகின்றன. அவற்றின் தமிழ்ப்பணியை நோக்குவோம்.

தமிழ்நேசன் :

76 ஆண்டுகளாகத் தொடர்ந்து வெளிவரும் தமிழ் நாளிதழ். தமிழ்நாட்டுத் தினமணி நாளிதழ் அளவில் 12 பக்கங்களைக் கொண்டு, சிங்கப்பூரிலிருந்து, திரு எம்.எஸ். மலையாண்டி என்பவரை ஆசிரியராகக் கொண்டு வெளிவருகிறது. சிங்கப்பூரில் 60 காசு. மலேசியாவில் 80 காசு. இரண்டாம் பக்கம் வலப்பகுதி மேல்மூலையில் கட்டமிட்டு 'குறளும் விளக்கமும்' என்னும் தலைப்பில் நாள்தோறும் ஒரு திருக்குறள் மூலம், சொற்பொருள், தெளிவுரை ஆகியவற்றுடன் வெளிவருகிறது. 24-12-1999 இதழில் வந்துள்ள திருக்குறள் ;

917 நிறைநெஞ்சம் இல்லவர் தோய்வர் பிறநெஞ்சில்
பேணிப் புணர்பவர் தோள்.

நெஞ்சில் - மனத்தினால், பிற - வேறொன்றினை, பேணி - ஆசைப்பட்டு, புணர்பவர் - பொருள்கொடுப்பாரை உடம்பால் புணருகின்ற மகளிரது, தோள் - தோள்களை, நிறை - நிறைகுணத்தால் திருந்திய, நெஞ்சம் - நெஞ்சம், இல்லவர் - இல்லாதவர்கள், தோய்வர் - புணரச் செய்வார்கள்.

நிறைகுணத்தால் திருந்திய நெஞ்சம் இல்லாதவர்களே பொருள்கொடுப்பாரை விரும்பும் மகளிர் தோள்களைத் தோய்வார்கள்.

அதே இதழின் ஏழாம்பக்கத்தில், முன்னாள் தமிழக முதல்வரும் நடிகருமான எம்.ஜி. ஆரின் 12ஆவது நினைவு நாளை முன்னிட்டு, திரு. அப்துல்காதர் (பாபாஜி) எழுதிய மறைந்தும் மறையாத எம்.ஜி.ஆர்........! என்னும் தலைப்பில்

சிறந்த கட்டுரை வெளிவந்துள்ளது. அது, தமிழகத் தினமணியில், தக்கார் நினைவுநாளில் ஆறாம் பக்கத்தில் வரும் கட்டுரை போன்றது. 6,7ஆம் பக்கங்களில் இந்தியா, தமிழகம் பற்றிய செய்திகள் இடம்பெறுகின்றன. ஏனைய பக்கங்களில், உலகச் செய்திகளும், விளையாட்டுச் செய்திகளும் இடம்பெறுகின்றன.

16-12-99 தமிழ்நேசன் இதழின் இரண்டாம் பக்கத்தில் இடம்பெற்றுள்ள குறள் 910. "எண்சேர்ந்த நெஞ்சத்து இடனுடையார்க்கு எஞ்ஞான்றும், பெண்சேர்ந்தாம் பேதைமை இல்". வழக்கம்போல் சொற்பொருளும் தெளிவுரையும் உள்ளன. அதே இதழின் ஆறாம் பக்கத்தில், "கின்னஸ் சாதனை செய்கிறது திருவள்ளுவர் சிலை" என்னும் தலைப்பில், சிலையின் படமும், சிலை பற்றிய விளக்கமான செய்தியும் வெளிவந்துள்ளன. அச்செய்தியை அப்படியே தருகிறேன்.

133 அடி திருவள்ளுவர் சிலை :

"திருக்குறள் தந்த தெய்வப்புலவர் திருவள்ளுவருக்குச் சென்னையிலே வள்ளுவர் கோட்டம் எழுப்பிய தமிழக முதல்வர் தற்போது தென்குமரியிலே கடல்கண்டத்தில் 133 அடி உயரத்தில் திருவள்ளுவருக்குச் சிலை தந்துள்ளார். கன்னியாகுமரிக் கடலிலுள்ள பாறையில் விவேகானந்தருக்கு நினைவு மண்டபம் எழுப்பிய நேரத்தில், அதை நிறுவிய ஏக்நாத் ரானடே விவேகானந்தர் நினைவு மண்டபம் தொட்டுள்ள பாறையில் திருவள்ளுவருக்கு 7 அடி உயரத்தில் சிலை நிறுவத் தமிழக அரசுக்குக் கடிதம் எழுதியதைத் தொடர்ந்து, அப்போது தமிழக முதல்வராக இருந்த முதல்வர் கருணாநிதி கன்னியாகுமரிக் கடலில் அரசே திருவள்ளுவர் சிலை நிறுவும் என்று சட்டமன்றத்தில் அறிவிப்பை வெளியிட்டார்.

பின்னர் எம்.ஜி.ஆர் ஆட்சிக் காலத்தில் 77ஆம் ஆண்டு கன்னியாகுமரியில் நடந்த ரயில்வே நிலையத் திறப்புவிழாவில் அப்போதைய பாரதப்பிரதமர் மொரார்ஜி தேசாய் முன்னிலையில் எம்.ஜி.ஆரால் திருவள்ளுவர் சிலைக்கு அடிக்கல் நாட்டப்பட்டது. அடிக்கல் நாட்டியதோடு எந்தப் பணியும் நடைபெறாமல் முட்டுக்கட்டையும் போடப்பட்டது. தொடர்ந்து 1990 ஆம் ஆண்டு செப்டம்பர் 6ஆம் தேதி தமிழக முதல்வர்

கருணாநிதி, சிலைசெதுக்கும் பணியைக் கன்னியாகுமரியில் தொடங்கிவைத்து 3கோடி ரூபாய் ஒதுக்கீடும் செய்தார். அதன்படி கன்னியாகுமரி, நெல்லை மாவட்டம் அம்பாசமுத்திரம், சென்னை சோழிங்கநல்லூர் ஆகிய இடங்களில் ஸ்தபதி கணபதி தலைமையில் சிலை செதுக்கும் பணியும் விரைவாக நடந்தபோது, தி.மு.க. ஆட்சி கலைக்கப்பட்டுப் பின்னர் ஜெயலலிதா தலைமையிலான அ.தி.மு.க. ஆட்சி வந்தபோது திருவள்ளுவர் சிலைக்கு முட்டுக்கட்டை போடப்பட்டு, சிலைக்காக ஒதுக்கப்பட்ட தொகையில் பாதிநிதியைத் திரைப்பட நகருக்கு ஒதுக்கியது. இதனால் இடையில் 5 ஆண்டுக்காலம் திருவள்ளுவர் சிலைக்கான எந்தப்பணியும் நடைபெறாமல் இருந்தது.

மீண்டும் தி.மு.க. ஆட்சிவந்ததும் திருவள்ளுவர் சிலைபணி மீண்டும் 97ஆம் ஆண்டு தொடங்கியது. சிலைக்குத் தமிழக முதல்வர் 3 கோடி ரூபாயை 6 கோடியே 12 லட்சமாக உயர்த்தினார். அதன்படி திருவள்ளுவர் சிலைப்பணியும் விறுவிறுப்பாக நடந்தது. பாறை சமதளம் அமைக்கும் பணி நிறைவுற்றதும், சிலைக்கான 38அடி உயர ஆதாரப்பீடம் பணி நடந்தது. பீடப்பணியும் 98ஆம் ஆண்டு அக்டோபர் 7ஆம் தேதி நிறைவு பெற்று 95 அடி உயரச் சிலைப்பணியும் 98ஆம் ஆண்டு அக்டோபர் 12ஆம் தேதி தொடங்கிக் கடந்த அக்டோபர் 19ஆம் தேதி முடிவுற்றது.

முக்கால் ஏக்கர் பரப்பளவு கொண்ட கடலில் உள்ள பாறையின் மையப் பகுதியில் நிறுவியுள்ள சிலையின் 38 அடி உயர ஆதாரப்பீடத்திற்கு மட்டும் 672 கல் பயன்படுத்தப்பட்டு உள்ளது. 95 அடி உயரச் சிலைக்கு 1281 கல் பயன்படுத்தப்பட்டுள்ளது. ஆதாரப்பீடம் சுற்றி அமையும் சுற்றுச்சுவருக்கு 1762 கல்லுமாக 3715 கல் முழுச் சிலைக்கும் பயன்படுத்தப்படுகிறது. ஆதாரப் பீடம் 15 அடுக்குடனும் சிலை 21 அடுக்குமாக நிறுவப்பட்டுள்ளது. மொத்தம் சிலை எடை 7 டன் கொண்டதாகும்.

ஆதாரப்பீடம் 36 3/4 அடிநீளம் 26 3/4 அடி அகலத்திலும் சுற்றுச் சுவர் 63 அடி நீளத்துடன் 53 அடி அகலத்துடன் அமையப் பெற்றுள்ளது. ஆதாரப்பீடத்தின் தெற்கு மற்றும்

வடக்குத் திசைகளில் 10 அடி உயரம் 5 அடி அகலத்துடன் இரண்டு வாசலும் சுற்றுப் பகுதியில் 8 அடி உயரம் 6 அடி அகலத்துடன் நான்கு திசையிலும் நான்கு வாசலும் உருவாக்கப்பட்டுள்ளன. சுற்றுச் சுவர் வாசல்தோறும் தலா இரண்டு யானை உருவம் கொண்ட கல்சிலையும் முகப்பு வாசலில் கூடுதல் இரண்டு யானையுமாக 10 யானைகள் அமைக்கப்படுகின்றன.

சுற்றுச்சுவரின் உள்பகுதியில் அதிகாரத்திற்கு ஒருபாடல் வீதம் 133 குறள் பதிக்கப்படுகிறது. இது தமிழக முதல்வரே தேர்வு செய்ததாகும். சிலை கடலுப்புக் காற்றால் பாதிக்காத வண்ணம் சிலைக்கல் இடைப்பகுதியில் சல்பர் ரெஜிஸ்டன்ஸ் என்ற சிமெண்ட் கொண்டு அடைக்கப்பட்டு, பொக்சில் சிமெண்ட் கொண்டு பூசப்பட்டுள்ளது. இதுபோல் சிலிக்கான் பெயிண்ட் சிலைமீது பூசப்பட்டுள்ளது. சிலை மழைக்காலத்தில் இடியால் பாதிக்காத வண்ணம் 2 லட்சம் ரூபாயில் ரெட்லைட்டுடன் கூடிய இடிதாங்கியும் பொருத்தப்பட்டுள்ளது. இரவுநேரத்திலும் சிலை கரையிலிருந்து பார்க்கும்பொழுது தெரியும் வகையில் 15 லட்சம் ரூபாயில் அலங்கார மின்விளக்குகளும் ஏற்படுத்தப்படுகிறது.

உலகிலே இதுபோன்ற உயரத்தில் கடலிலும் சரி, பூமியிலும் சரி கல்லினாலான சிலை எங்கும் இல்லை என்பது குறிப்பிடத்தக்கது. இதுபோன்று இலக்கிய ஆசிரியருக்கு உலகில் சிலை இல்லாததும் குறிப்பிடத் தக்கதாகும். இதனால் திருவள்ளுவர் சிலை கின்னஸ் புத்தகத்தில் இடம்பெறுவதும் உறுதியாகிவிட்டது. கன்னியாகுமரிக் கடலில் நிறுவப்பட்ட திருவள்ளுவர் சிலைக்கான பெருமை முதல்வர் கருணாநிதியையே சாரும்".

மலேசிய நண்பன் :

கோலாலம்பூரிலிருந்து பத்தாண்டுகளாக வெளிவரும் நாளிதழான 'மலேசிய நண்பன்' மலேசியத் தமிழர்களின் குறைகளை அஞ்சாமல் எடுத்துச் சொல்லி, நகுதற் பொருட்டன்று நட்டல் மிகுதிக்கண், மேற்சென்றிடித்தற் பொருட்டு என்னும் குறட்பாவின்படி உண்மை நண்பனாகவே திகழ்கிறது.

25-12-1999 இதழ் கிறிஸ்துமஸ் இதழாக 24 பக்கங்களுடன் வெளிவந்துள்ளது. 'ஞானபீடம்' பகுதியில் வாசகர்கள் வினாக்களுக்குத் திரு. ஆதி. குமணன் அளிக்கும் விடைகளுள் சிலவற்றை நோக்குவோம்.

கேள்வி : தங்களைத் தூற்றுபவர் அதிகமா? போற்றுபவர் அதிகமா? (பி. சொக்கலிங்கம், இந்தியன் செட்டில்மெண்ட், பத்துகாஜா)

பதில் : இரண்டையுமே செய்யாதவர்கள்தான் அதிகம். இந்த நேரத்தில் கவிஞர் கண்ணதாசன் எழுதிய ஒரு கவிதை நினைவுக்கு வருகிறது.

போற்றுபவர் போற்றட்டும் ; புழுதிவாரித்
தூற்றுபவர் தூற்றட்டும்.
ஏற்றதொரு கருத்தை
எடுத்துரைப்பேன்.
எவர்வரினும் நில்லேன், அஞ்சேன்.

கேள்வி : இந்த ஞானபீடம் கேள்விபதில் பகுதியைத் தொடர்ந்து படித்துவந்தாலே உள்நாட்டு வெளிநாட்டு அரசியலைப் பற்றியும் சில உலகச் செய்திகளையும் தெரிந்து கொள்ளலாம் சரிதானே? (மிஸ் இந்திராணி, செந்தால்பாசார்)

பதில் : தினசரிப் பத்திரிகை படிக்கமுடியாதவர்களுக்கு, அத்தியாவசியமான செய்திகளின் சுருக்கம் இங்கே கருத்துக்களாக பரிமாறப்படுகின்றன. அந்த வகையில் ஓரளவு சரிதான்.

கேள்வி : டத்தோஸ்ரீ ச. சாமிவேலு அவர்கள் இந்தியாவுக்கு ஆலோசனையும் அறிவுரைகளும் கூறுவதற்கு நியமிக்கப்பட்டிருப்பதாகச் சொல்லப்படுகிறதே. உண்மையா? (க. செங்கோடன், கிள்ளான்)

பதில் : இந்தியாவில் மேதைகளுக்கு எப்போது பஞ்சம் வந்தது என்று தெரியவில்லை. உலக அழகிப் பட்டங்களையும் அவர்கள் தான் தட்டிச் செல்கிறார்கள். நோபல் பரிசு வாங்குகிற அளவுக்கும் அங்கே அறிஞர்கள் இருக்கிறார்கள். அங்கே அறிவாளிகளுக்கும் பஞ்சமில்லை. அடிமுட்டாள்களுக்கும்

பஞ்சமில்லை. நேர்மையாளர்களுக்கும் பஞ்சமில்லை. கெட்டிக்காரத் திருடர்களுக்கும் பஞ்சமில்லை. அப்புறம் ஏன் இறக்குமதி?

கேள்வி : திருவள்ளுவர் ஆண்டுப்படி இந்துக்களுக்கு ஆண்டு 2030 ஆகிறது. யாரும் எந்த ஆர்ப்பாட்டமும் செய்யவில்லை. ஆனால் 2000 ஆண்டு வரப்போகிறது என்று உலகமே பரபரப்பாகப் பேசுகிறதே. ஏன்? (எல்விஸ் மணியம், லாபிஸ், ஜோகூர்)

பதில் : திருவள்ளுவராண்டுப்படி 30 ஆண்டுகளுக்கு முன்பே நாம் யோசித்திருக்க வேண்டும். செய்யவில்லை. உலகம் முழுவதும் ஆங்கிலப் புத்தாண்டுதான் அனுசரிக்கப்படுகிறது. வல்லான் வகுத்ததே வாய்க்கால்.

மலேசியாவில் புகழ்பெற்ற அறிஞர்களுள் தமிழ்க்குயில் கா. கலியபெருமாளும் (ஈப்போ) ஒருவர். மலேசிய நண்பன் அதே இதழில் "பக்தியும் பகுத்தறிவும்" என்ற பகுதியில் அவர் அளித்திருக்கும் விடைகளுள் ஒன்றைக் காண்போம்.

கேள்வி : கடவுளுக்கு உருவங் கற்பித்ததால் இந்துக்கள் பாவப்பட்ட சமுதாயமாகவும், பாமரராகவும், விலங்குகளாகவும் வாழ்கிறார்கள் என்று நீங்கள் சொல்கிறீர்கள். ஆனால் பாரதி, "காக்கைச் சிறகினிலே நந்தலாலா, உன்றன் கருமைநிறம் தோன்றுதடா நந்தலாலா" என்று பாடியுள்ளாரே! (காயத்திரிதேவி கோபாலன், கிள்ளான்)

பதில் : கண்ணபிரான் கருநீலநிறத்தினன். காக்கையின் கருமையிலும் தன்தெய்வமான கண்ணனைக் கண்டு வணங்கியவன் பாரதி. அவனே பிரிதோரிடத்திலே,

"யாரும் பணிந்திடும் தெய்வம் – பொருள்
யாவினும் நின்றிடும் தெய்வம்.
பாருக்குள்ளே தெய்வம் ஒன்று – இதில்
பற்பல சண்டைகள் வேண்டாம்".

என்று பாடியுள்ளார். அது மட்டுமா?

"ஆயிரம் தெய்வங்கள் உண்டென்று தேடி
அலையும் அறிவிலிகாள்! பல்லாயிரம்வேதம்
அறிவொன்றே தெய்வம் என்றல் அறியீரோ?"

என்றும் பாடியுள்ளாரே! பக்திநிலையில் கனிவும், பகுத்தறிவு நிலையில் துணிவும் தோன்றும். இரண்டையும் உணரும் மனம் வேண்டும். அதுதான் சமயப்பக்குவமாகும்.

திங்களிதழ்

திங்களிதழ்களாகத் தமிழியம், அகரம், செம்பருத்தி, உங்கள் குரல் முதலியன தினமணிக் கதிரளவில், அழகிய வழவழப்பானதும் உறுதியானதுமான வண்ண அட்டையுடனும், உறுதியான நல்ல தாளிலும் வெளிவருகின்றன.

தமிழியம் :

நன்னெறித் திங்களிதழாகிய 'தமிழியம்' ம.த. பண்பாட்டியக்கத்தின் சார்பாக வெளிவருகிறது. பொறுப்பாசிரியர் – தமிழ்நெறித்தென்றல் மு.மணிவெள்ளையர். துணையாசிரியர்கள் திரு இரந. வீரப்பர், திரு பொ.சா. வேங்கடேசன், திரு கி. மணியம். பதிப்பு மேலாளர் திரு கி. மணியம்.

எனக்குக் கிடைத்த இதழ்களுள் திருவள்ளுவராண்டு 2025 எழுச்சி – 1, முரசம் 4 இதழின் அமைப்பு :

அட்டையின் முன்பகுதியில் பசுமை நிறைந்த மலையில் வெள்ளிய நீர்வீழ்ச்சியோடு கூடிய இயற்கைக் காட்சி. கீழே, "புறந்தூய்மை நீரான் அமையும் அகந்தூய்மை, வாய்மையாற் காணப்படும்" என்னும் குறட்பா. முன்னட்டையின் உள்பக்கத்தில் நிலைக்கண்ணாடி என்னும் தலைப்பில் உள்ள ஆசிரியஉரையின் சுருக்கம் :

மாந்தர் வாழ்வில் பிள்ளைப்பருவம் என்பது மிகவும் சிறப்புடையதாகும். பிள்ளைப்பருவத்தில் ஒருவன் நல்ல ஒழுகலாறுகளைக் கற்றுக்கொள்ளவில்லையெனில் அவனால் இந்த உலகத்துக்குத் தீமையே நேரும். ஒருவனுக்கு அரம் போன்று கூர்மையான அறிவிருக்கலாம். அறிவிருந்தும் நற்பண்பு இல்லையானால் அவனால் மன்பதைக்குத் துன்பமே. அவன் ஓரறிவுயிராகிய மரத்தைப் போன்றவனே என்கிறது நமது மறை.

"அரம்போலும் கூர்மையரேனும் மரம் போல்வர்
மக்கட் பண்பு இல்லா தவர்"

மக்கட் தொகை பெருகிக் கொண்டும் சண்டைச் சச்சரவுகள் மலிந்துகொண்டும் உள்ளன. செயற்கை வாழ்விலும் புதுமைப் போக்கிலும் மூழ்கிய மக்களிடையே அன்பு குறைந்து மாந்தர் நேயம் மாசுபடுத்தப்பட்டுள்ளது. பிறவியின் பெருநோக்கு மறக்கப்பட்டும் மறைக்கப்பட்டும் உள்ளது.

பாலியல்நெறிவெறியாக்கப்பட்டுத் தலைவிரித்தாடுகின்றது. வாழ்வின் உயரிய நோக்கினைத் தெரிந்து கொள்ளாததால் இவ்வுலகில் தீவினைகள் பெருகிக் கொண்டுள்ளன.

பழியில்லாத நல்ல பண்புள்ள மக்களை உருவாக்கித் தரவேண்டிய கடமை இஞ்ஞாலத்தின் குடிமக்களைச் சார்ந்தது.

திருமணம் என்பதே அறஞ்சார்ந்த வாழ்வின் தொடக்கமாகும். நல்லதொரு குமுகாயம் மிளிர மணவாழ்க்கையப் பற்றிய அறிவும் பிள்ளை வளர்ப்புப் பற்றிய கல்வியும் மாந்தர்க்குக் கட்டாயம் வேண்டும்.

நம்மவர்களைப் பொருத்தவரை, திருமணம் மணவாழ்க்கை மக்கட்பேறு குமுகாயநலன் போன்றவற்றில் நற்சிந்தனைகளை வளர்த்தெடுத்துப் பல விழுமியங்களைப் பின்பற்றிச் செம்மை செய்யவேண்டியவர்களாக உள்ளோம்.

தமிழியம் இதழினுள்ளே பல்வேறு ஆய்வுக்கட்டுரைகளும், திருக்குறள் விளக்கக் கட்டுரைகளும் வாழ்வியல்நெறிவிளக்கங்களும், குறள்நெறித் தமிழர் திருமணம் பற்றிய விளக்கக் கட்டுரையும், பயன்மொழிகள், அறிவியல் கலைச் சொற்கள் முதலியன இடம்பெற்றுள்ளன.

பின்னட்டையின் உள்பக்கத்தில் திருக்குறள் ஓதுவதால் உண்டாகும் பயன்கள் விளக்கப்பட்டுள்ளன.

அகரம் :

திருக்குறளின் முதல் சொல்லைப் பெயராகக் கொண்ட 'அகரம்' திங்களிதழின் நிறுவனரும் ஆசிரியரும் நெகிரிசெம்பிலான் மாநில எழுத்தாளர் சங்கத்தலைவர் பாவலர் ஐ. இளவழகு ஆவர். அழகிய வண்ண அட்டையின் மேல் தொடக்கத்தில் திருவள்ளுவர் படம் இடம்பெற்றிருக்கும். உள்ளே, இளைஞர்களைச் செம்மைப்படுத்தக் கூடிய கதை,

கட்டுரை, கவிதை, அரசியல், குமுகாயச் செய்திகள், இலக்கண விளக்கம், திருக்குறள் விளக்கம் முதலியன இடம்பெற்றிருக்கும். சிரம்பான் நண்பர் புலவர் சின்னருணா பழனியாண்டி எழுதிய சிறுகதை, கவிதை ஆகியனவும் இடம்பெற்றுள்ளன. மலேசியப் பொதுப்பணித்துறை அமைச்சர் மாண்புமிகு டத்தோஸ்ரீ ச. சாமிவேலு, தமிழக முதல்வர் மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி ஆகியோர் வாழ்த்தியெழுதியுள்ளனர்.

செம்பருத்தி :

கோலாலம்பூரிலிருந்து கடந்த பத்தாண்டுகளாக வெளிவரும் 'செம்பருத்தி' திங்களிதழ் முன்னேறத் துடிக்கும் இந்தியச் சமுதாயத்தின் எழுச்சிக் குரலாகத் திகழ்கிறது. அழகிய வண்ண அட்டையுடனும், உறுதியான நல்ல தாளில் 60 பக்க அளவிலும் வரும் இதன் நிர்வாக ஆசிரியர் திரு அந்தோணி சார்லஸ்; பொறுப்பாசிரியர் திரு மணியம் சின்னப்பன். விலை 3 வெள்ளி.

99 டிசம்பர் இதழின் அட்டையில், "தமிழர்களைத் தலை நிமிரவைத்த இந்த நூற்றாண்டின் சிறந்த தலைவர்கள்! "என்னும் தலைப்பில் தந்தை பெரியாரின் படமும், விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகர் படமும் இடம்பெற்றுள்ளன. உள்ளே அவர்களின் வரலாற்றுக் கட்டுரைகள் உள்ளன. இலக்கியம், குமுகாயம், அரசியல் முதலிய அனைத்துச் செய்திகளும் இடம்பெறுகின்றன. கேள்வி பதில்கள், கவிதை, இலக்கணம், படம் சொல்லும் கவிதைகள் முதலிய பகுதிகளும் உள்ளன. நடுப்பக்க வண்ணப்படமாக, பினாங்கு அறிவியல் பல்கலைக்கழகத்தில் செம்பருத்தி கலந்துரையாடல் நிகழ்ச்சி இடம்பெற்றுள்ளது.

உங்கள் குரல் :

கடந்த இரண்டாண்டுகளாகப் பினாங்கு நகரிலிருந்து, தமிழுணர்வு மிக்க கவிஞர் செ. சீனிநைனா முகம்மது அவர்களை ஆசிரியராகக் கொண்டு 'உங்கள் குரல்' என்னும் திங்களிதழ் தரமான இலக்கிய இதழாக வெளிவருகின்றது.

99 நவம்பர் இதழின் ஆசிரிய உரை, அதன் தரத்தை வெளிப்படுத்துவதால், அதை அப்படியே கீழே தருகிறேன்.

உள்ளம் திறந்து ....

பாராட்டுக்குரிய 'உங்கள் குரல்' வாசகர் பெருமக்களே! உங்களுக்காக உங்கள்குரல் ஒலிக்கத் தொடங்கி ஈராண்டுகள் ஆகின்றன. இந்தக் காலத்தில் நான்பட்டறிந்தவை பல.

தமிழ் பேசும் மக்களுக்குப் பல்துறை சார்ந்த பயனுள்ள தகவல்களை வழங்கும் பொதுநோக்குடனேயே 'உங்கள்குரல்' பிறந்தது. அத்றகேற்ப இதுவரை வந்த இதழ்கள் பலதுறைத் தகவல்களைத் தாங்கியே வந்தன. எனினும் ஒவ்வோர் இதழிலும் ஒரு வாழ்க்கைச் சிக்கல் முகப்புக் கட்டுரையாக முதன்மை பெற்றது. ஒழுக்கம், நல்லிணக்கம், ஈகை, திருமணம், தாய்மை, பெண்ணுரிமை, தொழிலாளர் தேவை, விளையாட்டு, இலக்கியம் எனப் பலவும் இடம்பெற்றன.

இதுவரை கடிதங்களாகவும் நேரடியாகவும் வந்த கருத்துகளில் இருந்தும், நானே நடைமுறையில் புரிந்து கொண்டவற்றிலிருந்தும் ஓர் அரிய உண்மை தெளிவாகிறது.

பல்துறை சார்ந்த ஏடுகள் தமிழில் இங்குள்ளன. ஆனால் தமிழ் மொழியையும் இலக்கியத்தையும் முதன்மையாகக் கொண்ட தரமான ஓர் ஏட்டின் தேவை இன்னும் இங்கே நிறைவு செய்யப்படவில்லை.

அண்மைக் காலத்தில் எனக்குக் கிடைத்த மேடைவாய்ப்புகளின் வழி நான் தெளிவாகப் புரிந்து கொண்ட ஒன்று எனது பணி மற்றத்துறைகளை விடத் தமிழ்மொழி – இலக்கண – இலக்கியத் துறைகளில் இன்னும் ஆழமாக, மிகுதியாக எதிர்பார்க்கப்படுகிறது என்பதுதான்.

இந்த எதிர்பார்ப்பை நிறைவேற்றுவது எனது கடப்பாடு என்பதை உணர்கிறேன். இனி உங்கள் குரல் தமிழ்மொழி – இலக்கண – இலக்கிய வளர்ச்சிக்குப் பாடுபடுவதை முதல் நோக்கமாகக் கொண்டு வெளிவரும்.

தமிழாசிரியர்களே, மாணவர்களே, எழுத்தாளர்களே, தமிழ்மொழி – இலக்கிய வளர்ச்சியில் ஈடுபாடு கொண்ட தமிழன்பர்களே, உங்கள் ஆதரவின்றி இந்த அரும்பணியை என்னால் நிறைவு செய்ய இயலாது. வழக்கமான கவர்ச்சிப்

பகுதிகள் இல்லாததால் சாதாரண வாசகர்களின் ஆதரவு குறையக்கூடும். எனவே உங்களைப் போன்ற தமிழன்பர்கள் உங்கள்குரலின் பணியும் பயனும் தமிழன்பர்கள் அனைவர்க்கும் கிடைக்குமாறு அதனை அரவணைக்கவும் மற்றவர்க்கு அறிமுகப் படுத்தவும் வேண்டும். இன்பத்தமிழை இணைந்து வளர்ப்போம்.

அன்புடன்,

செ. சீனிநைனா முகம்மது

முன்னட்டையின் மேல்பக்கத்தில் அறிஞர்கள் கவிஞர்களின் படங்களும், இதழினுள்ளே அவர்களின் கட்டுரை, கவிதைகளும் இடம்பெற்றுத் தமிழ் மணம் வீசுகின்றன.

கவியரசு கண்ணதாசனால் கவிப்புயல் பட்டம் பெற்ற கரு. வேலுச்சாமி 14–8–99 அன்று அமரநிலையெய்தியுள்ளார். இதழாசிரியரும் கவிப்புயலாரும் உடன் பயின்ற நண்பர்கள். இதழாசிரியர் எழுதிய இரங்கல் கட்டுரை இதழின் 5ஆம் பக்கத்தில் இடம்பெற்றுள்ளது. 7ஆம் பக்கத்தில் கவிப்புயல் கரு. வேலுச்சாமி எழுதிய இதழாசிரியர் பற்றிய வெண்பாக்கள் உள்ளன. அவற்றைக்கீழே தருகிறேன்.

1. எண்ணிப் பணிதேர்வான் என்னூர்க் கருகூரான்
கன்னித் தமிழ்மீதே கண்கூர்வான் – மின்னியொளிர்
உங்கள் குரலை உரத்தகுர லாய்விரிக்க
இங்கே வளர்த்தான் இதழ்.

2. கம்பள நீர்விரிப்பில் காணும் கமலத்தை
உம்பர் கதிர்தழுவி ஊக்குதலாய் – எம்புலவோர்
போற்றும் கவிசீனி பொற்பார் செயல்முடிப்பான்!
காற்றையும் பற்றுமவன் கை.

3. சீனிக்கே பஞ்சமெனும் செய்தி! இதழ்நடத்தச்
சீனிக்குப் பஞ்சமில்லை செய்தி! – பாணி
தனித்திருக்கும் இந்தத் தமிழ்ப்புலவன் ஏட்டில்
இனித்திருக்கும் யார்மனமும் ஈர்த்து.

4. கால்கள் வலியெடுக்கக் கண்மாய்க் கரைகடந்து
நூல்கள் சுமந்துபெற்ற நுண்ணறிவு – வாழ்வெல்லாம்
ஆற்றலாய் நிற்கும் அறிவார் துறையெதிர்த்த
தூற்றலெல்லாம் மாய்க்கும் துணிந்து.

5. நட்புக்குச் சீனி நயினா முகம்மதொரு
தப்புக் கிடமளியான் தன்னிதழில் – ஒப்புக்கு
நாடெங்கும் ஏடு நடத்தலாம்! இவ்விதழே
வீடெங்கும் வேண்டும் விருந்து.

எது கண்ணீர்?

(பொன். மகேந்திரன்)

அன்பானந்தன் இலக்கியப் பரிசு வாரியம் நடத்திய கவிதைப் போட்டியில் 500 வெள்ளி பரிசுபெற்ற கவிதை. (2ஆவது பரிசு)

1. கருவறையில் உருவடைந்த காலந் தொட்டுக்
கடைசிவரை தொடரும்நீர் கண்ணீ ராகும்
ஒருவரையும் விட்டதில்லை கண்ணீர்! இந்த
உலகினிலே அழுதறியார் யாரு மில்லை
பெருமையுறப் பிறந்துவரும் கண்ணீர் உண்டு
பிறர்காண வரும்போலிக் கண்ணீர் உண்டு
இருவகையா? இன்னபிற வகையும் உண்டே
என்பதனால் கண்ணீரில் பன்னீர் உண்டு!

2. பிணக்குவியல் மத்தியிலே தாங்கள் பெற்ற
பிள்ளையுடல் காண்கையிலும் பெருமை கொள்ளும்
குணமிருக்கும் தாய்மார்கள் வடிக்கும் கண்ணீர்
குறித்தபொருள் என்னவென்று கேட்டால் வீரம்
'மணக்குமெங்கள் இனமானம் காக்க மேலும்
மக்களையாம் பெற்றிலமே!' எனத் துடிக்கும்
கணக்கறியா அன்னையரின் மானக் கண்ணீர்
காவியமாய் வாழ்கிறது தமிழீ ழத்தில்!

3\. விழிநீரால் தமைப்பேணிப் பழிசுமக்கும்
வீணர்களின் பொய்யான கண்ணீர் போல
இழிநீரும் புவியிலுண்டோ? இல்லை இல்லை!
ஈன்றெடுத்த தாயுமதை மதிப்ப தில்லை!
மொழிமானம் இனமானம் காப்பதற்கு
முந்துகின்ற பிள்ளையரைப் பெற்றோர் நெஞ்சம்
பொழிகின்ற பூரிப்பே கண்ணீராகும்
புறப்பாட்டில் புதுப்பாட்டுக் குரிய தாகும்.

4\. கண்ணிருக்கும் மனிதருக்கே கண்ணீர் பொங்கும்
கணக்கில்லாப் பேர்களுக்கு முகத்தி ரண்டு
புண்ணிருக்கும் காரணத்தால் கண்ணீரில்லை
புண்ணீரே அவரழுதால் வழியும், இந்த
மண்ணிருக்கும் வெறும்பாரம் எனவிருக்கும்
மானமிலார் அழும்நீரைக் கண்ணீ ரென்றால்
பண்ணிருக்கும் தமிழ்ச்சொல்லில் பங்கம் நேரும்
பழிநீரென் றதைக்குறித்தல் பொருத்த மாகும்!

இங்ஙனம் மலேசிய நாட்டின் நாளிதழ், திங்களிதழ்களிலும் தமிழ்மணம் வீசுவதைப் படித்துச் சுவைத்து மகிழலாம்.

24. உலகத் தமிழ்மொழி அறக்கட்டளை

உ.த.அறக்கட்டளை, அமெரிக்க நாட்டுச் சிகாகோ நகரில், முனைவர் அழகப்பா ராம்மோகன் அவர்களை இயக்குநராகவும், திருமதி. மீனாட்சி ராம்மோகன் அவர்களைப் பொருளாளராகவும் கொண்டு இயங்கி வருகிறது. அது உலகத் தமிழர் ஒருங்கிணைந்த முன்னேற்றத்திற்கும் தமிழ்மொழி வளர்ச்சிக்கும் திருக்குறள் நெறி பரப்புவதற்கும் அரும்பணியாற்றி வருகிறது.

இவ்வறக்கட்டளை "தமிழ்மறை திருக்குறள், தமிழ்ப்பண்பாட்டுக் கையேடு, தமிழின எதிர்கால வழிகாட்டி"

என்னும் அரிய பெரிய நூலை, 1832 பக்கங்களுடன் மெல்லிய உயர்ந்த தாளில் ஒரே நூலாக வெளியிட்டுள்ளது. இந்நூலில், திருக்குறள் மூலம், தெளிவுரை, ஆய்வுரை, தமிழ் மொழியின் தோற்றம் வளர்ச்சி, தமிழ்ப்பண்பாட்டு வரலாறு, தமிழின முன்னேற்றத்திற்கான வழிமுறைகள், பல பெரும் அறிஞர்களின் ஆய்வுக்கட்டுரைகள் ஆகிய அனைத்தும், தமிழ், ஆங்கிலம் ஆகிய இருமொழிகளிலும் வெளியாகியுள்ளன. பத்தாண்டு முயற்சியில் வெளியான இவ்வரிய நூலின் வெளியீட்டு விழா, அறக்கட்டளையின் இந்திய ஒருங்கிணைப்பாளர் முனைவர் தமிழப்பர் உதவியுடன் 14-5-2000 அன்று, சென்னை மாநகரில் காமராசர் அரங்கில் நடைபெற்றது.

பிற்பகல் 2 மணிமுதல் இரவு 10 மணிவரை பல்வேறு நிகழ்ச்சிகளுடன் நடைபெற்றது. அறிவியலறிஞர் பாரத ரத்னா திரு ஏ.பி.ஜே. அப்துல்கலாம் திறனாய்வுரை நிகழ்த்தி நூலை வெளியிட்டார். சென்னைப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் முனைவர் திரு. பொற்கோ, திருக்குறள் இசைமலர் காமத்துப்பால் ஒலிப்பேழை வெளியிட்டார். நூலின் விலை ரூபாய் 800-00. அன்று 600-00க்கு விற்கப்பட்டது. நூற்றுக்கு மேற்பட்ட திருக்குறளறிஞர்களும் தொண்டர்களும் அன்பளிப்பாக அளிக்கப்பெற்றுச் சிறப்பிக்கப் பெற்றனர். அவர்களுள் யானும் ஒருவன்.

அந்நூலில், "இன்றைய தமிழினம் - ஒரு மொழியினர் பல நாட்டினர்" என்னும் தலைப்பில், முனைவர் அழகப்பா ராம்மோகன் எழுதியுள்ள கட்டுரையிலுள்ள மலேசியா பற்றிய செய்திகளைக் கீழே தருகின்றேன். நன்றி.

தமிழின விழுது - 1 மலேசியா

(தன்னம்பிக்கை பாலசுப்ரமணியம்)

மலேசியத் தமிழர்கள் :

மலேசியாவுக்குத் தமிழர்கள் இரண்டு பிரிவாக வந்தனர். 1. ஆங்கிலேயர் ஆட்சிக்கு முன்பு (வணிகத் தொடர்பு) 2. ஆங்கிலேயர் ஆட்சிக்குப் பின்பு (கஞ்சிக்கூலிகள் அல்லது ஒப்பந்தத் தொழிலாளர்முறை)

கி.பி. முதலாம் நூற்றாண்டு முதல் பதினான்காம் நூற்றாண்டுவரை இந்தியர் காலம் என்றே அழைக்கப்படுகிறது. தமிழ் வணிகர்கள் மலாயா நாட்டிலுள்ள துறைமுகங்களோடு கொண்டிருந்த தொடர்புகள் கடாரம், இலங்காசுரம் போன்ற இந்திய மரபு (INDIANISED KINGDOMS) அரசுகள் தோன்ற வழிவகுத்தன.

தமிழகத்தைப் பல்லவர்கள் ஆண்ட காலத்திலும் (கி.பி. 4லிருந்து 9ஆம் நூற்றாண்டுவரை) சோழர்கள் ஆண்ட காலத்திலும் (கி.பி. 9இலிருந்து 13ஆம் நூற்றாண்டுவரை) மலாயா நாட்டுத் தொடர்புகள் நெருக்கமாகவே இருந்துள்ளன என்பதற்குச் சான்றுகள் உள்ளன.

கி.பி.11ஆம் நூற்றாண்டில் இராஜேந்திரசோழன் மலேசியாவில் 'கெடா' என்றழைக்கப்படும் "கடாரம் கொண்டான்" என்னும் வரலாற்றுக் குறிப்புகள் உள்ளன.

வணிகமொழி :

இன்று மலேசியாவில் மலாக்கா என்னும் ஊரில் வாழும் மலாக்கா சிட்டி எனப்படும் சமூகத்தார் 15ஆம் நூற்றாண்டில் குடியேறிய தமிழராவர். இக்காலக் கட்டத்தில் மலாக்கா துறைமுகப் பட்டினமாக மாறிய பொழுது தமிழர்களின் கலங்களே மற்ற நாட்டுக் கலங்களைவிட அதிகமாக மலாக்கா நீரிணையில் நடமாடிக் கொண்டிருந்தன. 19ஆம் நூற்றாண்டுவரை, தமிழ்மொழி வணிகக் கணக்கு மொழியாக நடைமுறையில் இருந்துள்ளது.

தொழிலாளர் இறக்குமதி :

ஆங்கிலேயர் மலேயாவைக் கைப்பற்றியாண்ட 18ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் "கஞ்சிக்கூலிகள் அல்லது ஒப்பந்தத் தொழிலாளர்" முறையில் ரப்பர் தோட்டங்களில் வேலை செய்யப் பெருமளவில் தமிழர்கள் இங்குக் கொண்டுவரப்பட்டனர். ஐரோப்பியர்களும் மலையாளிகளும் இலங்கைத் தமிழர்களும், நிர்வாகிகளாகவும் கிராமணிகளாகவும் வேலைசெய்தனர்.

மூன்று பிரிவாக இன்று தமிழர்கள் தொழில் புரிகின்றனர்.
அ. ரப்பர், செம்பனைத் தோட்டங்களில் தொழிலாளர்களாகவும்,
ஆ. நகர்ப்புறத் தொழிற்சாலைகளில் தொழிலாளர்களாகவும்,

இ. நடுத்தரவர்க்க உயர்பணியாளர்களாகவும் (PROFESSIONALS) அரசாங்கப் பணியாளர்களாகவும் வணிகர்களாகவும் இருக்கின்றனர்.

தமிழ்ப்பத்திரிகைகள் :

1924ஆம் ஆண்டு தொடங்கி 1934வரை முற்போக்குக் கருத்துக்களைத் தாங்கி வந்தவைகளான தி இந்தியன், சீர்திருத்தம், தமிழ்முரசு, தமிழ்ச்சுடர், சமுதாய ஒளியன், தமிழ்நேசன், தமிழ்க்கொடி, ஜெயமணி, பாரதமித்திரன், ஜனநாயகம், முன்னேற்றம் போன்ற பத்திரிகைகள் அடக்குமுறைக்கும் அடிமைத்தனத்திற்கும் ஆட்படுத்தப்பட்டவர்களின் உணர்வுகளைப் பிரதிபலித்தன. இன்று மலேசிய நண்பன், தமிழ்நேசன், தினமுரசு என மூன்று தினசரிப் பத்திரிகைகள் நாளொன்றுக்கு இரண்டு லட்சத்திற்குமேல் வெளிவருகின்றன. மாத, வார இதழ்களாக மக்கள்ஓசை, வானம்பாடி, சங்கமணி, தன்னம்பிக்கை, உயர்வோம், நயனம், இதயம், சூரியன், செம்பருத்தி என இன்னும் பல இதழ்களும் வெளிவந்து கொண்டிருக்கின்றன.

அமைப்புகள் :

1934இல் மலாயா பொதுத் தொழிலாளர் சங்கம், மலாயா பொதுவுடைமைக் கட்சி, மலாயா மத்திய இந்தியர் சங்கம், 1954இல் அனைத்து மலாயா தொழிற்சங்கங்களின் சம்மேளனம், 1946இல் தேசியத் தோட்டத் தொழிற்சங்கமும் இன்று அரசியலில் இந்தியர்களைப் பிரதிபலிக்கும் மலேசிய இந்தியர் காங்கிரசும், மலேசியத் திராவிடர்கழகமும் அமைக்கப்பட்டு இன்றுவரைச் செயல்பட்டு வருகின்றன. மேலும் மலேசிய இந்துச் சங்கம், மலேசிய யாழ்ப்பாணத்தவர் சங்கம், மலேசிய மலையாளிகள் சங்கம், மலேசியத் தெலுங்கு சங்கம், உலகத் தமிழர்கள் முனைப்பு இயக்கம், மலேசியத் தமிழ் இளைஞர் மணிமன்றம், மலேசிய இந்து இளைஞர் இயக்கம், உலகத் தமிழ்ப் பண்பாட்டியக்கம், மலேசியத் தமிழ்ப் பண்பாட்டியக்கம், மலேசியத் தமிழ்நெறி இயக்கம் என நூற்றுக்கு மேற்பட்ட இயக்கங்கள் செயல்படுகின்றன.

548 தமிழ்ப்பள்ளிகள் :

1816இல் முதல் தமிழ்த் தொடக்கப்பள்ளி தொடங்கப்பட்டது. 1925இல் 235 தமிழ்ப்பள்ளிகள், 1930இல் 333 தமிழ்ப்பள்ளிகள், 1999இல் 548 தமிழ்ப்பள்ளிகள். இப்பள்ளிகளில் முதலாம் வகுப்பு தொடங்கி ஆறாம் வகுப்பு வரை தமிழ்மொழியில் 5 பாடங்களும், மலாய், ஆங்கிலம் ஆகிய இருமொழிகளும் கற்பிக்கப்படுகின்றன.

(தாய்த்தமிழகத்தில் குழந்தைகள் பள்ளிகளில் மூன்று பாடங்கள் தமிழில் கற்பிப்பதற்கும் எதிர்ப்புகள் கிளம்புகின்றன)

3500 இடைநிலைப்பள்ளிகள் :

தமிழ் ஆறாம் வகுப்புக்குப் பின்னர் மலாய்ப் பள்ளிகளில் இடைநிலைக் கல்வியைத் தொடர்கின்றனர். பல்கலைக்கழகம் வரை தமிழை ஒருபாடமாக எடுத்துப்படிக்கும் வாய்ப்பும் உள்ளது. மலாயாப் பல்கலைக் கழகத்தில் தமிழ்ப்பிரிவு என்று தனியாக இயங்கியும் வருகின்றது.

1998ஆம் ஆண்டுக்கான மலேசிய இந்தியர்களின் மக்கள் தொகை 15,62,300. இவற்றில் ஏறத்தாழ 35% தமிழர்கள் ஆவர். நாட்டின் மொத்த சனத்தொகையில் 7% இந்தியர்கள்.

அரசியல் :

பாரிசான் என்றழைக்கப்படும் (தேசிய முன்னணி) கூட்டு அரசாங்கத்தில், இந்தியர்களைப் பிரதிநிதித்து மலேசிய இந்தியர் காங்கிரசு இடம்பெற்றுள்ளது. இந்தியர்களைப் பிரதிநிதித்து முழு அமைச்சராக மாண்புமிகு டத்தோசிரி சாமிவேலு அவர்கள் கடந்த 20 ஆண்டுகளுக்கு மேலாகப் பொறுப்பு வகித்துவருகிறார். இரண்டு துணை அமைச்சர்கள், செனட்டர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், செயலாளர்கள், சட்டசபை உறுப்பினர்கள், மாவட்டக் கவுன்சிலர்கள் எனப் பல்வேறு பொறுப்புகளில் அரசாங்கத்தில் இந்தியர்கள் பரவலாக இடம்பெற்றுள்ளனர்.

தொடக்கக் காலத்தில் அடிமைத் தொழிலாளர்களாகத் தமிழ் மக்கள் மலேசியாவிற்கு வந்திறங்கியபோதிலும், இன்று அடிமைத் தொழிலாளர் என்ற நிலையில் இல்லை. கற்றறிந்த

தமிழ்மக்கள் உயர் பதவிகளில் பொறுப்பு வகிப்பதோடு, மருத்துவர், வழக்கறிஞர், தொழில்வல்லுனர் எனப் பல்வேறு துறைகளில் பிற இனத்தவர்க்கு இணையாக வாழ்கின்றனர். சாமானியர்களாக வாழும் தமிழர்களும் இன்றளவிலும் இருக்கின்றனர்.

கலை இலக்கியம் :

அரசாங்க வானொலி தமிழ்ப்பிரிவு 24 மணிநேரமும் ஒலிக்கின்றது. வாரந்தோறும் தொலைக்காட்சியில் தமிழ்ப்படங்கள் மற்றும் நாடகங்கள் ஒளியேறுகின்றன. மேடைநாடகங்களும், கலைநிகழ்ச்சிகளும் அவ்வப்போது அரங்கேறுகின்றன. நூல்வெளியீடு இல்லாத வாரம் இல்லை எனும் நிலையில் தமிழ் எழுத்தாளர்களின் படிவங்கள் வெளியீடு கண்டு வருகின்றன. உலகில் இன்னமும் தமிழ் மணக்கும் நாடாக மலேசியா திகழ்கின்றது.

தமிழீழப் போராட்டம் :

'பிரபாகரன்' என்று சொன்னாலே கரவொலியெழுப்பும் இனப்பற்று மலேசியத் தமிழரிடம் காணமுடிகின்றது. தமிழீழப் போராட்டத்துக்குத் தார்மீக ஆதரவு வழங்குவதில் மலேசியத் தமிழர்கள் என்றென்றும் சளைக்காதவர்கள்.

மலேசியாவில் ஆன்மநேய மாநாடு

அருட்பெருஞ்சோதி! அருட்பெருஞ்சோதி!
தனிப்பெருங்கருணை!

(அருட்செல்வர் நா. மகாலிங்கம் அவர்களை ஆசிரியராகக் கொண்டு வெளிவரும் "ஓம் சக்தி" சூன் 2000 இதழிலுள்ள கட்டுரையின் சாரம்) நன்றி!

மலேசியாவில் 2000 ஏப்ரல் 29, 30 ஆகிய நாட்களில் வள்ளலார் ஆன்மநேய ஒருமைப்பாட்டுக் கழகத்தின் சார்பில் இரண்டாவது உலக மாநாடு நடைபெற்றது. கோலாலம்பூரில் உள்ள – மலேசியப் பல்கலைக்கழகத்தில் வேந்தர் துங்கு அப்துல்ரகுமான் மண்டபத்தில் இம்மாநாடு நடந்தது.

மலேசியக் கூட்டுறவு அமைச்சர் மாண்புமிகு டான்ஸ்ரீ டத்தோ கே.ஆர். சண்முகசுந்தரம் அவர்கள் அதிகாரப் பூர்வமாக இம்மாநாட்டைத் தொடங்கி வைத்தார்.

இந்த இரண்டுநாள் மாநாட்டில் அருட்செல்வர் டாக்டர் நா. மகாலிங்கம் கலந்து கொண்டு பேருரையாற்றினார்.

"வள்ளற்பெருமான் சமுதாயத்திற்கு வழங்கிய செய்திகள்" என்ற தலைப்பில், ஏப்ரல் 29இல் சிறப்புரையாற்றியும் 30ஆம் தேதி மாநாட்டின் முடிவில் நிறைவுரையை வழங்கியும் சிறப்பித்தார்.

அருட்செல்வர், சென்னை இராமலிங்கர் பணிமனறத்தின் தலைவராகவும், சன்மார்க்க அகிலத்தின் ஒப்பற்ற தலைவராகவும், கடந்த 50 ஆண்டுக்காலமாகப் பொறுப்பேற்று வள்ளலாரிடம் தன்னை அர்ப்பணித்துக் கொண்டு பாடுபட்டு வருவது சன்மார்க்க உலகிற்குத் தெரிந்த செய்தி.

அருட்பா ஆறு திருமுறைகளையும் இரண்டு நூல்களாகவும், உரைநடையைத் தனி நூலாகவும் பத்தாயிரம் பிரதிகள் அச்சிட்டுப் பட்டிதொட்டியெங்கும் அருட்பா பரவும் வகை செய்தார்.

அருட்பாவிற்குச் சித்தாந்த கலாநிதி அவ்வை துரைசாமிப் பிள்ளை அவர்கள் மூலம் பத்துத் தொகுதிகள் கொண்ட உரைநூலை உருவாக்கி அண்ணாமலைப் பல்கலைக் கழகத்திற்கு வழங்கினார்.

கடந்த 33 ஆண்டுகளாக சென்னை இராமலிங்கர் பணிமன்றத்தின் சார்பில் வள்ளலார் விழாவைக் காந்திவிழாவோடு இணைத்து இராசேசுவரி திருமண மண்டபத்தில் எட்டு நாட்கள் நடத்தி வருகிறார்.

இத்தகைய பின்னணியோடு வள்ளலாரின் நெறிகளைப் பரப்பி வரும் அருட்செல்வர், மலேசியாவில் நடந்த வள்ளலார் ஆன்மநேய ஒருமைப்பாட்டு மாநாட்டில் கலந்து கொண்டது சாலப்பொருத்தமானது. அம்மாநாட்டில் அவர் ஆற்றிய உரை தனி நூலாக வெளிவந்துள்ளது.

மலேசிய மாநாட்டின் அழைப்பிதழில் ஒரு புதுமை உள்ளது. அழைப்பிதழின் முதல் பக்கத்தில், வள்ளலார் ஆன்மநேய ஒருமைப்பாட்டு உரிமைக்கழகத்தின் நிரந்தரத் தலைவராக திருவருட்பிரகாச வள்ளலாரின் திருப்பெயரையே சூட்டியுள்ளார்கள்.

இதன்மூலம் சொல்லப்படுகிற செய்தி, வள்ளற்பெருமான் முத்தேகச் சித்தியில் ஞானதேகமாகிய ஒளியுடம்பு பெற்று இன்றும் உலவிக் கொண்டிருக்கிறார் என்பதாகும். ஊனக் கண்களால் அவரைக் காணமுடியாது. அங்கிங்கெனாதபடி எங்கும் பிரகாசமாய், ஒளியோடு ஒளியாகி, வெளியோடு வெளியாகிப் பெருமான் உலவிக் கொண்டிருக்கிறார். மரணமிலாப் பெருவாழ்வு பெற்ற அம்மகான் இப்பூவுலகை அருள்நிறைந்த சன்மார்க்கர் ஆளுமாறு இயக்கிக் கொண்டு இருக்கிறார்.

இந்தக் கருத்தோட்டத்தில்தான் ஞானதேகம் பெற்ற வள்ளற்பெருமானை நிரந்தரத் தலைவராக அழைப்பிதழில் அச்சிட்டுள்ளனர்.

தமிழ்நாட்டிலுள்ள சன்மார்க்க அமைப்புகள் வள்ளற்பெருமானை இதுபோல நிரந்தரத் தலைவராக ஏனோ வெளியிடவில்லை!

ஏப்ரல் 29இல் தொடங்கிய மாநாட்டில் அவைத்தலைவர் முனைவர் சிவசண்முகம் அவர்கள் தலைமையில், முனைவர் நமச்சிவாயம் 'வாழ்விக்க வந்த வள்ளலார்' என்ற தலைப்பில் சிறப்பாகப் பேசினார். வள்ளலார் காட்டிய ஒளிநெறியை எடுத்துச் சொல்லி, இகத்தே பரத்தைப் பெறுகிற பெருமானின் கருத்தை விரிவாக விளக்கினார்.

வல்லான் பூட்டிய பூட்டுகளை வள்ளற்பெருமான திறந்து காட்டிய திறத்தை எடுத்துக் குறிப்பிட்டார். ஒளி நெறியை நட்புநெறி யென்றும் பொருள்நெறி என்றும் அழியாதநெறி என்றும் அவ்வழியே சென்றால் இறைவனை அடைவது உறுதியென்றும் எடுத்துக் கூறினார்.

இரண்டாம் நாள் சொற்பொழிவில் எம்.ஏ. ஹுசைன் அவர்கள் மனிதப்புனிதர் வள்ளலார் என்று மிக அருமையாகப் பேசினார். இதேபோல் பேராசிரியர் காதர் இப்ராகிம் 'உலக

மதங்களும் வள்ளலார் கண்ட ஒருமைப்பாடும்' என்ற தலைப்பில் அரிய சொற்பொழிவாற்றினார்.

அனைத்துச் சொற்பொழிவுகளும் பயனுள்ள சொற்பொழிவுகளாக அமைந்தன. இம்மகாநாட்டையொட்டி, வள்ளலார் ஆன்மநேய ஒருமைப்பாட்டு உரிமைக்கழகம் 'வள்ளலார்' என்ற ஒரு சிறப்பு மலரை வெளியிட்டுள்ளது. அதில் அரிய கட்டுரைகள் பல உள்ளன.

மலேசியப் பொதுப்பணி அமைச்சர் மாண்புமிகு டத்தோ ஸ்ரீ ச. சாமிவேலு அவர்கள் வழங்கிய வாழ்த்துச் செய்தியில், வள்ளலாரை மாபெரும் விஞ்ஞானியாகக் குறிப்பிட்டுள்ளார். ஆன்மஞானம் பெறுவதற்குத் தடையாக உள்ள பழக்கவழக்கங்களை விலக்குமாறு அச்செய்தியில் அவர் கேட்டுக் கொண்டார்.

பேராசிரியர் டாக்டர் இரா. காதர் இப்ராகிம் அவர்கள் தமது வாழ்த்துச் செய்தியில், திருஅருட்பிரகாச வள்ளற்பெருமான் கற்ற கல்வி சமத்துவக் கல்வி, மருத்துவக் கல்வி, மனிதநேயக் கல்வி, யோகக் கல்வி, வானசாஸ்திரக் கல்வி, அணுத் தத்துவக் கல்வி, ஞானக் கல்வி என்று விரிகிறது என்பதைக் குறிப்பிட்டுக் காட்டியுள்ளார்.

வள்ளலார் பற்றிய மலர் போற்றிப் பாதுகாக்கப்பட வேண்டிய பொக்கிஷமாகத் திகழ்கிறது.

மலேசியாவில் கோலாலம்பூரைத் தலைமை இடமாகக் கொண்டு 'உலகத் தமிழர் மையம்' (INTERNATIONAL SOCIETY FOR TAMILS) என்ற அமைப்பு செயல்படுகிறது. ஜாலான் மலாக்கா என்ற இடத்தில் இந்த அமைப்பு இயங்குகிறது.

உலகெங்கும் பரவிக் கிடக்கும் தமிழ் மக்களிடையே தொடர்பினைப் பெருக்கவும் அவர்கள் மத்தியில் புரிந்துணர்வை ஏற்படுத்தவும் தமிழர்களை ஒருங்கிணைப்பதற்கும் இந்த அமைப்பு பாடுபட உள்ளதாக அறிவித்திருக்கிறது.

முன்னேறிய நாடுகளின் இன மக்களோடு போட்டியிட்டு, அறிவியல் முதலிய துறைகளில் தமிழர்களை மேம்படுத்துவதற்காக இந்த அமைப்பு பாடுபடப் போவதாக அறிவித்துள்ளது. இதன் தலைவராக திரு. கணேசன் செயல்படுகிறார்.

வள்ளற் பெருமான் காட்டிய ஒளி வழிபாட்டைச் சர்வ சமயங்களும் ஏற்றுக்கொள்ளும் காலம் வெகுவிரைவில் வரும் என்ற நம்பிக்கை தெரிகிறது. அதன்மூலம் சமய பேதங்கள் ஒழிந்து மறைந்து மனிதநேயத்தின் அடுத்த கட்டமான ஆன்மநேயம் பூத்து மலரும், ஒரு புதிய உலகம் உருவாகும் என்பது திண்ணம்.

– சிபி.

உலகெங்கும் உள்ள தமிழர்கள்

ஸ்பெயின்	1,000 பேர்	அமெரிக்கா	10,000 பேர்
திபோதி	1,000 பேர்	கியானா	10,000 பேர்
இராக்	1,000 பேர்	குவைத்	10,000 பேர்
பிலிப்பைன்ஸ்	1,000 பேர்	சவுதி அரேபியா	25,000 பேர்
ஹாங்காங்	2,000 பேர்	ஜெர்மனி	40,000 பேர்
தாய்லாந்து	2,000 பேர்	இந்தோனேஷியா	50,000 பேர்
போர்ச்சுகல்	2,500 பேர்	ஆஸ்திரேலியா	75,000 பேர்
சுவீடன்	3,000 பேர்	சூரினம்	1,00,000 பேர்
நார்வே	3,000 பேர்	பிரான்சு	1,00,000 பேர்
கியூடார்	4,000 பேர்	கனடா	1,20,000 பேர்
ஜோர்டான்	4,000 பேர்	சிங்கப்பூர்	1,20,000 பேர்
ஓமன்	5,000 பேர்	மியான்மர்	2,50,000 பேர்
டென்மார்க்	5,000 பேர்	தென் ஆப்பிரிக்கா	3,00,000 பேர்
இத்தாலி	5,000 பேர்	பிரிட்டன்	3,00,000 பேர்
நியுசிலாந்து	5,000 பேர்	மலேசியா	16,00,000 பேர்
பெஹரைன்	5,000 பேர்	ஸ்ரீலங்கா	50,00,000 பேர்
யு.ஏ.இ.	10,000 பேர்	இந்தியா (தமிழ்நாடு உட்பட)	6,10,80,000 பேர்

ஏறக்குறைய 40 நாடுகளில் தமிழர்கள் பரவி இருக்கிறார்கள்.

நன்றி 'ஓம் சக்தி'

இப்பட்டியலை நோக்கும்போது உலகிலேயே இலங்கைக்கு அடுத்தபடியாக தமிழர்கள் மலேசியாவில்தான் அதிகம் பேர் வாழ்கிறார்கள் என்பதை அறிய முடிகிறது.

நிறைவுரை :

இந்நூலில் எழுதப்பெற்றுள்ள கட்டுரைகளாலும், பல்வகைச் சான்றுகளாலும், நூலின் தொடக்கத்தில் பேரறிஞர் அண்ணாவின் கூற்றாகக் கூறப்பட்டுள்ளதுபோல, மலேசியாவில் தமிழர்கள், தாம் வாழ்வதோடு, தமிழையும் தமிழ்ப்பண்பாட்டையும் வாழவைத்துக் கொண்டும், மலேசியாவைத் தமிழ்மணம் கமழச் செய்துகொண்டும் உள்ளனர் என்பதை உணரலாம். தாய்த்தமிழகத்தில் தமிழை மதியாது பணப்பேய்களாகவும், சோற்றுப் பிண்டங்களாகவும் இருப்போர் மலேசியத் தமிழர்களின் தமிழ்ப்பற்றை – தமிழ் வாழ்வைக் கண்டாவது, திருந்துவார்களாக.

தமிழ்ச் சான்றோர் பேரவையும், மாண்புமிகு கலைஞரும் காட்டும் வழியில் தமிழ்வழிக் கல்வியைப் போற்றி, எங்கும் தமிழ் எதிலும் தமிழுமாக்கித் தமிழால் – தமிழ்ப்பண்பாட்டால் உலகை ஆள வகை செய்வோம்.

வாழ்க தமிழ்!

எங்கள் வாழ்வும் எங்கள் வளமும்

மங்காத தமிழென்று சங்கே முழங்கு!

பின்னிணைப்பு

1. மலேசியத் தமிழறிஞர்களின் வருகையும் பேரவையின் ஆண்டுவிழாவும்

யாதானும் நாடாமால் ஊராமால் என்னொருவன்
சாந்துணையும் கல்லாத வாறு. – குறள் 397.

28-3-2000 இரவு, மலேசியத் தமிழ்ப்பண்பாட்டியக்கம், மலேசியத் தமிழ்நெறிக்கழகம் ஆகியவற்றைச் சேர்ந்த தமிழறிஞர்கள் பதின்மர், தமிழ்நெறித்தென்றல் மு.மணிவெள்ளையர் தலைமையில் தமிழகத்தில் திருக்குறள் பணியாற்றவும் சுற்றிப் பார்க்கவும் தமிழகம் வந்தனர்.

வந்தவர்கள் ம.த.ப.இ. பொதுச்செயலர் மு.மணிவெள்ளையர், துணைச்செயலர் கன்னல்மணியம், பொருளாளர் இராமமாணிக்கம், ம.த.நெ.கழகத் தேசியத் தலைவர் புலவர் திருமாவளவர், பெங்கலான்உலுக் கிளைப்பொதுச் செயலர் பழ. வீரர், துணைச்செயலர் மு.அருளரசு(சின்னக்கருப்பர்), செயலர் திரு. தமிழ்வாணர், திரு. தமிழரசர், திரு. முகிலர்(ஸ்ரீ), திரு. பிரகலாதர் ஆகிய பதின்மரையும் சென்னையில் புலவர் புலமைதாசரும், அவர் மகனும் வரவேற்று விடுதியில் தங்க வைத்தனர்.

திருச்சியில் வரவேற்பு 30-3-2000 மாலை 6 மணிக்குத் தொடர்வண்டி மூலம் திருச்சிராப்பள்ளிக்கு வந்த மலேசியத் தமிழறிஞர்கள் பதின்மரையும், புலமைதாசர் மகனையும், நான், திருக்குறள் மாமணி ந. சண்முகம், நல்லாசிரியர் ச.வே. சுப்பிரமணியம், திரு. வேணுராசு, திரு. செயராசு ஆகியோர் வரவேற்றோம். சிப்பாங் விமானநிலையத்தில் என்னை முதன்முதலாக அடையாளங் கண்டு வரவேற்ற திரு. கன்னல்மணியம்தான், திருச்சி தொடர்வண்டி நிலையத்திலும் முதன்முதலாக வண்டியை விட்டிறங்கி என்னால் வரவேற்கப்பெற்றார்.

திரு. ச.வே.சு. ஏற்பாட்டின்படி ஆஸ்பி விடுதியில் அனைவரும் தங்கவைக்கப் பெற்றனர். சிற்றுண்டியும் அளவளாவலும் முடிந்தபின் மறுநாள் வைரிசெட்டிப்பாளையம் வர வண்டியனுப்புவதாகக் கூறி விடைபெற்றேன்.

திருக்குறள்விழா : ஏற்கனவே திட்டமிட்டபடி, வைரிசெட்டிப்பாளையம் திருக்குறள் பேரவையின் 12ஆம் ஆண்டுவிழாவை, தி.ஆ. 2031 மீனம் 18(31-3-2000) வெள்ளியன்று, பேரவையும், ம.த.ப. இயக்கமும், ம.த.நெ.கழகமும் இணைந்து சிறப்பாக நடத்தினோம். இதுபேரவையின் 206ஆம் கூட்டமாகும்.

பிற்பகல் 3–30 மணிக்கு எங்கள் இல்லம் தமிழகத்தில் (திருவள்ளுவர் சாலை, திருவள்ளுவர் நகர்) உள்ள திருவள்ளுவர் சிலைக்குத் தவத்திரு. ஊரனடிகள் மலர்மாலை சூட்ட, திருமதி. பூரணிதொல்காப்பியன் திருவிளக்கேற்ற, பேரவைத் தலைவர் திருக்குறள்மணி கி. இராமலிங்கம், திருக்குறள் போற்றி ஓத, திருமதி. அருள்மொழிதிருவள்ளுவன் மலர் வணக்கம் செய்தார்.

பிற்பகல் 4–30 மணிக்குத் திருவள்ளுவர் சாலையில் உள்ள கல்விக் கற்பகத்தில் தமிழ்த்தாய் வாழ்த்துடன் தொடங்கி விழாநிகழ்ச்சிகள் நடைபெற்றன. என் வரவேற்புரைக்குப் பின், மலேசிய அறிஞர்களின் குழு திருக்குறள் இசையுடன் ஓதுதல் நிகழ்ச்சி நடந்தது. இந்நிகழ்ச்சி அடுத்த கட்டுரையில் விளக்கப்பெறும்.

திருவரங்கம் செண்பகத் தமிழரங்கு நிறுவனர் முத்தமிழ் வித்தகர் க. இராசவேலு செண்பகவல்லி வாழ்த்துப்பா இசையடன் பாடிய பின்னர், திருக்குறள் போட்டியில் பங்குகொண்ட மாணவ மாணவிகளுக்கு முத்தமிழ்க்காவலர் நினைவுப் பரிசு வழங்கப்பெற்றது.

மலேசியத் தமிழறிஞர்களும் திருக்குறள் சண்முகமும் ஒரு குறள் கருத்தரங்கம் நிகழ்த்தினர், திருமதி. நாகவல்லிதயாபரன் (திருக்குறளரசன் திருமூலநாதன் தாயார்) திருக்குறள் கவனக நிகழ்ச்சி நடத்தினார். ஆய்வரங்க நிகழ்ச்சியில், தமிழ்க்கடல் இரா. இளங்குமரனார் தமிழ்வழிச் சிந்தனை என்னும் தலைப்பிலும், தவத்திரு. ஊரனடிகளார் திருவள்ளுவரும் வள்ளலாரும் என்னும் தலைப்பிலும் பேருரையாற்றினர். துணைச்செயலர் திருக்குறள் கி. தேவராசன் நன்றிநவிலலுடன் விழா முடிவுற்றது.

இறுதியாகப் புறப்படும்போது, ஒவ்வொருவருக்கும் பேரவை சார்பாக நூறு ரூபாய் நான் கொடுக்க, புலவர் திருமாவளவர் மலேசியத் தமிழியக்கத்தார் சார்பாகப் பேரவைக்கு ஆயிரம் ரூபாய் நன்கொடை நல்கினார்.

2. மலேசியத் தமிழியக்கத்தாரின் தமிழ்நெறி – திருக்குறள் வழிபாட்டு நெறிமுறைகள்

இல்லங்களில் வைகறைப்பொழுதிலும், விழா நிகழ்வுகளிலும், குழுத்தலைவர் ஒவ்வொன்றாக இசையுடன் ஓத, குழுவினரும் பின்தொடர்ந்து இசையுடன் ஓதுவர்.

ஒவ்வொரு தொழுகை தொடங்கும் போதும் சொல்ல வேண்டிய வாசகங்கள்

அகர முதல எழுத்தெல்லாம் ஆதி
பகவன் முதற்றே உலகு.

எல்லாம் வல்ல தனித்தலைமையுடைய இயற்கைப்
பரம்பொருளே...! செம்பொருளே...! மெய்ப்பொருளே...!

போற்றிநின் பேரருள் போற்றிநின் பெருஞ்சீர்,
ஆற்றலின் ஓங்கிய அருட்பெருஞ்சோதி!

உலகினில் உயிர்களுக்கு உறும்இடை யூறெலாம்,
விலகநீ அடைந்து விலக்குக மகிழ்க.

வாழ்க வையகம்.! வாழ்க வளத்துடன்.!

தமிழிய நெறியாம் திருக்குறள் நெறி,
உலகமெலாம் தழைத்தோங்குக.

அருட்பெருஞ்சோதி! அருட்பெருஞ்சோதி!,
தனிப்பெருங்கருணை! அருட்பெருஞ்சோதி!

ஒவ்வொரு தொழுகை முடிவின்போதும் சொல்ல வேண்டியநிறைவு வாசகங்கள்

பகுத்துஉண்டு பல்உயிர் ஓம்புதல் நூலோர்
தொகுத்தவற்றுள் எல்லாம் தலை. திருக்குறள் 322

அறத்தான் வருவதே இன்பம்மற்று எல்லாம்
புறத்த புகழும் இல - திருக்குறள்39

அகர முதல எழுத்தெல்லாம் ஆதி
பகவன் முதற்றே உலகு

தமிழர்க்கான ஏழு கோட்பாடுகள்

வாழிய செந்தமிழ் வாழ்க வாழ்க!
வாழ்க நற்றமிழர் வாழ்க வாழ்க!
சுடர்தமிழ் நெறியினர் வாழ்க வாழ்க!
சூழ்புகழ் திருக்குறள் வாழ்க வாழ்க!
பகுத்துண்டு பல்லுயிர் ஓம்பியே வாழ்க!
பார்உயிர்சமன்மையைப் பேணியே வாழ்க!
வீழந்த நல்லினத்தை மீட்டுமே வாழ்க!
விரிநிலம் போற்றவே வாழ்க வாழ்கவே!

அருட்பா

150 வெண்ணிலா

தன்னையறிந் தின்பமுற வெண்ணிலா வே
ஒரு தந்திரம்நீ சொல்ல வேண்டும் வெண்ணிலா வே
(தன்னையறிந்து)

---இசை---

நானதுவாய் நிற்கும்வண்ணம் வெண்ணிலா வே
ஒரு ஞானநெறி சொல்லுகண்டாய் வெண்ணிலா வே
ஞானமய மாய்விளங்கும் வெண்ணிலா வே
என்னை நானறியச் சொல்லுகண்டாய் வெண்ணிலா வே
(தன்னையறிந்து)

---இசை---

அம்பலத்தி லாடுகின்றார் வெண்ணிலா வே
அவர் ஆடுகின்ற வண்ணமென்ன வெண்ணிலா வே
அணுவிலணு வாயிருந்தார் வெண்ணிலா வே
எங்கும் ஆகிநின்ற வண்ணமென்ன வெண்ணிலா வே
(தன்னையறிந்து)

அருட்பெருஞ்சோதி அகவல்
அருட்பெருஞ்சோதி...... சோதி!
அருட்பெருஞ்சோதி...... சோதி!
அருட்பெருஞ்சோதி...... சோதி!
அருட்பெருஞ்சோதி...... சோதி!
உலகினில் உயிர்களுக் குறுமிடை யூறெலாம
விலகநீ அடைந்து விலக்குக மகிழ்க

சுத்த சன்மார்க்க சுகநிலை பெறுக
சுத்த சன்மார்க்க சுகநிலை பெறுக
உத்தம னாகுக வோங்குக வென்றனை
...அருட்பெருஞ்சோதி

போற்றிநின் பேரருள் போற்றிநின் பெருஞ்சீர்
ஆற்றலி னோங்கிய அருட்பெருஞ் சோதி!
அருட்பெருஞ்சோதி அருட்பெருஞ்சோதி!
அருட்பெருஞ்சோதி அருட்பெருஞ்சோதி!
அருட்பெருஞ்சோதி அருட்பெருஞ்சோதி!
... உலகினில் உயிர்

அருட்பெருஞ்சோதி! அருட்பெருஞ்சோதி!
தனிப்பெருங்கருணை! அருட்பெருஞ்சோதி!

157 ஆவது பாடல்

மதித்த சமயமத வழக்கெல்லாம் மாய்ந்தது
வருணாச் சிரமமெனும் மயக்கமும் சாய்ந்தது
கொதித்த லோகாசாரக் கொதிப்பெல்லாம் ஒழிந்தது
கொலையுங் களவுமற்றைப் புலையும் அழிந்தது

38 ஆவது பாடல்

கோடையிலே இளைப்பாற்றிக் கொள்ளும் வகை கிடைத்த
குளிர்தருவே தருநிழலே
நிழல்கனிந்த கனியே

ஓடையிலே ஊறுகின்ற தீஞ்சுவைத் தண்ணீரே
உகந்த தண்ணீரிடைமலர்ந்த சுகந்த... மண மலரே
மேடையிலே...வீசுகின்ற...மெல்லிய பூங்காற்றே...
மென்காற்றில் விளைசுகமே சுகத்திலுறும் பயனே
மேடையிலே வீசுகின்ற மெல்லிய பூங்காற்றே
மென்காற்றில் விளைசுகமே சுகத்திலுறும் பயனே
ஆடையிலே எனைமணந்த மணவாளா பொதுவில்
ஆடுகின்ற அரசேயென் அலங்கல்அணிந் தருளே
மேடையிலே வீசுகின்ற மெல்லிய பூங்காற்றே
மென்காற்றில் விளைசுகமே சுகத்திலுறும் பயனே

மதித்த சமயமத வழக்கெல்லாம் மாய்ந்தது
வருணாச் சிரமமெனும் மயக்கமும் சாய்ந்தது
கொதித்த லோகாசாரக் கொதிப்பெல்லாம் ஒழிந்தது
கொலையுங் களவுமற்றைப் புலையும் அழிந்தது

அருட்பா – (நீருண்டு பொழிகின்ற)

உலகமெலாம் போற்ற வொளிவடிவனாகி
இலகவருள் செய்தா னிசைந்தே – திலகனென
நானே சன்மார்க்கம் நடத்துகின்றே னெம்பெருமான்
றானே யெனக்குத் தனித்து–
நீருண்டு பொழிகின்ற காருண்டு விளைகின்ற
நிலனுண்டு பலனு முண்டு...
நிதியுண்டு துதியுண்டு மதியுண்டு கதிகொண்ட
நெறியுண்டு நிலையு முண்டு...
நெறியுண்டு நிலையு முண்டு...
நீருண்டு பொழிகின்ற காருண்டு விளைகின்ற
நிலனுண்டு பலனு முண்டு

---இசை---

ஊருண்டு பேருண்டு மணியுண்டு பணியுண்டு
உடையுண்டு கொடை யுண்டு
உண்டுண்டு மகிழவே உணவுண்டு சாந்தமுறும்
உளமுண்டு வளமு முண்டு
நீருண்டு பொழிகின்ற காருண்டு விளைகின்ற
நிலனுண்டு பலனு முண்டு

---இசை---

தேருண்டு கரியுண்டு பரியுண்டு மற்றுள்ள
செல்வங்கள் யாவு முண்டு
தேனுண்டு வண்டுறு கடம்பணியும் நின்பதத்
தியான முண்டாயில் அரசே
தியான முண்டாயில் அரசே
நீருண்டு பொழிகின்ற காருண்டு விளைகின்ற
நிலனுண்டு பலனு முண்டு
நிதியுண்டு துதியுண்டு மதியுண்டு கதிகொண்ட
நெறியுண்டு நிலையு முண்டு

நீருண்டு பொழிகின்ற காருண்டு விளைகின்ற
நிலனுண்டு பலனு முண்டு

குறிப்பு : தொடக்கத்தில் கூறியபடி மேலே வருவனவற்றை ஒவ்வொரு அடியாக ஓதுபவர் இசையுடன் ஓதக் குழுவினர் பின்தொடர்ந்து இசையுடன் ஓதவேண்டும்.

பாராண்ட பழம்பெருமை

ஓ...ஓஓ...ஓ...ஓ.. என் தோழா!
பாராண்ட பழம்பெருமை பழங்கதையாய்ப் போனதடா!
(இடைவேளை இசை)

சீராண்ட திருக்குறளும் இலக்கியமும் சிறந்திருந்தும்
நீயாண்ட புகழெல்லாம் நிலம்இறைத்து விட்டதனால்
நீயாண்ட என்நெஞ்சம் திகைத்தழுது புலம்புதடா!
(இடைவேளை இசை)

தோழரே...! தோழரே...! தோழரே...!
நிலவிய பெருமையைத் தொலைத்தீர்
அன்புத் தோழரே..,! அன்புத் தோழரே!
(இடைவேளை இசை)

தமிழ்க்குடி தன்னில் பிறந்தீர்!
தமிழ்மர பில்நீர் வளர்ந்தீர்!
தமிழ்த்தாய்ப் பாலை உண்டீர் – தனை
மறந்தெங்கு ஏனோ சென்றீர்!
உலகில் தோன்றிச் சிறந்தீர்–இன்று
உரிமை இழந்து நிலைகுலைந்தீர்!
தோழரே! தோழரே! தோழரே!
துணிவோடு மானம் மறந்த தேன்
-- தோழரே!

உண்மையைப் பொய்யாய் மதித்தீர் – உம்
உயர்இனப் பண்பிணை மிதித்தீர்!
தோழரே! தோழரே! தோழரே! – நீர்
தொல்புகழ் நாட்டைத் தொலைத்ததேன்?
தமிழ்க்குடி தன்னில் பிறந்தீர்!
தமிழ்மர பில்நீர் வளர்ந்தீர்!
தமிழ்த்தாய்ப பாலை உண்டீர் – தனை
மறந்தெங்கு ஏனோ சென்றீர்!

– தோழரே!

வேண்டுகோள்

அன்புள்ள தமிழ் மக்களே, உணர்வீர். நமக்கென்று ஒரு பண்பாடு உண்டு. அதன் பெயர் தமிழ்ப் பண்பாடு, நாம் தமிழ்ப் பண்பாட்டை உணராதவரை தமிழ்மொழி முதன்மை பெறாது. தமிழினம் எழுச்சி பெறாது.

நமது வழியும் வாழ்வும் நெறியும் திருக்குறளறமே ஆகும்.

புன்னெறி சிறிதும் கலவாத மனவொருமைப்பாட்டைத் தரும் திருக்குறள் வழி நின்று இனவொருமைப்பாட்டைப் பெறுவோம் வாரீர்.

மனநலம் மன்உயிர்க்கு ஆக்கம் இனநலம்
எல்லாப் புகழும் தரும்

– திருக்குறள் 457

3. வழியனுப்புவிழா

என் இனிய நண்பரும் பன்னூலாசிரியருமான முனைவர் த. கோடப்பிள்ளை, அவர்கள் இல்லத்திலும், முத்தமிழ்வித்தகர் க. இராசவேலு செண்பகவல்லி திருவரங்கம் செண்பகத் தமிழரங்கிலும் மலேசியத் தமிழறிஞர்களுக்கு வரவேற்பு கொடுத்துச் சிறப்பித்தனர்.

2–4–2000 மாலை அனைவரும் ஆஸ்பி விடுதியில் கூடி திருச்சியிலிருந்து செல்ல வழியனுப்புவிழா நடத்தினோம்.

நானும் நண்பர் கோடப்பிள்ளையும் எங்கள் நூல்களையும், திருக்குறள் சண்முகனார், உலகத் திருக்குறள் மாநாட்டு மலர், ஆய்வுக் கட்டுரைத் தொகுப்பு, திருக்குறள் இராதா திருக்குறளட்டைகள் ஆகியவற்றையும் அனைவர்க்கும் கொடுத்து வழியனுப்பினோம்.

மலேசியத் தமிழியக்கத்தினர் பலநாட்கள் பல்வேறு தமிழமைப்புகளிலும், திருக்குறளமைப்புகளிலும் நடைபெற்ற விழாக்களில் பங்குகொண்டு, திருக்குறள் இசையுடன் ஓதுதல், கருத்தரங்கம் ஆகியன நடத்தினர். பாவலர் கதிர்முத்தையா, புலவர் க.ப.சாமி, இசையறிஞர் திருமுருகா, புலவர்இறைவிழியர், புலவர் தமிழமல்லர், புலவர் புலமைதாசர் முதலியோர் ஆங்காங்கு விழாக்கள் நடத்தி உதவினர்.

மலேசியா திரும்பல் 13-4-2000 இரவு மலேசியத் தமிழியக்கத்தார் மலேசியாவிற்குப் புறப்பட்டனர். நான், புலமைதாசர் குடும்பத்தார், மற்றும் சில தமிழறிஞர்கள், அவர்கள் தங்கியிருந்த விடுதியில் கூடித் திருக்குறள் ஓதி வழியனுப்புவிழா நடத்தினோம். தமிழ்மணக்கும் மலேசியா, என்னும் இந்நூல் வெளியீட்டிற்கு உதவியாக மலேசியத் தமிழியக்கங்களின் சார்பாகத் தமிழ்நெறித் தென்றல் மு. மணிவெள்ளையர் ஆயிரம் ரூபாய் என்னிடம் கொடுத்தார்.

4. மணிவெள்ளையர் மடல்

கஙஙO

மு.மணிவெள்ளையன்,
தமிழ்ப்பண்பகம், கோலாலம்பூர்,
14.6.2000

திருக்குறள் செம்மல் ஆ.வே.இரா அவர்களுக்கு, வணக்கம். தங்களின் 27.5.2000 இல் எழுதப்பட்ட மடலை 12.6.2000இல் பெற்றுப் படித்தேன். யான் கடந்த 27.5.2000இல் ஐரோப்பிய நாடுகளுக்குப் புறப்பட்டுச் சென்றேன். மேலைநாடான சுவிட்சர்லாந்தில் குறள்நெறித் திருமணம் ஒன்று ஏற்பாடாகி இருந்தது. சூன் 3ஆம் பக்கல் பெர்ன் நகரிலுள்ள கெமெயின்ட்

சாப்ர் சென்றும் கெபில்பாக் மண்டபத்தில் பொ.முருகவேள்–கிருந்தினிதேவி மண இணைப்பினைத் திருக்குறளோதிச் செய்து வைத்தேன். பின்னர் செர்மனி, ஆலந்து, பிரான்சு ஆகிய நாடுகளுக்கும் சென்று உலகத் தமிழ்ப்பண்பாட்டு இயக்க நிகழ்ச்சிகளிலும் கலந்து கொண்டேன். யான் சென்றநாடுகளிலெல்லாம் குறளோதும் குடும்பக் கூட்டங்களை நடத்தினேன். ஜெனிவா நகரிலுள்ள உலக நாட்டு ஒன்றியத்துக்கும் (ஐக்கிய நாட்டுச்சபை) சென்று வந்தேன். தமிழ்ப்பண்பாட்டு இயக்கத்தின்வழி தமிழ்க் குடும்பங்களுக்குக் கடந்த 1989ஆம் ஆண்டிலிருந்து அறிமுகப்படுத்தப்பட்ட திருக்குறள் தொழுகை முறை தற்போது உலகமெலாம் பரவி வருகின்றது. மலேசியாவில் தமிழ்ப்பண்பாட்டு இயக்கத்துடன் தமிழ்நெறிக் கழகமும் இவ்வழிபாட்டு நெறிமுறைகளை முனைப்புடன் செய்து வருகின்றது. நீங்கள் கேட்டவாறு இத்துடன் தமிழ்நெறித் திருக்குறள் வழிபாட்டு முறைகளை அனுப்பியுள்ளேன். தமிழ் மணக்கும் மலேசியா நூலில் இவற்றைச் சேர்க்க விரும்பினால் பதிப்பிக்கவும். 12.12.1999இல் செந்தமிழ்ச் சிலப்பதிகார மாநாட்டுக்கு வந்த தாங்கள் மலேசியாவைப் பற்றி நூல் எழுதும் முயற்சியில் ஈடுபட்டது மகிழ்ச்சிக்குரியது. பாராட்டுக்குரியது. தமிழ் மணக்கும் மலேசியா என்ற நூலின்வழி பிறநாட்டாரும் தமிழுணர்வு பெற வாய்ப்புண்டு. உங்களின் அரிய பணி வெற்றிபெற என்றன் நல்வாழ்த்துகள்.

அன்புடன்
மு. மணிவெள்ளையன்
14.6.2000

5. மாணிக்கம் மடல்

திஆ.2031 கஙங஽ 19.6.2000

உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கம்

பேரன்புடையீர்!, வணக்கம். இங்கு யாவரும் நலம். தாங்கள் கேட்டுக்கொண்டதுபோல், மறைந்த தலைவர் வீரப்பனாரின் தமிழக நற்பணியும், அடக்கம் செய்த முறைமையும் எனக்குத் தெரிந்தவரை இம்மடலில் குறிப்பிடுகிறேன்.

உலகளாவிய நாற்பத்தாறு கிளைகளைக் கொண்ட உலகத் தமிழ்ப்பண்பாட்டு இயக்கத்தின் இருபத்தைந்தாண்டு வெள்ளிவிழாவைத் தமிழகத்தில் சென்னையில் ஆகத்து 27,28,29-1999ல் நடத்தவேண்டும் என்ற தணியாத தாகம் கொண்டு மூன்று கிழமைகளுக்கு முன்கூட்டியே தமிழகம் சென்றார். மாநாட்டுப் பணிகள் குறித்து இரவு பகலும் பாராமல் உண்ண ஓய்வின்றி உறக்கமின்றிப் பாடுபட்டதன் விளைவால் அவர் உள்ளமும், உடலும் பாதிக்கப்பட்டன. அந்நிலையிலும் புதுச்சேரிக்குச் சென்று, அங்குத் திருக்குறள் பல்கலைக்கழகம் அமைக்கும் பணியில் ஈடுபட்டபொழுது மருத்துவமனையில் எழுபதாம் அகவையில் மாரடைப்பால் 3.9.1999ல் இயற்கையெய்தினார். மறுநாள் புதுவைத் தெளிதமிழ் ஆசிரியர் திருமுருகனார், பழ. நெடுமாறன், கதிர்முத்தையா, உ.த.ப.இயக்கத்தின் பொறுப்பாளர்கள், இன்னும் பிறரும் மருத்துவமனை வளாகத்தில் வீரப்பனாருக்கு இரங்கல் கூட்டம் நடத்தினர்.

தலைவர் இர.ந.வீரப்பனார் தங்கள் குடும்பத்தாரிடம் என்றாவது ஓர் நாள் நான் இயற்கை எய்தினால் மு.மணிவெள்ளையர் தலைமையில் திருக்குறள் ஓதியே அடக்கம் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டார். அதன்படியே அவரின் திருவுடல் தமிழகத்திலிருந்து மலையகம் வந்ததும் 6.9.99 பக்கலன்று ஏதொரு மதவியல் சடங்கும் இல்லாமல், முதல் அதிகாரமான இறைவணக்கம், மூன்றாவது அதிகாரமான நீத்தார்பெருமை, இருபத்துநான்காம் அதிகாரமான புகழ் ஆகிய அதிகாரங்களை வீட்டில் அமைதிகாத்து எல்லோரையும் கையில் திருக்குறளைக் கொடுத்து ஓதினோம். பிறகு திருவுடலை எடுத்துச் செல்லும் வேளையில் வீட்டின் முற்பகுதியில் உலகத் தமிழ்ப்பண்பாட்டு இயக்கத்தின் வெளிநாட்டினரின் தொலைவரி மூலமாக வந்த இரங்கல் செய்திகளைத் தமிழ்நெறிக்கழகம், பிற அமைப்பைச் சேர்ந்த தோழர்களையும் வாசிக்கச்சொல்லி அவர் செய்த தமிழ்ப்பணியைப் போற்றி, மீண்டும் முறையே மூன்று அதிகாரங்களை ஓதிக்கொல்லியிடும் இடத்திற்கு எடுத்துச்சென்றோம். இவ்வேளையில் அமைச்சர் டத்தோ ச.சாமிவேலும் எங்களோடு மூன்று அதிகாரங்களை ஓதினார்.

கொல்லியிடும் இடத்திலும் அவரின் திருவுடலை மேசையில் வைத்து வந்தவர்கள் எல்லோரையும் இறுதி இரங்கலாக மலர்தூவி மீண்டும் மூன்று அதிகாரங்களை ஓதி அடக்கம் செய்தோம். பிறகு மறுநாள் காலையில் மோரிப் கடற்கரையில் திருஉடலின் சாம்பலை கடலில் கரைத்து, பிறகு மீண்டும் திருக்குறளும், திருவருட்பாவும், தற்போது தலைவராகப் பொறுப்பேற்று இருக்கும் ப.கு. சண்முகம், யான், இர.ந.வீரப்பனாரின் குடும்பத்தாரும் மற்றும் சிலரும் கலந்து கொண்டு இரங்கல் செய்தோம்.

அடக்கம் செய்த ஓர் கிழமைக்குப் பிறகு கோலாலம்பூரில் சோமா அரங்கத்தில் நினைவேந்தல் கூட்டம் ஏற்பாடு செய்யப்பட்டது. நாடு தழுவிய நிலையில் தமிழ்ப்பற்றாளர்கள் கலந்து கொண்டு இரங்கற்பா பாடினார்கள். வந்தவர்களில் பெரும்பாலோர் இர.ந.வீரப்பனாரின் தமிழ்ப்பணியைப் பாராட்டிப் பேசினார்கள். அதிகமானோர் கலந்து கொண்டனர்.

பதினாறாம் நாளன்று அவர் இல்லத்தில் வந்தவர்களை எல்லாரையும் அமரவைத்து மீண்டும் திருக்குறள் இறைவணக்கம், அறன்வலியுறுத்தல், புகழ் அதிகாரங்களை ஓதிநடத்தி வந்தோம். வந்தவர்கள் யாவரும் ஏதொரு கருத்தும் வினாவவில்லை. எல்லாம் சிறப்பாகச் செய்யப்பட்டது என்று கூறினர். அருளுணா அனைவர்க்கும் வழங்கப்பட்டது. நடந்தவற்றை நினைவில் நின்றவரை எழுதியுள்ளேன். மீண்டும் பொறுத்துக் கொள்ளுங்கள் தாமதமாக மடல் விடுத்தமைக்கு.

என்றும் அன்புடன்,

க.மாணிக்கம்.

வள்ளுவம் போற்றுதும் வள்ளுவம் போற்றுதும்
உள்ளுதொறும் நல்லறிவு ஊறுகின்ற முப்பாலைத்
தெள்ளுதமி ழில்வழங்க லான்

முப்பாலைப் போற்றுதும் முப்பாலைப் போற்றுதும்
எப்பாலும் போற்றும் எழிலார் கருத்தினைத்
தப்பாமல் தான்தருத லான்



இருபதுக்கு மேற்பட்ட நூல்கள் எழுதியுள்ள இந்நூலாசிரியர் பெற்றுள்ள விருதுகள்

✦ திருக்குறள் ஆய்வுச் செம்மல்	(உலகத் திருக்குறள் மையம், சென்னை)
✦ திருக்குறள் முதறிஞர்	(உலகத் திருக்குறள் மையம், சென்னை)
✦ திருக்குறள் சுடர்	(வில்லிவாக்கம் திருக்குறள் இயக்கம், சென்னை)
✦ திருக்குறள் ஞாயிறு	(திருச்சித் திருக்குறள் பேரவை)
✦ குறளாயச் சான்றோர்	(ஈரோடு குறளாயம்)
✦ திருக்குறள் மாமணி	(ஈரோடு குறளாயம்)
✦ பொதுமறைப் பூமழை	(ஈரோடு தமிழ்ச்சங்கம்)
✦ தெளிதமிழ்ச்சீர்கவி	(உலகத் தமிழர் பண்பாட்டு மையம், சேலம்)
✦ திருக்குறள் நெறிச்செம்மல்	(திருவள்ளூர் திருக்குறள் முத்தமிழ்க்கழகம்)
✦ செந்தமிழ்ச்செம்மல்	(தலைநகர்த் தமிழ்ச்சங்கம், சென்னை)
✦ மொழிப்போர்மறவர்	(தமிழ்ச்சான்றோர் பேரவை, சென்னை)
✦ தமிழ்மாமணி	(திருவரங்கம் செண்பகத் தமிழரங்கு)
✦ இலக்கியச் சாதனையாளர்	(கே.ஆர்.ஜி. நாகப்பன், இராசம்மாள் அறக்கட்டளை, சேலம்)
✦ திருவள்ளுவர் சீர்பரவுவார்	(வள்ளுவர்வழி, சென்னை)
✦ ஒப்புரவாளர்	(உலகத் தமிழ் ஒப்புரவாளர் மாநாடு, சென்னை)